# மார்க்ஸ் எங்கெல்ஸ்


## தேர்வு நூல்கள்

பன்னிரண்டு
தொகுதிகளில்


✻

தொகுதி

5



Karl Marx


F Engels

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்

## பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

5

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

**К. Маркс, Ф. Энгельс**

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 5

*на тамильском языке*

**K. Marx, F. Engels**

SELECTED WORKS IN 12 VOLUMES

Volume 5

*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1985
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭ $\frac{0101010000—128}{014(01)—85}$ 335—85

பொருளடக்கம்


கா. மார்க்ஸ். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்க அறிக்கை . . . . . . . 9

கா. மார்க்ஸ். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகள் . . . . . . 26

கா. மார்க்ஸ். அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனுக்கு . . . . 31

கா. மார்க்ஸ். புரூதோனைப் பற்றி (யோ. ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம்) . . . . . . . . . . 34

கா. மார்க்ஸ். கூலி, விலை, லாபம் . . . . . 49

முன்குறிப்புகள் . . . . . . . . . . . . . . 49

1. உற்பத்தியும் கூலியும். . . . . . . . . 50
2. உற்பத்தி, கூலி, லாபம். . . . . . . . 54
3. கூலியும் நாணயமும் . . . . . . . . . 68
4. சப்ளையும் கிராக்கியும். . . . . . . . 74
5. கூலியும் விலைகளும். . . . . . . . . 77
6. மதிப்பும் உழைப்பும். . . . . . . . . 82
7. உழைக்கும் சக்தி. . . . . . . . . . 96
8. உபரி மதிப்பை உற்பத்தி செய்தல். . . . 101
9. உழைப்பின் மதிப்பு. . . . . . . . . 105
10. பண்டத்தை அதன் மதிப்பில் விற்பதால் லாபம் கிடைக்கிறது. . . . . . . . . . 107
11. உபரி மதிப்பு பிரிவினையாகும் பற்பல பங்குகள் . . . . . . . . . . . . . . 109
12. லாபம், கூலி, விலைகள் இவற்றின் பொது விகிதாச்சாரம் . . . . . . . . . . . . 114

13. கூலி உயர்வுக்காகவோ அல்லது அது குறைக்கப்படுவதை எதிர்த்தோ நடந்த போராட்டங்களின் முக்கிய செய்திகள் . . . . . 117
14. மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலுள்ள போராட்டமும் அதன் விளைவுகளும் 127

கா. மார்க்ஸ். தற்காலிக மத்தியக் கவுன்சிலின் பிரதிநிதிகளுக்கு சில பிரச்சினைகளைப் பற்றிய ஆணைகள் . . . . . . . . . . . . . . 139
1. சர்வதேச சங்கத்தின் ஒழுங்கமைப்பு . . . . 139
2. மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் சங்கத்தின் உதவியைக் கொண்டு சர்வதேசிய ரீதியில் முயற்சிகளை ஒன்றிணைத்தல் . . . . . . 140
3. வேலை நேரக் குறைப்பு. . . . . . . 143
4. குறைந்த வயதுடையவர்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பு (இரு பாலினரும்) . . . . 144
5. கூட்டுறவு உழைப்பு . . . . . . . . . 148
6. தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள். அவற்றின் கடந்த காலமும் நிகழ் காலமும் எதிர்காலமும் . . . . . . . . . . 149
7. நேரடியான வரியும் மறைமுக வரியும் . . 152
8. சர்வதேசிய கடன் . . . . . . . . . . 153
9. போலிஷ் பிரச்சினை . . . . . . . . . 153
10. இராணுவங்கள் . . . . . . . . . . 154
11. மதப் பிரச்சினை. . . . . . . . . . 154

கா. மார்க்ஸ். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தேசியத் தொழிலாளர் சங்கத்துக்கு வேண்டுகோள் . . . . . . . . . . . . . . 156

பி. எங்கெல்ஸ். ''ஜெர்மனியில் விவசாயிகள் யுத்தம்'' என்ற புத்தகத்துக்கு எழுதிய முன்னுரை . . . . . . . . . . . . . 160

1870ல் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரை . . . . . . . . . . . 160
1870ம் வருட முன்னுரையின் பிற்சேர்க்கை— 1875ம் வருடத்தில் வெளியிடப்பட்ட மூன்றும் பதிப்புக்காக எழுதப்பட்டது . . . . . . . 175
கா. மார்க்ஸ். மார்க்ஸ் லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதம். பிப்ரவரி 23, 1865 . . . . 188
கா. மார்க்ஸ். மார்க்ஸ் லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதம். அக்டோபர் 9, 1866 . . 197
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . . 200
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . . 222
இலக்கிய மற்றும் புராணக் கதாபாத்திரங்கள் . 231

கா. மார்க்ஸ்

# சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்க அறிக்கை

**லண்டனில், லாங் ஏக்கரில், செயின்ட் மார்ட்டின் ஹாலில் 1864 செப்டெம்பர் 28ந் தேதியன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறுவப்பட்டது[1]**

*தொழிலாளர்களே!*

*1848 முதல் 1864 முடியவுள்ள காலப்பகுதியில் பெருந் திரளான தொழிலாளர்களின் வறுமை குறையவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனல் இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றமும் வர்த்தக வளர்ச்சியும் வேறு எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. 1850ல் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் மிதவாதப் போக்குடைய ஒரு பத்திரிகை (அது சராசரிக்கும் அதிகமான தகவலைக் கொண்டிருக்கும்) இங்கிலாந்தின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் ஐம்பது சதவிகிதம் அதிகரித்தால் இங்கிலாந்திலிருக்கும் வறுமை பூஜ்யமாகக் குறைந்துவிடும் என்று ஆருடம் கூறியது. என்ன பரிதாபம்! 1863ம் வருடத்தில் இங்கிலாந்தின் மொத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் "44,39,55,000 பவுன்கள் மதிப்புக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது; இந்த ஆச்சரியப்படத்தக்க தொகை ஒப்பீட்டளவில் சமீப காலமான 1843ம் வருடத்திய வர்த்தகத்தைக் காட்டிலும் சுமார் மூன்று மடங்கு அதிகம்" என்று இங்கிலாந்தின் நிதியமைச்சர்* 1864 ஏப்ரல் 7ந் தேதியன்று நாடாளு*

* *வி. கிளாட்ஸ்தன்.*—ப-ர்.

மன்றத்தின் உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்ற வகையில் அறிக்கையளித்தார். இதற்குப் பிறகும் அவர் ''வறுமையைப் பற்றி'' நாவன்மையோடு பேசினூர். ''கூலி... அதிகரிக்கப் படவில்லை''; ''மனித வாழ்க்கை... பத்தில் ஒன்பது உதாரணங்களில் உயிரோடிருப்பதற்கான போராட்டமாகவே இருக்கிறது; இப்படி வறுமையின் எல்லைக் கோட்டில் இருப்பவர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள்'' என்று வியந்து பேசினூர். வடக்கே இயந்திரத்தினூலும் தெற்கே ஆட்டு மந்தைகளினூலும் படிப்படியாக வெளியேற்றப்படுகின்ற அயர்லாந்து மக்களைப் பற்றி அவர் பேசவில்லை. அந்த மகிழ்ச்சியற்ற நாட்டில் ஆடுகளும் குறைந்து வருகின்றன—ஆனூல் மனிதர்களைப் போல அவ்வளவு வேகமான விகிதத்தில் குறையவில்லை என்பது உண்மையே. மேல் மட்டத்தைச் சேர்ந்த பத்தாயிரம் பேர்களின் மிகவுயர்ந்த பிரதிநிதிகள் திடீரென்று ஏற்பட்ட அச்சத்தால் அப்பொழுதுதான் தெரிவித்தவற்றை அவர் திரும்பச் சொல்லவில்லை. ''கழுத்தை நெரித்துக் கொலை செய்பவர்களைப்''[2] பற்றிய பீதி ஒரு குறிப்பிட்ட மட்டத்தை எட்டியபொழுது பிரபுக்கள் சபையினர் கடுங்காவல் தண்டனையைப் பற்றியும் நாடுகடத்துவதைப் பற்றியும் விசாரணை நடத்துமாறும் அந்த அறிக்கையை வெளியிடுமாறும் உத்தரவிட்டனர். 1863ல் வெளியான பெரிய நீலப் புத்தகத்தில்[3] உண்மை வெளியாயிற்று. இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் தண்டனை கொடுக்கப்பட்ட மோசமான குற்றவாளிகளான சிறையடிமைகள் விவசாயத் தொழிலாளிகளைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே வேலை செய்கிறூர்கள், அவர்களைக் காட்டிலும் மிகவும் நன்றூகச் சாப்பிடுகிறூர்கள் என்பது அதிகாரபூர்வமான தகவல்களாலும் புள்ளிவிவரங்களாலும் நிரூபிக்கப்பட்டது. ஆனூல் இது மட்டுமல்ல. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர்[4] ஏற்பட்டதன் விளைவாக லங்காஷயர் மற்றும் செஷைர் தொழிலாளர்கள் தெருக்களில் தூக்கி எறியப்பட்டபொழுது அதே பிரபுக்கள் சபை ஒரு மருத்துவரை இந்த மாவட்டங்களுக்கு அனுப்பியது. ''பட்டினியால் ஏற்படுகின்ற நோய்களைத்'' தவிர்ப்பதற்குச் சராசரியாகத்

தேவையான கார்பன் மற்றும் நைட்ரஜனை மிகவும் மலிவான, சாதாரணமான வடிவத்தில் சாத்தியமான வரை மிகக் குறைவாக எந்த அளவில் கொடுக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்யுமாறு அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். சராசரி வளர்ச்சியடைந்த ஒருவருக்குப்... பட்டினியால் ஏற்படுகின்ற நோய்கள் வராமலிருக்க வேண்டுமென்றால் அவர் வாரந்தோறும் 28,000 கிரெயின் கார்பனும் 1,330 கிரெயின் நைட்ரஜனும் உட்கொள்ள வேண்டும் என்று மருத்துவ அதிகாரியான டாக்டர் ஸ்மித் கண்டறிந்தார். மேலும் தீவிரமான நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்கள் உட்கொண்ட குறைவான உணவு அநேகமாக இந்த அளவோடு ஒத்திருக்கிறது என்பதையும் அவர் கண்டார்.* ஆனால் இப்பொழுது கவனியுங்கள். இதைக் காட்டிலும் வறுமை நிலைமையிலிருக்கின்ற தொழிலாளி வர்க்கத்தினரின் ஊட்ட நிலைமையைப் பற்றி ஆராயுமாறு இதே அறிவுசான்ற மருத்துவரைப் பிரிவி கவுன்சிலின்[5] மருத்துவ அதிகாரி இதற்குப் பிறகு மறுபடியும் அனுப்பினார். நாடாளுமன்றத்தின் உத்தரவுப்படி இந்த வருடத்தின் போது வெளியிடப்பட்டிருக்கும் "பொது சுகாதாரத்தைப் பற்றிய ஆறாவது அறிக்கை" அவருடைய ஆராய்ச்சிகளின் முடிவுகளைக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவர் கண்டுபிடித்தது என்ன? பட்டு நெசவாளர்கள், தையல்

---

* தண்ணீர் மற்றும் சில அசேதனப் பொருள்களைத் தவிர கார்பனும் நைட்ரஜனும் மனிதர் உணவின் மூலப் பொருள்களாக இருக்கின்றன என்பதை நாம் வாசகருக்கு நினைவூட்டுவது அவசியமல்ல. ஆனால் மனித உடலமைப்புக்கு ஊட்டமளிப்பதற்கு இந்த எளிமையான இரசாயனப் பொருள்கள் காய்கறிகள் அல்லது இறைச்சியின் வடிவத்தில் கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக, உருளைக்கிழங்கு பிரதானமாகக் கார்பன் சத்தைக் கொண்டிருக்கிறது; கோதுமையில் தயாரிக்கப்பட்ட ரொட்டியில் கார்பன் மற்றும் நைட்ரஜன் பொருள்கள் உரிய அளவுவிகிதத்தில் கலந்திருக்கின்றன. (மார்க்ஸ் எழுதியிருக்கும் குறிப்பு.)

வேலை செய்கின்ற பெண்கள், கையுரை மற்றும் காலுரை களைத் தயாரிக்கும் நெசவாளர்கள், இன்னும் மற்றவர் களுக்கு, சராசரியாக பஞ்சாலைத் தொழிலில் வேலையில்லாத வர்களுக்குக் கிடைத்த நெருக்கடிக்கால சொற்ப ஊதியம் கூடக் கிடைக்கவில்லை; ''பட்டினியால் ஏற்படுகின்ற நோய் களைத் தவிர்ப்பதற்கு மட்டும் போதுமான'' கார்பன் மற்றும் நைட்ரஜன் அளவு கூடக் கிடைக்கவில்லை.

இந்த அறிக்கையிலிருந்து நாம் மேற்கோள் காட்டு கின்றோம்: ''இது மட்டுமல்ல, விவசாய மக்கள் தொகை யினரில் நாம் ஆராய்ந்த குடும்பங்களைப் பொறுத்தவரை ஐந் தில் ஒரு பங்குக்கும் அதிகமானவர்கள் போதுமானதென்று மதிப்பிடப்பட்டிருக்கும் கார்பன் உணவுக்கும் குறைவாகவே பெற்றனர் என்று தோன்றுகிறது; மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானவர்கள் போதுமானதென்று மதிப்பிடப்பட் டிருக்கும் நைட்ரஜன் உணவுக்கும் குறைவாகவே பெற்ற னர்; மூன்று (பெர்க்ஷயர், ஆக்ஸ்போர்டுஷயர் மற்றும் ஸாமர்செட்ஷயர்) பிராந்தியங்களில் பற்றாக்குறையான நைட்ரஜன் உணவே சராசரி ஸ்தல உணவாக இருந்தது.'' ''உணவுப் பற்றாக்குறையை மிகவும் விருப்பமில்லாமல்தான் தாங்கிக் கொள்கிறார்கள் என்பதையும் வழக்கமாகவே மற்ற துன்பங்களெல்லாம் வந்த பிறகுதான் பெரிய அளவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்... சுத்தமாக இருப்பது கூட அதிகமான பணச்செலவை ஏற்படுத்துவதாக அல்லது கடின மானதாக இருக்கும்; அவ்வாறு சுத்தமாக இருக்க சுய மரியாதையோடு சில முயற்சிகள் செய்யப்படுமானால் அப் படிப்பட்ட ஒவ்வொரு முயற்சியுமே மேலும் கூடுதலான பசித் துன்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்''. ''இதில் குறிப் பிடப்பட்ட வறுமை சோம்பலினால் ஏற்படுகின்ற நியாயமான வறுமை அல்ல என்பதை நினைவுபடுத்திக் கொண்டால்— எல்லா உதாரணங்களிலுமே இது உழைக்கும் மக்கள் தொகையினருடைய வறுமையாகவே இருந்தது — இது வேதனையளிக்கின்ற சிந்தனையாகும். மிகக் குறைவான உணவைப் பெறுவதற்குத் தேவையான வேலையும் கூடப் பெரும்பாலும் மிக அதிகமான நேரம் செய்யப்படுவதாக இருந்தது உண்மையே'' என்று அதிகாரபூர்வமான அறிக்கை மேலும் கூறுகிறது.

இந்த அறிக்கை ஒரு விசித்திரமான, ஓரளவுக்கு எதிர் பார்க்கப்படாத உண்மையை வெளிக் கொண்டு வருகிறது. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்து எனப்படும் ''பிரிட்டனின் பிரிவுகளில்'' மிகவும் பணக்காரப் பிரிவாகிய ''இங்கிலாந்தின் விவசாய மக்கள் தொகை யினரின் உணவு நிலைமை பற்ருக்குறையாகவே உள்ளது''; லண்டனின் கிழக்குப் பகுதியில் சிறு தொழில்களில் வேலை செய்கின்ற திறமை மிக்க தொழிலாளர்களில் ஏராளமான எண்ணிக்கையினரைக் காட்டிலும் பெர்க்ஷயர், ஆக்ஸ் போர்டுஷயர் மற்றும் ஸாமர்ஸெட்ஷயரிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் கூட அதிக வசதியான நிலைமையில் இருக்கிருர்கள்.

1864ம் வருடத்தில், வர்த்தக சுதந்திர ஊழியின் போது,

> ''சராசரி பிரிட்டிஷ் தொழிலாளியின் நிலைமை, நாம் அசாதாரணமானதென்று கூறக்கூடிய அளவுக்கு, எந்தக் காலத்திலும் எந்த நாட்டின் வரலாற்றிலும் இதற்கு உவமை கிடையாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது''

என்று நிதியமைச்சர் காமன்ஸ் சபையில் தெரிவிக்கும் பொழுது, நாடாளுமன்றத்தின் உத்தரவினுல் வெளியிடப் பட்ட அதிகாரபூர்வமான விவரங்கள் இவ்வாறு கூறு கின்றன.

நிதியமைச்சருடைய இப்படிப்பட்ட அதிகாரபூர்வமான பாராட்டுதல்களுக்கிடையே அதிகாரபூர்வமான பொதுச் சுகாதார அறிக்கையின் வறண்ட கூற்று காதுகளை உறுத்து கிறது:

> ''ஒரு நாட்டின் பொதுச் சுகாதாரம் அதன் பெருந் திரளான மக்களின் சுகாதாரத்தையே குறிக்கும்; அந்தப் பெருந்திரளான மக்கள்—அவர்களுடைய கீழ்மட்டப் பகுதி வரை—குறைந்த பட்சம் குறைவான சுபிட்சத்தோடு கூட இல்லாவிட்டால் அவர்கள் சிறிது கூட ஆரோக்கியமாக இருக்க முடியாது.''

நிதியமைச்சரின் கண்களுக்கு முன்னுல் ''நாட்டின் முன்னேற்றத்தைப்'' பற்றிய புள்ளிவிவரங்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றன. அவர் அதைக் கண்டு பிரமித்துப் போய் அடக்க முடியாத பரவசத்தோடு கூறுகிருர்:

''நாட்டின் வரி விதிக்கப்படக் கூடிய வருமானம் 1842க்கும் 1852க்கும் இடையே 6 சதவிகிதம் அதிகரித்தது. 1853 முதல் 1861 வரையுள்ள எட்டு வருடங்களில் 1853ல் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையிலிருந்து அது 20 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இது அநேகமாக நம்ப முடியாத அளவுக்கு ஆச்சரியமான உண்மை... செல்வமும் சக்தியும் இப்படி போதையூட்டுமளவுக்குப் பெருகியிருப்பது முற்றிலும் உடைமை வர்க்கங்களுக்கு மட்டுமே ஏற்பட்டிருக்கிறது!'' என்று கிளாட்ஸ்தன் மேலும் கூறுகிருர்.

தொழிலாளி வர்க்கத்தினர் எந்த அளவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு, ஒழுக்கம் சிதைக்கப்பட்டு, மன அழிவுக்கு ஆளாகி ''இப்படி போதையூட்டும் அளவுக்கு முற்றிலும் உடைமை வர்க்கங்களுக்கு மட்டும் செல்வம் மற்றும் சக்தியின் பெருக்கத்தை'' உற்பத்தி செய்தனர்—இன்றும் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர்—என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினுல் தையற்கடைகள், அச்சகங்கள் மற்றும் உடைகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளைப் பற்றி சமீபத்தில் வெளிவந்த ''பொதுச் சுகாதார அறிக்கை'' தரும் சித்திரத்தைப் பாருங்கள்! ''குழந்தைகள் வேலை செய்யும் நிலைமைகளைப் பற்றிய விசாரணைக் குழுவின் 1863ம் வருட அறிக்கையை'' ஒப்பிட்டுப் பாருங்கள். அதிலடங்கியிருக்கும் பின்வரும் பகுதியை உதாரணமாகத் தருகிறேன்.

''பானை செய்பவர்கள்—ஆண்களும் பெண்களும்—ஒரு பிரிவினர் என்ற முறையில் உடலமைப்பு, மனுேநிலை ஆகிய இரண்டிலுமே அதிகமான நசிவுக்காளாகிய மக்கள் தொகையைப் பிரதிநிதித்துவம் செய்கிருர்கள்,'' ''ஆரோக்கியமில்லாத குழந்தை பின்னர் ஆரோக்கியமில்லாத பெற்ருேராகிறது,'' ''இனம் இப்படியே மென்மேலும் அதிகமாக

நசித்துவிடும்,'' ''ஸ்டாபோர்டுஷயருக்குப் பக்கத்துப் பிரதேசத்திலிருந்து அதிக ஆரோக்கியமான மக்கட் பிரிவினர் தொடர்ச்சியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதும் அவர்களோடு கலப்புத் திருமணங்கள் ஏற்படுவதும் மட்டுமில்லையென்றால் அங்கேயுள்ள மக்கள் தொகையின் இனச் சிதைவு இன்னும் அதிகமாக இருக்கும்.''

''ரொட்டி தயாரிக்கும் தொழிலில் இருப்போர் தெரிவித்த புகார்கள்'' என்ற திரு. திரீமென்ஹியரின் நீலப் புத்தகத்தைப் புரட்டிப் பாருங்கள்! பஞ்ச நிலைமைகளில் லங்காஷயர் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு அற்பமாயிருந்தாலும் அவர்களுடைய ஆரோக்கியம் உண்மையிலேயே அபிவிருத்தி அடைந்தது. ஏனென்றால் பருத்திப் பஞ்சத்தின் விளைவாக அவர்கள் தொழிற்சாலையில் தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்; குழந்தைகளின் மரண விகிதம் குறைந்து கொண்டிருந்தது. ஏனென்றால் கடைசியாக இப்பொழுது அவர்களுடைய தாயார்கள் குழந்தைகளுக்குக் கோட்ஃபிரி மருந்துக்குப் பதிலாகத் தங்களுடைய மார்புப் பாலைக் கொடுக்க அனுமதிக்கப் பட்டார்கள். பிறப்பு மற்றும் மரணம் பற்றி தொழிற்சாலை ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்ட, அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்களால் உறுதிப்படுத்தப்பட்ட இந்தப் புதிரான அறிக்கையைக் கேட்டு யார்தான் நடுங்கவில்லை?

மறுபடியும் பதக்கத்தைத் திருப்புங்கள். வருட வருமானம் 50,000 பவுனும் அதற்கு மேலும் இருப்பதாக வரி வசூலிப்பவர்களால் மதிப்பிடப்படுகின்ற நபர்களின் எண்ணிக்கையில் 1862 ஏப்ரல் 5 முதல் 1863 ஏப்ரல் 5 முடிய பதின்மூன்று பேர்கள் கூடுதலாகச் சேர்ந்திருக்கிறார்கள்—ஒரே வருடத்தில் அவர்களுடைய எண்ணிக்கை 67இலிருந்து 80ஆக உயர்ந்திருக்கிறது—என்று காமன்ஸ் சபையில் 1864 ஜூலை 20ந் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்ட வருமானம் மற்றும் சொத்து வரிக்கணக்குகள் நமக்குத் தெரிவிக்கின்றன. சுமார் 3,000 நபர்கள் தங்களுக்கிடையே சுமார் 2,50,00,000 பவுன் ஸ்டர்லிங் வருட வருமானத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று அதே கணக்குகள்

தெரிவிக்கின்றன. இது இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள மொத்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் வருடந்தோறும் கொடுக்கப்படுகின்ற மொத்த வருமானத்தைக் காட்டிலும் அதிகமானதாகும். 1861ம் வருடத்திய மக்கள் தொகைக் கணக்கைப் புரட்டிப் பாருங்கள். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் ஆண் நிலவுடைமையாளர்களின் எண்ணிக்கை 1851ல் 16,934ஆக இருந்தது; 1861ல் 15,066ஆகக் குறைந்து விட்டது; ஆகவே நிலக்குவிப்பு பத்து வருடங்களில் 11 சதவிகிதமாக அதிகரித்திருப்பதைக் காண முடியும். நாட்டிலுள்ள நிலம் சிலருடைய கைகளில் குவிவது இதே வேகத்தில் போகுமானல் நிலப் பிரச்சினை ரோமானியப் பேரரசில் இருந்ததைப் போல குறிப்பிடத்தக்க அளவுக்கு எளிமையடைந்து விடும். அங்கே ஆப்பிரிக்க மாநிலத்தின் பாதி ஆறு கனவான்களுக்குச் சொந்தமானது என்பதைக் கண்டு பிடித்தபொழுது நீரோ ஆச்சரியத்தோடு சிரித்தாராம்.

''அநேகமாக நம்ப முடியாத அளவுக்கு ஆச்சரியமான உண்மைகளைப்'' பற்றி நாம் இவ்வளவு விரிவாகச் சொல்லியிருப்பதற்குக் காரணம், ஐரோப்பாவின் வர்த்தகத்துக்கும் தொழிலுக்கும் இங்கிலாந்து தலைமை வகிப்பதனால்தான். சில மாதங்களுக்கு முன்பு அகதியாக இங்கே வந்த லுயீ ஃபிலீப்பின் மகன்களில் ஒருவர் ஆங்கில விவசாயத் தொழிலாளியின் நிலைமை கால்வாய்க்கு மறு கரையிலுள்ள, பகட்டுக்குறைவான தோழனேடு ஒப்பிடும் பொழுது உயர்வானதாக இருக்கிறதென்று பகிரங்கமாகப் பாராட்டியது நினைவிருக்கும். ஐரோப்பாக் கண்டத்தில் தொழில் வளர்ச்சி மிக்க, முன்னேறியுள்ள எல்லா நாடுகளிலும் ஆங்கில உண்மைகள்—ஸ்தல வர்ணப் பூச்சுகளை மாற்றிக்கொண்டு ஓரளவுக்குச் சுருங்கிய அளவில்—தம்மை மறு உற்பத்தி செய்து கொள்கின்றன. இவை எல்லாவற்றிலும் 1848 முதல் இதுவரை கேட்டிராத தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது; கனவிலும் நினைக்க முடியாத அளவுக்கு இறக்குமதி, ஏற்றுமதிகள் அதிகரித்திருக்கின்றன. இவை எல்லாவற்றிலுமே ''முற்றிலும் உடைமை வர்க்கங்களுக்கு மட்டும்

செல்வம் மற்றும் சக்தியில் ஏற்பட்டிருக்கும் பெருக்கம்'' உண்மையாகவே ''போதையூட்டுவது தான்''. இவை எல்லாவற்றிலும்—இங்கிலாந்தைப் போலவே—தொழிலாளி வர்க்கத்தில் சிறுபான்மையினருடைய உண்மையான கூலி ஓரளவு அதிகரித்தது. அதே சமயத்தில் தொழிலாளர்களின் பெரும்பான்மையோரில் கூலியின் பணவியல் அதிகரிப்பு உண்மையிலேயே வசதிகள் ஏற்பட்டிருப்பதைக் காட்ட வில்லை. உதாரணமாக லண்டனிலுள்ள ஏழையர் விடுதி அல்லது அனாதை இல்லத்தில் இருப்பவர்களின் முதல் தேவைகளுக்கு ஏற்படும் செலவு 1852ல் 7 பவுன் 7ஷில்லிங் 4 பென்சாக இருந்தது, 1861ல் 9 பவுன் 15 ஷில்லிங் 8 பென்சாக அதிகரித்திருக்கிறதென்றால் அங்கேயிருப்பவர் களுக்கு அதனால் சிறிதும் நன்மை ஏற்படவில்லை என்பதைப் போன்றதே இதுவும். எல்லா இடங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் பெருந்திரளினர் பாதாளத்தை நோக்கி மூழ்கிக் கொண்டிருந்தார்கள். குறைந்த பட்சம், தங்களுக்கு மேலே யிருந்தவர்கள் சமூக நிலைமையில் மேலே ஏறிக் கொண் டிருந்த அதே வேகத்தில் இவர்கள் கீழே இறங்கிக் கொண் டிருந்தார்கள். இயந்திர அபிவிருத்தியோ, உற்பத்தியில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதோ, போக்குவரத்துச் சாதனங்களின் அபிவிருத்தியோ, புதிய காலனிகளோ, அந்நிய நாடுகளுக்குக் குடிபெயர்வதோ, புதிய சந்தைகளோ, வர்த்தக சுதந்திரமோ—அல்லது இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்ப்பதாலோ—பெருந்திரளான உழைக்கும் மக் களின் துன்பங்களை ஒழிக்கப் போவதில்லை; ஆனால் இன்றைய தீமையான அடித்தளத்தின் மீது உழைப்பின் உற்பத்திச் சக்திகளுக்கு ஏற்படும் ஒவ்வொரு புதிய வளர்ச்சியும் சமூக வேறுபாடுகளை ஆழமாக்க, சமூக முரண்பாடுகளைக் குறித்துக் காட்ட நிச்சயமாக முற்படும் என்பது ஐரோப்பாக் கண்டத்தின் எல்லா நாடுகளிலும் தப்பெண்ணங்களைக் கொண்டிராத எவருக்குமே விளக்கிக் காட்டக் கூடிய உண்மையாக இப்பொழுது ஆகிவிட்டது. மற்றவர்களைப் போலியான சொர்க்கத்திலேயே வைத்திருப்பதில் நன்மை அடையக் கூடியவர்கள் மட்டுமே அதை மறுக்கிறார்கள்.

பொருளாதார முன்னேற்றத்தின் ''போதை யூட்டும்'' இந்த சகாப்தத்தின் போது, பிரிட்டிஷ் பேரரசின் தலைநகரத்தில் பட்டினிச் சாவு அநேகமாக ஒரு சமூக அந்தஸ்துக்கு வளர்ச்சி யடைந்தது. வர்த்தக மற்றும் தொழில் நெருக்கடி என்ற சமூக விஷக்காய்ச்சலின் வேகமான வருகையை, அதன் விஸ்தாரமான சுற்றளவை, அதன் தீவிரமான மரண விளைவை உலக வரலாற்றில் இந்த சகாப்தம் குறிக்கிறது.

1848ம் வருடப் புரட்சிகளின் தோல்விக்குப் பிறகு ஐரோப்பாக் கண்டத்தில் தொழிலாளி வர்க்கத்தினருடைய எல்லா கட்சி ஸ்தாபனங்களும் கட்சிப் பத்திரிகைகளும் அதிகாரம் என்ற இரும்புக் கரத்தினால் நசுக்கப்பட்டன. தொழிலாளர்களில் மிகவும் முன்னணியிலிருந்த புதல்வர்கள் ஏமாற்றத்தால் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பாலுள்ள குடியரசுக்கு ஓடினார்கள். ஜ்வர வேகத்தில் தொழில் வளர்ச்சி, ஒழுக்கச் சீர்குலைவு மற்றும் அரசியல் பிற்போக்கு ஆகியவற்றின் சகாப்தத்துக்கு முன்னால் விடுதலையைப் பற்றிய அற்பாயுள் கனவுகள் மறைந்தன. ஐரோப்பாக் கண்டத்தில் தொழிலாளி வர்க்கத்தினரின் தோல்விக்கு இங்கிலாந்து அரசாங்கத்தின் இராஜிய நடவடிக்கைகள் பகுதியளவுக்குக் காரணமே. அந்த அரசாங்கம் இன்று போலவே அன்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மந்திரிசபையோடு[6] சகோதர பாசத்தில் ஒத்துழைத்தது. அந்தத் தோல்வியின் ஒட்டுவா ரொட்டி விளைவுகள் கால்வாயின் இக்கரைக்கும் பரவின. ஐரோப்பாக் கண்டத்தில் தங்களுடைய சகோதரர்கள் வீழ்ச்சியடைந்தது ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தைக் கலவரப்படுத்தி தங்களுடைய சொந்த இலட்சியத்தில் அவர்களுடைய நம்பிக்கையை நொறுக்கியதென்றால் அது நிலப் பிரபுக்களுக்கும் பணப் பிரபுக்களுக்கும் ஓரளவுக்கு ஆட்டங் கொடுத்திருந்த தன்னம்பிக்கையை மீட்டுக் கொடுத்தது. முன்பே அறிவிக்கப்பட்ட சலுகைகளை அவர்கள் திமிரோடு திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். புதிய தங்கப் பிரதேசங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஏராளமானவர்கள் நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றது பாட்டாளி வர்க்கத்தின் அணிகளில் ஈடு செய்ய முடியாத வெற்றிடத்தை ஏற்

படுத்தியது. முன்பு சுறுசுறுப்பாக இருந்த அதன் உறுப்பினர்களில் பலர் அதிக வேலை, அதிக சம்பளம் என்ற தற்காலிகமான இலஞ்சத்தில் சிக்கிக் கொண்டு ''அரசியல் கருங்காலிகளாக'' மாறினார்கள். சார்ட்டிஸ்ட் இயக்கத்தைத்[7] தளராது பாதுகாக்க அல்லது அதைச் சீரமைக்கச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளும் குறிப்பிடத்தக்க விதத்தில் தோல்வியடைந்தன. பெருந்திரளான மக்களின் அலட்சியத்தினால் தொழிலாளி வர்க்கத்தின் பத்திரிகைகள் ஒவ்வொன்றாக மடிந்தன. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இப்படிப்பட்ட ஒரு அரசியல் வெறுமைக்கு இதற்கு முன்னர் எந்தக் காலத்திலும் ஆங்கிலத் தொழிலாளி வர்க்கம் முற்றிலுமாகத் தன்னைச் சமரசப்படுத்திக் கொண்டதில்லை. இதற்கு முன்பு பிரிட்டனிலும் ஐரோப்பாக் கண்டத்திலும் உள்ள தொழிலாளி வர்க்கத்தினரிடம் நடவடிக்கையில் ஒருமைப்பாடு இல்லாதிருந்தது என்றால் இப்பொழுது தோல்வியில் ஒருமைப்பாடு இருந்ததென்பது நிச்சயம்.

எனினும் 1848ம் வருடப் புரட்சிகளுக்குப் பின்னர் இதுவரையுள்ள காலம் சாதகமான அம்சங்களையும் கூடக் கொண்டிருக்கிறது. நாம் இங்கே இரண்டு மகத்தான உண்மைகளை மட்டும் சுட்டிக்காட்டுவோம்.

முப்பது வருடக் காலம் மிகவும் பாராட்டத்தக்க விடா முயற்சியோடு போராட்டம் நடத்திய ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தினர் நிலப்பிரபுக்களுக்கும் பணப்பிரபுக்களுக்குமிடையே கணநேரம் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்தி பத்து மணி நேர வேலை[8] மசோதாவை நிறைவேற்றுவதில் வெற்றியடைந்தார்கள். இதன் மூலம் தொழிற்சாலை ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய ஏராளமான உடல் நல, அறவியல் மற்றும் அறிவு சார்ந்த நன்மைகள் எல்லாத் தரப்பினராலும் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன; ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை தொழிற்சாலை ஆய்வாளர்கள் தரும் அறிக்கைகளில் இவை விவரிக்கப்படுகின்றன. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள எல்லா அரசாங்கங்களுமே இங்கிலாந்தின் தொழிற்சாலைச் சட்டத்தை அதிகமான அல்லது குறைவான மாற்றங்களைக் கொண்ட வடி

வத்தில் அங்கீகரிக்க நேர்ந்திருக்கிறது; இங்கிலாந்தின் நாடாளுமன்றமும் ஒவ்வொரு வருடமும் அதன் நடவடிக்கை எல்லையை விரிவுபடுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறது. அதன் செய்முறை ரீதியான முக்கியத்துவத்தைத் தவிர, உழைக்கும் மக்களின் இந்த நடவடிக்கையின் மகத்தான வெற்றியை மேலும் உயர்த்துவதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. எவ்விதத்திலாவது தொழிலாளர் உழைக்கும் நேரத்தைச் சட்டபூர்வமாகக் குறைத்தால் அது பிரிட்டிஷ் தொழில் துறைக்கு மரண அடியாகவே இருக்கும் என்று முதலாளி வர்க்கம் தன்னுடைய மிகக் கேவலமான விஞ்ஞான அமைப்புகளின் மூலமாகவும் டாக்டர் யூர், பேராசிரியர் ஸீனியர், இன்னும் அதே மாதிரியான மற்ற அறிவாளிகள் மூலமாகவும் ஆருடம் கூறியதோடு அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டது. இரத்தத்தைக் குடிக்கும் பேயைப் போல பிரிட்டிஷ் தொழில் துறை இரத்தத்தை, அதிலும் குழந்தைகளின் இரத்தத்தைக் குடித்தால்தான் உயிரோடிருக்கும் போலும். பண்டைக் காலத்தில் மோலஹ் மதத்தில் குழந்தைகளைப் பலி கொடுப்பது ஒரு மர்மமான சடங்காகும். ஆனால் எப்பொழுதாவது, மிக முக்கியமான சில சந்தர்ப்பங்களில், ஒருவேளை வருடத்துக்கொரு முறை மட்டுமே அது கடைப்பிடிக்கப்பட்டது. மேலும் மோலஹ் கடவுள் ஏழைகளின் குழந்தைகளே வேண்டும் என்று தனிவகையான விருப்பம் காட்டவில்லை. வேலை நேரத்தைச் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துவதைப் பற்றிய இப்போராட்டம் அதிக உக்கிரமாக நடைபெற்றது. ஏனென்றால் அதிக லாபம் என்ற பேராசைக்கு ஏற்பட்ட அச்சங்கள் ஒரு புறமிருக்க, முதலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரமாகிய அளிப்பு மற்றும் தேவை விதியின் குருட்டு ஆட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரமாகிய சமூகத் தொலை நோக்கினால் நிர்வகிக்கப்படுகின்ற சமூக உற்பத்திக்குமிடையே நடைபெற்ற மாபெரும் போட்டியில் அது பங்கு வகித்தது. ஆகவே பத்து மணி நேர வேலை மசோதா மாபெரும் செய்முறை வெற்றி என்பதோடு ஒரு கோட்பாட்டின் வெற்றியாகவும் இருந்தது. முதல் தடவையாக

பட்டப்பகலில் தொழிலாளி வர்க்க அரசியல் பொருளாதாரத்திடம் முதலாளி வர்க்க அரசியல் பொருளாதாரம் தோல்வியடைந்தது.

ஆனால் உடைமையின் அரசியல் பொருளாதாரத்துக்கு எதிராக உழைப்பின் அரசியல் பொருளாதாரம் இன்னொரு மாபெரும் வெற்றியை அடையப் போகிறது. நாம் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி, குறிப்பாக ஒரு சில துணிச்சலான "நபர்கள்" எத்தகைய உதவியுமில்லாமல் ஏற்படுத்திய கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசுகிறோம். இத்தகைய மகத்தான சமூகப் பரிசோதனைகளின் மதிப்பைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் மிகையல்ல. நவீன விஞ்ஞானத்தின் ஆணைகளுக்குப் பொருந்தும் வகையில் நடத்தப்பட்ட பெரிய அளவு உற்பத்தி, கூலித் தொழிலாளர்கள் என்ற வர்க்கத்தை வேலைக்கு வைத்துக் கொள்ளும் எஜமானர்கள் என்ற வர்க்கம் இல்லாமல் நடைபெற முடியும், உழைப்புச் சாதனங்கள் பலனளிக்க வேண்டுமென்றால் தொழிலாளருக்கு எதிராக ஆதிக்கம் செலுத்துகின்ற, அவனைக் கசக்கிப் பிழிகின்ற சாதனமாக மட்டுமே அவற்றைப் பயன்படுத்தத் தேவையில்லை, மேலும் அடிமை உழைப்பைப் போல, பண்ணையடிமை உழைப்பைப் போல கூலி உழைப்பும் மறைகின்ற சிறுதரமான வடிவமே, விரும்பும் கரம், தயாராகவுள்ள மூளை மற்றும் ஆனந்தமான இதயத்தோடு பாடுபடுகின்ற கூட்டு உழைப்புக்கு முன்னால் அது மறைவது உறுதி என்பதைத் தொழிலாளர்கள்—வாதத்தின் மூலமல்ல—செயலில் காட்டியிருக்கிறார்கள். இங்கிலாந்தில் கூட்டுறவு அமைப்பின் விதைகள் இராபர்ட் ஓவனால் விதைக்கப்பட்டன. ஐரோப்பாக் கண்டத்தில் தொழிலாளர்கள் முயற்சி செய்த பரிசோதனைகள் எல்லாம், உண்மையில் கண்டுபிடிக்கப்படாத ஆனால் 1848ல் உரத்த குரலில் முழங்கப்பட்ட தத்துவங்களின் செய்முறை விளைவுகளே.

அதே சமயத்தில் கூட்டுறவு உழைப்பு கோட்பாட்டளவில் எவ்வளவு அதிகச் சிறப்பானதாகவும் செய்முறையில் எவ்வளவு உபயோகமானதாகவும் இருந்த போதிலும் அது தனிப்பட்ட தொழிலாளர்கள் அவ்வப்போது செய்கின்ற

முயற்சிகள் என்ற குறுகலான வட்டத்திற்குள் வைக்கப்பட்டிருந்தால் ஏகபோகத்தின் பெருக்கல் விகிதத்தில் வளர்ச்சியைத் தடுப்பது, பெருந்திரளான மக்களை விடுவிப்பது அல்லது அவர்களுடைய துன்பங்களைப் புலப்படுகின்ற விதத்தில் குறைப்பது கூட ஒருபோதும் முடியாது என்பதை 1848 முதல் 1864 முடிய உள்ள காலத்தின் அனுபவம் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி நிரூபித்து விட்டது. நல்லெண்ணம் கொண்ட மேன்மக்களும் பரோபகார எண்ணம் கொண்டிருக்கும் முதலாளித்துவ வாயாடிகளும் தந்திரமான பொருளியலாளர்களும் கூட—ஒரே சமயத்தில் இதே கூட்டுறவு உழைப்பு முறையைப் பற்றி நமக்கு அருவருப்புண்டாகும் விதத்தில் பாராட்டிப் பேச ஆரம்பித்திருப்பது ஒருவேளை இதே காரணத்துக்காகவே இருக்கலாம். இவர்கள் இதைப் பற்றி கனவு காண்பவனின் கற்பனை என்று ஏளனம் செய்து அல்லது சோஷலிசத்தின் புனிதத்தன்மையைக் கெடுப்பதென்று கண்டித்து அதை முளையிலேயே கிள்ளிப் போட வீண் முயற்சிகளைச் செய்தார்கள். உழைப்பில் ஈடுபட்டுள்ள பெருந்திரளான மக்களை விடுவிப்பதற்குக் கூட்டுறவு உழைப்பை தேசியப் பரிமாணங்களுக்கு வளர்த்துச் செல்ல வேண்டும்; ஆகவே அதை தேசியச் சாதனங்களின் மூலம் பேணி வளர்க்க வேண்டும். ஆனால் நிலத்தின் பிரபுக்களும் மூலதனத்தின் பிரபுக்களும் தங்களுடைய பொருளாதார ஏகபோகங்களைக் காப்பதற்கும் நிரந்தரமாக்குவதற்குமே தங்களுடைய அரசியல் தனி உரிமைகளை எப்போதும் உபயோகிப்பார்கள். ஆகவே உழைப்பின் விடுதலையை ஊக்குவிப்பதற்கு பதில் அதன் பாதையில் சாத்தியமான ஒவ்வொரு தடையையும் ஏற்படுத்துவதை அவர்கள் தொடர்ந்து செய்வார்கள். பாராளுமன்றத்தின் சென்ற கூட்டத் தொடரின் போது ஐரிஷ் குத்தகை விவசாயிகளின் உரிமைகள் மசோதாவை ஆதரித்தவர்களைப் பால்மெர்ஸ்டன் பிரபு எப்படி ஏளனம் செய்து வாயடக்கினர் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். காமன்ஸ் சபை நிலவுடைமையாளர்களின் சபை என்று அவர் கூக்குரலிட்டார்.

ஆகவே அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதே

தொழிலாளி வர்க்கங்களின் மாபெரும் கடமையாகி விட்டது. அவர்களும் இதைப் புரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஏனென்றால் இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தொழிலாளர்களின் கட்சியை அரசியல் ரீதியாக சீரமைப்பதற்கு ஒரே சமயத்தில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன; அவை ஒரே சமயத்தில் புத்துயிரடைந்தும் வருகின்றன.

வெற்றிக்கு அவசியமான ஒரு கூறு—எண்ணிக்கை—தொழிலாளர்களிடம் இருக்கிறது. ஆனால் எண்ணிக்கை—ஸ்தாபனத்தால் ஒன்றுசேர்ந்து, அறிவால் வழி நடத்தப் படுமானால்—தராசில் மட்டும் தூக்கிக் காட்டும். வெவ்வேறு நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கிடையே இருக்க வேண்டிய, விடுதலைக்கான எல்லாப் போராட்டத்திலும் அவர்கள் ஒருவரோடொருவர் உறுதியாகச் சேர்ந்து நிற்குமாறு தூண்ட வேண்டிய சகோதரப் பிணைப்பை அலட்சியம் செய்வது அவர்களுடைய தொடர்பில்லாத முயற்சிகளின் பொதுவான தோல்வியினால் தண்டிக்கப்படும் என்பதைக் கடந்த கால அனுபவம் எடுத்துக் காட்டியிருக்கிறது. 1864 செப்டெம்பர் 28ல் செயின்ட் மார்ட்டின் ஹாலில் கூடியிருந்த பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களைச் சர்வதேச சங்கத்தை அமைக்குமாறு தூண்டியது இந்த எண்ணமே.

மற்றொரு உறுதியான முடிவும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ஊக்கம் கொடுத்தது.

தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலைக்கு அவர்களுடைய சகோதர உடன்பாடு அவசியமானதென்றால் குற்றவாளித்தனமான நோக்கங்களைப் பின்பற்றுகின்ற, தேசிய வெறுப்புக்களை, தப்பெண்ணங்களைத் தூண்டி விடுகின்ற, மக்களுடைய இரத்தத்தையும் செல்வத்தையும் கொள்ளைக்காரத்தனமான யுத்தங்களில் விரயமாக்குகின்ற வெளிநாட்டுக் கொள்கையை வைத்துக்கொண்டு அந்த மகத்தான இலட்சியத்தை அவர்கள் எப்படி நிறைவேற்ற முடியும்? அட்லாண்டிக் பெருங்கடலின் மறு பக்கத்தில் அடிமை முறையை நிரந்தரமாக்குவதற்கும் அதைப் பரப்புவதற்கும்

நடைபெற்ற அவமானகரமான புனித யுத்தத்தில் மேற்கு ஐரோப்பா தலை தெறிக்கக் குதிப்பதிலிருந்து அதைக் காப்பாற்றியது ஆளும் வர்க்கத்தினருடைய மதிநுட்பமல்ல; இந்தக் குற்றவாளித்தனமான தவறை இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்தினர் வீரத்தோடு எதிர்த்ததே அதற்குக் காரணம். காக்கஸசின் மலைக் கோட்டைகள் ருஷ்யாவுக்கு இரையாவதையும் வீரம் நிறைந்த போலந்து ருஷ்யாவினுல் வீழ்த்தப்படுவதையும் ஐரோப்பாவின் மேல்வர்க்கத்தினர் வெட்கமில்லாத வகையில் அங்கீகாரத்தோடு, போலியான அனுதாபத்தோடு அல்லது முட்டாள்தனமான அலட்சியத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததும் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் தலையையும் ஐரோப்பாவின் ஒவ்வொரு மந்திரி சபையிலும் தன்னுடைய கைகளையும் வைத்துக் கொண்டிருக்கும் அந்தக் காட்டுமிராண்டி அரசின் ஏராளமான மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத கைப்பற்றுதல்களும் தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் கடமையைச் சுட்டிக்காட்டின. சர்வதேச அரசியலின் மர்மங்களை அடக்கியாளும் திறத்தைக் கற்றுக் கொள்வது; அவரவருடைய அரசாங்கங்களின் இராஜிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பது; அவசியமேற்பட்டால் தங்கள் சக்தியிலுள்ள எல்லாச் சாதனங்களையும் உபயோகித்து அவற்றை எதிர்ப்பது; தடுக்க முடியாத பொழுது அவற்றை ஒரே சமயத்தில் கண்டிப்பதற்காக ஒன்றுசேர்வது; தனிப்பட்ட நபர்களின் உறவுகளை ஒழுங்கு செய்கின்ற அறவியல் மற்றும் நீதியின் சாதாரணமான விதிகளே நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளிலும் தலைமையான விதிகளாக இருக்க வேண்டுமென்பதை நிலைநாட்டுவது அந்தக் கடமையாகும்.

இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையை ஏற்படுத்த நடைபெறும் போராட்டம் தொழிலாளி வர்க்கத்தினருடைய விடுதலைக்கான பொதுப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும்.

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

*1861 அக்டோபர் 21-27ம்*
*தேதிகளுக்கிடையில்*
*மார்க்சினுல் எழுதப்பட்டது*

*1864ம் ஆண்டு நவம்பரில்*
*லண்டனில் வெளியிடப்பட்ட*
*Address and Provisional*
*Rules of the Working Men's*
*International Association,*
*Established September 28, 1864,*
*at a Public Meeting held at*
*St. Martin's Hall, Long Acre,*
*London என்னும் பிரசுரத்தில்*
*அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில்*
*ஆசிரியருடைய மொழிபெயர்ப்பு*
*Social-Demokrat பத்திரிகையில்*
*(2ம் இதழ், 3ம் இதழுக்கான இணைப்பாக*
*1864 டிசம்பர் 21, 30 தேதிகளில்)*
*வெளியிடப்பட்டது*

*இப்பிரசுரத்தின்படி*
*அச்சிடப்பட்டது*

கா. மார்க்ஸ்

# சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகள்[9]

கீழ்க்காணும் அம்சங்களை மனதிற்கொண்டு, அதாவது:

*தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையைத் தொழிலாளி வர்க்கத்தினரே வென்றெடுத்துக் கொள்ள வேண்டும்; தொழிலாளி வர்க்கத்தினருடைய விடுதலைக்கான போராட்டமென்பது வர்க்கத் தனி உரிமைகளுக்கும் ஏகபோகங்களுக்கும் நடைபெறுகின்ற போராட்டம் என்று அர்த்தமல்ல; அது சமத்துவமான உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் எல்லா வகையான வர்க்க ஆதிக்கத்தை ஒழிப்பதற்கும் நடைபெறுகின்ற போராட்டமே;*

*உழைப்புச் சாதனங்களை அதாவது வாழ்க்கையின் ஆதாரங்களை ஏகபோகமாக வைத்திருப்பவரிடம் உழைக்கும் மனிதன் பொருளாதார ரீதியில் கீழ்ப்பட்டிருப்பதே அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களுக்கும், எல்லா விதமான சமூகத் துன்பம், அறிவின் தரங் குறைதல் மற்றும் அரசியல் அடிமைத்தனத்துக்கும் அடியில் இருக்கிறது;*

*ஆகவே ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தன்னைச் சாதனமாக அர்ப்பணிக்க வேண்டிய மகத்தான இலட்சியம் தொழிலாளி வர்க்கத்தினரின் பொருளாதார விடுதலையே;*

*ஒவ்வொரு நாட்டிலும் பலவிதமான தொழிலாளர் பிரிவுகளுக்கிடையேயும் ஒற்றுமை இல்லாததனாலும் பல்வேறு நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினரிடையே*

சகோதரப் பிணைப்பு இல்லாததனுலும் இந்த மகத்தான இலட்சியத்தை நிறைவேற்றச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளும் இது வரை தோல்வியடைந்திருக்கின்றன;

உழைப்பின் விடுதலை என்பது ஸ்தலப் பிரச்சினையல்ல, தேசியப் பிரச்சினையுமல்ல; அது நவீன சமூகம் இருக்கின்ற நாடுகள் அனைத்தையும் தழுவிய சமூகப் பிரச்சினை; அதன் தீர்வு மிக அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளின் செய்முறை மற்றும் தத்துவ ரீதியான ஒத்துழைப்பைச் சார்ந்திருக்கிறது;

ஐரோப்பாவில் மிகவும் அதிகமாகத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தினரிடம் இன்று ஏற்பட்டிருக்கும் புத்தெழுச்சி புதிய நம்பிக்கையை ஏற்படுத்திய போதிலும் பழைய தவறுகளை நாம் மறுபடியும் செய்யக் கூடாதென்று கண்டிப்பாக எச்சரிக்கை செய்வதோடு இன்னும் தொடர்பில்லாதிருக்கும் இயக்கங்களை உடனடியாக இணைக்க வேண்டும் என்று அறைகூவுகிறது;

குறிப்பிடப்பட்ட இந்தக் காரணங்களைக் கவனத்தில் கொண்டு சர்வதேசத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது.

இது பின்வருமாறு பிரகடனம் செய்கிறது:

இதில் சேர்கின்ற எல்லாச் சங்கங்களும் மற்றும் தனி நபர்களும் தங்களுக்கிடையேயும் எல்லா மனிதர்களுக்கிடையேயும் நிறம், மதம், தேசிய இன வேறுபாடுகளைக் கடந்து உண்மை, நீதி, அறநெறியைத் தம் நடத்தையின் அடிப்படையாகக் கொள்வர்;

கடமைகள் இல்லாமல் உரிமைகள் இல்லை, உரிமைகள் இல்லாமல் கடமைகள் இல்லை என்பதை அது அறிவிக்கிறது.

இந்த உணர்ச்சியின் அடிப்படையில் பின்வரும் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன:

1. பல்வேறு நாடுகளிலும் உள்ள, ஒரே இலட்சியத்தை அதாவது தொழிலாளி வர்க்கங்களின் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் பரிபூரண விடுதலையை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களின் சங்கங்களுக்கிடையே தகவல் தொடர்புக்கும் ஒத்துழைப்புக்கும் மத்திய அமைப்பாக இச்சங்கம் நிறுவப்படுகிறது.

2. இச்சங்கம் ''சர்வதேசத் தொழிலாளர் சங்கம்'' என்ற பெயரைக் கொண்டிருக்கும்.

3. இச்சங்கத்தின் கிளைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தொழிலாளர்களின் பொதுக் காங்கிரஸ் வருடந்தோறும் கூடும். இக்காங்கிரஸ் தொழிலாளி வர்க்கத்தின் பொதுவான இலட்சியங்களை அறிவிக்கும்; சர்வதேசச் சங்கம் வெற்றிகரமாக இயங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்; சங்கத்தின் பொதுக் குழுவையும் நியமிக்கும்.

4. ஒவ்வொரு காங்கிரசும் அடுத்த காங்கிரஸ் நடைபெறுகின்ற இடத்தையும் காலத்தையும் முடிவு செய்யும். எத்தகைய விசேஷமான அழைப்பும் இல்லாமலேயே பிரதிநிதிகள் முன்னர் முடிவு செய்யப்பட்ட இடத்தில், நேரத்தில் கூட வேண்டும். அவசியமேற்பட்டால் காங்கிரஸ் நடைபெறுகின்ற இடத்தைப் பொதுக் குழு மாற்றலாம்; ஆனால் கூட்டத் தேதியை மாற்றுவதற்கு அதற்கு அதிகாரம் இல்லை. காங்கிரஸ் வருடந்தோறும் பொதுக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துத் தலைமையிடத்தையும் முடிவு செய்கிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக் குழு தன்னுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு அதிகாரமுடையது.

பொதுக் குழுவின் வருடாந்தர நடவடிக்கைகளைப் பற்றிய பகிரங்க அறிக்கை வருடாந்தரக் கூட்டங்களின் போது பொதுக் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவசரமான நிலைமைகள் ஏற்படும் பொழுது பொதுக் குழு வாடிக்கையான வருடாந்தரக் காலத்தின் முடிவுக்கு முன்பாகவே பொதுக் காங்கிரசைக் கூட்டலாம்.

5. சர்வதேச சங்கத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற, பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் பொதுக் குழுவில் இடம் பெறுவார்கள். அது தன்னுடைய நடவடிக்கையை நிறைவேற்றத் தேவையான அதிகாரிகளை, அதாவது ஒரு பொருளாளர், ஒரு பொதுச் செயலாளர், பல்வேறு நாடுகளுக்கும் பொறுப்புக் கொண்டுள்ள செயலாளர்கள்-நிருபர்கள், இன்னும் மற்றவர்களைப் பொதுக் குழுவின் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

6. பொதுக் குழு சங்கத்தின் வெவ்வேறு தேசிய மற்றும் ஸ்தல அணிகளுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தும் ஒரு சர்வதேச அமைப்பாக இருக்கும். ஒரு நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு மற்ற எல்லா நாடுகளிலுமுள்ள தங்களுடைய வர்க்கத்தினரின் இயக்கங்களைப் பற்றித் தொடர்ச்சியாக அறிவிக்கவும் ஐரோப்பாவின் வெவ்வேறு நாடுகளிலுமுள்ள சமூக நிலைமைகளைப் பற்றி ஒரே சமயத்தில், பொதுவான தலைமையின் கீழ் ஆராய்ச்சி நடத்தவும் ஒரு சங்கத்தால் எழுப்பப்படுகின்ற, ஆனால் பொது நலனைப் பற்றிய பிரச்சினைகளை எல்லோரும் விவாதிக்கவும் உடனடியான செய்முறை நடவடிக்கைகள் தேவைப்படும் பொழுது (உதாரணமாக சர்வதேசத் தகராறுகள் ஏற்படும் பொழுது) இணைக்கப்பட்டிருக்கும் சங்கங்கள் ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான நடவடிக்கையைச் செய்யவும் பொதுக் குழு ஒரு சர்வதேச அமைப்பாக முயற்சி செய்யும். பொதுக் குழு உரிய சமயத்தில் வெவ்வேறு தேசிய மற்றும் ஸ்தலச் சங்கங்களுக்கு முன்பு பிரேரணைகளை வைக்கின்ற முன் முயற்சியை எடுக்கும். தகவல் தொடர்புகளுக்கு உதவுகின்ற வகையில் பொதுக் குழு அவ்வப்பொழுது அறிக்கைகளை வெளியிடும்.

7. ஒற்றுமை மற்றும் இணைப்பின் சக்தி இல்லாமல் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர்களின் இயக்கத்தின் வெற்றியை அடைய முடியாதென்பதாலும் மறு பக்கத்தில் சர்வதேசப் பொதுக் குழுவின் உபயோகம், அது தொழிலாளர்களுடைய சங்கங்களின் தேசிய அளவிலான சில மையங்களோடு ஈடுபட்டிருக்கிறதா அல்லது ஏராளமான எண்ணிக்கையைக் கொண்ட சிறிய, இணைப்பில்லாத ஸ்தலச் சங்கங்களோடு ஈடுபட்டிருக்கிறதா என்ற சந்தர்ப்பத்தைப் பெரிதும் பொறுத்திருப்பதாலும் அந்தந்த நாட்டிலுள்ள தனித்தனியான தொழிலாளர்களின் சங்கங்களை மத்திய தேசிய அமைப்புகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற தேசிய ஸ்தாபனங்களாக ஒன்றுசேர்ப்பதில் சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களுடைய முழு முயற்சியையும் ஈடுபடுத்த வேண்டும். எனினும் இந்த விதியைப் பிரயோகிப்

பது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பிரத்யேகமான சட்டங்களையே பொறுத்திருக்கிறதென்பதும் சட்டபூர்வமான தடைகளினலன்றி, சுதந்திரமான ஸ்தல சங்கங்கள் பொதுக் குழுவோடு நேரடியாகத் தொடர்பு கொள்வது தடை செய்யப்படக் கூடாது என்பதும் சுயமாகவே அறிந்து கொள்ளப்படக் கூடியவையாகும்.

8. பொதுக் குழுவோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கென்று தன்னுடைய சொந்தச் செயலாளரை நியமித்துக் கொள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் உரிமையுண்டு.

9. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் கோட்பாடுகளை அங்கீகரித்து, அவற்றைக் காத்து நிற்கும் ஒவ்வொருவரும் இதன் உறுப்பினராகத் தகுதியுடையவர். ஒவ்வொரு கிளையும் அது சேர்த்துக் கொள்ளும் உறுப்பினர்களுடைய நேர்மைக்குப் பொறுப்புடையதாகும்.

10. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தன் குடியிருப்பை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மாற்றிக் கொள்கின்ற பொழுது அங்கேயுள்ள இணைக்கப்பட்ட சங்கத் தொழிலாளர்களுடைய சகோதர ஆதரவைப் பெறுவார்.

11. சர்வதேச சங்கத்தில் இணைகின்ற தொழிலாளர் சங்கங்கள் சகோதர ஒத்துழைப்பு என்ற அழிக்க முடியாத பிணைப்பில் ஈடுபடுகின்ற பொழுதே தங்களுடைய அப்போதிருக்கும் அமைப்புகளைக் குறையில்லாத வகையில் பாதுகாத்துக் கொள்வார்கள்.

12. இப்போதைய விதிகளை ஒவ்வொரு காங்கிரசிலும் திருத்தம் செய்து கொள்ளலாம். காங்கிரசில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் அத்தகைய திருத்தத்துக்கு ஆதரவு தர வேண்டும்.

13. இப்போதைய விதிமுறைகளில் இடம் பெருத எல்லாமே விசேஷ விதிகளினல் ஒழுங்குபடுத்தப்படும். அவை ஒவ்வொரு காங்கிரசின் பரிசீலனைக்கும் உட்பட்டவையாகும்.

*256, ஹை ஹால்போர்ன்,*
*வெஸ்டர்ன் சென்டர், லண்டன்,*
*அக்டோபர் 24, 1871*

*ஆங்கில, பிரெஞ்சு மொழிகளிலும் (1871, நவம்பர்-டிசம்பர்) ஜெர்மன் மொழியிலும் (1872, பிப்ரவரி) தனிப் பிரசுரங்களாக அச்சிடப்பட்டது*

*1871ம் ஆண்டில் ஆங்கில மொழியில் வெளிவந்த பிரசுரத்தின்படி அச்சிடப் பட்டது*

கா. மார்க்ஸ்

# அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனதிபதி ஆப்ரஹாம் லிங்கனுக்கு[10]

ஐயா,

தங்களை அதிகமான பெரும்பான்மையோடு மறுபடியும் தேர்ந்தெடுத்ததற்காக அமெரிக்க மக்களை நாங்கள் பாராட்டுகின்றோம்.

முதல் தேர்தலின் போது அடிமை முறைக்கு எதிர்ப்பு உங்களுடைய கோஷமாக இருந்ததென்றால் மறு தேர்தலின் போது, அடிமை முறையை ஒழித்துக் கட்டுவோம் என்பது உங்களுடைய வெற்றிகரமான போர் முழக்கமாக இருந்தது.

மாபெரும் அமெரிக்கப் பூசல் தொடங்கியதிலிருந்தே நட்சத்திரங்கள் பொறித்த கொடி தங்களுடைய எதிர்கால விதியைத் தாங்கிச் செல்கிறதென்று ஐரோப்பாவின் தொழிலாளர்கள் இயல்பான அகத்தூண்டுதலோடு உணர்ந்தார்கள். பிரதேசங்களுக்கான போராட்டம் நெருக்கடியான சகாப்தத்தைத் தொடங்க வைத்தது. அங்கே விரிவான பிரதேசங்களிலிருக்கும் கன்னி நிலம், நாடு துறந்து வருபவர்களுடைய உழைப்பை மணமுடித்துக் கொள்வதா அல்லது அடிமை ஓட்டியின் காலடி ஓசைக்குச் சோரம் போவதா என்பதுதானே அந்தப் போராட்டம்.

3,00,000 அடிமை உடைமையாளர்களின் சிலராட்சி உலக வரலாற்றில் முதல் தடவையாகத் தன்னுடைய ஆயுதத் தாங்கிய கலகக் கொடியில் ''அடிமை முறை''

என்று பொறித்துக் கொள்ளத் துணிந்த பொழுது, ஒரு நூற்றுண்டுக்கும் குறைந்த காலத்துக்கு முன்பாக ஒரு மாபெரும் ஐக்கிய ஜனநாயகக் குடியரசு என்ற கருத்து முதன்முதலாக முளைவிட்ட அதே இடத்தில், மனிதனின் உரிமைகளின் பிரகடனம்[11] முதன்முதலாக வெளியிடப் பட்டு பதினெட்டாம் நூற்றுண்டின் ஐரோப்பியப் புரட்சிக்கு முதல் தூண்டுதல் தரப்பட்ட அதே இடத்திலிருந்து எதிர்ப் புரட்சி முறைப்படியான கருர்த்தன்மையோடு ''முந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பொழுதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களைக்'' கைவிடுவதைப் பற்றிப் புகழ்பாடியபொழுது, ''அடிமை முறை நன்மை தரக் கூடிய அமைப்பு, உண்மையைச் சொல்வதென்ருல் மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையேயுள்ள உறவைப் பற்றிய மகத்தான பிரச்சினைக்கு ஒரே தீர்வு அதுதான்'' என்று வற்புறுத்தி மனிதனை உடைமையாகக் கொண்டிருப்பதே ''புதிய மாளிகையின் அடித்தளக் கல்'' என்று மனித வெறுப்போடு பிரகடனம் செய்த பொழுது—கூட்டரசுக் கனவான்களுக்கு மேல்தர வர்க்கத்தினருடைய வெறித்தனமான ஆதரவு இருளடர்ந்த எச்சரிக்கையாகத் தோன்றுவதற்கு முன்பே—அடிமைகளை உடைமையாகக் கொண்டிருப்பவர்களின் கலகம் உழைப்புக்கு எதிராக உடைமையின் பொதுவான புனிதப் போருக்குப் பறை முழக்கமாகும், உழைக்கும் மக்களின் எதிர்காலமும் அவர்கள் எதிர்காலத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கைகளும் அவர்களுடைய கடந்த கால வெற்றிகளும் கூட அட்லாண்டிக் கடலுக்கு மறு பக்கத்தில் நடைபெறுகின்ற மகத்தான போராட்டத்தில் பணயம் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஐரோப்பாவின் தொழிலாளி வர்க்கத்தினர் உடனடியாகப் புரிந்து கொண்டனர். ஆகவே எல்லா இடங்களிலும் அவர்கள் பருத்தி நெருக்கடியால்[12] ஏற்பட்ட துன்பங்களைப் பொறுமையோடு தாங்கிக் கொண்டார்கள்; அடிமை முறைக்கு ஆதரவான தலையீட்டை, ஆட்சியிலிருந்தவர்களின் இடைவிடாத் தொந்தரவை உற்சாகத்தோடு எதிர்த்தார்கள்; ஐரோப்பாவின் இந்த நல்ல இலட்சியத்துக்குத் தங்களுடைய பங்காக இரத்தத்தைக் கொடுத்தார்கள்.

வட பிராந்தியத்தின் உண்மையான அரசியல் சக்திகளான தொழிலாளர்கள் அடிமைமுறை தங்களுடைய சொந்தக் குடியரசை அசுத்தப்படுத்துமாறு அனுமதித்தபொழுது, முன்பு நீக்ரோ அவனுடைய ஒப்புதல் இல்லாமல் அடிமையாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பொழுது, வெள்ளைத் தோலைக் கொண்டிருக்கும் தொழிலாளியின் மிகவும் உயர்ந்த தனி உரிமை, அவன் தன்னுடைய எஜமானரைத் தானே தேர்ந்தெடுத்துத் தன்னை விற்பனை செய்து கொள்ள முடிவதே என்று அவர்கள் பெருமை பேசிய பொழுது உழைப்பின் உண்மையான சுதந்திரத்தை அடைவதோ, ஐரோப்பியச் சகோதரர்கள் தங்களுடைய விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டத்தை ஆதரிப்பதோ அவர்களால் முடியவில்லை; ஆனுல் உள்நாட்டு யுத்தத்தின் இரத்த வெள்ளம் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டிருந்த இந்தத் தடையை ஒழித்துவிட்டது.

அமெரிக்க சுதந்திரப் போர்[13] முதலாளி வர்க்கத்தினர் தலைமை தாங்குகின்ற ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியதைப் போல அமெரிக்காவின் அடிமைமுறை எதிர்ப்புப் போர் தொழிலாளி வர்க்கத்தினர் தலைமை தாங்குகின்ற ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்குமென்று ஐரோப்பாவின் தொழிலாளர்கள் உறுதியாக நம்புகிருர்கள். அடிமைச் கிலிகள் போடப்பட்ட ஒரு இனத்தைக் காப்பாற்றுவதற்கும் ஒரு சமூக அமைப்பை மாற்றியமைப்பதற்கும் நடைபெறுகின்ற ஒப்புவமை காட்ட முடியாத போராட்டத்தினூடே தன்னுடைய நாட்டுக்குத் தலைமை தாங்கும் விதி தொழிலாளி வர்க்கத்தின் ஒரே குறியுடைய மகனுன ஆப்ரஹாம் லிங்கனுக்குக் கிடைத்திருப்பது வரப்போகின்ற சகாப்தத்தின் முன்னறிகுறி என்று அவர்கள் கருதுகிருர்கள்.

*1864 நவம்பர் 22-29ந்*
*தேதிகளுக்கிடையில்*
*மார்க்சினுல் எழுதப்பட்டது*

*1865 ஜனவரி 7ந் தேதியன்று*
*The Bee-Hive Newspaper*
*(எண். 169)இல் வெளியிடப்பட்டது*

*இப்பத்திரிகையின்படி*
*அச்சிடப்பட்டது*

கா. மார்க்ஸ்

# புரூதோனைப் பற்றி (யோ. ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம்)[14]

*லண்டன், ஜனவரி 24, 1865*

*அன்புள்ள ஐயா,*

*புரூதோனைப் பற்றி விவரமான தீர்ப்புக் கூறுமாறு என்னைக் கேட்டுக் கொண்டு நீங்கள் எழுதியிருந்த கடிதம் நேற்று எனக்குக் கிடைத்தது. உங்கள் விருப்பத்தை நிறை வேற்ற முடியாதபடி காலமின்மை என்னைத் தடுக்கிறது. மேலும் அவர் எழுதிய புத்தகங்கள் ஒன்று கூட என்னிடம் இல்லை. எனினும் என்னுடைய நல்லெண்ணத்தைக் காட்டு வதற்காக ஒரு சுருக்கமான உருவரையை அவசரமாக எழுது கிறேன். இதற்குப் பிற்சேர்க்கையாக நீங்கள் எதையும் சேர்த்துக் கொள்ளலாம், அல்லது கழித்து விடலாம்—சுருக்கமாகச் சொல்வதென்றால் உங்கள் விருப்பம் போல அதைச் செய்து கொள்ளலாம்.**

*புரூதோனின் தொடக்க கால முயற்சிகளைப் பற்றி எனக்கு இப்பொழுது நினைவில்லை. உலக மொழியைப்[16] பற்றிப் பள்ளிக்கூடப் பாணியில் அவர் எழுதிய புத்தகம் அவரிடம் அறிவின் ஆரம்பக் கூறுகள்கூட இல்லாதிருக்கும் பொழுதுங்கூட அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண*

---

* இக்கடிதத்தை எவ்விதமான மாற்றமும் இன்றி அச்சிடுவதே சிறந்தது என்று நாம் கருதுகிறோம். [*Social-Demokrat*[15] (''சமூக-ஜனநாயகவாதி'') பத்திரிகையின் ஆசிரியர் குழு.]

முயற்சிப்பதற்கு அவர் சிறிதும் தயங்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**உடைமை என்பது என்ன?** என்று அவர் எழுதிய முதல் புத்தகமே அவருடைய மிகச் சிறந்த புத்தகமாகும். அதன் கருத்துக்களின் புதுமைக்காக இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் பழைய விஷயங்களைப் புதிய மற்றும் துணிச்சலான முறையில் சொன்னதற்காவது அது சகாப்தத்தைப் படைக்கின்ற புத்தகமாகும். அவர் அறிந்திருந்த பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் புத்தகங்களில் «*propriété*»* பல வழிகளிலும் விமர்சிக்கப்பட்டிருந்ததோடு கற்பனுவாத முறையில் அது "**ஒழிக்கப்பட்டுவிட்டது**" என்பது தெரிந்ததே. இப்புத்தகத்தில் சான்-சிமோன் மற்றும் ஃபூரியேயிடம் புருதோனின் உறவு அநேகமாக ஹெகலிடம் ஃபாயர்பாஹ் கொண்டிருந்த உறவைப் போன்றதே. ஹெகலோடு ஒப்பிடுகின்றபொழுது ஃபாயர்பாஹ் மிகவும் குறைபாடுடையவரே; ஆனால் அதே சமயத்தில் ஹெகலுக்குப் பிறகு அவர் சகாப்த முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தார். ஏனென்றால் அவர் கிறிஸ்துவ உணர்வுக்கு ஒத்துவராத ஆனால் விமர்சனத்தின் முன்னேற்றத்துக்கு முக்கியமான சில அம்சங்களுக்கு அழுத்தம் கொடுத்தார். ஹெகல் இந்த அம்சங்களை இறைஞான clair-obscur** விட்டுப் போயிருந்தார்.

புருதோனின் இந்தப் புத்தகத்தில்—இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தலாமென்றால்—ஒரு வலுவான, தசை முறுக்குடைய உரைநடைப் பாணி இன்னும் நிலவுகிறது. அந்தப் புத்தகத்தின் முக்கியமான சிறப்பு அதன் நடையே என்பது என்னுடைய கருத்தாகும். புருதோன் பழைய விஷயங்களையே மறு பதிப்புச் செய்கின்ற பொழுதும் கூட சுயேச்சையான கண்டுபிடிப்புகளைச் செய்கிறார் என்பது தெளிவு. அவர் எழுதிக் கொண்டிருந்தது அவருக்குப் புதியதாக இருந்ததோடு புதியதாகவே மதிப்பிடப்படுகிறது. அரசியல் பொருளாதார "மூலக் கருவறையின்"

* —"உடைமை".—ப-ர்.

** —அரை-இருண்மையில்.—ப-ர்.

மீது கை வைக்கும் ஆத்திரமூட்டக் கூடிய சவால், பூர்ஷ்வாக் கொச்சையான பகுத்தறிவை எள்ளி நகையாடுகின்ற மேன்மையான முரணுரைகள், சுட்டுப் பொசுக்கும் விமர்சனம், கசப்பான ஏளனம், இருக்கின்ற கொடுமையைப் பற்றி அங்குமிங்கும் ஒரு ஆழமான, உண்மையான கோபாவேசம் வெளிப்படல், புரட்சிகரமான உள்ளார்வம்—இவற்றினுல் உடைமை என்பது என்ன? என்ற புத்தகம் மின்னியக்கத்தைப் போன்ற கிளர்ச்சியை ஏற்படுத்தியது; அது வெளிவந்தவுடனே மாபெரும் கருத்துப்பதிவை ஏற்படுத்தியது. அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி முற்றிலும் கறாராக எழுதப்படும் விஞ்ஞான ரீதியான வரலாற்றில் அந்தப் புத்தகத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்குக் கூட அது அநேகமாகத் தகுதியற்றது. ஆனுல் நயமான இலக்கியத்தைப் போலவே விஞ்ஞானத் துறைகளிலும் இப்படிப்பட்ட பரபரப்பான புத்தகங்கள் தமக்குரிய பங்கை வகிக்கின்றன. உதாரணமாக மால்தூஸ் எழுதிய மக்கள் தொகையைப் பற்றி என்ற புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் முதற் பதிப்பில் "sensational pamphlet"* அதிலும் தொடக்கத்திலிருந்து கடைசிவரை கருத்துத் திருட்டு—என்பதைத் தவிர அதில் எதுவுமே இல்லை. ஆனுல் மனிதகுலத்தின் மீது செய்யப்பட்டிருக்கும் இந்த அவதூறு எத்தகைய கருத்துப் பதிவை ஏற்படுத்தியது?

புரூதோனின் புத்தகம் எனக்கு முன்பிருந்தால் அவருடைய ஆரம்ப பாணியை விளக்கிக் காட்டுவதற்குச் சில உதாரணங்களை என்னுல் சுலபமாகக் கொடுக்க முடியும். அவரே மிக முக்கியமானவை என்று கருதிய பகுதிகளில் அவர் முரணுரைகளைப் பற்றி கான்ட் எழுதியிருப்பதைப் பின்பற்றுகிறார்; அந்த சமயத்தில் மொழிபெயர்ப்புகளின் மூலம் அவர் படித்திருந்த ஒரே ஜெர்மன் தத்துவஞானி கான்ட் மட்டுமே. கான்டைப் போலவே இவருக்கும் முரணுரைகளின் தீர்வு மனித அறிவுக்கு "அப்பாற்பட்ட" ஒன்று, அதாவது அதைப் பற்றி அவருடைய சொந்த அறிவு

* —''பரபரப்பான பிரசுரம்''.—ப-ர்.

இருட்டானதே என்ற பலமான கருத்து நம்மிடம் ஏற்படு கிறது.

**உடைமை என்பது என்ன?** என்ற புத்தகத்தில் எல்லாமே மிகப்புரட்சிகரமாகத் தோன்றினாலும் ஒரு முரண்பாட்டை முன்னதாகவே காண்கிறோம். அவர் ஒரு பக்கத்தில் பிரான்சின் சிறு நிலவுடைமை விவசாயியின் (பிற் காலத்தில்—*petit bourgeois**) கருத்து நிலையிலிருந்தும் கண்ணோட்டத்திலிருந்தும் சமூகத்தை விமர்சிக்கிறார், மறு பக்கத்தில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடமிருந்து மரபுரிமை யாகப் பெற்ற அளவுகோலை அதைக் குறித்து கையாள் கிறார் என்பது அந்த முரண்பாடாகும்.

இப்புத்தகத்திலிருக்கும் குறைகளை அதன் தலைப்பே சுட்டிக் காட்டுகிறது. கேள்வியே தவறான முறையில் எழுப் பப் பட்டபடியால் அதற்குச் சரியான பதிலைக் கொடுக்க முடியவில்லை. **பண்டைக் காலத்திய** ''உடைமை உறவுகள்'' நிலப்பிரபுத்துவ உடைமை உறவுகளிலும் இவை ''முதலாளித் துவ'' உடைமை உறவுகளிலும் தம் முடிவை அடைந்தன. ஆகவே கடந்த கால உடைமை உறவுகளின் மீது வர லாறு தன்னுடைய விமர்சனத்தை நிறைவேற்றிவிட்டது. உண்மையிலேயே எது புரூதோனுக்குப் பிரச்சினையாக இருந்ததோ, அது இன்றைக்கு இருக்கின்ற நவீன முதலாளித் துவ உடைமையாகும். இது என்ன என்ற கேள்விக்கு, இந்த உடைமை **உறவுகளை—விருப்பத்துணிவாற்றலின் உறவுகள்** என்ற அவற்றின் சட்ட **ரீதியான** வெளியீட்டில் அல்லாமல் அவற்றின் உண்மையான வடிவத்தில் அதாவது **உற்பத்தி உறவுகள்** என்ற முறையில்—மொத்தமாகத் தழுவுகின்ற ''**அரசியல் பொருளாதாரத்தின்**'' விமர்சனப் பகுப்பாய்வு மூலமாகவே பதிலளிக்க முடியும். ஆனால் புரூதோன் இந்தப் பொருளாதார உறவுகளின் மொத்தத்தையும் ''உடைமையை'', ("*la propriété*") பற்றிய பொதுவான, சட்டக் கருதுகோளில் சிக்கவைத்துவிட்டபடியால் இதற்கு

---

* —குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர்.—பு-ர்.

முன்பே, 1789ம் வருடத்துக்கு முன்பே, "La propriété c'est le vol"* என்ற இதே சொற்களில், இதே போன்ற புத்தகத்தில்[17] பிரிஸ்ஸோ கொடுத்த பதிலுக்கு அப்பால் அவர் போக முடியவில்லே.

''திருட்டைப்'' பற்றிய பூர்ஷ்வா-சட்டவியல் கருதுகோள்கள் முதலாளிகளின் ''நேர்மையான'' லாபங்களுக்கும் அதே சம அளவில் கையாளப்பட முடியும் என்பதைத்தான் இதிலிருந்து நாம் மிக அதிகமாகப் பெற முடியும். மறு பக்கத்தில், உடைமையைப் பலாத்காரமாகப் பறிப்பது என்ற முறையில் ''திருட்டு'' உடைமையை முற்கருதுகோளாகக் கொண்டிருக்கின்றபடியால் புரூதோன் உண்மையான முதலாளித்துவ உடைமையைப் பற்றி தனக்கே கூடப் புரியாத பலவிதமான கற்பனே ஊகங்களில் தானே சிக்கிக் கொள்கிருர்.

1844ம் வருடத்தில் நான் பாரிசில் தங்கியிருந்த பொழுது எனக்குப் புரூதோனுடு பழக்கம் ஏற்பட்டது. அவருடைய "sophistication" (இப்படி ஆங்கிலேயர்கள் வியாபாரப் பொருள்களில் கலப்படம் செய்வதைச் சொல்வதுண்டு) நானும் ஓரளவுக்குப் பொறுப்பு என்பதால் இதை இங்கே குறிப்பிடுகிறேன். பெரும்பாலும் இரவு முழுவதும் நடைபெற்ற நீண்ட விவாதங்களின் போது அவருக்கு மிகவும் கேடு விளேவித்த ஹெகல்வாதத்தை அவருக்குத் தொற்றிவிட்டேன். அவருக்கு ஜெர்மன் மொழி தெரியாத காரணத்தால் அதை சரியாகப் படிக்க முடியவில்லே. நான் பாரிசிலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு நான் தொடங்கி வைத்ததை திரு. கார்ல் க்ரூன் தொடர்ந்தார். மேலும் ஜெர்மன் தத்துவஞான ஆசிரியர் என்ற முறையில் அதைப் பற்றி எதையும் அவர் புரிந்து கொள்ளவில்லே என்ற சாதகம் என்னேக் காட்டிலும் அவருக்கு இருந்தது.

அவர் எழுதிய இரண்டாவது புத்தகமாகிய **வறுமையின் மெய்யறிவு** வெளிவருவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு மிகவும் விரிவான ஒரு கடிதத்தில் புரூதோன் இதை

---

* —''உடைமை என்பது திருட்டு''.—ப-ர்.

எனக்குத் தெரியப்படுத்தினார். அதில் மற்ற விஷயங்களோடு, "*J'attends votre férule critique*"* என்றும் எழுதியிருந்தார். எங்களுடைய நட்பை நிரந்தரமாக முறிக்கின்ற வகையில் இது விரைவிலேயே நடைபெற்றது (என்னுடைய "மெய்யறிவின் வறுமை இதரவை'', பாரிஸ், 1847).

புரூதோன் எழுதிய வறுமையின் மெய்யறிவு அல்லது பொருளாதார முரண்பாடுகளின் அமைப்பு என்ற புத்தகத்தில் உடைமை என்பது என்ன? என்ற கேள்விக்கு அவர் உண்மையிலேயே முதன்முதலில் பதிலைக் கொடுக்க முயன்றிருந்தார் என்பதை, இங்கே நான் சொல்லியிருப்பதிலிருந்து நீங்கள் பார்க்க முடியும். உண்மையில் அவருடைய முதல் புத்தகம் வெளியிடப்பட்ட பிறகுதான் புரூதோன் தன்னுடைய பொருளாதார ஆராய்ச்சிகளைத் தொடங்கியிருந்தார். தான் எழுப்பியிருந்த கேள்விக்குப் பதில்—திட்டுவதின் மூலமல்ல—நவீன "அரசியல் பொருளாதாரத்தைப்'' பகுப்பாய்வு செய்வதன் மூலமாக மட்டும்தான் பெற முடியும் என்பதைக் கண்டுபிடித்தார். அதே சமயத்தில் பொருளாதார இனங்களின் அமைப்பை இயக்கவியல் ரீதியில் முன்வைக்க முயற்சி செய்தார். வளர்ச்சியின் சாதனமாக கான்டின் தீர்க்க முடியாத "முரணுரைகளுக்குப்'' பதிலாக ஹெகலின் "முரண்பாடு'' அறிமுகப்படுத்தப்பட்டது.

இரண்டு பெரிய பகுதிகளைக் கொண்ட இப்புத்தகத்தைப் பற்றிய விமர்சனத்தை, நான் அதற்குப் பதிலளிக்கும் வகையில் எழுதிய புத்தகத்தில் பார்க்க முடியும். அதில், மற்ற விஷயங்களோடு, விஞ்ஞான இயக்கவியலின் இரகசியத்திற்குள் அவர் அநேகமாக ஊடுருவிக் காணவில்லை, மறு பக்கத்தில் ஊகத் தத்துவஞானத்தின் பிரமைகளை அவர் பகிர்ந்து கொள்கிறார், ஏனென்றால் பொருளாதார இனங்கள் பொருளாயத உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருந்தக் கூடிய வரலாற்று ரீதியான உற்பத்தி உறவுகளின்

* —"உங்களுடைய கடுமையான விமர்சனத்தை நான் எதிர்பார்க்கிறேன்.''—ப-ர்.

தத்துவ ரீதியான வெளியீடுகள் என்று கருதுவதற்குப் பதிலாக அவற்றை முன்னரே இருக்கின்ற, அழிவற்ற கருத்துக்கள் என்று திரிக்கிருர், சுற்றிவளைத்துச் செல்கின்ற இப்படிப்பட்ட வழியின் மூலம் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கருத்து நிலைக்கே அவர் மறுபடியும் எப்படி வருகிருர் என்பதை நான் எடுத்துக் காட்டினேன்.*

அவர் விமர்சனம் செய்ய எடுத்துக்கொண்ட ''அரசியல் பொருளாதாரத்தைப்'' பற்றி அவர் எந்த அளவுக்கு முற்றிலும் குறைபாடுடைய—சில பகுதிகளில் பள்ளிக்கூடச் சிறுவனைப் போன்ற—அறிவைக் கொண்டிருந்தார் என்பதையும் அவரும் கற்பனுவாதிகளும், விடுதலைக்கான பொருளாயத நிலைமைகளைத் தானே உற்பத்தி செய்கின்ற வரலாற்று இயக்கத்தைப் பற்றிய விமர்சன அறிவை விஞ்ஞானத்தின் மூலமாக்குவதற்குப் பதிலாக ''சமூகப் பிரச்சினையின் தீர்வுக்கு'' ஒரு சூத்திரத்தை a priori** புனைவு செய்யக் கூடிய ''விஞ்ஞானம்'' என்று சொல்லப்படுகின்ற ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிருர்கள் என்பதையும் மேலும் எடுத்துக் காட்டுகிறேன். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கும் பரிவர்த்தனை மதிப்பு சம்பந்தமாக புருதோனின் கருத்துக்கள் எவ்வளவு குழப்பமாகவும் தவருகவும் அரை வேக்காடாகவும் இருக்கின்றன, இக்காரணத்

* ''இன்றைய தினத்திலிருக்கும் உறவுகள்—முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் — இயற்கையானவை என்று பொருளியலாளர்கள் சொல்லும் பொழுது, இந்த உறவுகளில்தான் செல்வம் படைப்பதும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் இயற்கை விதிகளுக்குப் பொருந்திய வகையில் தான் நிறைவேறுகின்றன என்பதை அவர்கள் சுட்டுணர்த்துகிருர்கள். ஆகவே இந்த உறவுகள் தாமே காலத்தின் தாக்கத்துக்கு அப்பாற்பட்ட, இயற்கையான விதிகளாகின்றன. சமூகத்தை எக்காலமும் நிர்வகிக்க வேண்டிய அழிவற்ற விதிகள் அவையே. ஆகவே வரலாறு இது வரையிலும் இருந்து வந்திருக்கிறது, ஆனுல் இனிமேல் ஏதுமில்லை'' (என்னுடைய புத்தகத்தில் 113ம் பக்கம் பார்க்க). [மார்க்ஸ் எழுதியிருக்கும் குறிப்பு.]

** —மனநிச்சயவாத முறையில்.—ப-ர்.

தால் ரிக்கார்டோவின் மதிப்புத் தத்துவத்தைப் பற்றிய கற்பனுவாத விளக்கத்தை ஒரு புதிய விஞ்ஞானத்தின் அடிப்படை என்றும் கூட அவர் எவ்வாறு தவருகப் புரிந்து கொள்கிருர் என்பதை விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அவருடைய பொதுவான கருத்தோட்டத்தைப் பொறுத்த வரையிலும் நான் பின்வரும் விரிவான தீர்ப்பைக் கொடுத்திருக்கிறேன்:

''ஒவ்வொரு பொருளாதார உறவும் ஒரு நல்ல பக்கத்தையும் ஒரு கெட்ட பக்கத்தையும் கொண்டிருக்கிறது. இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தான் திரு. புரூதோன் தனக்குத் துரோகம் செய்யவில்லை. அவர், பொருளியலாளர்கள் வலியுறுத்துகின்ற நல்ல பக்கத்தைப் பார்க்கிருர்; சோஷலிஸ்டுகள் கண்டிக்கின்ற கெட்ட பக்கத்தையும் பார்க்கிருர். பொருளியலாளர்களிடமிருந்து அழிவற்ற பொருளாதார உறவுகளின் அவசியத்தைக் கடன் வாங்குகிருர்; சோஷலிஸ்டுகளிடமிருந்து வறுமையில் (அதில், பழைய சமூகத்தைக் கவிழ்க்கக் கூடிய புரட்சிகரமான, அழிக்கும் அம்சத்தைப் பார்க்காமல்*) வறுமையைத் தவிர பார்ப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை என்ற பிரமையைக் கடன் வாங்குகிருர். அவர் தனக்கு ஆதரவாக விஞ்ஞானத்தை மேற்கோள் காட்டும் முயற்சிகளில் அவர்கள் இருவரோடுமே ஒத்துப்போகிருர். அவரிடம் விஞ்ஞானம் விஞ்ஞானச் சூத்திரம் என்ற ஒடுங்கிய அளவுக்குச் சுருங்கிவிடுகிறது. அவர் சூத்திரங்களைத் தேடிச் செல்லும் வேட்டைக்காரர். அரசியல் பொருளாதாரம், கம்யூனிசம் ஆகிய இரண்டையுமே தான் விமர்சனம் செய்துவிட்டதாக திரு. புரூதோன் தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிருர்; உண்மையிலேயே அவர் இரண்டுக்கும் கீழே நிற்கிருர். அவர் தன்னைக் கையிலே மந்திரச் சூத்திரத்தை வைத்திருக்கும் தத்துவஞானி என்று கருதுவதால் கலப்பற்ற பொருளாதார விவரங்களுக்

---

* அடைப்புக் குறிகளுக்குள் இருக்கின்ற வாக்கியம் இந்தக் கட்டுரைக்காக மார்க்சினுல் எழுதிச் சேர்க்கப்பட்டது.—ப-ர்.

குள் போக வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்று நினைக்கிறார் — ஆகவே பொருளியலாளர்களுக்குக் கீழே நிற்கிறார். பூர்ஷ்வாக் கண்ணோட்டத்திற்கு மேலே—ஊக முறையில் மட்டுமாவது—தன்னை உயர்த்திக் கொள்வதற்குப் போதிய துணிச்சலோ அல்லது நுண்ணறிவோ இல்லாததால் சோஷலிஸ்டுகளுக்குக் கீழே நிற்கிறார்...

விஞ்ஞானத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தினருக்கும் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் மேலே பறக்க விரும்புகிறார்; ஆனால் அவர் மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே, அரசியல் பொருளாதாரத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையே நிரந்தரமாக ஊசலாடுகின்ற குட்டி முதலாளி என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.''*

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு கடுமையானதாகத் தோன்றிய போதிலும் அதிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் இன்று நான் இன்னும் ஆதரிக்கிறேன். எனினும் அதே சமயத்தில் அவருடைய புத்தகம் petit bourgeois சோஷலிசத்தின் சட்ட நூல் என்று நான் அறிவித்து அதைத் தத்துவ ரீதியில் நிருபித்த பொழுது பொருளியலாளர்களும் சோஷலிஸ்டுகளும் ஒருசேர அவரை மிக மிகத் தீவிரமான புரட்சிக்காரர் என்று இன்னும் முத்திரை குத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை நினைவிலிறுத்த வேண்டும். அதனால்தான் பிற்காலத்தில், புரட்சிக்கு அவருடைய ''துரோகத்தைப்'' பற்றிக் கூக்குரல் கிளம்பிய பொழுது நான் அதில் ஒருபோதும் சேரவில்லை. முதலிலேயே மற்றவர்களும் அவருமே அவரைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள்; நியாயமற்ற நம்பிக்கைகளை அவர் ஏமாற்றிவிட்டாரென்றால் அது அவருடைய தவறு அல்ல.

**உடைமை என்பது என்ன?** என்ற புத்தகத்தோடு ஒப்பிடும் பொழுது **மெய்யறிவின் வறுமையில்** புருதோனுடைய வாதமுறையின் எல்லாக் குறைகளும் மிகவும் பாதகமான வகையில் பிதுங்கித் தெரிகின்றன. பெரும்பாலான இடங்

* அதே நூல், பக்கங்கள் 119, 120.

களில் உரை நடை பிரெஞ்சுக்காரர்கள் *ampoulé** என்று சொல்கின்ற பாணியில் இருக்கிறது. அவருடைய பிரெஞ்சு மதிநுட்பம் அவரைக் கைவிடுகின்ற பொழுதெல்லாம் ஜெர்மானியத் தத்துவஞானத்தைப் போலத் தோன்றுகின்ற, ஆரவாரமாக ஒலிக்கின்ற ஊகப் பதப் பிரயோகம் வாடிக்கையாக அங்கே வந்துவிடுகிறது. மிகைபடப் பேசுகின்ற, தன்னைத் தானே புகழ்கின்ற, அகம்பாவமான பாணி, அதிலும் குறிப்பாக "விஞ்ஞானத்தைப்" பற்றிய பிதற்றலும் அதைப் பற்றி போலித்தனமாகப் பீற்றுவதும்—இவை எப்போதுமே அருவருப்பானவை—நம் காதுகளைத் தொடர்ச்சியாகக் குடைகின்றன. அவருடைய முதல் புத்தகத்தில் உண்மையான சூடு ஒளிர்ந்தது; அதற்குப் பதிலாக இங்கே சில பகுதிகள் ஆரவாரச் சொல்லாட்சியின் மூலம் கண நேரக் காய்ச்சல் வெப்பத்துக்குத் திட்டமிட்டு உயர்த்தப் படுகின்றன. மேலும், சுயமாகவே கல்வி கற்றவர் அறிவைப் பற்றி பகட்டுவதற்குச் செய்யும் அலங்கோலமான, வெறுப் பூட்டுகின்ற முயற்சியை இதனோடு சேர்த்துக் கொள்ளுங்கள். அவருடைய தனிமுதலான, சுதந்திரமான சிந்தனையின் உள்ளார்ந்த பெருமை ஏற்கெனவே நொறுக்கப்பட்டு விட்டதன் விளைவாக எது அவர் இயல்பில் இல்லையோ அல்லது அவரிடம் இல்லையோ அதைப் பற்றி ஆர்ப்பாட்டம் செய்வது அவசியம் என்று விஞ்ஞானத் துறையில் parvenu** கருதுகிறார். இதோடு குட்டி முதலாளி வர்க்கத்தினருடைய மனோபாவத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தின் இயக்கத்தில் நடைமுறைப் பாத்திரம் வகிப்பதனால் மதிக்கப்பட வேண்டிய காபே போன்ற ஒருவரை இந்தக் குட்டி முதலாளி கண்ணியமற்ற, முரட்டுத்தனமான முறையில் மதிநுட்பமாகவோ அல்லது ஆழமானதாகவோ அல்லது இன்னும் சரியானதாகவோ இல்லாமல் தாக்குகிறார். ஆனால் மறு பக்கத்தில் டுனுவையே (அவர் ஒரு அரசாங்க கவுன்சிலர் என்பது முக்கியம்) போன்ற ஒருவரிடம் மரியாதையாக நடந்து கொள்கிறார். இத்தனைக்

* —மிகை அலங்காரமாக.—ப-ர்.

** —திடீரென்று புகழ் பெற்றவர்.—ப-ர்.

கும் "*Onveut que les malheureux soient parfaits*" (துரதிர்ஷ்டமானவர்கள் முற்றிலும் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்) என்று ஹெல்வெட்டியஸ் விவரித்த கண்டிப்பான விதியை வீங்கிப்போன, தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குச் சலிப்பூட்டுகின்ற மூன்று தொகுதிகள்[18] முழுவதிலும் கோமாளித்தனமான தீவிரத்தோடு டுனுவையே எழுதியிருப்பதில் தான் அவருடைய மொத்த முக்கியத்துவமும் அடங்கும்.

பிப்ரவரி மாதப் புரட்சி[19] புருதோனுக்கு மிகவும் எக்கச்சக்கமான நேரத்தில் ஏற்பட்டதென்பது நிச்சயம்; ஏனென்றல் அதற்குச் சில வாரங்களுக்கு முன்பாகத்தான் அவர் ''**புரட்சிகளின் சகாப்தம்**'' நிரந்தரமாக முடிந்து விட்டது என்று யாரும் மறுக்க முடியாதபடி நிரூபித்திருந்தார். தேசிய சபையில் அவருடைய பேச்சு—அன்றைக்கிருந்த நிலைமைகள் அவருக்கு அநேகமாகப் புரியவில்லை என்ற போதிலும்—எல்லா வகையான பாராட்டுக்கும் தகுதியுடையதே.[20] ஜூன் மாத எழுச்சிக்குப்[21] பிறகு அது மாபெரும் துணிச்சலான நடவடிக்கையாகும். மேலும் அது மற்றுமொரு அதிர்ஷ்டமான விளைவையும் கொண்டிருந்தது. திரு. தியேர் புருதோனின் பிரேரணைகளை மறுத்துப் பேசிய பொழுது[22]—இது பின்னர் ஒரு விசேஷப் பிரசுரமாக வெளியிடப்பட்டது—பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் இந்த ஆன்மிகத் தூணுக்கு எத்தகைய சிறு பிள்ளைத்தனமான வினு—விடை ஏடு பீடமாகப் பயன்பட்டது என்பதை ஐரோப்பா முழுவதற்குமே நிரூபித்தார். திரு. தியேரோடு ஒப்பிடுகின்ற பொழுது **புருதோன்** உண்மையிலேயே தொன்மைக் காலத்துக்கு முந்திய பேருருவங்களைப் போல வீங்கிப் போனுர்.

புருதோன் கண்டுபிடித்த "*crédit gratuit*"*, அதை அடிப்படையாகக் கொண்ட ''**மக்கள் வங்கி**'' ("banque du peuple") ஆகியவை அவருடைய கடைசிப் பொருளாதார ''வீரச் செயல்களாகும்''. முதலாளித்துவ ''அரசியல் பொருளா

* —''நிபந்தனையற்ற கடன் வசதி''.—**ப-ர்.**

தாரத்தின்'' முதற் கூறுகளை, அதாவது பண்டங்களுக்கும் பணத்துக்கும் இடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ளத் தவறுவதிலிருந்தே அவருடைய கருத்துக்களின் தத்துவ அடிப்படை தோன்றுகிறது, ஆனால் அவற்றின் செய்முறையான மேற்கட்டடம் அதிகப் பழமையான, மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்ட திட்டங்களின் மறு பதிப்பு மட்டுமே என்பதன் நிரூபணத்தை நான் எழுதிய அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, முதல் பதிப்பு, பெர்லின், 1859 (பக்கங்கள் 59—64) என்ற புத்தகத்தில் காணலாம். திட்டவட்டமான பொருளாதார மற்றும் அரசியல் சந்தர்ப்பங்களின் கீழ் கடன் வசதி முறை தொழிலாளி வர்க்கம் விடுதலை பெறுவதை விரைவுபடுத்தப் பயன்படும்; உதாரணமாக பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மறுபடியும் அதற்குப் பிறகு பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இங்கிலாந்தில் ஒரு வர்க்கத்தினுடைய செல்வத்தை இன்னொரு வர்க்கத்துக்கு மாற்றிக் கொடுப்பதற்கு அது பயன்பட்டதைப் போன்றதே இதுவும் என்பது சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி சுயமாகவே விளங்கும். ஆனால் வட்டியைத் தருகின்ற மூலதனத்தை மூலதனத்தின் பிரதான வடிவமாகக் கருதுவது, கடன் வசதி முறையை விசேஷமான வகையில் உபயோகிப்பதையும் வட்டியை போலித்தனமாக ஒழித்து விட்டதையும் சமூகத்தை மாற்றியமைப்பதற்கான அடிப்படையாக்க முயற்சி செய்ய விரும்புவது முற்றிலும் பிலிஸ்தினியக் கட்டுக்கதையே. உண்மையிலேயே, இந்தக் கட்டுக்கதை ஏற்கெனவே பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் குட்டி முதலாளி வர்க்கப் பொருளாதாரச் சித்தாந்தவாதிகளால் விரிவாக வளர்க்கப்பட்டிருந்தது என்பது உண்மை. வட்டியைத் தருகின்ற மூலதனத்தைப் பற்றி புரூதோன் பாஸ்தியாவோடு செய்த வாதம்[23] (1850) வறுமையின் மெய்யறிவைக் காட்டிலும் மிகவும் கீழான தரத்தைக் கொண்டிருக்கிறது. பாஸ்தியா கூட அவரைத் தோற்கடிக்கக் கூடிய நிலையை அவர் அடைந்திருக்கிறார்; எதிரி அவரைப் பலமாகத் தாக்கும் ஒவ்வொரு தடவை

யும் அவர் வேடிக்கையான முறையில் ஆவேசமாகப் பேசுகிறார்.

சில வருடங்களுக்கு முன்பு புருதோன் போட்டிக்காக **"வரி விதிப்பைப்"** பற்றி ஒரு பரிசுக்கட்டுரையை எழுதியிருந்தார். இப்போட்டி லொசான் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது என்று தோன்றுகிறது. இங்கே மேதையின் கடைசிக் கனலும் அணைந்துவிடுகிறது. *Petit bourgeois tout pur** மட்டுமே மிஞ்சியிருக்கிறது.

அவருடைய அரசியல் மற்றும் தத்துவஞான எழுத்துக்களைப் பொறுத்தவரை அவை எல்லாமே அவருடைய பொருளாதார எழுத்துக்களைப் போலவே முரண்பாடான, இரட்டைத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. மேலும் அவற்றின் முக்கியத்துவம் ஸ்தல அளவில் பிரான்சோடு மட்டும் நின்றுவிடுகிறது. எனினும் மதம், திருச்சபை, இதரவைகளைப் பற்றி அவருடைய தாக்குதல்கள்—பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் மத உணர்ச்சியில் பதினெட்டாம் நூற்றாண்டின் முதலாளி வர்க்க வொல்டேர்வாதத்திற்கும் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஜெர்மன் கடவுளின்மைக்கும் உயர்வானவர்களென்று தங்களைக் கருதிக் கொண்டிருந்த நேரத்தில்—பிரான்சில் இருக்கும் நிலைமைகளில் மாபெரும் சிறப்புடையவையாகும். மாபெரும் பீட்டர் ருஷ்யக் காட்டுமிராண்டித்தனத்தை காட்டுமிராண்டித்தனத்தின் மூலமாகவே முறியடித்தாரென்றால் புருதோன் பிரெஞ்சு வாக்கியவாதத்தைச் சொற்றொடர்களாலேயே முறியடிப்பதற்குத் தன்னாலியன்ற அனைத்து முயற்சிகளையும் செய்தார்.

**"அரசு திடீர்ப் புரட்சியை"** பற்றி அவர் எழுதிய புத்தகம் மோசமானது மட்டுமல்ல, தரக்குறைவானது என்று கருத வேண்டும். ஆனால் இந்தத் தரக்குறைவு அவருடைய குட்டி முதலாளி வர்க்கக் கருத்தோட்டத்தோடு பொருந்துவதே. இங்கே லூயி போனபார்ட்டோடு அவர் காதல்விளையாட்டில் ஈடுபடுகிறார். உண்மையில் அவரைப்

---

* —கலப்பற்ற, சாதாரணமான குட்டி முதலாளி.—ப-ர்.

பிரெஞ்சுத் தொழிலாளர்களின் மனதுக்குப் பிடித்தமான வராக்க முயற்சி செய்கிறார். போலந்துக்கு விரோதமாக அவர் எழுதிய கடைசிப் புத்தகம்[24] அதைப் போன்றதே. இதில் ஜாருக்கு மேலும் அதிகமான புகழ் சேர்க்க வேண்டு மென்பதற்காக மிகவும் அதிகமான அளவுக்கு மூடத்தன மான அவநம்பிக்கைக்கு இடம் கொடுக்கிறார்.

புரூதோன் ரூஸோவோடு அடிக்கடி ஒப்பிடப்பட்டிருக் கிறார். இதைக் காட்டிலும் தவறானது வேறு இருக்க முடி யாது. அவர் அதிகமான அளவுக்கு நிக். லிங்கெயைப் போன்றவரே (அவர் எழுதிய **சிவில் சட்டங்களின் தத்துவம்** மிகச் சிறப்பான புத்தகம் என்பதைப் போகிற போக்கில் இங்கே குறிப்பிடலாம்).

புரூதோன் இயக்கவியலுக்கு இயற்கையான விருப்பார் வத்தைக் கொண்டிருந்தார்; ஆனால் உண்மையான விஞ் ஞான இயக்கவியலை ஒருபோதும் புரிந்து கொள்ளாததால் வார்த்தை ஜாலத்தைத் தாண்டி ஒருபோதும் அவரால் போக முடியவில்லை. இது உண்மையில் அவருடைய குட்டி முதலாளித்துவ வர்க்கக் கருத்தோட்டத்தோடு சேர்ந்தே வந்தது. ரௌமெர் என்ற வரலாற்றாசிரியரைப் போல குட்டி முதலாளி ''ஒரு பக்கத்தில்'' என்றும் ''மறு பக்கத் தில்'' என்றும் மாறி மாறிப் பேசக் கூடியவர். அவருடைய பொருளாதார நலன்களில், ஆகவே அவருடைய அரசியலில்; அவருடைய மத, விஞ்ஞான மற்றும் கலைத்துறைக் கருத்துக் களில் இப்படியிருக்கிறார். அவருடைய அறவியல், in everything* இப்படியே இருக்கிறார். அவர் ஒரு வாழ்கின்ற முரண்பாடு. அவர் புரூதோனைப் போல கூடுதலாகக் கெட்டிக் கார நபராகவும் இருந்தால் தன்னுடைய சொந்த முரண் பாடுகளோடு விளையாடுவதற்கும் அவற்றை சந்தர்ப்பங் களுக்குத் தகுந்தாற்போல கவர்ச்சியான, பிரமிப்பை ஏற் படுத்துகின்ற, ஒரு சமயத்தில் அவதூறான, மறு சமயத்தில் மேதாவிலாசம் நிறைந்த முரணுரைகளாக வளர்த்துக் கொள்வதற்கும் அவர் சீக்கிரத்திலேயே கற்றுக் கொள்

---

*—எல்லாவற்றிலும்.—ப-ர்.

வார். விஞ்ஞானத்தில் போலித்தனமும் அரசியலில் ஒத்துப் போவதும் இத்தகைய கருத்தோட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவையாகும். கடைசியில் இத்தகைய பேர்வழிகளிடம் ஒரே ஒரு நோக்கமே, தற்பெருமையே மிஞ்சுகிறது. எல்லாத் தற்பெருமைக்காரர்களையும் போலவே அவர்களுக்கும் ஒரே பிரச்சினை அந்தக் கணத்தில் வெற்றியடைவது, அன்றைய தினத்தில் பரபரப்பூட்டுவதே. ஆகவே சாதாரண அறவியல் சாமர்த்தியம்—உதாரணமாக, ஆட்சியிலிருக்கும் சக்திகளோடு சமரசத்தின் புறத் தோற்றத்திலிருந்தும் கூட வெகு தூரத்தில் ரூஸோவை எப்பொழுதும் வைத்திருந்தது இதுவே—அவசியமாகவே தேய்ந்து மறைந்து விடுகிறது.

எதிர்கால சந்ததியினர் பிரெஞ்சு வரலாற்றின் இந்த மிகவும் சமீபக் கட்டத்தை, லுயீ போனபார்ட் அதன் நெப்போலியன், புரூதோன் அதன் ரூஸோ—வொல்தேர் என்று சொல்வதன் மூலம் ஒருவேளை பொழித்துரைக்கலாம்.

புரூதோன் மரணமடைந்த பிறகு இவ்வளவு சீக்கிரமாகவே பிரேத பரிசோதகரின் பாத்திரத்தை என் மீது சுமத்தியதற்கு இப்பொழுது நீங்கள்தான் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உங்களின் மிகவும்
உண்மையான
**கார்ல் மார்க்ஸ்**

1865, ஜனவரி 24ந்
தேதியன்று எழுதப்பட்டது

Social-Demokrat பத்திரிகையில்
(எண். 16, 17, 18)
1865, பிப்ரவரி 1,3 மற்றும் 5ந்
தேதிகளிலும் வெளியிடப்பட்டது

இப்பத்திரிகையின்படி
அச்சிடப்பட்டது.
ஜெர்மன் மொழியிலிருந்து மொழி
பெயர்க்கப்பட்டது

கா. மார்க்ஸ்

# கூலி, விலை, லாபம்[25]

## முன்குறிப்புகள்

சகபிரஜைகளே, நான் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்குமுன் சில முன்குறிப்புகளைக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்.

ஐரோப்பாக் கண்டத்தில் வேலைநிறுத்தம் என்ற உண்மையான தொத்துநோய் தற்பொழுது பரவியிருக்கிறது; அத்துடன் கூலி உயர்வு பற்றிய கோரிக்கை எங்கும் கிளப்பப்படுகிறது. இந்தப் பிரச்சினை நமது காங்கிரசிலும்[26] விவாதிக்கப்படப் போகிறது. நீங்கள் சர்வதேச சங்கத்தின் தலைவர்களாதலால், இந்தப் பிரதானப் பிரச்சினை மீது திண்ணமாக வரையறுக்கப்பட்ட கருத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகையால், உங்கள் பொறுமையை மிகவும் சோதிப்பதாக இருந்தாலும் இவ்விஷயத்தைப் பற்றிப் பூரணமாக ஆராய்வது என் கடமையென்று நான் கருதுகிறேன்.

இரண்டாவது முன்குறிப்பு சகபிரஜை வேஸ்டன் விஷயமாக நான் செய்ய வேண்டியிருக்கிறது. தொழிலாளி வர்க்க நலனுக்குகந்தது என்ற நினைப்பில், சில கருத்துக்களை, அவற்றுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் சிறிதும் ஆதரவில்லை என்பது தெரிந்திருந்த போதிலும், அவர் உங்கள் முன் வைத்திருப்பதுடன் அவற்றை வெளிப்படையாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்தும் வருகிறார். அவர் காட்டிக் கொள்ளும் இந்த மனோதைரியத்தை நாம் அனைவரும்

வெகுவாகப் பாராட்ட வேண்டியதுதான். எனது இவ்வறிக்கையின் தொனி கடுமையானதாக இருந்தாலும் கூட, அதன் முடிவில், அவரது தொகுத்துரையின் அடிப்படையில் இருப்பதாக எனக்குக் காணப்படும் சரியான கருத்துக்களை நான் ஒப்புக் கொள்வதையும் எனினும் அவரது தொகுத்துரை தற்போதுள்ள ரூபத்தில் சித்தாந்த ரீதியில் தவறானது, நடைமுறை ரீதியில் அபாயகரமானது என்பதையும் சகபிரஜை வேஸ்டன் காண்பார் என்று நம்புகிறேன்.

இனி நம் முன்னுள்ள விஷயத்தை நேரடியாக எடுத்துக் கொள்கிறேன்.

## 1. உற்பத்தியும் கூலியும்

சகபிரஜை வேஸ்டனின் வாதம், உண்மையில் இரு ஆதாரக் கூற்றுகளின் மீது கட்டப்பட்டிருக்கிறது:

1) **தேசிய உற்பத்திப் பொருள்களின் ஒட்டுமொத்தம் ஏதோ நிரந்தர விஷயம், நிலையான** அளவு அல்லது கணிதவியலாளர்கள் சொல்வது போல **நிலையான** பரிமாணம்;

2) **நிஜக்கூலியின்** தொகை, அதாவது அதைக் கொண்டு வாங்கக் கூடிய பண்டங்களின் அளவால் அளவிடப்படும் கூலியின் தொகை, **நிரந்தரமான** அளவு, **நிலையான** பரிமாணம்.

அவரது முதல் வலிந்துரை தவறானது என்பது தெளிவு. ஆண்டாண்டு தோறும், உற்பத்திப் பொருட்களின் மதிப்பும் ஒட்டு மொத்த அளவும் பெருகிக் கொண்டே இருக்கின்றன; தேசிய உழைப்பின் உற்பத்தித் திறன்களும் பெருகிக் கொண்டே இருக்கின்றன; இவ்வாறாகப் பெருகிக் கொண்டிருக்கிற உற்பத்திப் பண்டங்களைப் பரிவர்த்தனை செய்யத் தேவைப்படும் நாணய அளவும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது; இவை அனைத்தையும் நீங்கள் அறிவீர்கள். ஓராண்டு முழுவதற்கும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு நோக்கும்போது வெவ்வேறு ஆண்டுகளுக்கும் எது உண்மையாக இருக்கிறதோ, அது ஓர் ஆண்டின் ஒவ்வொரு சராசரி நாளுக்கும் உண்மையாக இருக்கிறது. தேசிய

உற்பத்தியின் ஒட்டுமொத்த அளவு அல்லது பரிமாணம் விடாமல் தொடர்ச்சியாக மாறி வருகின்றது. அது ஒரு நிலையான பரிமாணமல்ல, மாறக் கூடிய பரிமாணமாகும். ஜனத்தொகையில் ஏற்படும் மாற்றங்களை ஒரு புறம் ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், மூலதனக் குவியலிலும் உழைப்பின் உற்பத்தித் திறன்களிலும் இடைவிடாமல் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் காரணமாக அது மாறக் கூடிய பரிமாணமாகவே இருக்க வேண்டும். இன்று பொதுவான கூலி விகித உயர்வு ஏற்பட்டால் அதன் அடுத்துவரும் விளைவுகள் எப்படி யிருந்தாலும், அந்த உயர்வு தானுகவே உற்பத்தியின் ஒட்டு மொத்த அளவை உடனடியாக மாற்றிவிடாது என்பது முற்றிலும் உண்மை. முதலாவதாக, நிலவுகின்ற நிலைமை களிலிருந்தே இந்த உயர்வு ஆரம்பமாகும். ஆனுல், கூலி உயர்வு ஏற்படுமுன் தேசிய ஒட்டுமொத்த உற்பத்தி மாறச் கூடிய பரிமாணமாகவே இருந்தது, நிலையானதாக அல்ல என்ருல், கூலி உயர்வு ஏற்பட்ட பின்னருங் கூட, அது மாறக் கூடிய தாகவே தொடர்ந்து இருக்கும், நிலையானதாக அல்ல.

ஆயினும், தேசிய உற்பத்தியின் ஒட்டுமொத்தம் மாறக் கூடியது அல்ல, நிலையானது என்றே வைத்துக் கொள் வோம். அப்படியிருந்தாலும் கூட நமது நண்பர் வேஸ்டன் தர்க்க ரீதியான முடிவு என்று நினைப்பது ஆதாரமற்ற வலிந்துரையாகவே இருக்கும். என்னிடம் ஒரு குறிப்பிட்ட எண்—உதாரணமாக எட்டு—இருந்தால், அந்த எண்ணின் முழு வரம்பு அதன் பாகங்கள் தங்கள் ஒப்புவிகித எல்லைகளை மாற்றிக் கொள்வதைத் தடுக்காது. லாபம் ஆருகவும், கூலி இரண்டாகவும் இருப்பது, கூலி ஆருக உயர்ந்து லாபம் இரண்டாகக் குறைந்தால் அப்போதும் மொத்தத் தொகை மாற்றமடையாமல் எட்டாகவே இருக்கும். எனவே, உற் பத்திப் பொருள்களின் ஒட்டுமொத்தம் நிரந்தரமாயிருப் பது, கூலியின் தொகை நிரந்தரமானது என்று எவ்வகை யிலும் ருசுப்பிக்க முடியாது. அப்படியானுல், நமது நண்பர் வேஸ்டன் இந்த நிரந்தரத் தன்மையை எப்படி நிரூபிக் கிருர்? ஒரேயடியாக அடித்துக் கூறுவதன் மூலமே.

ஆனுல் அப்படியே அவரது வலிந்துரை சரியானது

என்று வைத்துக் கொண்டாலும் கூட, அது இரு பக்கங்களுக்கும் பொருந்த வேண்டும். அவரோ ஒரு பக்கத்துக்கு மட்டுமே அதை வலியுறுத்துகிருர். கூலியின் தொகை நிலேயான பரிமாணமாளுல் அதை உயர்த்தவும் முடியாது, குறைக்கவும் முடியாது. அப்படியாயின், தற்காலிகக் கூலி உயர்வை வற்புறுத்திப் பெறுவதன் மூலம் தொழிலாளிகள் அவிவேகத்தோடு நடந்து கொள்கிருர்கள் என்ருல், முதலாளிகள் தற்காலிகக் கூலி வெட்டை நிர்ப்பந்திப்பதன் மூலம் இதற்குக் குறைவான அவிவேகத்தோடு ஒன்றும் நடந்து கொண்டு விடவில்லேயே. நமது நண்பர் வேஸ்டன், சில சந்தர்ப்பச் சூழ்நிலேகளில் தொழிலாளர்கள் கூலி உயர்வை வற்புறுத்திப் பெற முடியும் என்பதை மறுக்கவில்லே. ஆளுல் கூலித் தொகை இயற்கையாகவே நிலேயானதாக அவருக்குப் படுவதால், இந்த உயர்வை அடுத்து எதிர் நடவடிக்கை ஏற்பட்டே தீரும் என அவர் கருதுகிருர். மறு பக்கத்தில், கூலி வெட்டை முதலாளிகள் பலவந்தமாக ஏற்படுத்த முடியும் என்பதும் உண்மையில், அவ்வாறு செய்ய அவர்கள் இடைவிடாது முயல்கிருர்கள் என்பதும் அவருக்குத் தெரியும். கூலி நிலேயானது என்னும் கோட்பாட்டின்படி இதை அடுத்தும் முன்னதைவிடக் குறையாத எதிர் நடவடிக்கை ஏற்பட்டே தீரும். எனவே, கூலியைக் குறைக்கும் முயற்சியையோ அல்லது செயலேயோ எதிர்த்துத் தொழிலாளர்கள் நடவடிக்கை எடுப்பது நியாயமானதே. ஆகவே, கூலி உயர்வை வற்புறுத்திப் பெறும் போதும் அவர்கள் சரியாகவே செயல்படுகிருர்கள். ஏனென்ருல், கூலி வெட்டுக்கு எதிரான ஒவ்வொரு எதிர் நடவடிக்கையும் கூலி உயர்வுக்கான நடவடிக்கையாகும். ஆகையால், கூலி நிலேயானது என்னும் சகபிரஜை வேஸ்டனின் சொந்தக் கோட்பாட்டின் படியே, சில சந்தர்ப்பச் சூழ்நிலேகளில் கூலி உயர்வுக்காகத் தொழிலாளர்கள் ஒன்றுபடவும் போராடவும் வேண்டியிருக்கிறது.

இந்த முடிவை அவர் மறுத்தால், இது எதிலிருந்து பெறப்பட்டதோ அந்த ஆதாரக் கூற்றை அவர் விட்டு விட வேண்டும். கூலியின் தொகை என்பது நிலேயான பரி

மாணம் என்று அவர் சொல்லக் கூடாது. ஆனால், அந்தக் கூலியின் தொகை உயர முடியாது, கூடாது என்ற போதிலும், முதலாளிகளுக்கு எவ்வெப்போது அதனைக் குறைப்பது உகப்பானதோ அப்பொழுதெல்லாம் அது குறைய முடியும், குறைய வேண்டும் என்று அவர் சொல்ல வேண்டும். இறைச்சிக்குப் பதில் உருளைக் கிழங்கையும் கோதுமைக்குப் பதில் ஓட்ஸையும் கொண்டு உங்களைப் போஷிப்பது முதலாளிக்கு உகப்பானால், நீங்கள் அவனது சித்தத்தை அரசியல் பொருளாதாரத்தின் ஒரு விதியாக ஏற்று அதற்குப் பணிந்து போக வேண்டும். ஒரு தேசத்தில் கூலி விகிதம் இன்னொரு தேசத்தைவிட அதிகமாக இருக்குமானால், உதாரணமாக இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் அதிகமாக இருக்குமானால், அப்போது, கூலி விகிதத்தில் உள்ள இந்த வித்தியாசத்தை அமெரிக்க முதலாளியின் விருப்பத்திற்கும் இங்கிலாந்து முதலாளியின் விருப்பத்துக்குமிடையே உள்ள வித்தியாசமாகவே நீங்கள் விளக்க வேண்டும். இத்தகைய விளக்கு முறை பொருளாதார நிகழ்ச்சிகள் பற்றிய ஆராய்ச்சியை மட்டுமல்ல, மற்றெல்லா நிகழ்ச்சிகள் பற்றிய ஆராய்ச்சியையும் மட்டுமீறி எளிதாக்கிவிடும்.

ஆனால் அப்போதும் கூட, அமெரிக்க முதலாளியின் சித்தம் இங்கிலாந்து முதலாளியின் சித்தத்திலிருந்து ஏன் வேறுபட்டிருக்கிறது என்று நாம் கேட்கலாம். இந்தக் கேள்விக்குப் பதிலிறுக்க நாம் சித்தம் என்னும் எல்லைக்கப்பால் செல்ல வேண்டும். கடவுள் பிரான்சில் ஒன்று விரும்புகிறார், இங்கிலாந்தில் வேறொன்று விரும்புகிறார் என்று ஒரு பாதிரியார் சொல்லலாம். அவரை நான் கடவுளுக்கு ஏன் இந்த இரட்டைச் சித்தம், விளக்கம் கூறுங்கள் என்று மடக்கிக் கேட்டால், பிரெஞ்சு தேசத்தில் ஒரு சித்தமும், இங்கிலாந்து தேசத்தில் மற்றொரு சித்தமுமாக இருப்பதே கடவுளுக்கு உகப்பானது என்று சிறிதும் கூச்சமின்றி அவர் பதில் கூறிவிடலாம். ஆனால் நமது நண்பர் வேஸ்டன் பகுத்தறிவுக்கு முற்றிலும் முரணான இது போன்ற வாதத்தை நிச்சயம் கூறமாட்டார் என்றே நம்புகிறோம்.

எவ்வளவு சாத்தியமோ அவ்வளவையும் எடுத்துக்

கொள்வது என்பதே நிச்சயமாக முதலாளியின் சித்தம். நாம் செய்ய வேண்டியது அவனுடைய சித்தத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதல்ல; முதலாளியின் சக்தியைப் பற்றி, அந்தச் சக்தியின் வரம்புகளைப் பற்றி, அந்த வரம்புகளின் தன்மையைப் பற்றி விவரமாக ஆராய்வதே நாம் செய்ய வேண்டியதாகும்.

## 2. உற்பத்தி, கூலி, லாபம்

சகபிரஜை வேஸ்டன் நம்மிடையே நிகழ்த்திய பிரசங்கத்தின் கருத்துக்களை ஒரு குடுக்கைக்குள் அடக்கிவிடலாம்.

அவரது வாதமெல்லாம் இதுதான்: தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை நெருக்கி நான்கு ஷில்லிங்குக்குப் பதில் ஐந்து ஷில்லிங்கைப் பணக்கூலியாகக் கொடுக்கும்படிச் செய்தால், முதலாளி, இதற்கு ஈடாக, ஐந்து ஷில்லிங் பெறுமானதற்குப் பதிலாக நான்கு ஷில்லிங் பெறுமான பண்டங்களையே தருவான். இதனால் தொழிலாளி வர்க்கம் கூலி உயர்வுக்கு முன் நான்கு ஷில்லிங் கொடுத்து வாங்கியதற்கு இப்போது ஐந்து ஷில்லிங் கொடுக்க வேண்டியதிருக்கும். ஆனால் இது ஏன் இப்படி இருக்க வேண்டும்? ஐந்து ஷில்லிங் பெறுமானதற்குப் பதிலாக ஏன் நான்கு ஷில்லிங் பெறுமானதைத்தான் முதலாளி திருப்பித் தருகிறான்? ஏனென்றால் கூலியின் தொகை திண்ணமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அது ஏன் நான்கு ஷில்லிங் பெறுமான பண்டங்களுக்குச் சமமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்? ஏன் மூன்று அல்லது இரண்டு அல்லது வேறு ஏதாவது தொகை பெறுமான பண்டங்களுக்குச் சமமாக இருக்கக் கூடாது? முதலாளியின் சித்தத்தையோ அதே மாதிரி தொழிலாளியின் சித்தத்தையோ சார்ந்திராத ஒரு பொருளாதார விதியால் கூலித் தொகையின் வரம்பு நிச்சயிக்கப்படுகிறதென்றால், சகபிரஜை வேஸ்டன் முதல் காரியமாகச் செய்திருக்க வேண்டியது அந்தப் பொருளாதார விதியைக் கூறி, அதை நிரூபிப்பதே. அதோடு, எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும் உண்மையாகக் கொடுக்கப்பட்ட கூலித்

தொகை அத்தியாவசியக் கூலித் தொகைக்கு எப்போதும் துல்லியமாகப் பொருந்தியிருக்கிறது என்றும் அதிலிருந்து ஒருபோதும் விலகிச் செல்வதில்லை என்றும் அவர் ருசுப்பித்திருக்க வேண்டும். இப்படியல்லாமல், கூலித் தொகையின் குறிப்பிட்ட வரம்பு முதலாளியின் சித்தத்தை மட்டுமோ அல்லது அவனது பேராசையின் வரம்பையோ ஒட்டியே நிர்ணயமாகிறதென்றால், அது மனம்போன போக்கிலுள்ள வரம்பாகும். அதில் அத்தியாவசியம் எதுவுமில்லை. அந்தக் கூலித் தொகையின் வரம்பு முதலாளியின் சித்தத்துக்கு ஏற்ப மாற்றப்படலாம். எனவே, அவனது விருப்பத்திற்கு எதிராகவும் அது மாற்றப்படலாம்.

சகபிரஜை வேஸ்டன் ஓர் உதாரணத்தின் மூலம் தமது தத்துவத்தை விளக்கினார். அதாவது, ஒரு பாத்திரத்தில் குறிப்பிட்ட அளவுள்ள சூப் இருக்கிறது; குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நபர்கள் அதைச் சாப்பிட வேண்டியிருக்கிறது; அந்நிலையில் அவர்கள் சாப்பிடும் கரண்டிகளின் அளவு பெரிதாகி விடுவதால் சூப்பின் அளவு கூடிவிடாது என்றார். அவரது உதாரணம் அசட்டுத்தனமானது என்று நான் சொல்வதை அவர் பொறுத்துக் கொள்ள வேண்டும். மனேனியஸ் அக்ரிப்பா என்பவர் கையாண்ட ஒரு உவமையை அந்த உதாரணம் எனக்குச் சற்று நினைவுபடுத்துகிறது. ரோமாபுரிப் பாட்ரிஷியன்களுக்கு (பிரபுக்கள்) எதிராகப் பிளெபியன்கள் (சாமானியக் குடிமக்கள்) கிளர்ந்தெழுந்தபோது, பாட்ரிஷியனாகிய அக்ரிப்பா அவர்களைப் பார்த்து பாட்ரிஷியன்கள் என்னும் வயிறுதான் அரசு என்னும் உடலின் பிளெபியன்கள் என்னும் அவயவங்களைப் போஷிக்கிறது என்றாராம். ஆனால் ஒரு மனிதனின் வயிற்றை நிரப்புவதின் மூலம் இன்னொரு மனிதனின் அவயவங்களை எப்படிப் போஷிக்க முடியும் என்பதை அவர் எடுத்துக்காட்டத் தவறிவிட்டார். தொழிலாளர்கள் எந்தப் பாத்திரத்திலிருந்து எடுத்து உண்கிறார்களோ அது தேசிய உழைப்பின் முழு உற்பத்தியாலும் நிரம்பியிருக்கையில், அதிலிருந்து அவர்கள் அதிகமாக எடுத்துக்கொள்வதைத் தடுப்பது பாத்திரத்தின் அளவுக் குறைவோ அல்லது அதில் உள்ள பண்டங்

களின் போதாமையோ அல்ல; ஆனால் அவர்களுடைய கரண்டிகள் சிறிதாக இருப்பதுதான் என்பதை சகபிரஜை வேஸ்டனும் தமது பங்குக்கு மறந்துவிட்டார்.

ஐந்து ஷில்லிங்குகளுக்கு நான்கு ஷில்லிங்குகள் பெறுமானதை முதலாளி எந்தத் தந்திரத்தால் கொடுக்க முடிகிறது? அவன் விற்கும் பண்டத்தின் விலையை உயர்த்துவதால் இதைச் செய்ய முடிகிறது. சரி, பண்டங்களின் விலை உயர்வும், அதைவிடப் பொதுவாகச் சொன்னால் பண்டங்களின் விலை மாற்றமும், இன்னும் பண்டங்களின் விலைகளுமே கூட முதலாளியின் சித்தத்தை மாத்திரம் பொறுத்திருக்கின்றனவா? அல்லது, இதற்கு மாறாக, அந்தச் சித்தத்தை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிட்ட சூழ்நிலைமைகள் தேவைப்படுகின்றனவா? அப்படிப்பட்ட சூழ்நிலைமைகள் தேவையில்லை என்றால், மார்க்கெட் விலைவாசிகளின் ஏற்ற இறக்கமும், இடைவிடாத ஊசலாட்டமும் சிக்கறுக்க முடியாத புதிராகிவிடும்.

உழைப்பின் உற்பத்தித் திறன்களிலோ, அல்லது ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் அளவிலும் உழைப்பின் அளவிலுமோ, அல்லது பண்டங்களின் மதிப்புகளை அளவிடுகிற பணத்தின் மதிப்பிலோ எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை; ஆனால் கூலி விகிதத்தில் மாத்திரம்தான் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்; ஆதலால் அந்தக் கூலி உயர்வு பண்டங்களின் விலைகளை எவ்வாறு பாதிக்கக் கூடும்? இந்தப் பண்டங்களின் கிராக்கிக்கும் சப்ளைக்கும் உள்ள உண்மையான விகிதாச்சாரத்தைப் பாதிப்பதன் மூலமாக மட்டுமே.

முழுமையாக எடுத்துக்கொண்டு பார்த்தால், தொழிலாளி வர்க்கம் தன் வருவாயை அத்தியாவசியப் பொருள்களுக்காகச் செலவழிக்கிறது என்பதும் அப்படி அது செலவழித்துத்தான் ஆக வேண்டும் என்பதும் முற்றிலும் உண்மையாகும். எனவே, கூலி விகிதத்தில் ஏற்படும் பொதுவான உயர்வு அத்தியாவசியப் பொருள்களின் கிராக்கியை அதிகரிக்கச் செய்யும்; அதன் விளைவாக மார்க்கெட் விலைகளையும் உயர்த்தும். இந்த அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்யும் முதலாளிகள், தாங்கள் செலுத்தும்

கூலி உயர்வைத் தங்களது பண்டங்களின் மார்க்கெட் விலைகளை உயர்த்திக் கொள்வதன் மூலம் சரிக்கட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்யாத மற்ற முதலாளிகளின் விஷயம் என்ன? அவர்களின் எண்ணிக்கை சிறிது என்று நினைக்காதீர்கள். தேசிய உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குகளை ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் அனுபவிக்கின்றனர்—அவர்கள் ஜனத்தொகையில் ஏழில் ஒரு பகுதியினர் என்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபை உறுப்பினர் ஒருவர் அண்மையில் கூறினார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால், தேசிய உற்பத்தியில் எவ்வளவு பெரிய பங்கு ஆடம்பரப் பொருள்கள் ரூபத்தில் உற்பத்தியாக வேண்டும்; அல்லது ஆடம்பரப் பொருள்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட வேண்டும்; இன்னும் அத்தியாவசியப் பொருள்களிலேயே எவ்வளவு பெரிய பங்கு அடியாட்களுக்காகவும் குதிரைகளுக்காகவும் பூனைகளுக்காகவும் இவைபோன்ற ஏனையவற்றிற்காகவும் வீண்விரயமாக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயரும் போது இந்த விரயமும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிவோம்.

சரி, அது இருக்கட்டும். அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்யாத முதலாளிகளின் நிலைமை என்னவாகும்? பொதுவான கூலி உயர்வின் விளைவாக லாப விகிதத்தில் ஏற்படும் வீழ்ச்சியை, தங்களது பண்டங்களின் விலைவாசிகளை ஏற்றுவதன் மூலம் அவர்களால் சரிக்கட்டிக் கொள்ள முடியாது. ஏனென்றால் அந்தப் பண்டங்களுக்கான கிராக்கி கூடியிருக்காது. அவர்களது வருமானம் குறைய நேரிடும். இந்தக் குறைந்த வருமானத்திலிருந்து, அதே அளவுள்ள விலையேறிய அத்தியாவசியப் பொருள்களுக்கு அவர்கள் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். அது மட்டுமல்ல, அவர்களது வருவாய் குறைந்து விட்டதால், ஆடம்பரப் பொருள்களுக்கான தங்கள் செலவை அவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதனால் அவர்

களது பண்டங்களுக்கான பரஸ்பர கிராக்கி குறையும். இந்தக் குறைந்த கிராக்கி காரணமாக அவர்களது பண்டங்களின் விலைவாசிகள் வீழ்ச்சியடையும். இவ்வாறாக, இந்தத் தொழில் துறைகளிலும் கூலி விகிதத்தின் பொதுவான உயர்வையொட்டி நேர்விகிதத்தில் மட்டுமின்றி, பொதுவான கூலி உயர்வு, அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வு, ஆடம்பரப் பொருள்களின் விலைவாசி வீழ்ச்சி ஆகியவைகளையொட்டிக் கூட்டு விகிதத்திலும் **லாப விகிதம் குறைந்துவிடும்.**

பல்வேறு வகையான தொழில் துறைகளில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்களுக்கான **லாப விகிதங்களின் இந்த வித்தியாசம்** என்ன விளைவை ஏற்படுத்தும்? எக்காரணத்தைக் கொண்டாயினும், வெவ்வேறான உற்பத்தித் துறைகளில் **சராசரி லாப விகிதம்** மாறுகிற பொழுதெல்லாம் பொதுவாக என்ன விளைவு ஏற்படுமோ அதுதான் இப்போதும் ஏற்படும். மூலதனமும் உழைப்பும் குறைந்த ஆதாயமுள்ள தொழில் துறைகளிலிருந்து மிகுந்த ஆதாயமுள்ள தொழில் துறைகளுக்கு மாற்றப்படும். ஒரு தொழில் துறையில் கிராக்கியின் அதிகரிப்புக்கேற்ப சப்ளை உயர்ந்துவிடும் வரை, மற்ற தொழில் துறைகளில் கிராக்கியின் குறைவுக்கேற்ப சப்ளை வீழ்ச்சியுற்றுவிடும் வரை இவ்வாறு மாற்றப்படும் நிகழ்முறை தொடர்ந்து நடக்கும். இவ்வகை மாற்றம் **ஏற்பட்டவுடன்** மீண்டும் **பொதுவான லாப விகிதம்** பல்வேறு தொழில் துறைகளிலும் **சமனடையும்.** முழுக் குழப்பமும் பல்வேறு பண்டங்களின் கிராக்கிக்கும் சப்ளைக்குமிடையே உள்ள விகிதத்தில் ஏற்பட்ட ஒரு வெறும் மாறுதலால் எழுந்ததால், இந்தக் காரணம் நீங்கியதும் அதன் பலனும் மறைந்து, **விலைவாசிகள்** அவற்றின் பழைய நிலையை அடைந்து சமனடையும். கூலி உயர்வின் விளைவாக **லாப விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி** சில தொழில் துறைகளுக்கு மட்டும் என்றில்லாமல் **பொதுவான தன்மை** பெறும். நமது அனுமானப்படி பார்த்தால், உழைப்பின் உற்பத்தித் திறனிலோ அல்லது உற்பத்திப் பொருள்களின் ஒட்டுமொத்த அளவிலோ எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்காது; **ஆனால்**

உற்பத்தியின் இந்தக் குறிப்பிட்ட ஒட்டுமொத்த அளவு உருமாற்றம் பெற்றிருக்கும். உற்பத்திப் பண்டங்களின் ஒரு பெரும் பங்கு அத்தியாவசியப் பொருள்களாக இருக்கும்; குறைவான பங்கு ஆடம்பரப் பொருள்களாக இருக்கும், அல்லது வேறு விதமாகச் சொன்னால் ஒரு குறைந்த அளவு பங்கு அந்நிய ஆடம்பரப் பொருள்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டு அதன் ஆரம்ப வடிவத்தில் நுகரப்படும், அல்லது இன்னும் வேறு விதமாகச் சொன்னால் சுதேசிய உற்பத்தியின் பெரும்பாலான பகுதி ஆடம்பரப் பொருள்களுக்காக அல்லாமல், அந்நிய அத்தியாவசியப் பொருள்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும். எனவே, கூலி விகிதத்தின் பொதுவான உயர்வு, மார்க்கெட் விலைகளின் தற்காலிகமான பாதிப்புக்குப் பிறகு, பண்டங்களின் விலைகளில் நிரந்தரமான மாற்றம் எதுவும் ஏற்படுத்தாமல் லாப விகிதம் பொதுவாகக் குறைவதில்தான் போய் முடியும்.

இதற்கு முந்திய வாதத்தில் உபரிக் கூலி முழுவதும் அத்தியாவசியப் பொருள்களுக்காகவே செலவழிக்கப்படும் என்று அனுமானித்துக் கொண்டு பேசினேனே என்று கேட்கலாம். இதற்கு நானளிக்கும் பதில், சகபிரஜை வேஸ்டனுக்கு மிகமிகச் சாதகமாகவே இந்த அனுமானத்தைக் கூறியிருக்கிறேன் என்பதுதான். முன்னர் தொழிலாளிகள் நுகர்ந்திராத பொருள்களுக்காக உபரிக் கூலி செலவிடப்பட்டால், அவர்களது வாங்கும் சக்தி உண்மையில் உயர்ந்திருக்கிறது என்பதற்கு நிரூபணம் தேவையில்லை. எனினும் இது கூலி உயர்வின் விளைவாக மட்டுமே ஏற்பட்டதால் அவர்களது வாங்கும் சக்தியின் இந்த உயர்வு, முதலாளிகளின் வாங்கும் சக்தியின் குறைவுக்குத் துல்லியமாகச் சமமாயிருக்க வேண்டும். ஆகவே பண்டங்களுக்கான ஒட்டுமொத்த கிராக்கி அதிகரித்திருக்காது; ஆனால் அந்த கிராக்கியில் அடங்கியுள்ள பகுதிகள் மாறியிருக்கும். ஒருபக்கத்தில் ஏற்படும் கூடுதல் கிராக்கியை மறு பக்கத்தில் ஏற்படும் குறைந்த கிராக்கி ஈடு செய்யும். இவ்விதம் ஒட்டுமொத்த கிராக்கி நிலையாக

இருக்கையில், பண்டங்களின் மார்க்கெட் விலைகளில் எத்தகைய மாற்றமும் ஏற்பட முடியாது.

எனவே நாம் ஒரு இருதலைவாத நிலையை அடைகிறோம்: ஒன்று, உபரிக் கூலி எல்லா உபயோகப் பொருள்களுக்கும் சரி சமத்துவமாகச் செலவழிக்கப்படுகிறது—அப்போது தொழிலாளி வர்க்கத்தின் கூடுதல் தேவை முதலாளி வர்க்கத்தின் குறைந்த தேவையால் ஈடு செய்யப்பட வேண்டும்; அல்லது உபரிக் கூலி சில பொருள்கள் மீது மட்டும் செலவழிக்கப்பட்டு, அவற்றின் மார்க்கெட் விலைகள் தற்காலிகமாக உயர்கின்றன — அப்பொழுது சில தொழில் துறைகளில் லாப விகிதம் உயர்வதனுலும் மற்ற சில தொழில் துறைகளில் லாப விகிதம் குறைவதனுலும் மூலதனம், உழைப்பு இவற்றின் வினியோகம் மாற்றம் பெறும். ஒரு தொழில் துறையில் ஏற்பட்ட கூடுதல் கிராக்கிக்கேற்ப சப்ளை பெருகும் வரையிலும், மற்ற தொழில்துறையில் ஏற்பட்ட குறைந்த கிராக்கிக்கேற்ப சப்ளை சுருங்கும் வரையிலும் இந்த மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கும். முதல் அனுமானப்படி, பண்டங்களின் விலைவாசிகளில் மாற்றம் நிகழாது. இரண்டாவது அனுமானப்படி, மார்க்கெட் விலைவாசிகளின் சிற்சில ஏற்ற இறக்கங்களுக்குப் பிறகு, பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் முன் நிலவிய மட்டத்திற்கு இறங்கும். இரண்டு அனுமானங்களின் படியும் பார்த்தால் கூலி விகிதத்தின் பொதுவான உயர்வு இறுதியாக லாப விகிதத்தின் பொதுவான வீழ்ச்சியில் போய் முடியுமே தவிர வேறல்ல.

உங்களுடைய கற்பனு சக்தியைத் தூண்டுவதற்காகச் சகபிரஜை வேஸ்டன், இங்கிலாந்து விவசாயத் தொழிலாளிகளின் கூலியில் ஒன்பது ஷில்லிங்கிலிருந்து பதினெட்டு ஷில்லிங்காக ஒரு பொது உயர்வு ஏற்படுவதால் விளையும் கஷ்டங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொண்டார். அத்தியாவசியப் பொருள்களுக்கான கிராக்கியில் ஏற்படும் பெருத்த உயர்வையும் அதன் விளைவாக விலைவாசிகளின் பயங்கர உயர்வையும் சிந்தியுங்கள் என்றும் கலவரத்துடன் கூறினர். விவசாயப் பொருள்களின்

விலைவாசிகள் இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் குறைவாக இருந்த போதிலும், மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே யுள்ள பொதுவான உறவுகள் இங்கிலாந்திலும் அமெரிக்கா விலும் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், இங்கிலாந்தைக் காட்டிலும் அமெரிக்காவில் வருடாந்தர உற்பத்தியின் ஒட்டுமொத்த அளவு மிகக் குறைவாக இருந்த போதிலும் அமெரிக்க விவசாயத் தொழிலாளியின் சராசரிக் கூலி இங்கிலாந்து விவசாயத் தொழிலாளியின் கூலியைவிட இரண்டு மடங்குக்கும் அதிகமானது என்பதை நீங்களெல் லோரும் அறிவீர்கள். பின் ஏன் நமது நண்பர் வேஸ்டன் இந்த அபாய மணியை ஒலிக்கிறார்? நம் முன்னுள்ள உண்மை யான பிரச்சினையைத் திசைதிருப்பவே அவ்விதம் செய்கிறார். ஒன்பது ஷில்லிங்கிலிருந்து பதினெட்டு ஷில்லிங்குக்குத் திடீரென்று கூலி உயர்வது 100 சதவிகிதத் திடீர் உயர் வாகும். இப்போது நாம், இங்கிலாந்தில் பொதுக் கூலி விகிதம் திடீரென்று 100 சதவிகிதத்திற்கு உயர முடியுமா என்பதைப் பற்றியே விவாதித்துக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு யதார்த்த நிலையிலும் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் அவற்றை அனுசரித்தும் இருக்க வேண்டிய கூலி உயர்வின் அளவைப் பற்றி நாம் விவாதிப்பதற்கு எதுவுமே இல்லை. நாம் ஆராய வேண்டியதெல்லாம் கூலி விகிதத் தின் பொதுவான உயர்வு, அது ஒரு சதவிகிதமேயானாலும், என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப் பற்றி மட்டும் தான்.

நண்பர் வேஸ்டனின் கற்பனையான 100 சதவிகிதக் கூலி உயர்வை ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு, 1849 முதல் 1859 வரை இங்கிலாந்து தேசத்தில் ஏற்பட்ட உண்மை யான கூலி உயர்வை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரு கிறேன்.

1848ல் அமுலாக்கப்பட்ட பத்து மணி நேர வேலைச் சட்டம் உங்களனைவருக்கும் தெரியும். இதனைப் பத்து மணி நேர வேலைச் சட்டம் என்பதைவிட, பத்தரை மணிநேர வேலைச் சட்டம் என்பதே பொருந்தும். நாம் அனுபவத்தில் கண்ட மிகப் பெரிய பொருளாதார மாற்றங்களில் இந்தச்

சட்டமும் ஒன்று. அது திடீரென்று, கட்டாயமாக அமுலாக்கப்பட்ட கூலி உயர்வாகும். இந்தக் கூலி உயர்வு ஏதோ சில ஸ்தல தொழில்களில் ஏற்பட்டது அல்ல; மாருக, இங்கிலாந்து தேசம் எந்தப் பெரும் தொழில்களைக் கொண்டு உலக மார்க்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிறதோ, அந்தத் தொழில்களில் ஏற்பட்ட கூலி உயர்வாகும், மிகமிகப் பிரதிகூலமான சூழ்நிலைமைகளில் ஏற்பட்ட கூலி உயர்வாகும். முதலாளி வர்க்கத்தின் அதிகாரபூர்வமான பிரச்சாரகர்களான டாக்டர் யூரும், பேராசிரியர் ஸீனியரும், மற்ற பொருளியலாளர்களும் இந்தச் சட்டம் இங்கிலாந்து தேசத்தின் தொழிலுக்குச் சாவு மணியடிக்கும் என்று—நமது நண்பர் வேஸ்டனுடையவற்றைக் காட்டிலும் பலமான ஆதாரங்களின் பேரில் என்பதை நான் கூற வேண்டும்—ருசுப்பித்தனர். அச்சட்டம் வெறும் கூலி உயர்வு மட்டுமல்ல என்றும் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் அளவைக் குறைப்பதைத் துவக்கமாகவும் அஸ்திவாரமாகவும் கொண்டு ஏற்படும் கூலி உயர்வு என்றும் நிரூபித்தனர். முதலாளியிடமிருந்து நீங்கள் எடுத்துக்கொள்ள விரும்பும் பன்னிரண்டாவது மணிதான் முதலாளி தனது லாபத்தைப் பெறும் ஒரே மணி என்றும் அவர்கள் வலிந்துரைத்தனர். இதனுல் சேமிப்புக் குறையும்; விலைவாசிகள் ஏறும்; மார்க்கெட்டுகள் கைநழுவும்; உற்பத்தி சுருங்கும்; இவற்றின் விளைவாகக் கூலிகள் மீண்டும் குறையும்; இறுதியில் சர்வநாசம் ஏற்படும் என்றும் பயமுறுத்தினர். உண்மையில், இந்தச் சட்டத்தோடு ஒப்பிடுகையில் மக்சிமிலியான் ரொபெஸ்பியேரின் உயர்ந்த பட்சச் சட்டங்கள்[27] ஒரு சிறிய விஷயம் என்று கூறினர். ஓர் அர்த்தத்தில் அவர்கள் சொன்னது சரிதான். ஆனுல் உண்மையில் நிகழ்ந்ததென்ன? வேலை நாள் குறைக்கப்பட்ட போதிலும் ஆலை ஊழியர்களுக்குப் பணக் கூலி உயர்ந்தது; ஆலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை வெகுவாகப் பெருகியது; அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களின் விலைவாசிகள் தொடர்ந்து இறங்கிக் கொண்டே போயின; ஆலைத் தொழிலாளர்களது உழைப்பின் உற்பத்தித் திறன்கள் வியக்கத்

தக்க வளர்ச்சி கண்டன; பண்டங்களுக்கு என்றும் கண்டும் கேட்டுமிராத அளவு மார்க்கெட்டுகள் மேலும் மேலும் விரிவடைந்து கொண்டு போயின. 1861ம் ஆண்டில், மாஞ் செஸ்டரில், விஞ்ஞான வளர்ச்சிச் சங்கக் கூட்டத்தில் திரு. நியூமன் பேசுகையில், தானும், டாக்டர் யூரும், ஸீனியரும், பொருளாதார விஞ்ஞானத்தின் இன்னும் பிற அதிகாரபூர்வமான வல்லுநரும் தவறுதலாக நிலைமையைக் கணித்துவிட்டதாகவும், அதே சமயம் மக்களின் உணர்வே சரியாக இருந்ததென்றும் ஒப்புக்கொண்டதை நானே என் செவிகளால் கேட்டேன். நான் வி. நியூமனைக்[28] குறிப் பிடுகிறேன், பேராசிரியர் பிரென்ஸிஸ் நியூமனையல்ல, ஏனென்றால் வி. நியூமன் தாமஸ் தூக்கினுடைய "விலைகளின் வரலாறு" என்னும் நூலுக்குக் கட்டுரைகள் வழங்கியவராக வும் ஆசிரியராகவும் பொருளாதார விஞ்ஞானத்தில் முக்கிய இடம் வகிப்பவர். இந்தச் சிறந்த நூல் 1793 முதல் 1856 வரை நிலவிய விலைவாசிகளின் வரலாற்றை ஆராய்கிறது. கூலியின் மாறாத நிரந்தர ஒட்டுமொத்தத் தொகை, உற்பத்திப் பொருள்களின் மாறாத நிரந்தர ஒட்டுமொத்த அளவு, உழைப்பின் உற்பத்தித் திறன்களின் மாறாத நிரந்தர மட்டம், முதலாளிகளின் மாற்றமில்லாத நிரந் தரச் சித்தம் ஆகியவை பற்றி நமது நண்பர் வேஸ்டன் கொண்டுள்ள மாறாத நிரந்தரக் கருத்தும், இன்னும் அவரது மற்றெல்லா மாறுபாடின்மையும் இறுதித்தன்மை யும் சரியானவை என்றால், பேராசிரியர் ஸீனியரின் அழுகுணி ஆரூடங்களும் சரியானவையாக இருக்கும்; அதே நேரம் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கான முதல் நட வடிக்கையாக வேலை நேரத்தைப் பொதுவாக அளவறுக்க வேண்டுமென்று ஏற்கெனவே 1815ல் அறிவித்த ராபர்ட் ஓவன்[29], பொதுவாக நிலவிய துவேஷ மனப்பான்மையை யும் எதிர்த்து, வேலை நேர அளவறுப்பை நியூ லனார்க்கில் இருந்த தனது சொந்தப் பஞ்சாலையில், தனது சொந்தப் பொறுப்பில் அமுல் நடத்தியதும் தவறானதாக இருக்கும்.

பத்து மணிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன் விளை வாகக் கூலி உயர்வு ஏற்பட்ட இதே காலத்தில் பிரிட்டனில்

விவசாயக் கூலியிலும் பொது உயர்வு ஏற்பட்டது. இதற்கான காரணங்களை இங்கு விளக்கிக் கொண்டிருப்பது பொருத்த மில்லாததாக இருக்கும்.

நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்குத் தேவையற்றது என்றாலும், நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக, பூர்வாங்கமாகச் சில விஷயங்களை விளக்கி விடுகிறேன்.

ஒரு மனிதன் வாரம் இரண்டு ஷில்லிங்காகக் கூலி பெற்றுக் கொண்டிருக்கையில், அக்கூலி நான்கு ஷில்லிங் காக உயர்ந்தால், கூலி விகிதம் 100 சதவிகிதமாக அதிகரிக் கும். கூலி விகிதத்தில் உயர்வு என்று சொல்லும் போது இது மிகவும் மகத்தான காரியம் போலத் தோன்றும். ஆனால் உண்மையான கூலித் தொகை, அதாவது வாரம் நான்கு ஷில்லிங், அப்போதும் மிக அற்பமானதாக, பட்டினிக் கூலியாகத் தானிருக்கும். ஆகவே, கூலி விகிதத்தில் சதமானங் கள் என்னும் டாம்பீகப் பேச்சால் ஏமாந்துவிட உங்களை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. தொடக்கத்திலிருந்த தொகை என்ன என்று நீங்கள் எப்போதும் கேட்க வேண்டும்.

மேலும், வாரம் தலா 2 ஷில்லிங் பெறும் பத்து தொழிலாளிகளும், அதே மாதிரி 5 ஷில்லிங் பெறும் ஐந்து தொழிலாளிகளும், 11 ஷில்லிங் பெறும் ஐந்து தொழி லாளிகளும் இருந்தால் இந்த இருபது பேர்களும் சேர்ந்து மொத்தம் 100 ஷில்லிங் அல்லது 5 பவுன் பெறுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவர்களுடைய ஒட்டு மொத்தமான வாரக் கூலியில் ஓர் உயர்வு, உதாரணமாக 20 சதவிகிதம் ஏற்பட்டால் அவர்களுடைய மொத்தக் கூலி 5 பவுனிலிருந்து 6 பவுனாக அதிகரிக்கும். சராசரியை வைத்துப் பார்க்கும் போது கூலியின் பொதுவான விகிதம் 20 சதவிகிதம் உயர்ந்துவிட்டது எனறே நாம் கூறலாம். ஆனால், உண்மையில், பத்து பேர்களுடைய கூலி மாறாமல் அப்படியே இருக்கிறது; ஒரு ஐந்து பேர்களுடைய கூலி 5 ஷில்லிங்கிலிருந்து 6 ஷில்லிங்காக ஏறியிருக்கிறது; இன் னொரு ஐந்து பேர்களுடைய மொத்தக் கூலி 55 ஷில்லிங்கி லிருந்து 70 ஷில்லிங்கிற்கு உயர்ந்திருக்கிறது. அதாவது,

பாதிப்பேர் தங்கள் நிலையை அறவே அபிவிருத்தி செய்து கொண்டிருக்கமாட்டார்கள்; ஒரு கால் வாசிப்பேர் மிகச் சொற்பமான அளவிலேயே அபிவிருத்தி செய்து கொண் டிருப்பார்கள்; மற்ெறாரு கால் வாசிப்பேர்தான் உண்மை யாகவே தங்கள் நிலைமையை நன்றாக அபிவிருத்தி செய்து கொண்டிருப்பார்கள். சராசரியாகக் கணக்கிடும் போது அந்த இருபது பேர்களுடைய ஒட்டுமொத்தக் கூலி அளவு 20 சதவிகிதம் உயர்ந்தேயிருக்கும்; அவர்களை ஈடுபடுத்தும் மொத்த மூலதனத்தையும் அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலைவாசிகளையும் பொறுத்த வரையிலோ, சராசரிக் கூலி உயர்வை அவர்களனைவரும் சரிசமமாகப் பகிர்ந்துகொண்ட மாதிரியே மொத்தக் கூலி அளவு இருக் கும். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து இவற்றின் வெவ்வேறு மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களின் கூலி மட்டம் வெகுவாக மாறுபட்டிருந்ததால், இந்த உயர்வும் அவர்களை மிகச் சமமின்றியே பாதித்தது.

கடைசியாக, கூலி உயர்வு ஏற்பட்ட காலத்தில், இதற்கு எதிரிடையான செல்வாக்குகள் — ருஷ்ய யுத்தத் தின்[30] விளைவாகப் புதிய வரிகள் விதிக்கப்பட்டதும் விவசாயத் தொழிலாளிகளின் குடியிருப்பு மனைகள் விரிந்த அளவில் இடித்துத் தள்ளப்பட்டதும்[31] இன்னும் இது போன்ற பிறவும் செயல்பட்டன.

இந்த முன்குறிப்புக்களுக்குப் பின், 1849 முதல் 1859 வரையுள்ள காலகட்டத்தில், பிரிட்டிஷ் விவசாயத் தொழி லாளிகளின் சராசரிக் கூலி விகிதத்தில் **சுமார் 40 சதவிகித உயர்வு** ஏற்பட்டது என்று கூறுகிறேன். என் கூற்றுக்குச் சான்றாகப் போதுமான விவரங்களை என்னால் கொடுக்க முடியும்; எனினும் இப்போதைய விஷயத்துக்கு, 1859ல் லண்டன் கலைக் கழகத்தில்[32] **விவசாயத்தில் பிரயோகிக்கப்பட்ட சக்திகள்** என்பது பற்றி காலஞ்சென்ற **ஜான் மோர்ட்டன்** சமர்ப்பித்த, நேர்மையுள்ள விமர்சனக் கட்டுரையை உங் களிடம் பிரஸ்தாபித்தால் போதும் என்று நினைக்கிறேன். இக்கட்டுரையில் திரு. மோர்ட்டன், பன்னிரண்டு ஸ்காட் லாந்து மாவட்டங்களிலும் முப்பத்தைந்து இங்கிலாந்து

மாவட்டங்களிலும் வசிக்கின்ற சுமார் நூறு நிலவுடைமைக் காரர்களிடமிருந்து சேகரித்த பட்டியல்களிலிருந்தும் இன்னும் இதர பிரமாண பூர்வமான தஸ்தாவேஜுகளிலிருந்தும் மேற்கோள்கள் காட்டியிருக்கிறார்.

நமது நண்பர் வேஸ்டனின் கருத்துப்படி, அதிலும் தொழிற்சாலை ஊழியர்களின் கூலியில் அதே சமயத்தில் ஏற்பட்ட உயர்வையும் சேர்த்துப் பார்த்தால், 1849க்கும் 1859க்கும் இடைப்பட்ட காலத்தில் விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைவாசிகள் மிகப் பெரிய அளவுக்கு அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? ருஷ்ய யுத்தம் ஏற்பட்டிருந்தும், 1854 முதல் 1856 வரை விளைச்சல் தொடர்ச்சியாக மோசமாயிருந்த போதிலும், இங்கிலாந்தின் பிரதான விளைபொருளாகிய கோதுமையின் சராசரி விலை 1838 முதல் 1848 வரை ஒரு குவார்ட்டர் சுமார் 3 பவுனாக இருந்தது, 1849க்கும் 1859க்குமிடையே ஒரு குவார்ட்டர் சுமார் 2 பவுன் 10 ஷில்லிங்காகக் குறைந்தது. விவசாயச் சராசரிக் கூலி 40 சதவிகிதம் உயர்ந்திருந்த அதே சமயத்தில் கோதுமையின் விலையில் 16 சதவிகிதத்துக்கும் அதிகமான வீழ்ச்சி ஏற்பட்டதை இது காட்டுகிறது. இதே காலகட்டத்தில், அதன் முடிவையும் ஆரம்பத்தையும், அதாவது 1859ம் ஆண்டையும் 1849ம் ஆண்டையும் நாம் ஒப்புநோக்கினால், அதிகார பூர்வமான கணக்குப்படியே ஓட்டாண்டிகளின் எண்ணிக்கை 9,34,419ஆக இருந்தது 8,60,470ஆக இறங்கிற்று. அதாவது 73,949 பேர் குறைவு. இந்தக் குறைவு மிகவும் சொற்பமானதுதான் என்றாலும், அடுத்த வருடங்களில் இது மீண்டும் இல்லாமலே போய்விட்டது என்றாலும், குறைவு குறைவு தானே?

தானியச் சட்டங்கள்[33] ரத்தானதன் விளைவாக, 1838—1848க்கும் இடைப்பட்ட காலத்தோடு ஒப்பிடுகையில், 1849—1859க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் அந்நிய தானிய இறக்குமதி இரு மடங்குக்கும் அதிகமாயிற்று என்று கூறப்படலாம். அதனால் என்ன? சகபிரஜை வேஸ்டனின் கருத்துப்படியே பார்த்தால் நீங்கள் எதை எதிர்பார்க்கலாம்? திடீரென, பிரம்மாண்டமாக, தொடர்ச்சியாக வெளி

நாட்டுச் சந்தைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டதால் அங்கே விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் பயங்கரமான அளவுக்கு உச்சமடைந்திருக்கவேண்டுமல்லவா? உள்நாட்டிலேயே ஏற்பட்டிருந்தாலும் வெளிநாட்டிலிருந்து ஏற்பட்டிருந்தாலும் கிராக்கியின் விளைவு ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமல்லவா? ஆனால் உண்மையில் நிகழ்ந்ததென்ன? பிரான்சில் தானிய விளைச்சல் மோசமடைந்திருந்த ஒரு சில ஆண்டுகளைத் தவிர்த்து, இந்தக் காலம் முழுவதும் தானிய விலையில் நாசகர வீழ்ச்சியே அங்கு முறையீட்டுக்கான ஒரு நீடித்த விஷயமாக இருந்தது; அமெரிக்கர்களோ தங்கள் உபரி விளைச்சலை மீண்டும் மீண்டும் எரித்து அழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தார்கள்; திரு. உர்கார்ட் சொல்வதை நாம் நம்புவதாக இருந்தால்—ருஷ்யா, ஐரோப்பியச் சந்தைகளில் அமெரிக்கப் போட்டியால் தனது விவசாய ஏற்றுமதி முடமாக்கப்பட்டதன் காரணமாக, அமெரிக்காவில் உள்நாட்டுப் போரைத் தூண்டிவிட்டது.

சகபிரஜை வேஸ்டனின் வாதத்தை அதன் சூட்சும வடிவத்திற்குச் சுருக்கினால் அதன் சாரம் இதுவாகத்தான் இருக்கும்: ஒவ்வொரு கிராக்கி அதிகரிப்பும் உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட ஒட்டுமொத்தத்தை அடிப்படையாகக் கொண்டே எப்போதும் நிகழ்கிறது. எனவே, அது தேவையான பொருள்களின் சப்ளையை ஒருபோதும் பெருக்க முடியாது; அவற்றின் பண விலைகளைத்தான் உயர்த்த முடியும். ஆனால் மிகச் சாதாரணமான பரிசீலனை காட்டுவது என்ன? கிராக்கி அதிகரிப்பதால் சில சமயங்களில் பண்டங்களின் மார்க்கெட் விலைகள் அறவே பாதிக்கப்படுவதில்லை; மற்ற சில சமயங்களில் மார்க்கெட் விலைகள் தற்காலிகமாக உயர்கின்றன; இதைத் தொடர்ந்து சப்ளை அதிகரிக்கிறது. இதையொட்டி விலைகள் அவற்றின் பழைய மட்டத்துக்கு இறங்குகின்றன; சில சமயங்களில் இதற்குக் கீழேயும் இறங்குகின்றன. கிராக்கி அதிகரிப்பு ஏற்படுவது கூலி உயர்வின் விளைவாகவா, அல்லது வேறு காரணங்களாலா என்ற விஷயம் பிரச்சினையின் நிலைமைகளைச் சிறிதும் மாற்றுவதில்லை. சகபிரஜை வேஸ்டனின் வாதப்படி கூலி உயர்வால் ஏற்படும்

அசாதாரணமான சூழ்நிலைகளின் கீழ் நிகழும் நிகழ்ச்சியை விளக்குவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் பொதுவான இந்த நிகழ்ச்சியை விளக்குவதும். எனவே, அவரது வாதம் நாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்திற்கு எவ்வித விசேஷ சம்பந்தமும் இல்லாதிருக்கிறது. கிராக்கி கூடுவதானது இறுதியாக மார்க்கெட் விலைகளை உயர்த்துவதற்குப் பதிலாக சப்ளையை அதிகரிக்கவே செய்கிறது என்பதற்கு எந்த விதிகள் காரணம் என்பதைப் புரிந்து கொள்வதில் அவருக்குள்ள குழப்பத்தையே இது காட்டுகிறது.

## 3. கூலியும் நாணயமும்

இரண்டாம் நாள் விவாதத்தில் நமது நண்பர் வேஸ்டன் தமது பழைய வலிந்துரைகளையே புதிய ரூபங்களில் சமர்ப்பித்தார். அவர் சொன்னார்: பணக்கூலியில் பொதுவான உயர்வு ஏற்படுவதன் காரணமாக, அந்தக் கூலியைக் கொடுக்க அதிகமான நாணயங்கள் தேவைப்படும். நாணயங்கள் **மாறுத நிரந்தர** அளவுடையனவாக இருக்கும் போது, இந்த மாறுத நிரந்தர அளவுடைய நாணயங்களைக் கொண்டு எவ்வாறு கூடுதலான பணக்கூலியைக் கொடுக்க முடியும்? தொழிலாளியின் பணக்கூலி உயர்ந்த போதிலும், அவனுக்குக் கிடைத்த பண்டங்களின் மாறுத நிரந்தர ஒட்டுமொத்த அளவிலிருந்து முதலில் சிக்கல் எழுந்தது; இப்போது பண்டங்கள் மாறுத நிரந்தர ஒட்டுமொத்த அளவாக இருந்த போதிலும், கூடுதலான பணக்கூலியிலிருந்து சிக்கல் எழுகிறது. அவரது மூலக் கோட்பாட்டை நீங்கள் நிராகரித்துவிட்டால் அதனுல் ஏற்படும் கஷ்டங்கள் மறைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

என்ருலும், நம் முன்னுள்ள விஷயத்துக்கும் இந்த நாணயப் பிரச்சினைக்கும் அறவே சம்பந்தமில்லை என்பதையும் காட்டுகிறேன்.

ஐரோப்பாவில் உள்ள வேறு எந்த நாட்டையும்விட உங்கள் நாட்டில், தொகைப் பட்டுவாடாச் சாதனம் மிகவும் சீராக்கப்பட்டிருக்கிறது. பாங்குமுறை விரிவடைந்து,

ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக அதே அளவுள்ள ஒட்டு மொத்த மதிப்புகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கும் அதே அளவுள்ள கொடுக்கல் வாங்கலையோ அல்லது அதற்கும் அதிகமான கொடுக்கல் வாங்கலையோ நடத்துவதற்கும் மிகக் குறைவான நாணயமே தேவைப்படுகிறது. உதாரணமாக, கூலியை எடுத்துக்கொள்வோம். இங்கிலாந்து நாட்டுத் தொழிற்சாலை ஊழியர் தமது வாரக்கூலியைக் கடைக்காரரிடம் கொடுக்கிருர்; அதைக் கடைக்காரர் வாரம் தோறும் பாங்கிக்காரருக்கு அனுப்புகிருர்; பாங்கிக்காரர் அதை ஒவ்வொரு வாரமும் தொழிற்சாலை அதிபருக்குத் திருப்புகிருர்; அவர் அதை மீண்டும் தமது தொழிலாளிகளுக்குக் கூலியாகச் செலுத்துகிருர். இப்படியே மாறி மாறி நடக்கிறது. இந்த ஏற்பாட்டின்படி ஒரு தொழிலாளியின் வருடாந்தரக் கூலியை—அது 52 பவுன் என்று வைத்துக் கொள்வோம்—ஒரே ஒரு சவரனைக் கொண்டு, அது ஒவ்வொரு வாரமும் அதே வட்டத்தில் திரும்பத் திரும்பச் சுழலுவதன் மூலம் கொடுத்துவிடலாம். இங்கிலாந்தில்கூட தொகைப் பட்டுவாடாச் சாதனம் ஸ்காட்லாந்தைவிடக் குறைவாகவே சீராக்கப்பட்டிருக்கிறது. அதிலும் எல்லா இடங்களிலும் சரி சமத்துவமாகச் சீராக்கப்படவில்லை. இதனுல், உதாரணமாக, தொழிற்சாலை மாவட்டங்களைவிடச் சில விவசாய மாவட்டங்களில் மிகக் குறைவான அளவுள்ள ஒட்டுமொத்த மதிப்புகளைப் புழங்கிக் கொள்வதற்கு அதிகமான நாணயம் தேவைப்படுவதை நாம் பார்க்கிருேம்.

நீங்கள் இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து ஐரோப்பாவுக்குச் சென்ருல் அங்கே இங்கிலாந்தைவிட **பணக்கூலி** மிகக் குறைவாக இருப்பதையும் ஆனுல் அதைப் புழங்குவதற்கே ஜெர்மனி, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் **அதிக ஒட்டுமொத்த அளவு நாணயம்** தேவைப்படுவதையும் காண்பீர்கள். அங்கே அதே சவரன் அதே அளவு வேகத்தில் பாங்கிக்காரரிடம் கிடைப்பதோ அல்லது தொழில் முதலாளிக்குத் திரும்புவதோ இல்லை. ஆகையால், வருடாந்தரக் கூலி 52 பவுன்களைப் புழங்குவதற்கு ஒரு

சவரன் தேவைப்படுவதற்குப் பதிலாக, வருடாந்தரக் கூலி 25 பவுன்களைப் புழங்குவதற்கு அநேகமாக மூன்று சவரன்கள் தேவைப்படலாம். இவ்விதம் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளை இங்கிலாந்தோடு ஒப்பிடும் பொழுது அதிகமான பணக்கூலியைப் புழங்குவதற்குத் தேவைப்படும் நாணயத்தைவிடக் குறைவான பணக்கூலியைப் புழங்குவதற்கு அதிகமான நாணயம் தேவைப்படுவதை எடுத்த எடுப்பிலேயே நீங்கள் காண்பீர்கள். உண்மையில், இது நம் விஷயத்துக்குச் சம்பந்தப்படாத, வெறும் செயல்முறை பற்றிய கூற்றே.

எனக்குத் தெரிந்தவரை மிகச் சிறந்த கணிப்புகளின் படி, இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் வருட வருமானத்தை 25 கோடி பவுனுக மதிப்பிடலாம். இந்தப் பெரும் தொகை சுமார் 30 லட்சம் பவுனுல் புழங்கப்படுகிறது. கூலி 50 சதவிகிதம் உயர்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது 30 லட்சம் பவுன் நாணயத்துக்குப் பதிலாக 45 லட்சம் பவுன் நாணயம் தேவைப்படும். தொழிலாளியின் அன்ருடச் செலவுகளில் பெரும் பங்கு வெள்ளி, செம்பு ஆகிய வெறும் அடையாள நாணயங்கள் மூலம் நடைபெறுகிற பொழுது, தங்கத்துடன் அவற்றின் ஒப்பு மதிப்பு, நாணயமாக மாற்ற முடியாத காகிதப் பண விஷயத்தில் போல், சட்டத்தின் மூலமாக எதேச்சாதிகாரமாக நிர்ணயிக்கப்படுகிற பொழுது, பணக்கூலியில் 50 சதவிகித உயர்வு ஏற்பட்டால் அதிகப்பட்சம் 10 லட்சம் சவரன்கள் கூடுதலாகப் புழக்கத்திற்குத் தேவைப்படும். இப்போது இங்கிலாந்து பாங்கின் அல்லது தனிப்பட்ட பாங்கர்களின் நிலவறைகளில் தூங்கிக் கொண்டிருக்கும் பத்து லட்சம் சவரன் பெறுமான உலோகக் கட்டிகளும் நாணயங்களும் புழக்கத்திற்கு வெளிக் கிளம்பும். பத்து லட்சம் சவரன் பெறுமான கூடுதல் நாணயங்களை அடிக்கும் வகையிலோ அல்லது அந்தக் கூடுதல் நாணயங்களுக்கான தேய்மானச் சேதார வகையிலோ ஏற்படும் அற்ப சொற்பமான செலவையும்கூடத் தவிர்க்க முடியும், கூடுதலான நாணயப் பற்ருக்குறையால் ஏதாவது சிரமம் ஏற்படுகிறபொழுது, உண்மையாகவே இது

தவிர்க்கப்படுகிறது. இங்கிலாந்தின் செலாவணி இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். ஒரு பிரிவு செலாவணி, பலவித பாங்கிநோட்டுகளைக் கொண்டது. இது வியாபாரிகளுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகிற பொழுதும், வியாபாரிகளுக்கு உபயோகிப்போர் பெரும் தொகை கொடுக்க வேண்டியிருக்கும் பொழுதும் புழங்கப்படுகிறது. இன்னொரு வகைச் செலாவணி, உலோக நாணயம், சில்லறை வியாபாரத்தில் புழங்குகிறது. இந்த இரு செலாவணிகளும் வெவ்வேறு வகைகளானாலும் அவை ஒன்றோடொன்று இணைந்து பிணைந்து செயல்படுகின்றன. இவ்விதம் ஒப்பு நோக்கில் பெரிய கொடுக்கல் வாங்கல்களில்கூட 5 பவுனுக்குக் குறைந்த சில்லறைத் தொகைகளுக்கு தங்க நாணயம் மிக விரிந்த அளவில் புழங்கப்படுகிறது. நாளை 4 பவுன் பாங்கி நோட்டுகளோ, அல்லது 3 பவுன் பாங்கி நோட்டுகளோ, அல்லது 2 பவுன் பாங்கி நோட்டுகளோ வெளியிடப்படுமானால், இந்தப் பணப்புழக்கத் துறைகளில் ஏற்கெனவே உபயோகத்திலிருந்த தங்க நாணயங்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறி, பணக்கூலி உயர்வு காரணமாக அவை எங்கு தேவைப்படுகின்றனவோ அந்தத் துறைகளில் பாயும். இவ்விதம் 50 சதவிகிதக் கூலி உயர்வு காரணமாக ஏற்படக் கூடிய 10 லட்சம் கூடுதல் செலாவணித் தேவையையும் உபரியாக ஒரு தங்க நாணயம் கூட அடிக்காமலேயே பூர்த்தி செய்து விடலாம். இதே பலனை, லங்காஷயரில் மிகக் கணிசமான காலம்வரை நடைபெற்று வந்தது போல, உபரியான ஒரு பாங்கி நோட்டுகூட வெளியிடாமல், கூடுதலான உண்டியல் புழக்கத்தால் உண்டு பண்ணலாம்.

கூலி விகிதத்தில் பொதுவான உயர்வு, உதாரணமாக சகபிரஜை வேஸ்டன் விவசாயக் கூலியில் ஏற்படுவதாக அனுமானித்தது போல 100 சதவிகித உயர்வு, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை வெகுவாக உயர்த்தும் என்றால், அவர் கருத்துப்படி பெறக்கூடாத கூடுதல் அளவு நாணயம் தேவைப்படும் என்றால், பொதுவான கூலி வெட்டால் அதே பலன்கள், அதே அளவில் ஆனால் எதிர்மாறான

திசையில் ஏற்பட வேண்டும். நல்லது! 1858க்கும் 1860க்கும் இடைப்பட்ட வருடங்கள் பருத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் பெருத்த செழுமை மிக்க வருடங்கள் என்பதையும் குறிப்பாக இவ்வகையில் 1860ம் ஆண்டு வர்த்தகத் துறையின் வரலாற்றிலேயே ஈடு இணையற்ற ஆண்டு என்பதையும் அதே சமயம் மற்றெல்லாத் தொழில்களும் வெகுவாக செழித்துக் கொழித்தன என்பதையும் நீங்களெல்லோரும் அறிவீர்கள். பருத்தித் தொழிலாளிகளின் கூலியும் அவர்களது தொழிலோடு சம்பந்தப்பட்ட இதர தொழிலாளிகளின் கூலியும் அதற்கு முன் எப்போதுமிருந்ததைவிட 1860ல் அதிகமாக இருந்தன. அமெரிக்க நெருக்கடி வந்தது. அவர்களது இந்த மொத்தக் கூலி திடீரென்று அவர்களது முந்திய தொகையில் சுமார் நான்கில் ஒரு பங்காகக் குறைந்தது. இது எதிர்த்திசையில் (அதாவது இதே அளவு கூலி உயர்வு ஏற்பட்டிருந்தால்—மொ-ர்.) 300 சதவிகிதம் கூடுதலாக இருந்திருக்கும். கூலி ஐந்து ஷில்லிங்குகளிலிருந்து இருபது ஷில்லிங்குகளாக உயர்ந்தால் அதை 300 சதவிகித உயர்வு என்கிறோம்; கூலி இருபது ஷில்லிங்குகளிலிருந்து ஐந்து ஷில்லிங்குகளாகக் குறைந்தால் அதை 75 சதவிகித வீழ்ச்சி என்கிறோம். என்றாலும் முதல் இனத்தில் உயரும் தொகையும் இரண்டாவது இனத்தில் குறையும் தொகையும் ஒரே மாதிரியாகவே, அதாவது பதினைந்து ஷில்லிங்குகளாகவே இருக்கும். அப்படித்தான் இது கூலி விகிதத்தில் இதற்கு முன் ஏற்பட்டிராத ஒரு திடீர் மாற்றமாக இருந்தது. பருத்தித் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருந்த தொழிலாளிகளை மட்டுமின்றி இந்தத் தொழிலை மறைமுகமாகச் சார்ந்திருந்த தொழிலாளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், இதனால் பாதிக்கப்பட்ட மொத்தத் தொழிலாளிகளின் எண்ணிக்கை விவசாயத் தொழிலாளிகளின் எண்ணிக்கையைவிட அரை மடங்கு அதிகமாக இருந்தது. அந்தச் சமயம் கோதுமையின் விலை குறைந்ததா? 1858 முதல் 1860 வரை மூன்று ஆண்டுகளில் ஒரு குவார்ட்டரின் சராசரி வருடாந்தர விலை 47 ஷில்லிங் 8 பென்ஸாக இருந்தது. 1861லிருந்து 1863 வரை மூன்று ஆண்டுகளில் ஒரு குவார்ட்டரின் சராசரி

வருடாந்தர விலை 55 ஷில்லிங் 10 பென்ஸாக உயர்ந்தது. நாணயத்தைப் பொறுத்தவரையில் நாணயசாலையில் 1860ல் 33 லட்சத்து 78 ஆயிரத்து 102 பவுன் நாணயங்கள் அடிக்கப் பட்டதற்குப் பதிலாக 1861ல் 86 லட்சத்து 73 ஆயிரத்து 232 பவுன் நாணயங்கள் அடிக்கப்பட்டன. அதாவது 1860ல் இருந்ததை விட 1861ல் 52 லட்சத்து 95 ஆயிரத்து 130 பவுன் நாணயங்கள் அதிகமாக அடிக்கப்பட்டன. பாங்கி நோட்டுப் புழக்கம் 1860ல் இருந்ததை விட 1861ல் 13 லட்சத்து 19 ஆயிரம் பவுன் குறைவாக இருந்தது என்பது உண்மை. இதைக் கழித்து விடுங்கள். அப்போதும்கூட தொழில் சுபிட்ச ஆண்டான 1860 உடன் ஒப்பிடுகையில் 1861ம் ஆண்டில் 39 லட்சத்து 76 ஆயிரத்து 130 பவுனுக்கு அல்லது முழுத் தொகையாகக் கூறுவதானல் 40 லட்சம் பவுனுக்கு உபரி நாணயம் மிஞ்சிற்று. ஆனல் அதே காலத்தில் இங்கிலாந்து பாங்கில் தங்க இருப்பும் குறைந்தது; துல்லிய மாக அதே விகிதாச்சாரத்துக்குக் குறையாவிட்டாலும், ஏறக்குறைய அந்த விகிதாச்சாரத்துக்குக் குறைந்தது.

1862ம் வருடத்தை 1842ம் வருடத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். 1862ல் புழங்கப்பட்ட பண்டங்களின் மதிப்பும் அளவும் வெகுவாக அதிகரித்தன என்பது ஒரு புறமிருக்க; அதே ஆண்டில் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் ரயில் வேக்கள் சம்பந்தப்பட்ட பங்குகள், கடன்கள் முதலிய முறையான பேரங்களுக்காகக் கொடுக்கப்பட்ட மூலதனம் மட்டும் 32 கோடி பவுனுக்கு எட்டிற்று. 1842ல் இது ஒரு நம்ப முடியாத தொகையாகவே தோன்றியிருக்கும். என்ற லும் மொத்த நாணயத் தொகை 1862லும் 1842லும் அநேகமாகச் சமமாகவே இருந்தது. இதிலிருந்து பொது வாக நீங்கள் ஒரு போக்கைக் காண முடியும். பண்டங்களின் மதிப்பு மட்டுமல்லாமல், பொதுவாகப் பணப் பேரங்களும் பிரம்மாண்டமாகப் பெருகிக் கொண்டிருக்கும் போது நாணயத் தொகை மேலும் மேலும் சுருங்கிக்கொண்டு வருவதை நீங்கள் காணலாம். நமது நண்பர் வேஸ்டனின் அபிப்பிராயத்தில் இது சிக்கறுக்க முடியாத ஒரு புதிர்.

இந்த விஷயத்தை அவர் சிறிதளவு ஆழமாக ஆராய்ந்

திருந்தால், ஒரு உண்மையைக் கண்டு கொண்டிருப்பார். அதாவது, கூலி விஷயம் ஒரு புறமிருந்தாலும், அது மாருத நிலையானது என்றே வைத்துக்கொண்டாலும், புழங்கப்பட வேண்டிய பண்டங்களின் மதிப்பும் மொத்தப் பரிமாணமும், முடிவு செய்யப்பட வேண்டிய பணப் பேரங்களின் அளவும் பொதுவாக தினமும் மாறுகின்றன; வெளியிடப்படும் பாங்கி நோட்டுகளின் எண்ணிக்கை தினமும் மாறுகிறது; பணம் எதுவும் கொடுக்காமலே, உண்டியல்கள், காசோலைகள், பற்றுவரவுக் கணக்குகள், தீர்வகங்கள் முதலிய சாதனங்கள் மூலம் நடக்கும் கொடுக்கல் வாங்கல்களின் அளவும் தினமும் மாறுகிறது; மிகச் சரியாகத் தேவைப்படும் உலோக நாணயத்தைப் பொறுத்தவரையிலும், புழக்கத்திலிருக்கும் நாணயத்திற்கும் பாங்கிகளின் நிலவறைகளில் தூங்கிக் கொண்டிருக்கும் நாணயம், உலோகக் கட்டிகள் இவற்றுக்கு மிடையே உள்ள விகிதம் கூட தினமும் மாறுகிறது; தேசியப் புழக்கத்தில் ஈடுபடுத்தப்படும் தங்கத்தின் அளவும் சர்வ தேசப் புழக்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும் தங்கத்தின் அளவும் தினமும் மாறுகின்றன என்பதையெல்லாம் அவர் தெரிந்து கொண்டிருப்பார். இன்னும், மாருத நிலையான நாணயம் என்னும் தமது கோட்பாடு மிகவும் தவருனது என்பதையும் அன்ருட இயக்கத்துக்குப் பொருத்தமற்றது என்பதையும் கண்டு கொண்டிருப்பார். மேலும், நாணய விதிகளைப் பற்றிய தமது தவருன கண்ணோட்டத்தைக் கூலி உயர்வுக்கெதிரான வாதமாக மாற்றுவதற்குப் பதில், இடைவிடாது மாறிக் கொண்டேயிருக்கும் நிலைமைகளுக்கேற்ப நாணயம் தன்னைச் சரிப்படுத்திக் கொள்வதை சாத்தியமாக்கும் விதிகளைப் பற்றி அவர் ஆராய்ந்திருக்க வேண்டும்.

## 4. சப்ளையும் கிராக்கியும்

நண்பர் வேஸ்டன் “repetitio est mater studiorum” என்னும் லத்தீன் பழமொழியை, அதாவது சொன்னதைச் சொல்வதே ஆராய்ச்சியின் தாய் என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கிணங்க, கூலி உயர்வால் ஏற்படும் நாணயச்

சுருக்கத்தால் மூலதனம் குறைந்துவிடும், இத்தியாதி இத்தியாதி என்று தமது பழைய கோட்பாட்டையே புதிய ரூபத்தில் கூறுகிறார். நாணயம் பற்றிய அவரது விதண்டா வாதத்திற்கு ஏற்கெனவே நான் பதில் கூறிவிட்டதால், அவர் கற்பனை செய்யும் நாணய ஆபத்திலிருந்து எழும் கற்பனை யான விளைவுகளைப் பற்றிப் பேச இறங்குவது முற்றிலும் பயனற்றது என்று கருதுகிறேன். இப்போது உடனடியாக, பற்பல உருவங்களில் அவர் மீண்டும் மீண்டும் சொல்கிற ஒரே வறட்டு வாதத்தைச் சுலபமான சித்தாந்த உருவத்திற்குச் சுருக்கப் போகிறேன்.

அவர் எப்படித் தமது விஷயத்தைத் திறனாய்வற்ற முறையில் பரிசீலித்திருக்கிறார் என்பதை ஒரே ஒரு குறிப்பி லிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். கூலி உயர்வை எதிர்த்து அல்லது அத்தகைய உயர்வினால் ஏற்படும் உயர்ந்த கூலியை எதிர்த்து அவர் வாதம் செய்கிறார். நான் அவரைக் கேட்கிறேன்: உயர்ந்த கூலி என்றால் என்ன? குறைந்த கூலி என்றால் என்ன? உதாரணமாக, வாரம் ஐந்து ஷில்லிங் என்பதைக் குறைந்த கூலியாகவும் வாரம் இருபது ஷில்லிங் என்பதை உயர்ந்த கூலியாகவும் ஏன் சொல்ல வேண்டும்? இருபதோடு ஒப்பிடும் போது ஐந்து குறை வென்றால், இரு நூறோடு ஒப்பிடும்போது இருபது இன்னும் குறைவுதானே? உஷ்ணமானியைப் பற்றிச் சொற்பொழி வாற்ற வேண்டிய ஒரு மனிதன் மேல் வெப்பநிலை, கீழ்வெப்ப நிலை என்று பேச ஆரம்பித்தால் அவனால் எந்த அறிவை யும் புகட்ட முடியாது. கொதிநிலை எப்படிக் கண்டுபிடிக்கப் படுகிறது; உறைநிலை எப்படிக் கண்டுபிடிக்கப்படுகிறது; இந்தத் திட்டவரைகள் உஷ்ணமானிகளை விற்பவர்கள் அல்லது உற்பத்தி செய்பவர்களின் சித்தத்தையொட்டித் தீர்மானிக்கப்படாமல் அதற்குப் பதில் இயற்கை விதிகளை ஒட்டி எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை அவன் முதலில் கூற வேண்டும். இவ்வாறே கூலியையும் லாபத்தை யும் பொறுத்தவரையில் சகபிரஜை வேஸ்டன் பொருளா தார விதிகளிலிருந்து இத்தகைய திட்டவரைகளை உய்த் துணரத் தவறியது மட்டுமின்றி, அவற்றைப் பற்றி ஆராய

வேண்டிய அவசியத்தைக்கூட உணர்ந்தாரில்லை. கூலிகளின் அளவுகளை அளக்கக் கூடிய ஒரு பரிமாணத்தோடு ஒப்பிட்டுத் தான் குறிப்பிட்ட கூலி உயர்வானதா, குறைவானதா என்று சொல்ல முடியும் என்பது தெளிவு. அப்படியிருக்க வேஸ்டன் பொது வழக்கான குறைவு, உயர்வு என்ற கொச்சைப் பதங்களை, ஏதோ நிர்ணயமான அர்த்தமுடையவையாக அங்கீகரிப்பதுடன் திருப்தி அடைந்துவிட்டார்.

ஏன் ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தரப்படுகிறது என்பதை அவரால் எனக்குச் சொல்ல முடியாது. அப்படியே இதற்கு அவர், ''இது சப்ளை, தேவை விதியைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது'' என்று பதிலளிப்பாரேயானால், நான் உடனே சப்ளையும் தேவையுமே எந்த விதியின்படி நிர்ணயிக்கப்படுகின்றன என்று கேட்பேன். அப்படி நான் கேட்டமாத்திரத்தில் அவர் திணறித்திண்டாட வேண்டியதுதான். உழைப்பின் சப்ளைக்கும் தேவைக்குமிடையே உள்ள விகிதாச்சாரம் இடைவிடாது மாறிக் கொண்டேயிருக்கின்றன. அவற்றுடன் உழைப்பின் மார்க்கெட் விலைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சப்ளையைவிடத் தேவை அதிகரிக்குமானால் கூலி உயர்கிறது; தேவையைவிட சப்ளை அதிகரிக்குமானால் கூலி வீழ்ச்சியடைகிறது. என்றாலும் இத்தகைய சூழ்நிலைமைகளில் தேவை, சப்ளை ஆகியவற்றின் உண்மையான நிலவரத்தை உதாரணமாக ஒரு வேலை நிறுத்தத்தாலோ அல்லது வேறு ஏதாவதொரு முறையாலோ பரிசோதிப்பது அவசியமாக இருக்கலாம். ஆனால் கூலியை ஒழுங்குபடுத்துகிற விதியாக சப்ளையையும், தேவையையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களேயானால், கூலி உயர்வை எதிர்த்துக் கூக்குரலிடுவது சிறு பிள்ளைத்தனமானது, பிரயோசனமற்றதுமாகும். ஏனெனில் நீங்கள் ஆதாரமாகக் காட்டும் அந்த உச்ச விதியின்படியே அவ்வப்போது கூலி உயர்வதானது, அவ்வப்போது கூலி குறைவதைப் போலவே அவசியமானது, உசிதமானதாகும். இனி, சப்ளையையும், தேவையையும் கூலியை ஒழுங்குபடுத்துகிற விதியாக நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலோ நான் என் கேள்வியையே திரும்பக்

கேட்கிறேன்: ஏன் ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தரப்படுகிறது?

இவ்விஷயத்தை இன்னும் விரிவாகப் பரிசீலிப்போம். உழைப்பின் மதிப்போ அல்லது வேறு எந்தப் பண்டத்தின் மதிப்போ எதானாலும் முடிவாக சப்ளையாலும் தேவையாலும் தான் ஒழுங்குபடுத்தப்படுகிறது என்று நீங்கள் நினைத்தால் அது முற்றிலும் தவறாகும். சப்ளையும் தேவையும் மார்க்கெட் விலைகளின் தற்காலிக ஏற்ற இறக்கங்களை ஒழுங்கு படுத்துவதைத்தவிர வேறு எதுவும் செய்வதில்லை. ஒரு பண்டத்தின் மார்க்கெட் விலை அதன் மதிப்புக்கு மேலே ஏன் உயர்கிறது, அதன் மதிப்புக்குக் கீழே ஏன் குறைகிறது என்பதை வேண்டுமானால் அவை விளக்கலாம்; ஆனால் அந்த மதிப்பை அவற்றால் ஒருபோதும் விளக்க முடியாது. சப்ளையும் தேவையும் சமன் செய்துகொள்கின்றன அல்லது பொருளியலாளர்கள் கூறுவது போல ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அப்படி இந்த நேர் எதிரான சக்திகள் சமமாகிவிடும் அதே கணத்தில் அவை ஒன்றையொன்று ஸ்தம்பிக்கச் செய்து, எந்த ஒரு திசைவழியிலும் செயலாற்றாமல் நின்றுவிடுகின்றன. அவ்வாறு சப்ளையும் தேவையும் ஒன்றையொன்று சமன் செய்து கொண்டு அதனால் அவை செயலற்றுப் போனதுமே, ஒரு பண்டத்தின் மார்க்கெட் விலை அதன் உண்மையான மதிப்போடு, அதன் திட்ட விலையோடு இசைந்து நிற்கிறது; இதைச் சுற்றி அதன் மார்க்கெட் விலைகள் ஊசலாடுகின்றன. ஆகையால், அந்த மதிப்பின் தன்மையைப் பற்றி நாம் ஆராயும் போது சப்ளை, தேவை ஆகியவற்றின் மார்க்கெட் விலைகளின் மீது ஏற்படும் தற்காலிக விளைவுகளைப் பற்றி நாம் சர்ச்சை செய்ய வேண்டியதே இல்லை. இது கூலிக்கும் மற்றெல்லாப் பண்டங்களின் விலைகளுக்கும்கூடப் பொருந்தும்.

## 5. கூலியும் விலைகளும்

நமது நண்பரின் வாதங்கள் அனைத்தையும் அவற்றின் எளிய சித்தாந்தக் கருத்து ரூபத்துக்குச் சுருக்கினால் அவை

பின்கண்ட ஒரு சூத்திரத்துக்குள் அடங்கிவிடும்: "**பண்டங்களின் விலைகள் கூலியால் தீர்மானிக்கப்படுகின்றன அல்லது ஒழுங்குபடுத்தப்படுகின்றன.**"

இந்தப் பழசுபட்டுப் போன, தகர்க்கப்பட்டுவிட்ட தவறான வாதத்துக்கெதிராக நடைமுறை அனுபவத்தை நான் சான்று காட்ட முடியும். இங்கிலாந்து நாட்டு ஆலைத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், கப்பல் கட்டும் தொழிலாளர்கள் முதலியோரின் உழைப்பிற்கு ஒப்பு நோக்கில் உயர்ந்த கூலி கொடுக்கப்பட்ட போதிலும் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் பிற நாட்டுப் பண்டங்களைவிட மலிவாக விற்கப்படுகின்றன. அதே சமயத்தில் இங்கிலாந்து தேச விவசாயத் தொழிலாளியின் உழைப்பிற்கு ஒப்புநோக்கில் குறைந்த கூலியே கொடுக்கப்பட்ட போதிலும் அவன் உற்பத்தி செய்யும் விளைபொருள்கள் இதர நாடுகளில் விற்கப்படுவதைவிட அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. ஒரு தேசத்தினுள் ஒரு பொருளோடு இன்னொரு பொருளை ஒப்பிட்டும், பல்வேறு நாடுகளின் பண்டங்களை ஒப்பிட்டும் சராசரியில் உயர்ந்த விலை உழைப்பு குறைந்த விலைப் பண்டங்களையும், குறைந்த விலை உழைப்பு உயர்ந்த விலைப் பண்டங்களையும் உற்பத்தி செய்கிறது என்பதை என்னால் காட்ட முடியும். இதற்குச் சில விதிவிலக்குகளும் இல்லாமலில்லை; ஆனால் அந்த விதிவிலக்குகள் வெளித் தோற்றமே தவிர உண்மையல்ல. எனினும் இப்படி நான் கூறுவதால், பண்டத்தின் உயர்ந்த விலைக்கு, உழைப்பின் குறைந்த விலைதான் காரணம் என்றோ, அல்லது பண்டத்தின் குறைவான விலைக்கு, உழைப்பின் அதிக விலைதான் காரணம் என்றோ ருசுவாகி விடாது. என்றாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், பண்டங்களின் விலைகள் உழைப்பின் விலைகளால் தீர்மானிக்கப்படுவதில்லை என்பது ருசுவாகும். ஆனால் இந்த அனுபவ முறையை நாம் கைக்கொள்வது முற்றிலும் அவசியமற்றதாகும்.

"**பண்டங்களின் விலைகள் கூலியால் தீர்மானிக்கப்படுகின்றன அல்லது ஒழுங்குபடுத்தப்படுகின்றன**" என்னும் சூத்திரத்தைச் சகபிரஜை வேஸ்டன் முன்வைத்தார் என்பதை ஒருகால்

யாரேனும் மறுக்கலாம். உண்மையில் அதை அவர் ஒரு போதும் உருவாக்கவில்லைதான். அதற்கு மாருக, லாபமும் வாடகையும்கூடப் பண்டங்களது விலையின் பகுதிகள் தான், ஏனென்ருல், தொழிலாளியின் கூலி மட்டுமின்றி, முதலாளியின் லாபமும் நிலச்சொந்தக்காரனின் வாடகையும் கூடப் பண்டங்களின் விலையிலிருந்து தான் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறிஞர். ஆஞல் அவரது கருத்துப் படி விலைகள் எவ்விதம் உருவாகின்றன? முதலாவதாகக் கூலியால். பிறகு, முதலாளியின் தரப்பில் ஒரு கூடுதலான சதவிகிதமும், நிலச்சொந்தக்காரனின் தரப்பில் ஒரு கூடுதலான சதவிகிதமும் இந்த விலையில் சேர்க்கப்படுவதின் மூலம். உதாரணத்துக்காக ஒரு பண்டத்தின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழிலாளியின் கூலி பத்து என்று வைத்துக்கொள்வோம். லாப விகிதம் கூலிக்கு 100 சதவிகிதமாக இருந்தால் முதலாளி கொடுத்த கூலியில் பத்தைக் கூட்டுவார்; அதே மாதிரி வாடகையும் கூலிக்கு 100 சதவிகிதமாக இருந்தால் மேற்கொண்டும் ஒரு பத்து கூட்டப் படும். அப்போது எல்லாம் சேர்ந்து பண்டத்தின் விலை முப்பதாக இருக்கும். அப்படியாஞலும் இவ்வாறு விலைகளை நிர்ணயிப்பது கூலியைக் கொண்டு அவற்றை நிர்ணயிப் பதாகத்தானே ஆகும். மேலே கூறிய உதாரணத்தில் கூலி இருபதாக உயர்ந்தால், பண்டத்தின் விலை அறுபதுக்கு உயரும். இவ்விதமே கூலி உயர உயரப் பண்டத்தின் விலையும் உயர்ந்து கொண்டு போகும். ஆக, கூலிதான் விலைகளை ஒழுங்குபடுத்துகிறது என்னும் சூத்திரத்தை வெளியிட்ட பழசுபட்டுப் போன அரசியல் பொருளாதார எழுத்தாளர் கள் அனைவரும் லாபத்தையும் வாடகையையும் கூலியின் மீது ஏற்படும் வெறும் கூடுதல் சதவிகிதங்களாக மதித்து அச்சூத் திரத்தை நிரூபிக்க முயற்சித்தனர். ஆஞல் அவர்களில் யாரா லும் அந்தச் சதவிகிதங்களின் வரம்புகளை ஒரு பொருளாதார விதியாக வகுத்துக் கொடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் லாபம் என்பது சம்பிரதாயம், பழக்க வழக்கம், முதலாளியின் சித்தம், அல்லது இது போன்ற விவரிக்க முடியாத தன்போக்கான ஏதாவதொரு முறையால்

தீர்மானிக்கப்படுகிறது என்றே கருதியதாகத் தோன்று கிறது. அந்த லாப வரம்புகள் முதலாளிகளுக்கிடையே ஏற்படும் போட்டியால் தீர்மானிக்கப்படுகின்றன என்று அவர்கள் கூறுவார்களேயானால் அவர்கள் எதையும் சொன்ன வர்களாக மாட்டார்கள். அந்தப் போட்டி நிச்சயமாக, பல் வேறு தொழில்களில் நிலவும் பல்வேறு லாப விகிதங்களைச் சமப்படுத்தும் அதாவது அவற்றை ஒரு சராசரிமட்டத் துக்குக் கொண்டு வரும்; ஆனால், அது லாப மட்டத்தையோ அல்லது பொதுவான லாப விகிதத்தையோ ஒருக்காலும் தீர்மானிக்க முடியாது.

பண்டங்களின் விலைகள் கூலியால் தீர்மானிக்கப்படு கின்றன என்று சொல்கிறபோது அதை நாம் எப்படி அர்த்தப் படுத்திக் கொள்கிறோம்? கூலி என்பது உழைப்பின் விலைக்கு மற்றொரு பெயர்தான்; எனவே, பண்டங்களின் விலைகள் உழைப்பின் விலையால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்றே நாம் அர்த்தப்படுத்திக் கொள்கிறோம். ''விலை'' என்பது பரிவர்த்தனை மதிப்பாகும், **பணத்தால் வெளியிடப்படும் பரிவர்த்தனை மதிப்பாகும்**—மதிப்பைப் பற்றி நான் பிரஸ்தா பிக்கிற போதெல்லாம் எப்போதும் பரிவர்த்தனை மதிப் பையே குறிப்பிடுகிறேன். எனவே, இந்தக் கருத்துப்படி, **''பண்டங்களின் மதிப்பு உழைப்பின் மதிப்பால் தீர்மானிக்கப் படுகிறது''** அல்லது **''உழைப்பின் மதிப்பு சகல மதிப்புகளையும் அளக்கும் பொதுவான அளவுகோலாக இருக்கிறது.''**

அப்படியானால் **''உழைப்பின் மதிப்பு''** எப்படித் தீர் மானிக்கப்படுகிறது? இங்கே நாம் ஸ்தம்பித்து விடுகிறோம். சந்தேகமின்றி, தர்க்க ரீதியாக ஆராய முயன்றால் ஸ்தம் பித்து விடுகிறோம். அப்படியிருந்தும் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் தர்க்க முறையைப்பற்றிக் கவலைப் படவேயில்லை. உதாரணமாக நமது நண்பர் வேஸ்டனை எடுத்துக் கொள்ளுங்கள். கூலியே பண்டங்களின் விலையை நிர்ணயிக்கிறதென்றும் எனவே கூலி உயர்ந்தால் விலைகள் உயர்ந்தே தீரும் என்றும் அவர் முதலில் கூறினார். பிறகு, கூலி உயர்வு நல்லதல்ல; ஏனென்றால் அதனால் பண்டங்களின் விலைகள் உயர்ந்து விடுகின்றன; கூலிகள் எந்தப் பண்டங்

களுக்காகச் செலவிடப்படுகின்றனவோ அவற்றின் விலைகளைக் கொண்டே அளவிடப்படுகின்றன என்று புரண்டு பேசினர். இவ்வாறு நாம், உழைப்பின் மதிப்பு பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்று தொடங்கி, பண்டங்களின் மதிப்பு உழைப்பின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்று முடித்தோம். இவ்விதம் நாம் ஒரு முடிவில்லாத சுழலுக்குள் இங்குமங்குமாக அலைந்து திரிந்து ஒரு முடிவுக்கும் வர முடியாதிருக்கிறோம்.

ஒட்டுமொத்தத்தில், நாம் ஒரு பண்டத்தின் மதிப்பை—உதாரணமாக உழைப்பு, தானியம் அல்லது வேறு ஏதாவது ஒரு பண்டத்தின் மதிப்பை—சகல மதிப்புகளையும் அளக்கும் ஒரு பொது அளவுகோலாகவும் அவற்றை ஒழுங்கு படுத்தும் சாதனமாகவும் கொள்வதன் மூலம் சிக்கலைத் தட்டிக் கழிக்கிறோமே தவிர வேறல்ல என்பது தெளிவு. ஏனென்றால் இன்னும் நிர்ணயிக்கப்படாதிருக்கிற ஒரு மதிப்பைக் கொண்டு நாம் மற்றொரு மதிப்பை நிர்ணயிக்க முயற்சிக்கிறோம்.

''கூலி பண்டங்களின் விலைகளை நிர்ணயிக்கிறது'' என்னும் சூத்திரத்தை மிகவும் அருவமான பதங்களில் வெளியிடும் போது ''மதிப்பே மதிப்பை நிர்ணயிக்கிறது'' என்று கிறது. இந்தக் கிளிப்பிள்ளை வாதம் நமக்கு மதிப்பைப் பற்றி உண்மையில் ஒன்றுமே தெரியாது என்னும் அர்த்தத்தைத் தருகிறது. இந்த ஆதாரக் கூற்றை நாம் ஒப்புக்கொள்கிற போது அரசியல் பொருளாதாரத்தின் பொது விதிகளைப் பற்றிய எல்லா ஆய்வுகளும் வெறும் பிதற்றலாகி விடுகின்றன. ஆகையால் ரிக்கார்டோ 1817ல் பிரசுரமான ''அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்'' என்னும் தமது நூலில், ''கூலிதான் விலைகளை நிர்ணயிக்கிறது'' என்னும் பழைய, பெருவழக்கான, கந்தலான, தவறான வாதத்தை அடிப்படையிலேயே தகர்த்தது அவரது பெரும் பெருமையாகும். இந்தத் தவறான வாதத்தை ஆடம் ஸ்மித்தும் அவருக்கு முந்திய பிரெஞ்சு அறிஞர்களும் தங்களது ஆராய்ச்சியின் உண்மையான விஞ்ஞான ரீதியான பகுதிகளில் வெறுத்து ஒதுக்கியிருந்தாலும், அவர்கள் அதைத் தங்களது சாதாரண

மக்களுக்குரிய, கொச்சையான அத்தியாயங்களில் மீண்டும் கையாண்டிருக்கிருர்கள்.

## 6. மதிப்பும் உழைப்பும்

சகபிரஜைகளே, பிரச்சினையின் உண்மையான போக்கைப் பற்றி விளக்க வேண்டிய கட்டத்திற்கு இப்போது நான் வந்திருக்கிறேன். இதை மிகத் திருப்திகரமாகச் செய்வேன் என்று என்ஞல் உறுதி கூற முடியாது. ஏனெனில் இதைச் செய்ய வேண்டுமாஞல் முழு அரசியல் பொருளாதாரத் துறையையே நான் விவரித்தாக வேண்டும். எனவே “effleurer la question” என்று பிரெஞ்சுக்காரர்கள் கூறுவது போல, பிரதான அம்சங்களை மட்டுமே என்ஞல் சர்ச்சை செய்ய முடியும்.

நாம் முன்வைக்க வேண்டிய முதல் கேள்வி இதுதான்: ஒரு பண்டத்தின் **மதிப்பு** என்ன? அது எப்படித் தீர்மானிக்கப் படுகிறது?

எடுத்த எடுப்பில் பார்த்தால் ஒரு பண்டத்தின் மதிப்பு என்பது முற்றிலும் ஒரு **சார்புநிலையான** பொருள்; ஒரு பண்டத்துக்கும் மற்றெல்லாப் பண்டங்களுக்கும் உள்ள சம்பந்தங்களைப் பரிசீலிக்காமல் இதைத் தீர்மானிக்க முடியாது என்றே தோன்றும். உண்மையில் மதிப்பைப் பற்றிப் பேசும் போது, அதாவது ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பைப் பற்றிப் பேசும் போது, அப்பண்டத்தை மற்றப் பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் விகிதாச்சார அளவுகளை மனதில் வைத்துத்தான் பேசுகிறேம். ஆஞல் அப்போது ஒரு கேள்வி எழுகிறது: பண்டங்கள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் விகிதாச்சாரங்கள் எவ்விதம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன?

இந்த விகிதாச்சாரங்கள் எல்லையற்று மாறிக் கொண்டேயிருக்கின்றன என்பதை நாம் அனுபவத்திலிருந்து அறிவோம். ஒரே ஒரு பண்டத்தை, உதாரணமாகக் கோதுமையை எடுத்துக் கொண்டால், ஒரு குவார்ட்டர் கோதுமை பலவகையான பண்டங்களோடு எண்ணற்ற வெவ்வேருன

விகிதாச்சாரங்களில் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதைக் காண்போம். ஆனால் பட்டுத்துணியையோ, தங்கத்தையோ அல்லது வேறு எந்தப் பண்டத்தையோ கொண்டு மதிப்பிட்டாலும் கோதுமையின் மதிப்பு எப்போதும் மாறாதிருக்கையில், அந்த மதிப்பு பல்வேறு பண்டங்கள் சம்பந்தப்பட்ட இந்தப் பல்வேறு பரிவர்த்தனை விகிதாச்சாரங்களிலிருந்து மாறுபட்ட ஒன்றாக, சுயேச்சையுடையதொன்றாக இருக்க வேண்டும். பல்வேறு பண்டங்களோடு நிலவும் இந்த வெவ்வேறு சமன்நிலைகளை முற்றிலும் மாறானதொரு ரூபத்தில் வெளியிடுவதும் சாத்தியமானதாக இருக்க வேண்டும்.

அதோடு, ஒரு குவார்ட்டர் கோதுமை ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் இரும்புக்குப் பதிலாக மாற்றிக் கொள்ளப்படுகிறது, அல்லது ஒரு குவார்ட்டர் கோதுமையின் மதிப்பு குறிப்பிட்ட அளவு இரும்பு மூலம் வெளியிடப்படுகிறது என்று நான் சொல்கிற போது, கோதுமையின் மதிப்பும் அதற்குச் சமமான இரும்பின் மதிப்பும் மூன்றாவதொரு பொருளுக்குச் சமம்; அந்த மூன்றாவது பொருள் கோதுமையாகவோ இரும்பாகவோ இருக்க முடியாது என்றே நான் கூறுகிறேன். ஏனென்றால் அவை இரண்டும் ஒரே அளவையே இரு வெவ்வேறு ரூபங்களில் வெளியிடுகின்றன என்று நான் பாவிக்கிறேன். ஆகையால், அவற்றில் எதையும், கோதுமையையோ இரும்பையோ, ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தாமலேயே அவற்றை அவற்றின் பொது அளவுகோலான இந்த மூன்றாவது பொருளுக்குச் சமமாக்க முடிய வேண்டும்.

இவ்விஷயத்தைத் தெளிவாக்குவதற்கு மிக எளிதான வடிவகணித உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன். எல்லாவகையான தோற்றங்களும் அளவுகளுமுள்ள முக்கோணங்களின் பரப்புக்களை ஒப்பிடுவதற்கு, அல்லது முக்கோணங்களைச் செவ்வகங்களோடோ அல்லது வேறு எந்த நாற்கரவடிவத்தோடோ ஒப்பிடுவதற்கு நாம் எவ்வாறு தொடங்குகிறோம்? எவ்வகையான முக்கோணத்தின் பரப்பையும் அதன் தோற்றத்திலிருந்து முற்றிலும் வேறான ஒன்றாகக் கணிக்கிறோம். பிறகு முக்கோணத்தின் இயல்பிலிருந்து, அதன்

பரப்பு அதன் அடிப் பக்கத்தையும் குத்துயரத்தையும் பெருக்கி வரும் பெருக்கற் பலனில் பாதி என்பதைத் தெரிந்து கொண்டு, எல்லா வகையான முக்கோணங்களின் வெவ்வேறான பலன்களையும், எவ்வகையான நாற்கரவடிவங்களின் பலன்களையும் நாம் ஒப்பிட முடியும். ஏனென்றால் அவையெல்லாவற்றையும் சில குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள முக்கோணங்களாக மாற்ற முடியும்.

இதே முறை பண்டங்களின் மதிப்புகளுக்கும் பொருந்தும். எல்லாப் பண்டங்களின் மதிப்புகளையும் அவையெல்லாவற்றிற்கும் பொதுவாக இருக்கக் கூடிய ஓர் அளவுகோல் மூலம் மதிப்பிட இயல வேண்டும். அந்தக் குறிப்பிட்ட அளவுகோல் எந்த விகிதாச்சாரங்களில் அவற்றில் இருக்கின்றதோ, அவற்றின் அடிப்படையில் தான் அவற்றைப் பாகுபடுத்த இயல வேண்டும்.

பண்டங்களின் **பரிவர்த்தனை மதிப்புகள்** அப்பண்டங்களின் **சமூக நிகழ்ச்சிகளாக** மட்டுமே இருக்கின்றன; அவற்றின் **இயற்கையான** குணம்சங்களுக்கும் பரிவர்த்தனை மதிப்புகளுக்கும் சம்பந்தமில்லை. எனவே நாம் கேட்க வேண்டிய முதல் கேள்வி, எல்லாப் பண்டங்களுக்கும் பொதுவான **சமூக உள்ளடக்கம்** என்ன? அது தான் **உழைப்பு**. ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பு அதன் மீது பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அதில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். நான் **உழைப்பு** என்று மட்டும் சொல்லவில்லை; **சமூக உழைப்பு** என்று சொல்கிறேன். தனது சொந்த உடனடித் தேவைக்கென்றும், தானே உபயோகப்படுத்திக் கொள்வதற்கென்றும் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் மனிதன் சிருஷ்டிப்பது **உற்பத்திப் பொருளே** தவிர, **பண்டம்** அல்ல. சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஒரு உற்பத்தியாளன் என்கிற வகையில் அவனுக்கும் சமூகத்திற்கும் எவ்வித உறவுமில்லை. ஆனால் ஒரு **பண்டத்தை** உற்பத்தி செய்வதற்கு ஒருவன் ஏதாவதொரு **சமூகத்** தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பது மட்டுமின்றி, அவனது உழைப்பு சமூகம் ஈடுபடுத்தும் மொத்த உழைப்

பில் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகவுமிருக்க வேண்டும். அதோடு அவனது உழைப்பு சமூகத்திற்குள் நிலவும் உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்பட்டதாகவுமிருக்க வேண்டும். இதர உழைப்புப் பிரிவினைகளில்லாவிட்டால் அவனது உழைப்பு ஒன்றுமில்லை; அது தன் பங்குக்கு உழைப்புப் பிரிவினைகளை முழுமையாக்கவும் தேவைப்படுகிறது.

நாம் பண்டங்களை மதிப்புகளாகக் கருதுகிற பொழுது, அவை முன்னதாகவே செயலாக்கப்பட்ட, பொதிந்துள்ள, அல்லது நீங்கள் விரும்பினால் பருவடிவாக்கப்பட்ட சமூக உழைப்பு என்னும் ஒரே ஒரு அம்சத்தின் கீழ்தான் அப்படிப் பிரத்தியேகமாகக் கருதுகிறோம். இவ்வகையில், கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உழைப்பைப் பெற்றிருப்பதைப் பொறுத்துத்தான் அவை வித்தியாசப்பட முடியும். உதாரணமாக, ஒரு செங்கலைவிட ஒரு பட்டுக் கைக்குட்டையில் அதிக அளவு உழைப்பு செலவிடப்பட்டிருக்கலாம். ஆனால் உழைப்பின் அளவுகளை நாம் எவ்வாறு அளப்பது? அந்த உழைப்பு நீடிக்கும் நேரத்தைக் கொண்டு அளக்கலாம்; அதாவது மணி, நாள் முதலியவற்றைக் கொண்டு உழைப்பை அளக்கலாம். இந்த அளவுகோலைப் பயன்படுத்தும் போது எல்லா வகையான உழைப்புகளும் சராசரி அல்லது சாதாரண உழைப்பைத் தங்களது அலகாகக் கொள்பவைகளாகின்றன.

எனவே, கீழ்க்கண்ட முடிவுக்கு நாம் வருகிறோம். ஒரு பண்டம் சமூக உழைப்பின் பருவடிவம் ஆதலால் அது ஒரு மதிப்பைப் பெறுகிறது. அந்த மதிப்பின் அளவு அல்லது அந்தச் சார்புநிலை மதிப்பு, அப்பண்டத்தில் அடங்கியிருக்கும் சமூக உள்ளடக்கத்தின் அளவு அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதைப் பொறுத்திருக்கிறது. அதாவது, அதை உற்பத்தி செய்ய அவசியமாக உள்ள உழைப்பின் சார்பான மொத்தத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் பண்டங்களின் சார்புநிலை மதிப்புகள் அவற்றில் செலவழிக்கப்பட்டுள்ள, செயலாக்கப்பட்டுள்ள, பொதிந்துள்ள உழைப்பின் அளவுகளை அல்லது மொத்தப் பரிமாணங்களைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. ஒரே கால அளவு உள்ள உழைப்பினால்

உற்பத்தி செய்ய முடிகிற பண்டங்களின் ஒப்புநிலை அளவுகள் சரி சமமாக இருக்கின்றன. அல்லது ஒரு பண்டத்தின் மதிப்பிற்கும் வேறு ஒரு பண்டத்தின் மதிப்பிற்குமுள்ள விகிதாச்சாரம் முதல் பண்டத்தில் பொதிந்துள்ள உழைப்பிற்கும் இரண்டாம் பண்டத்தில் பொதிந்துள்ள உழைப்பிற்குமுள்ள விகிதாச்சாரத்தைப் போன்றிருக்கிறது.

அப்படியானல், பண்டங்களின் மதிப்புகளைக் கூலியைக் கொண்டு நிர்ணயிப்பதற்கும் அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமாக உள்ள உழைப்பின் சார்பான அளவுகளைக் கொண்டு நிர்ணயிப்பதற்குமிடையே உண்மையிலேயே இத்தகைய ஆழமான வேறுபாடோ அல்லது மற்ற எப்படிப்பட்ட வேறுபாடோ உண்டா என்று உங்களில் பலர் கேட்கலாம் என்று எண்ணுகிறேன். ஆனல் உழைப்புக்குச் சன்மானம் என்பதும் உழைப்பின் அளவு என்பதும் முற்றிலும் வெவ்வேருன விஷயங்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உதாரணத்துக்கு, ஒரு குவார்ட்டர் கோதுமையிலும் ஒரு அவுன்ஸ் தங்கத்திலும் சமமான அளவு உழைப்பு பொதிந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். மதிப்பின் உண்மையான தன்மையை முதலில் கண்டறிந்தவர்களில் ஒருவரான பென்ஜமென் பிராங்க்ளின் 1729ல் பிரசுரமான ''காகித நாணயத்தின் தன்மையையும் அவசியத்தையும் பற்றிய ஒரு அடக்கமான ஆய்வு'' என்னும் தமது முதலாவது கட்டுரையில் இந்த உதாரணத்தைத்தான் பயன்படுத்தியிருந்தார். எனவேதான் நான் இந்த உதாரணத்தை எடுத்துக் கொண்டேன். சரி, நாம் ஒரு குவார்ட்டர் கோதுமையும் ஒரு அவுன்ஸ் தங்கமும் சம மதிப்புள்ளவைகள் அல்லது சமக் குறிப்பொருள்கள் என்று வைத்துக் கொண்டு பேசுவோம். ஏனென்ருல் அவை ஒவ்வொன்றும் முறையே அவற்றில் பொதிந்துள்ள பல நாட்கள் அல்லது பல வாரங்களில் செய்யப்பட்ட சம அளவான சராசரி உழைப்பின் பருவடிவங்கள். இவ்வாறு தங்கம், தானியம் ஆகியவற்றின் சார்பான மதிப்புகளை நிர்ணயிக்கும் போது நாம் விவசாயத் தொழிலாளியின் கூலியைப் பற்றியும் சுரங்கத் தொழிலாளியின் கூலியைப் பற்றியும் எவ்வகையிலாவது பேசு

கிறோமா? இல்லவே இல்லை. அவர்களுடைய தின அல்லது வார உழைப்புக்கு எவ்வாறு கூலி கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றியோ அல்லது கூலி உழைப்பு அமர்த்தப்பட்டதா என்பதைப் பற்றியோ கூட நாம் அறவே தீர்மானிக்காமல் விட்டுவிடுகிறோம். அப்படியே கூலி உழைப்பு அமர்த்தப் பட்டிருந்தால் கூலிகள் மிகவும் சமமற்றதாக இருந்திருக் கும். ஒரு குவார்ட்டர் கோதுமையில் எவனது உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தொழிலாளி இரண்டு புஷல் கோதுமையைத்தான் பெறக் கூடும்; சுரங்கத்தில் அமர்த்தப்பட்ட தொழிலாளி அரை அவுன்ஸ் தங்கம் பெறக் கூடும். அல்லது அவர்களுடைய கூலிகள் ஒரே அளவுடையவை என்று வைத்துக் கொண்டால், அவர்கள் உற்பத்தி செய்த பண்டங்களின் மதிப்புகளிலிருந்து அவை கூடியமட்டும் எல்லா விகிதாச்சாரங்களிலும் விலகிச் செல்லக் கூடும். அந்தக் கூலிகள் ஒரு குவார்ட்டர் கோதுமையில் அல்லது ஒரு அவுன்ஸ் தங்கத்தில் பாதியாகவோ, மூன்றில் ஒரு பங்காகவோ, கால் பங்காகவோ, ஐந்தில் ஒரு பங்காகவோ அல்லது வேறு எந்த விகிதாச்சாரப் பங்காகவோ இருக்கக் கூடும். எது எப்படியிருப்பினும் அவர்களுடைய கூலிகள் அவர்கள் உற்பத்தி செய்த பண்டங்களின் மதிப்புகளை மிஞ்சுபவையாகவோ அவற்றை விட அதிகமாகவோ இருக்கா; அதற்குப் பதில் அவை முடிந்த வகையிலெல்லாம் குறை வாகவே இருக்கும். எனவே அவர்களுடைய கூலிகள் உற் பத்திப் பொருள்களின் மதிப்புகளினால் வரையறுக்கப்படும்; ஆனால் அவர்களுடைய உற்பத்திப் பொருள்களின் மதிப்பு களோ கூலிகளினால் வரையறுக்கப்படமாட்டா. இவை யெல்லாவற்றிற்கும் மேலாக, மதிப்புகள், உதாரணமாக, தானியம், தங்கம் இரண்டின் சார்புநிலை மதிப்புகள், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் மதிப்புக்கு அதாவது கூலிக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லாமலேயே தீர்மானிக்கப்படுவதாக இருக்கும். ஆகையால் பண்டங்களில் பொதிந்துள்ள உழைப் பின் சார்புநிலை அளவுகளைக் கொண்டு அப்பண்டங்களின் மதிப்புகளை நிர்ணயிப்பது என்பது உழைப்பின் மதிப்பைக் கொண்டு அல்லது கூலியைக் கொண்டு பண்டங்களின் மதிப்பு

களை நிர்ணயிக்கும் கிளிப்பிள்ளை வாத முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயமாகும். இந்த அம்சம் நமது ஆராய்ச்சியில் போகப்போக இன்னும் விளக்கப்படும்.

ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பைக் கணக்கிடுவதில் நாம் அந்தப் பண்டத்தில் கடைசியாக ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் அளவோடு அப்பண்டத்தின் கச்சாப் பொருளில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட உழைப்பின் அளவையும் அத்துடன் இந்த உழைப்பைச் செய்வதற்கு உதவியாக இருந்த கருவிகள், தளவாடங்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் முதலியவற்றில் செலுத்தப்பட்ட உழைப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவு நெசவு நூலை எடுத்துக் கொள்வோம். அதன் மதிப்பு என்ன? நூற்கும் செய்முறையின் போது பஞ்சில் சேர்க்கப்பட்ட உழைப்பின் அளவு, பஞ்சிலேயே ஏற்கெனவே செயலாக்கப்பட்ட உழைப்பின் அளவு, நூற்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நிலக்கரி, எண்ணெய் மற்றும் இதர உபபொருள்களில் செயலாக்கப்பட்ட உழைப்பின் அளவு, நீராவி இயந்திரம், நூற்புக் கதிர்கள், ஆலைக்கட்டிடம் முதலியவற்றில் பொதிந்துள்ள உழைப்பின் அளவு—இவையெல்லாவற்றினதும் பருவடிவமே நூலின் மதிப்பை நிர்ணயிக்கிறது. உற்பத்திக் கருவிகள் என்று சரியாகச் சொல்லப்படும் தளவாடங்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் ஆகியவைகள் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கோ, குறுகிய காலத்திற்கோ மீண்டும் உற்பத்திச் செய்முறைகளில் பயன்படுகின்றன. கச்சாப் பொருள்களைப் போல அவை அப்போதே பூரணமாகப் பயன்பட்டு விட்டால் அவற்றின் முழு மதிப்பும் அவை உற்பத்தி செய்ய உதவிய பண்டங்களுக்கு உடனடியாக மாற்றப்பட்டு விடும். ஆனுல், உதாரணமாக ஒரு நூற்புக் கதிர் படிப்படியாகப் பயன்படுவதால், அது சராசரி எவ்வளவு காலம் உழைக்கிறது, ஒரு குறிப்பிட்ட கால அளவில், எடுத்துக்காட்டாக ஒரு நாளில் அதன் சராசரித் தேய்மானம் எவ்வளவு என்னும் அடிப்படையில் ஒரு சராசரிக் கணக்கு செய்யப்படுகிறது. இவ்விதமாக, நூற்புக் கதிரின் எவ்வளவு மதிப்பு அன்ருடம் நூற்கப்படும்

நூலுக்கு மாற்றப்படுகிறது, இதனால், உதாரணமாக பவுண்டு நூலில் செயலாக்கப்பட்டுள்ள மொத்த உழைப்பில் ஏற்கெனவே நூற்புக் கதிரில் செயலாக்கப்பட்ட உழைப்பின் எவ்வளவு பகுதி சேர்ந்திருக்கிறது என்பதை நாம் கணக்கிடுகிறோம். இப்போதைய நமது ஆராய்ச்சிக்கு இதற்கு மேலும் இந்த அம்சத்தைப் பற்றிக் கூற வேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் உற்பத்தியில் பிரயோகிக்கப்பட்ட உழைப்பின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்று சொல்கிற பொழுது, ஒரு மனிதன் எவ்வளவு சோம்பேறியாகவோ, எவ்வளவு மந்தமாகவோ இருக்கிறானோ அவ்வளவுக்கு அவன் உற்பத்தி செய்யும் பண்டம் அதிக மதிப்புள்ளதாயிருக்கும், ஏனெனில் அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அதிக உழைப்பு நேரம் தேவைப்படுகிறது என்று எண்ணத் தோன்றும். ஆனால் இப்படி எண்ணுவது இரங்கத்தக்க தவறாகும். நான் "சமூக உழைப்பு" என்னும் சொல்லை உபயோகித்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். "சமூக" என்னும் அடைமொழியில் பல அம்சங்கள் பொதிந்திருக்கின்றன. ஒரு பண்டத்தின் மதிப்பு அதில் செலவழிக்கப்பட்டுள்ள அல்லது பருவடிவாக்கப்பட்டிருக்கிற உழைப்பின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறுகிற பொழுது, அதை நாம் எப்படி அர்த்தப்படுத்திக் கொள்கிறோம்? ஒரு குறிப்பிட்ட சமூக நிலையில், உற்பத்தியின் குறிப்பிட்ட சமூக சராசரி நிலைமைகளின் கீழ், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் குறிப்பிட்ட சராசரி சமூக வேகத்தையும் குறிப்பிட்ட சராசரித் திறமையையும் கொண்டு ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய அவசியமான உழைப்பின் அளவு என்று தான் நாம் அர்த்தம் கொள்கிறோம். இங்கிலாந்து தேசத்தில் கைத்தறியோடு இயந்திரத்தறி போட்டியிட முன்வந்த போது, குறிப்பிட்ட அளவு நூலை ஒரு கெஜம் பருத்தித் துணியாகவோ, கம்பளித் துணியாகவோ நெய்வதற்கு முன்பு எவ்வளவு உழைப்பு நேரம் தேவைப்பட்டதோ அதில் பாதிதான் தேவைப்பட்டது. ஏழைக் கைத்தறி நெசவுத் தொழிலாளி முன்னர் ஒன்பது

அல்லது பத்து மணி நேரம் வேலை செய்ததற்குப் பதிலாக இப்போது பதினேழு அல்லது பதினெட்டு மணி நேரம் வேலை செய்தான். அப்படி வேலை செய்தும் அவனது இருபது மணி நேர உழைப்பில் உற்பத்தியான பொருள் இப்போது பத்து மணி நேர சமூக உழைப்புக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட அளவு நூலை ஐவுளிப் பொருள்களாக மாற்றுவதற்குச் சமூக முறையில் அவசியமான பத்து மணி நேர உழைப்புக்கு மட்டுமே சமமாக இருந்தது. எனவே அவனது இருபது மணி நேர உழைப்பின் உற்பத்திப் பொருள் அவனது முந்திய பத்து மணி நேர உழைப்பின் உற்பத்திப் பொருளைவிட அதிகமான மதிப்புப் பெற்றிருக்கவில்லை.

இவ்வாறாகப் பண்டங்களில் செயலாக்கப்பட்ட சமூக முறையில் அவசியமான உழைப்பின் அளவு அப்பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளை ஒழுங்குபடுத்துகிறதென்றால், ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பின் அளவில் ஏற்படும் ஒவ்வொரு உயர்வும் அப்பண்டத்தின் மதிப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும்; அதேபோல, உழைப்பின் அளவில் ஏற்படும் ஒவ்வொரு குறைவும் அப் பண்டத்தின் மதிப்பைக் குறைப்பதாக இருக்க வேண்டும்.

அந்தந்தப் பண்டங்களின் உற்பத்திக்கு அவசியமான அந்தந்த உழைப்பின் அளவுகள் ஒரே மட்டத்திலிருந்தால் அவற்றின் சார்புநிலை மதிப்புகளும் அதே மட்டத்திலிருக்கும். ஆனால் நிலைமைகள் அப்படியே இருந்துவிடுவதில்லை. ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தித் திறன்களின் மாற்றங்களுக்கேற்ப, ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் அளவு இடைவிடாமல் மாறிக் கொண்டேயிருக்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறன்கள் உயர்வாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட உழைப்பு நேரத்திற்குள் அதிக அளவு பண்டங்கள் உற்பத்தி செய்து முடிக்கப் படுகின்றன; உழைப்பின் உற்பத்தித் திறன்கள் குறைவாக இருந்தால் அதே காலப் பகுதிக்குள் குறைந்த அளவு பண்டங்களே செய்து முடிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஜனத்தொகை அதிகரிக்கும் காலத்தில் குறைந்த வளமுள்ள நிலங்களையும் சாகுபடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்

பட்டால் அப்போது முந்திய அளவு விளைபொருளை விளைவிப்பதற்கு அதிக அளவு உழைப்பைச் செலவழிக்க வேண்டியிருக்கும். இதனால் விவசாயப் பொருள்களின் மதிப்பு உயரும். மறு புறத்தில் ஒரு நூற்புத் தொழிலாளி, தான் இராட்டையில் ஒரு தினத்தில் எவ்வளவு பஞ்சை நூற்றிருப்பானோ அதைப் போலப் பல ஆயிரம் மடங்கு பஞ்சை அதே ஒரு தினத்தில் நவீன உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு நூலாக மாற்றுகிறான். அப்போது ஒவ்வொரு பவுண்டு பஞ்சும் முன்னைவிடப் பல ஆயிர மடங்கு குறைவான நூற்பு உழைப்பையே உட்கொண்டிருக்கும் என்பதும் விளைவாக, நூற்பதின் மூலம் ஒவ்வொரு பவுண்டு பஞ்சுக்கும் சேர்க்கப்பட்ட மதிப்பு முன்னைக் காட்டிலும் பல ஆயிர மடங்கு குறைவாக இருக்கும் என்பதும் தெளிவு. இதற்கேற்ப நூலின் மதிப்பும் தாழ்ந்துவிடும்.

வெவ்வேறான மக்களின் வெவ்வேறான இயற்கைச் சக்திகளும், அவர்கள் பெற்றுள்ள வேலை செய்யும் திறமைகளும் ஒரு புறமிருக்க, உழைப்பின் உற்பத்தித் திறன்கள் பிரதானமாகப் பின்கண்டவற்றைப் பொறுத்திருக்க வேண்டும்:

முதலாவதாக, மண்ணின் வளம், சுரங்கங்களின் வளம் முதலியவை போன்ற உழைப்பின் இயற்கை நிலைமைகளை;

இரண்டாவதாக, உழைப்பின் சமூகத் திறன்கள் மேலும் மேலும் செம்மையடைவதை; பிரம்மாண்டமான உற்பத்தியாலும், மூலதனக் குவிப்பாலும், உழைப்பின் சேர்க்கையாலும், உழைப்பின் உட்பிரிவினையாலும், இயந்திரங்களாலும், சீர்பட்ட உற்பத்தி முறைகளாலும், இரசாயனம் இன்னும் மற்ற இயற்கைச் சாதனங்களைப் பயன்படுத்துவதாலும், போக்குவரத்து, செய்திப்போக்குவரத்துத் தொடர்புகளால் காலத்தையும் இடத்தையும் குறுக்குவதாலும் உழைப்பின் சமூகத் திறன்கள் விளைகின்றன. இன்னும், விஞ்ஞானம் இயற்கைச் சக்திகளை உழைப்பின் சேவைக்கு உட்படுத்தக் கூடிய, உழைப்பின் சமூகத் தன்மையை அல்லது கூட்டுறவுத் தன்மையை அபிவிருத்தி செய்யக் கூடிய இதர ஒவ்வொரு சாதனத்தின் மூலமும் உழைப்பின்

சமூகத் திறன்கள் வளர்ச்சியடைகின்றன. உழைப்பின் உற்பத்தித் திறன்கள் அதிகமாவதற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்திப் பொருள்களில் குறைவான உழைப்பே செலவழிக்கப்படுகிறது. எனவே இப்பொருள்களின் மதிப்பும் குறைவாகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன்கள் குறைவாக இருப்பதற்கு ஏற்ப அதே அளவு உற்பத்திப் பொருள்களில் அதிகமான உழைப்பு செலவழிக்கப்படுகிறது; அதனல் அதன் மதிப்பும் கூடுகிறது. எனவே இதனை ஒரு பொது விதியாகக் கீழ்க்கண்டவாறு வரையறுக்கலாம்:

**பண்டங்களின் மதிப்புகள் அவற்றின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் நேரங்களுக்கு நேர் விகிதத்திலிருக்கும், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தித் திறன்களுக்கு எதிர் விகிதத்திலிருக்கும்.**

இதுவரை **மதிப்பைப்** பற்றியே பேசினேம்; இனி மதிப்பு மேற்கொள்ளும் ஒரு தனிப்பட்ட ரூபமான **விலை**யைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுகிறேன்.

தனியாக எடுத்துக் கொண்டால் விலை என்பது, **மதிப்பின் பணக்குறியீடு** என்பதைத் தவிர வேறில்லை. உதாரணமாக, இங்கிலாந்து நாட்டின் எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் தங்க விலைகளைக் கொண்டே குறிப்பிடப்படுகின்றன; ஐரோப்பிய நாடுகளிலோ அவைகள் பெரும்பாலும் வெள்ளி விலைகளில் குறிப்பிடப்படுகின்றன. தங்கம் அல்லது வெள்ளியின் மதிப்பு, மற்ற பண்டங்களின் மதிப்புகளைப் போலவே அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. உங்கள் நாட்டின் தேசிய உழைப்பின் குறித்த அளவு பருவடிவம் பெற்றிருக்கும் உங்கள் தேசத்துக் குறிப்பிட்ட அளவு உற்பத்திப் பொருள்களை, தங்கத்தையும் வெள்ளியையும் உற்பத்தி செய்யும் நாடுகளினுடைய அவற்றின் உழைப்பினது ஒரு குறித்த அளவு பருவடிவம் பெற்றிருக்கும் உற்பத்திப் பொருள்களுடன் பரிவர்த்தனை செய்து கொள்கிறீர்கள். இந்த வகையில்தான், உண்மையில் பண்டமாற்று முறையில்தான், எல்லாப் பண்டங்களினுடைய மதிப்புகளை, அதாவது அவற்றில் செலவழிக்கப்பட்டுள்ள உழைப்பின் அளவுகளைத்

தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டு மதிப்பிடக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மதிப்பின் பணக் குறியீட்டை, அதாவது மதிப்பை விலையாக மாற்றுவதை இன்னும் ஓரளவு கூர்ந்து கவனித்தால் அந்த நிகழ் முறை மூலம்தான் எல்லாப் பண்டங்களின் மதிப்புகளுக்கும் நீங்கள் அவற்றுக்கே உரிய, ஒரேசீரான உருவத்தைத் தருகிறீர்கள் அல்லது அவற்றைச் சமமான சமூக உழைப்பு அளவைகளாகக் குறிப்பிடுகிறீர்கள் என்பதைக் காண்பீர்கள். விலை என்பது மதிப்பின் பணக் குறியீடாக மட்டும் இருக்கும் வரை, விலையை இயற்கை விலை என்றழைத்தார் ஆடம் ஸ்மித்; "அத்தியாவசிய விலை" என்றழைத்தனர் பிரெஞ்சு பிஸியோகிராட்டுகள்.*

அப்படியானால் மதிப்பிற்கும் மார்க்கெட் விலைகளுக்கும் அல்லது இயற்கை விலைகளுக்கும் மார்க்கெட் விலைகளுக்கும் உள்ள உறவு என்ன? தனித்தனியான உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் உற்பத்தி நிலைமைகள் வெவ்வேறாக மாறுபட்டிருப்பினும், ஒரே ரகமான எல்லாப் பண்டங்களின் மார்க்கெட் விலையும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்பதை நீங்களெல்லோரும் அறிவீர்கள். சராசரியான உற்பத்திச் சூழ்நிலைமைகளில், ஒரு குறிப்பிட்ட பொருளை ஒரு குறிப்பிட்ட அளவில் மார்க்கெட்டுக்கு சப்ளை செய்வதற்கு அவசியமான சமூக உழைப்பின் சராசரி அளவைத்தான் மார்க்கெட் விலை குறிப்பிடுகிறது. ஒரு குறிப்பிட்ட ரகப் பண்டத்தின் ஒட்டுமொத்தத்தை வைத்தே அது கணக்கிடப்படுகிறது. அந்த அளவு வரை ஒரு பண்டத்தின் மார்க்கெட் விலை அப்பண்டத்தின் மதிப்போடு ஒன்றி நிற்கிறது. மறு புறத்தில், மதிப்பு அல்லது இயற்கை விலைக்கு ஒரு சமயம் மேலும், இன்னொரு சமயம் கீழும் மார்க்கெட் விலை

---

* பிஸியோகிராட்டுகள்: பிரான்சில் 18ம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய ஓர் அரசியல் பொருளாதாரப் போக்கு. இந்தப் போக்கின் முதன்மைப் பிரதிநிதி பிரான்சுவா கேனே (1694—1774). பிஸியோகிராட்டுகள் முதலாளித்துவத் தனியார் சொத்துரிமையின் வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கோரினார்கள், வியாபார சுதந்திரத்தை வலியுறுத்தினார்கள்.—ப-ர்.

கள் ஊசலாடுவது சப்ளை, கிராக்கி இரண்டின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்திருக்கிறது. மதிப்பிலிருந்து மார்க்கெட் விலைகள் விலகிச் செல்லும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. ஆனால் ஆடம் ஸ்மித் கூறிய படி:

''இயற்கை விலைதான் எல்லாப் பண்டங்களின் விலைகளையும் தொடர்ந்து ஆகர்ஷிக்கும் மத்திய விலையாகும். வெவ்வேறான தற்செயல் நிகழ்ச்சிகள் அவற்றைச் சில சமயங்களில் இயற்கை விலைக்கு வெகு உயரே அந்தரத்தில் நிறுத்தக் கூடும். இன்னும் சில சமயங்களில் அதற்கும் ஓரளவு கீழே இறங்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடும். நிலைப்பும் நீடிப்பும் கொண்ட இந்த மையத்தில் விலைகள் ஸ்திரப்படுவதற்கு இடையூறாக உள்ள தடைகள் எவையாயினும், அவை இடைவிடாது அதன்பாலே ஈர்க்கப்படுகின்றன.''[34]

இந்த விஷயத்தைத் தற்போது நான் நுட்பமாக ஆராய முடியாது. ஒரு விஷயத்தை மட்டும் கூறினால் போதுமானதாகும், சப்ளையும் கிராக்கியும் ஒன்றையொன்று சமன்படுத்திக் கொண்டால், பண்டங்களின் மார்க்கெட் விலைகள் அவற்றின் இயற்கை விலைகளோடு, அதாவது அப்பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான அந்தந்த உழைப்பின் அளவுகளால் தீர்மானிக்கப்படுகிற அவற்றின் மதிப்புகளோடு ஒன்றி இசைந்து போகும். ஆனால் சப்ளையும் கிராக்கியும் ஒரு ஏற்ற இறக்கத்தை இன்னொரு ஏற்ற இறக்கத்தின் மூலமும், ஒரு உயர்வை ஒரு வீழ்ச்சியின் மூலமும், ஒரு வீழ்ச்சியை ஒரு உயர்வின் மூலமும் மட்டுமே ஈடுசெய்த போதிலும் சப்ளையும் கிராக்கியும் ஒன்றையொன்று சமன் செய்துகொள்ளத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்க வேண்டும். அன்றாட ஏற்ற இறக்கங்களை மட்டும் பரிசீலித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, உதாரணமாக ஸ்ரீமான் தூக் தமது **விலைகளின் வரலாறு** என்ற நூலில் செய்திருப்பதுபோல, நீண்ட கால மார்க்கெட் விலைகளின் இயக்கத்தை நீங்கள் பகுத்தாராய்ந்தால் ஒரு விஷயம் தெளிவாகும். அதாவது மார்க்கெட் விலைகளின் ஊசலாட்டங்கள், மதிப்புகளிலிருந்து அவற்றின் பிறழ்ச்சிகள், அவற்றின் ஏற்ற இறக்கங்கள் ஒன்றையொன்று செயலறப் புரிந்து ஈடு

செய்து கொள்கின்றன; விளைவாக, நான் இப்போது சர்ச்சை செய்யாது விட வேண்டியிருக்கிற ஏகபோக முறையில் செல்வாக்கையும் மற்ற சில செயல்களையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டால், எல்லா வகையான பண்டங்களும் சராசரியாக அவற்றின் மதிப்புகளின்படி அல்லது இயற்கை விலைகளின்படி விற்கப்படுகின்றன என்பதைக் காண்பீர்கள். மார்கெட் விலைகளின் ஏற்ற இறக்கங்கள் ஒன்றையொன்று ஈடு செய்து கொள்வதற்கான சராசரிக்கால அளவுகள் வெவ்வேறு ரகப் பண்டங்களுக்கு வெவ்வேறாக இருக்கும், ஏனெனில், கிராக்கியை சப்ளை அனுசரித்துப்போவது ஒரு வகைப் பண்டங்களுக்கு மற்றொரு வகைப் பண்டங்களைவிடச் சுலபமாக இருக்கும்.

பொதுப்படையாக, ஓரளவு நீண்ட காலங்களை எடுத்துக் கொண்டு பேசும் போது, எல்லாவகையான பண்டங்களும் அவ்வவற்றின் மதிப்புகளுக்குச் சமமான விலையில் விற்கப்படுகின்றன என்றால், லாபம்—தனிப்பட்ட நிகழ்ச்சிகளில் அல்ல, ஆனால் பல்வேறு தொழிற்துறைகளின் நிரந்தரமான, வழக்கமான லாபம்—பண்டங்களின் விலைகளின் மீது மிகுதியான கட்டணம் விதிப்பதாலோ அல்லது அவற்றை அவற்றின் மதிப்புக்கு அதிகமான விலையில் விற்பதாலோதான் கிடைக்கிறது என்று எண்ணுவது அர்த்தமற்றதாகும். இந்தக் கருத்தைப் பொதுப்படையாக்கிப் பார்த்தால் அதன் அபத்தம் வெட்ட வெளிச்சமாகும். ஒரு மனிதன் விற்பவன் என்ற முறையில் தொடர்ச்சியாகப் பெறுவதை வாங்குபவன் என்ற முறையில் தொடர்ச்சியாக இழந்து விடுகிறான். விற்பவர்களாக இல்லாமல் வாங்குபவர்களாகவோ அல்லது உற்பத்தியாளர்களாக அல்லாமல் உபயோகிப்பவர்களாகவோ இருக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கூறுவது பொருத்தமற்ற விஷயம். இவர்கள் உற்பத்தியாளர்களுக்குச் செலுத்த வேண்டியதை அவர்களிடமிருந்தே முதலில் இலவசமாகப் பெற வேண்டும். ஒரு மனிதன் முதலில் உங்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு, பிறகு உங்கள் பண்டங்களை வாங்கிக் கொள்வதன் மூலம் அதைத் திருப்பிக் கொடுப்பானேயானால் அந்த மனிதனுக்கு உங்கள்

பண்டங்களை மிக கிராக்கியான விலைக்கு விற்பதன் மூலம் நீங்கள் ஒருபோதும் பணக்காரராக முடியாது. இத்த கைய பேரம் நஷ்டத்தை வேண்டுமானுல் குறைக்கலாமே தவிர லாபம் பெறுவதற்கு ஒருக்காலும் உதவியாக இருக்காது.

எனவே, லாபங்களின் பொதுத் தன்மையை விளக்கு வதற்கு ஒரு தேற்றத்திலிருந்து நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். அதாவது, சராசரியாகப் பண்டங்கள் **அவற்றின் உண்மையான மதிப்புகளுக்கே விற்கப்படுகின்றன;** அப்படி **அப்பண்டங்களை அவற்றின் மதிப்புகளுக்கே,** வேறுவிதமாகச் சொன்னுல் அவற்றில் செயலாக்கப்பட்ட உழைப்பின் விகிதாச்சார அளவுக்கு ஏற்ப **விற்பதன் மூலம்தான் லாபங்கள் பெறப்படுகின்றன** என்னும் தேற்றத்திலிருந்து நீங்கள் தொடங்க வேண்டும். இந்த அனுமானத்திலிருந்து நீங்கள் லாபத்தை விளக்க முடியவில்லையென்ருல் அதனை உங்களால் என்றுமே விளக்க முடியாது. இது முரணுரையாகவும் அன்ருடம் நாம் கண்டறிவதற்கு மாருனதாகவும் தோன்று கிறது. பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதும் எளிதில் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய இரண்டு வாயுக்கள் சேர்ந்ததே தண்ணீர் என்பதும்கூட முரணுரையாகத்தான் தோன்று கிறது. பொருள்களின் மாயமான தோற்றங்களை மட்டும் பற்றிக் கொள்ளும் அன்ருட அனுபவங்களை வைத்துப்பார்த் தால், விஞ்ஞான உண்மை எப்போதும் முரணுரையாகவே இருக்கிறது.

## 7. உழைக்கும் சக்தி

**மதிப்பின்** தன்மையைப் பற்றி, **எந்தப் பண்டமாயினும் அதன் மதிப்பின்** தன்மையைப் பற்றிப் போகிற போக்கில் இதுவரை இயன்ற அளவுக்கு ஆராய்ந்த பிறகு, இனி **உழைப்பின்** பிரத்தியேகமான **மதிப்பின்**பால் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். இங்கு மீண்டும் முரணுரை போல் தோன்றும் ஒன்றைக் கூறி உங்களைத் திகைக்க வைக்கப் போகிறேன். நீங்கள் அன்ருடம் உங்கள் உழைப்பையே விற்கிறீர்கள்; ஆகையினுல் உழைப்புக்கு ஒரு விலை இருக்கிறது;

ஒரு பண்டத்தின் விலை என்பது அதன் மதிப்பின் பண உருவம் தானுதலால், **உழைப்பின் மதிப்பு** என்பது போன்ற ஒன்று நிச்சயமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் எல்லோரும் உறுதியாக நம்புகிறீர்கள். ஆனால் இந்தச் சொல்லுக்குப் பொது வழக்கில் உள்ள அர்த்தப்படி **உழைப்பின் மதிப்பு** என்று ஒன்று இல்லை. ஒரு பண்டத்தில் பருவடிவாக்கப்பட்டிருக்கும் அத்தியாவசியமான உழைப்பின் அளவே அதன் மதிப்பை உருவாக்குகிறது என்பதைக் கண்டோம். இப்போது மதிப்பைப் பற்றிய இதே கண்ணோட்டத்தை உபயோகித்து, உதாரணமாக, பத்து மணி நேர வேலை நாளின் மதிப்பை நாம் எப்படி வரையறுத்துக் கூற முடியும்? அந்த நாளில் எவ்வளவு உழைப்பு அடங்கியிருக்கிறது? பத்து மணி நேர உழைப்பு. பத்து மணி நேர வேலை நாளின் மதிப்பு பத்து மணி நேர உழைப்புக்குச் சமம் என்றோ அல்லது அதில் அடங்கியுள்ள உழைப்பின் அளவுக்குச் சமம் என்றோ சொல்லுவது கூறியது கூறல் என்பது மட்டுமின்றி அர்த்த மற்ற கூற்றாகும். ஆயின், "**உழைப்பின் மதிப்பு**" என்பதின் உண்மையான, ஆனால் மறைந்திருக்கும் அர்த்தத்தை நாம் தெரிந்து கொண்டு விட்டோமானால், எப்படி கிரகங்களின் உண்மையான சஞ்சாரத்தை நாம் அறிந்து கொண்டு விட்டால், அவற்றின் வெளித்தோற்றமான அல்லது வெறுமே கட்புலனாகும் சஞ்சாரங்களை நம்மால் விளக்க முடியுமோ, அந்த முறையிலேயே இந்த அறிவுக்குப் பொருந்தாத, உபயோகிப்பது சாத்தியமற்றது என்பது போல் தோன்றும் மதிப்பை நம்மால் விளக்க முடியும்.

தொழிலாளி விற்பது நேரடியாகத் தனது உழைப்பையல்ல; தனது **உழைக்கும் சக்தியைத்** தான்; அதைத் தற்காலிகமாக உபயோகித்துக் கொள்ளும்படி முதலாளியிடம் ஒப்படைக்கிறான். இந்த விஷயம் எவ்வளவு உண்மை என்றால், ஒரு மனிதன் தனது உழைக்கும் சக்தியை விற்க அனுமதிக்கப்படுவதற்கான **அதிகப் பட்ச நேரம்**, இங்கிலாந்தின் சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் நிச்சயமாகச் சில ஐரோப்பிய நாடுகளின் சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மனிதன்

தன் உழைக்கும் சக்தியை வரையறையற்ற நேரத்திற்கு விற்க அனுமதிக்கப்பட்டால் அடிமை முறை உடனே திரும்பவும் தோன்றிவிடும். இப்படிப்பட்ட விற்பனை, உதாரணமாக அவன் தனது உழைக்கும் சக்தியைத் தன் வாழ்நாள் முழுமைக்கும் விற்றுவிட்டால், அது அவனை வேலைக்கு அமர்த்துபவரின் ஆயுள்கால அடிமையாக உடனேயே மாற்றிவிடும்.

இங்கிலாந்து தேசத்தின் மிகப் பழமையான பொருளியலாளர்களில் ஒருவரும் மிகச் சுயமான தத்துவஞானிகளில் ஒருவருமான தாமஸ் ஹாப்ஸ் ஏற்கெனவே தனது ''லெவியாதன்'' நூலில் இந்த அம்சத்தை இயல்புணர்வோடு கண்டு பிடித்த போதிலும் அவரது பின்னோடிகள் இந்த அம்சத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். அவர் கூறுகிறார்:

''மற்றெல்லாப் பொருள்களையும் போலவே ஒரு மனிதனின் மதிப்பு அல்லது பெறுமானம் அவனது விலையாகும்; அதாவது அவனது சக்தியின் உபயோகத்துக்காக எவ்வளவு கொடுக்கப்படுமோ அவ்வளவு.''

இதை அடிப்படையாகக் கொண்டு இதர எல்லாப் பண்டங்களையும் போலவே உழைப்பின் மதிப்பையும் நம்மால் தீர்மானிக்க முடியும்.

ஆனால் இப்படிச் செய்வதற்கு முன்னால் நாம் ஒரு வினாவைக் கேட்டுக் கொள்வோம். ஒரு புறம் நாம் மார்க்கெட்டில் வாங்குவோர் கூட்டமொன்றைக் காண்கிறோம்; நிலம், இயந்திரங்கள், கச்சாப்பொருள்கள், உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான சாதனங்கள் ஆகியவற்றை— பண்படாத நிலையிலுள்ள நிலம் ஒன்று தவிர இவை எல்லாம் உழைப்பின் உற்பத்திப் பொருள்களாகும்—தங்களது உடைமைகளாகக் கொண்டவர்கள் இவர்கள். இன்னொரு புறம் தங்கள் உழைக்கும் சக்தியையும் பாடுபடும் கரங்களையும் மூளைகளையும் தவிர விற்பதற்கு வேறெதுமில்லாத விற்போர் கூட்டமொன்றையும் நாம் காண்கிறோம். இவற்றில் ஒரு கூட்டத்தினர் லாபம் சம்பாதித்து மென்மேலும் பணக்காரர்களாவதற்காகத் தொடர்ச்சியாக வாங்கிக்

கொண்டே இருக்கிறார்கள்; இன்னொரு கூட்டத்தினரோ, தங்கள் ஜீவனத்திற்காகத் தொடர்ந்து விற்றுக் கொண்டே இருக்கிறார்கள். இந்த விசித்திர நிலைமை எப்படி ஏற்பட்டது? இந்தப் பிரச்சினை பற்றிய ஆராய்ச்சி, முற்பட்டகால அல்லது ஆரம்பகாலக் குவிப்பு என்று பொருளியலாளர்கள் அழைக்கும் விஷயம் பற்றிய ஆராய்ச்சியாகவே இருக்கும். ஆனால் இதை உண்மையில் ஆரம்பகாலப் பறிமுதல் என்றே அழைக்க வேண்டும். இந்த ஆரம்பகாலக் குவிப்பு என்று அழைக்கப்படுவது உழைக்கும் மனிதனுக்கும் அவனது உழைப்புச் சாதனங்களுக்குமிடையே முன்னர் நிலவி வந்த ஒன்றிப்பைச் சிதைத்த வரலாற்று இயக்கப் போக்குகளின் ஒரு வரிசையே தவிர வேறல்ல என்பதை நாம் காண முடியும். ஆயினும் இப்படிப்பட்டதோர் ஆராய்ச்சி இப்போதைய எனது விஷயத்தின் வரம்புக்கு அப்பாற்பட்டதாகும். உழைக்கும் மனிதனுக்கும் அவனது உழைப்புச் சாதனங்களுக்குமிடையே பிரிவினை ஒரு தடவை ஏற்பட்டு விட்ட பிறகு இப்படிப்பட்ட ஒரு நிலைமை தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதோடு, உற்பத்தி முறையில் ஒரு புதிய அடிப்படையான புரட்சி ஏற்பட்டு, அதனை அழித்தொழித்து மீண்டும் முன்னிருந்த ஒன்றிப்பை ஒரு புதிய வரலாற்று ரூபத்தில் ஏற்படுத்தும் வரை தொடர்ந்து விரிந்த அளவில் வளர்ந்து கொண்டுதானிருக்கும்.

அப்படியானால், உழைக்கும் சக்தியின் மதிப்பு என்பது தான் என்ன?

மற்ற ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பையும் போலவே, உழைக்கும் சக்தியின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் அளவைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு மனிதனின் உழைக்கும் சக்தி அவனது வாழும் தனித்தன்மையில் தானிருக்கிறது. ஒரு மனிதன் வளரவும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஒரு குறிப்பிட்ட அளவு அத்தியாவசியப் பொருள்களின் திரளை அவன் உபயோகித்தாக வேண்டும். ஆனால் இயந்திரத்தைப் போலவே மனிதனும் தேய்ந்து போவான்; அவனுக்குப் பதில் இன்னொரு மனிதனை அவனிடத்தில் அமர்த்த வேண்டும்.

தனது சொந்தப் பராமரிப்புக்காக அவனுக்கு அத்தியாவசியப் பொருள்களின் திரள் தேவைப்படுவது மட்டுமின்றி, உழைப்பு மார்க்கெட்டில் தனது இடத்தை நிரப்பக் கூடிய, தொழிலாளர் இனத்தை நீடிக்கச் செய்யக் கூடிய குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்கும் அவனுக்கு அத்தியாவசியப் பொருள்களின் இன்னொரு திரள் தேவைப்படுகிறது. தவிரவும், தன்னுடைய உழைக்கும் சக்தியை பெருக்கிக் கொள்ளவும் குறிப்பிட்ட தொழில் தேர்ச்சியைப் பெறுவதற்கும் மேலும் ஓரளவு மதிப்புகள் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்குச் சராசரி உழைப்பைப் பற்றி ஆராய்ந்தால் போதும்; இந்தச் சராசரி உழைப்பிற்குரிய கல்விக்கும் வளர்ச்சிக்கும் ஆகும் செலவு சொற்பமே. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நான் ஒன்று கூற வேண்டும். வெவ்வேறு தரமான உழைக்கும் சக்திகளை உற்பத்தி செய்வதற்கான செலவுகள் வித்தியாசப்படுவது போலவே வெவ்வேறான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உழைக்கும் சக்திகளின் மதிப்புகளும் வித்தியாசப்பட வேண்டும். ஆகையால் சமமான கூலி என்னும் கூச்சல் தவறை அடிப்படையாகக் கொண்டது, ஒருபோதும் நிறைவேற முடியாத ஒரு பைத்தியக்காரத்தனமான விருப்பமாகும் அது. ஆதாரக் கூற்றுகளை ஒப்புக்கொண்டு முடிவுகளைத் தட்டிக்கழிக்க முயலும் தவறான, ஆழமற்ற தீவிரவாதத்திலிருந்து கிளர்வதே இது. கூலி அமைப்பு முறையின் அடிப்படையின் கீழ் உழைக்கும் சக்தியின் மதிப்பும் ஏனைய ஒவ்வொரு பண்டத்தினதும் போலவே தீர்மானிக்கப்படுகிறது; வெவ்வேறு ரகமான உழைக்கும் சக்திகள் வெவ்வேறு மதிப்புகள் பெற்றிருப்பதால், அவற்றின் உற்பத்திக்கு உழைப்பின் வெவ்வேறு அளவுகள் தேவைப்படுவதால், அவை உழைப்பு மார்க்கெட்டில் வெவ்வேறு விலைகளைப் பெற வேண்டும். எனவே, கூலி அமைப்பு முறையின் அடிப்படையின் கீழ் சமமான அல்லது நியாயமான சன்மானம் வேண்டுமென்று கூக்குரலிடுவது அடிமை அமைப்பு முறையின் கீழ் சுதந்திரம் வேண்டுமென்று கூக்குரலிடுவதற்குச் சமமாகும். நீங்கள் சரியா

னது, நியாயமானது என்று நினைப்பது இங்கு விஷயத்திற்குப் பொருந்தாது. விஷயம் என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி அமைப்பு முறையில் எது அவசியமானது, தவிர்க்க முடியாதது என்பதே.

ஆக இதுவரை சொல்லி வந்ததிலிருந்து, **உழைக்கும் சக்தியின் மதிப்பு** அந்த உழைக்கும் சக்தியை உற்பத்தி செய்யவும் பெருக்குவதற்கும் பராமரிக்கவும் நிலை நிறுத்தவும் தேவைப்படும் **அத்தியாவசியப் பொருள்களின் மதிப்புகளைக்** கொண்டு தீர்மானிக்கப்படுகிறது என்பது தெளிவு.

## 8. உபரி மதிப்பை உற்பத்தி செய்தல்

ஓர் உழைப்பாளியின் தினசரி அத்தியாவசியப் பொருள்களின் சராசரி அளவை உற்பத்தி செய்ய **ஆறு மணி நேர சராசரி உழைப்பு** தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். மேலும், 3 ஷில்லிங் பெறுமான அளவு தங்கத்தில் ஆறு மணி நேரச் சராசரி உழைப்பு செயலாக்கப் பட்டிருக்கிறது என்றும் வைத்துக் கொள்வோம். அப்போது, 3 ஷில்லிங் என்பது அந்த உழைப்பாளியினுடைய உழைக்கும் **சக்தியின் ஒரு நாள் மதிப்பின் விலையாக** அல்லது பணக் குறியீடாக இருக்கும். அவன் தினசரி ஆறு மணி நேரம் வேலை செய்தால் தினமும் தனக்குத் தேவையான சராசரி அளவு அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு, அதாவது தன்னை ஓர் உழைப்பாளியாக உயிர்வாழச் செய்து கொள்வதற்குப் போதுமான மதிப்பை தினசரி உற்பத்தி செய்வான்.

ஆனால் நமது உழைப்பாளியோ கூலி உழைப்பாளி. எனவே அவன் தன் உழைக்கும் சக்தியை ஒரு முதலாளிக்கு விற்க வேண்டும். அதை அவன் தினசரி 3 ஷில்லிங்குக்கோ, அல்லது வாரம் 18 ஷில்லிங்குக்கோ விற்றால், அதை அதனுடைய மதிப்புக்கு விற்றவனாகிறான். அவன் ஒரு நூற்பாளி என்று வைத்துக் கொள்வோம். அவன் தினசரி ஆறு மணி நேரம் வேலை செய்தால், பஞ்சின் மீது அனுதினமும் 3 ஷில்லிங் மதிப்பைக் கூட்டுவான். அவனால் தினசரி கூட்டப்

படும் இந்த மதிப்பு தினசரி அவன் பெறும் அவனுடைய கூலி அல்லது உழைக்கும் சக்திக்கான விலைக்குத் துல்லிய மாகச் சமமானதாக இருக்கும். ஆனால் இந்நிலையில் எந்த அளவு உபரி மதிப்போ அல்லது உபரி உற்பத்திப் பொருளோ முத லாளிக்குப் போகாது. இங்கேதான் நமக்கு உண்மையான சிக்கல் ஏற்படுகிறது.

தொழிலாளியின் உழைக்கும் சக்தியை வாங்கி அதன் மதிப்பைக் கொடுத்துவிடுவதன் மூலம் முதலாளி, மற்றெந்த வாங்குவோரையும் போலவே, வாங்கிய பண்டத்தை உப யோகித்துக் கொள்ளும் அல்லது பயன்படுத்திக் கொள்ளும் உரிமையைப் பெறுகிறான். ஓர் இயந்திரத்தை ஓட வைத்து அதை உபயோகித்துக் கொள்வதை அல்லது பயன் படுத்திக் கொள்வதைப் போலவே ஓர் உழைப்பாளியை வேலை செய்ய வைப்பதன் மூலம் அவனுடைய உழைக்கும் சக்தி உபயோகித்துக் கொள்ள அல்லது பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. எனவே, தொழிலாளியின் உழைக்கும் சக்தியான தினசரி, அல்லது வார மதிப்பைக் கொடுத்து விடுவதன் மூலம் முதலாளி, அந்த உழைக்கும் சக்தியை முழு நாளைக்கும் அல்லது முழு வாரத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளும் அல்லது வேலை செய்ய வைக்கும் உரிமையைப் பெறுகிறான். வேலை நாள் அல்லது வாரத்திற்குச் சில குறிப் பிட்ட வரையறைகள் நிச்சயமாக இருக்கத்தான் செய்கின் றன. அவற்றைப் பற்றி இன்னும் ஆழமாகப் பின்னால் ஆராய்வோம்.

தற்போது ஒரு நிர்ணயகரமான அம்சத்தின் மீது உங்கள் கவனம் திரும்ப வேண்டுமென்று விரும்புகிறேன்.

உழைக்கும் சக்தியின் மதிப்பு அதனைப் பராமரிக்க அல் லது புனருற்பத்தி செய்யத் தேவையான உழைப்பின் அள வைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அந்த உழைக் கும் சக்தியின் பயன்பாடு உழைப்பாளியின் உழைப்புத் திறனாலும் அவனுடைய உடல் வலிமையாலும் மட்டுமே வரையறுக்கப்படுகிறது. ஒரு குதிரைக்குத் தேவைப்படும் தீவனம் என்பதும் அது சவாரி செய்பவனைச் சுமந்து செல்லக் கூடிய நேரம் என்பதும் எப்படி வெவ்வேறானவை

களோ அது போலவே உழைக்கும் சக்தியின் தின அல்லது வார மதிப்பு என்பது அதனைத் தினம் அல்லது வாரம் செலவிடுதல் என்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தொழிலாளியினுடைய உழைக்கும் சக்தியின் மதிப்பை வரையறுக்கும் உழைப்பின் அளவு அவனுடைய உழைக்கும் சக்தி ஆற்றக் கூடிய உழைப்பின் அளவுக்கு எவ்வகையிலும் வரம்பு கட்டுவதில்லை. நமது நூற்புத் தொழிலாளியின் உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். அவன் தன்னுடைய உழைக்கும் சக்தியைத் தினந்தோறும் மீண்டும் உற்பத்தி செய்து கொள்வதற்கு அவன் தினந்தோறும் மூன்று ஷில்லிங் மதிப்பை மீண்டும் உற்பத்தி செய்ய வேண்டும். இதை அவன் தினம் ஆறு மணி நேரம் வேலை செய்வதன் மூலம் செய்வான் என்பதை நாம் பார்த்தோம். எனினும் இது அவனை ஒரு நாளைக்குப் பத்து அல்லது பன்னிரண்டு அல்லது அதற்கு அதிகமான மணி நேரம் வேலை செய்வதற்குத் திறனற்றவனாக்கி விடுவதில்லை. ஆனால் நூற்பாளியின் உழைக்கும் சக்திக்கான மதிப்பைத் தினசரியாகவோ அல்லது வாரமாகவோ கொடுத்துவிடுவதன் மூலம், முதலாளி, அவனுடைய உழைக்கும் சக்தியை முழு நாளைக்குமோ அல்லது முழு வாரத்துக்குமோ பயன்படுத்திக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கிறான். எனவே, முதலாளி அவனைத் தினமும், உதாரணமாக, பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்ய வைக்கிறான். ஆகவே, தனக்குக் கொடுக்கப்படும் கூலியை அல்லது தனது உழைக்கும் சக்தியின் மதிப்பை ஈடுசெய்வதற்குத் தேவையான ஆறு மணி நேரத்தைத் தவிர அதிகமாக மேலும் ஆறு மணி நேரம் அவன் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இதனை நான் உபரி உழைப்பு மணி நேரம் என்று அழைக்கிறேன்; இந்த உபரி உழைப்பு உபரி மதிப்பாக, உபரி உற்பத்திப் பொருளாகப் பரிணமிக்கிறது. உதாரணமாக, நமது நூற்புத் தொழிலாளி அன்றாடம் தனது ஆறு மணி நேர வேலை மூலம் மூன்று ஷில்லிங் மதிப்பை, தனது கூலிக்குத் துல்லியமாகச் சமமான மதிப்பைப் பஞ்சின் மீது கூட்டுவானேயானால், அவன் பன்னிரண்டு மணி நேரத்தில் ஆறு ஷில்லிங் மதிப்பைப் பஞ்சுக்குக் கூட்டு

வதோடு, அந்த அளவு விகிதத்தில் உபரி நூலையும் உற்பத்தி செய்வான். அவன் தனது உழைக்கும் சக்தியை முதலாளிக்கு விற்றுவிட்டதால், அவனால் சிருஷ்டிக்கப்படும் முழு மதிப்பும் அல்லது உற்பத்திப் பொருள் முழுவதும் முதலாளிக்கே சொந்தமாகிறது; ஏனென்றால் முதலாளியே அவனது உழைக்கும் சக்திக்கு pro tempore* சொந்தக்காரன். எனவே, மூன்று ஷில்லிங்கை முன்பணமாகக் கொடுப்பதன் மூலம், முதலாளி, ஆறு ஷில்லிங் மதிப்பைப் பெறுவான்; ஏனென்றால், ஆறு மணி நேர உழைப்பு பருவடிவாகியுள்ள ஒரு மதிப்பை அச்சாரமாகக் கொடுத்து, அதற்குப் பதிலாகப் பன்னிரண்டு மணி நேர உழைப்பு பருவடிவாகியுள்ள ஒரு மதிப்பைப் பெறுவான். இதே முறையை முதலாளி தினமும் பின்பற்றி நாள்தோறும் மூன்று ஷில்லிங்குகள் முன்பணமாகக் கொடுத்து, தினமும் ஆறு ஷில்லிங்குகளைத் தன் பையில் போட்டுக் கொள்வான்; இதில் ஒரு பாதி மீண்டும் கூலி கொடுப்பதற்குப் போய்விடும், இன்னொரு பாதி உபரி மதிப்பாக உருவாகும்; இதற்கு அவன் எதுவும் செலுத்த மாட்டான். மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே நிலவும் இந்த விதமான பரிவர்த்தனை மீதுதான் முதலாளித்துவ உற்பத்தி அல்லது கூலி அமைப்பு முறை நிர்மாணிக்கப் பட்டுள்ளது; இது போன்ற பரிவர்த்தனை தொடர்ச்சியாகத் தொழிலாளியைத் தொழிலாளியாகப் புனருற்பத்தி செய்யவும் முதலாளியை முதலாளியாகப் புனருற்பத்தி செய்யவும் காரணமாக இருக்கிறது.

உபரி மதிப்பின் விகிதம், மற்றெல்லாச் சூழ்நிலைகளும் மாறாதிருந்தால், உழைக்கும் சக்தியின் மதிப்பைத் திரும்பவும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான வேலை நாளின் பகுதிக்கும் முதலாளிக்காக வேலை செய்த உபரி நேரம் அல்லது உபரி உழைப்புக்கும் இடையே உள்ள விகிதாச்சாரத்தைப் பொறுத்திருக்கும். எனவே உபரி மதிப்பின் விகிதம், ஒரு தொழிலாளி தனது உழைக்கும் சக்தியின் மதிப்பைத் திரும்பவும் உற்பத்தி செய்வதற்கு அல்லது

* — ஒரு குறிப்பிட்ட நேரம் வரையிலான.—ப-ர்.

தனது கூலிக்கு ஈடுசெய்வதற்கு மட்டும் எவ்வளவு மணி நேரம் உழைத்தால் போதுமோ அதற்கும் மேலாகவும் கூடுதலாகவும் வேலை நாள் நீடிக்கப்படுவதன் விகிதாச்சாரத்தைப் பொறுத்திருக்கிறது.

## 9. உழைப்பின் மதிப்பு

இப்போது நாம் மீண்டும் "உழைப்பின் மதிப்பு அல்லது விலை" என்னும் விஷயத்துக்குத் திரும்ப வேண்டும்.

உண்மையில், உழைப்பின் மதிப்பு அல்லது விலை என்பது உழைக்கும் சக்தியின் மதிப்புத்தான் என்பதையும் அந்த உழைக்கும் சக்தியைப் பராமரிப்பதற்குத் தேவையான பண்டங்களின் மதிப்புகளைக் கொண்டே அது அளக்கப்படுகிறது என்பதையும் பார்த்தோம். ஆனால் தொழிலாளி தனது உழைப்பைச் செய்து முடித்த பிறகே தன் கூலியைப் பெறுகிறான் என்பதாலும் மேலும் தான் முதலாளிக்கு உண்மையில் கொடுப்பது தனது உழைப்பையே என்பதை அவன் தெரிந்திருப்பதாலும் தனது உழைக்கும் சக்தியின் மதிப்பு அல்லது விலை தனது உழைப்பின் விலையாகவே அல்லது மதிப்பாகவே அவனுக்குத் தோன்றுகிறது. அவனுடைய உழைக்கும் சக்தியின் விலை, ஆறு மணி நேர உழைப்பு செயலாக்கப்பட்டுள்ள மூன்று ஷில்லிங் என்றால், அவன் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்யும் போது, அந்தப் பன்னிரண்டு மணி நேர உழைப்பில் ஆறு ஷில்லிங் மதிப்பு செயலாக்கப்பட்டிருந்தாலும், இந்த மூன்று ஷில்லிங்கையே பன்னிரண்டு மணி நேர உழைப்பின் மதிப்பாக அல்லது விலையாக அவன் கருதி விடுகிறான். இதிலிருந்து இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன:

முதலாவதாக, கறாராகக் கூறுவதானால் உழைப்பின் மதிப்பு, விலை என்பவை அர்த்தமற்ற பதங்களாக இருப்பினும், உழைக்கும் சக்தியின் மதிப்பு அல்லது விலை என்பது உழைப்பின் விலையாக அல்லது மதிப்பாகவே தோற்றமளிக்கிறது.

இரண்டாவதாக, தொழிலாளியின் அன்றாட உழைப்பின் ஒரு பகுதிக்கே ஊதியம் தரப்படுகிறது; மற்றொரு

பகுதிக்கு ஊதியம் தரப்படுவதில்லை; ஊதியம் தரப்படாத அந்த உழைப்பின் அல்லது உபரி உழைப்பின் சேமிப்பிலிருந்தே சரியாக உபரி மதிப்பு அல்லது லாபம் பெறப்படுகிறது. இப்படியெல்லாமிருந்தும் முழு உழைப்புமே ஊதியம் தரப்பட்டுவிட்ட உழைப்புப் போலவே தோன்றுகிறது.

இந்தப் போலியான தோற்றம் கூலி உழைப்பை உழைப்பின் பிற வரலாற்று பூர்வமான வடிவங்களிலிருந்து தனித்துப் பிரித்துக் காட்டுகிறது. கூலி அமைப்பு முறையின் கீழ் ஊதியமற்ற உழைப்பும் ஊதியமுள்ள உழைப்பாகத் தோன்றுகிறது. இதற்கு மாருக, அடிமையைப் பொறுத்தவரையில் ஊதியம் தரப்பட்ட அவனது உழைப்பின் பகுதிகூட ஊதியம் தரப்படாததாகவே தோன்றுகிறது. அடிமை வேலை செய்ய வேண்டுமானுல் அவன் நிச்சயமாக வாழ வேண்டும். அவனது வேலை நாளில் ஒரு பகுதி அவனது சொந்தப் பராமரிப்புக்கான மதிப்பை ஈடுசெய்வதற்குப் போய்விடுகிறது. ஆனுல் அவனுக்கும் அவனது எஜமானனுக்குமிடையே எவ்வித பேரமும் நடப்பதில்லையாதலால், அந்த இரு தரப்பாரிடையேயும் எவ்வித விற்றல்-வாங்கல் நடவடிக்கைகளும் நடக்கவில்லையாதலால் அவனது உழைப்பு முழுவதும் இலவசமாகத் தரப்பட்டுவிட்டது போலவே தோன்றுகிறது.

இன்னொரு புறம் பண்ணையடிமையை, ஒரு வகையில் சொன்னுல், அவன் சமீப காலம் வரை கிழக்கு ஐரோப்பா முழுவதும் இருந்த மாதிரியே, எடுத்துக் கொள்ளுங்கள். இந்த விவசாயி தனது சொந்த நிலத்திலோ அல்லது தனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திலோ சுமார் மூன்று நாள் வேலை செய்தான். அடுத்த மூன்று நாள் தனது பிரபுவின் பண்ணையில் இலவசமாகக் கட்டாய ஊழியம் செய்தான். இங்கே ஊதியமுள்ள, ஊதியமில்லாத பகுதிகள் கால, இட வரம்புகளோடு தெளிவாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேம். ஒரு மனிதனை இலவசமாக வேலை செய்ய வைக்கும் இந்த இயற்கைக்கு மாறுன எண்ணத்தைக் கண்டு நமது மிதவாதிகளிடம் நீதிநெறிக் கோபம் கரைபுரண்டோடுகிறது.

ஆனுல் உண்மையில், ஒரு மனிதன் வாரத்தில் மூன்று

நாள் தனக்காகத் தன் நிலத்தில் வேலை செய்துவிட்டு மூன்று நாள் தனது பிரபுவின் பண்ணையில் இலவசமாக வேலை செய்வதும், அவன் தொழிற்சாலையில் தினசரி தனக்காக ஆறு மணி நேரமும் தனது முதலாளிக்காக ஆறு மணி நேரமும் வேலை செய்வதும் இரண்டும் ஒன்றே. ஆயினும் இரண்டாவது ரக வேலையில் உழைப்பின் ஊதியமுள்ள பகுதியும் ஊதியமில்லாத பகுதியும் பிரிக்க முடியாதபடி ஒன்ருேடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த முழு பேரத்தின் தன்மையும் ஒரு ஒப்பந்தத்தின் மூலமும் வார இறுதியில் கிடைக்கும் சம்பளத்தின் மூலமும் பூரணமாக மூடிமறைக்கப்படுகின்றது. ஒன்றில் இலவச உழைப்பு மனமொப்பித் தரப்படுவது போலவும் இன்னென்றில் அந்த இலவச உழைப்பு பலவந்தமாக்கப்பட்டிருப்பது போலவும் தோன்றுகிறது. இதுதான் உள்ள வித்தியாசமெல்லாம்.

''உழைப்பின் மதிப்பு'' என்னும் சொல்லை நான் உபயோகப்படுத்தும் போது ''உழைக்கும் சக்தியின் மதிப்பு'' என்பதைக் குறிக்கும் பெருவழக்குக் கொச்சைச் சொல் என்கிற வகையிலேயே அதனை நான் உபயோகிப்பேன்.

## 10. பண்டத்தை அதன் மதிப்பில் விற்பதால் லாபம் கிடைக்கிறது

ஆறு பென்னிகளுக்குச் சமமான ஒரு மதிப்பில் ஒரு மணி நேர சராசரி உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கிறது என்ருே அல்லது ஆறு ஷில்லிங் பெறுமான மதிப்பில் பன்னிரண்டு மணி நேர சராசரி உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கிறது என்ருே வைத்துக் கொள்வோம். அதோடு, உழைப்பின் மதிப்பு மூன்று ஷில்லிங் அல்லது ஆறு மணி நேர உழைப்பின் விளைவாக ஏற்பட்ட உற்பத்திப் பொருள்களின் மதிப்புக்கு ஈடானது என்றும் வைத்துக் கொள்வோம். அப்போது, ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்ட கச்சாப் பொருள், இயந்திரத் தேய்மானம் முதலியவற்றில் இருபத்து நான்கு மணி நேர சராசரி உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கிறதென்ருல், அந்த உற்

பத்திச் சாதனங்களின் மதிப்பு பன்னிரண்டு ஷில்லிங்குகளா கும். மேலும், முதலாளியால் வேலைக்கமர்த்தப்பட்ட தொழி லாளி அந்த உற்பத்திச் சாதனங்களோடு மேற்கொண்டும் பன்னிரண்டு மணி நேர உழைப்பைக் கூட்டினுல், இந்தப் பன்னிரண்டு மணி நேரம் மேலும் ஆறு ஷில்லிங் பெறு மான கூடுதல் மதிப்பை உண்டு பண்ணுகிறது. ஆகவே அந்த உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பு முப்பத்து ஆறு மணி நேரம் செயலாக்கப்பட்ட உழைப்பின் அளவாக, பதினெட்டு ஷில்லிங்குகளுக்குச் சமமானதாக இருக்கும். ஆனுல் உழைப்பின் மதிப்பு அல்லது தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் கூலி மூன்று ஷில்லிங் மட்டுமேயாதலால், தொழிலாளியால் வேலை செய்து பண்டத்தின் மதிப்பில் செயலாக்கப்பட்ட ஆறு மணி நேர உபரி உழைப்புக்கு முதலாளி எதுவும் கொடுக்கமாட்டான். எனவே இப் பண்டத்தை அதன் மதிப்பின் அளவுக்கே பதினெட்டு ஷில்லிங்குக்கு விற்று, முதலாளி மூன்று ஷில்லிங் மதிப்பை, அதற்காக எதுவும் தராமல், பெறுவான். இந்த மூன்று ஷில்லிங்கே உபரி மதிப்பு அல்லது லாபமாக ஆகி அவனது பைக்குள் செல்கிறது. இவ்விதம் முதலாளி தனது பண்டத்தை அதன் மதிப்புக்கு மேல் அதிகமாக விற்காமல் அதன் உண்மையான மதிப்புக்கே விற்று மூன்று ஷில்லிங் லாபம் பெறுவான்.

ஒரு பண்டத்தின் மதிப்பு அதில் அடங்கியுள்ள உழைப் பின் ஒட்டுமொத்தமான அளவைக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது. ஆனுல் அந்த உழைப்பின் அளவில் ஒரு பகுதி, கூலி வடிவத்தில் ஈடு செலுத்தப்பட்ட மதிப்பாகச் செய லாக்கப்படுகிறது; மறு பகுதியோ, எவ்வகையான ஈடும் செலுத்தப்படாத மதிப்பாகச் செயலாக்கப்படுகிறது. அதா வது பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பில் ஒரு பகுதி ஊதியம் பெற்ற உழைப்பு, மற்ெெருரு பகுதி ஊதியம் பெருத உழைப்பு. எனவே, பண்டத்தை அதன் மதிப்பிற்கே அதா வது அதில் பருவடிவாக்கப்பட்டிருக்கும் உழைப்பின் ஒட்டு மொத்தமான அளவிற்கே விற்பதால் முதலாளி நிச்சய மாக லாபத்திற்கே விற்பான். அவன் தான் ஈடு செலுத்திப்

பெற்றதை மட்டுமின்றி, தனது தொழிலாளியின் உழைப்பு செலவிடப்பட்டிருந்த போதிலும் தான் எதையும் செலுத்தாமல் பெற்றதையும்கூட விற்கிறான். முதலாளிக்குப் பண்டத்தின் மதிப்பு என்பது ஒன்று; அதன் உண்மையான மதிப்பு என்பது மற்றொன்று—இரண்டும் வெவ்வேறான விஷயங்கள். எனவே, பொதுவான சராசரி லாபங்கள், பண்டங்களை அவற்றின் உண்மையான மதிப்புகளுக்கு விற்பதால் கிடைக்கின்றனவே தவிர அம்மதிப்புகளுக்கு மேலாக விற்பதால் அல்ல என்பதை மீண்டும் கூறுகிறேன்.

## 11. உபரி மதிப்பு பிரிவினையாகும் பற்பல பங்குகள்

உபரி மதிப்பை, அல்லது பண்டத்தின் மொத்த மதிப்பில் எப்பகுதியில் தொழிலாளியின் உபரி உழைப்பு அல்லது ஊதியம் தரப்படாத உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கிறதோ அப்பகுதியை நான் லாபம் என்று அழைக்கிறேன். அந்த லாபமனைத்தையும் வேலைக்கமர்த்தும் முதலாளியே தன் பைக்குள் போட்டுக் கொள்வதில்லை. இந்த உபரி மதிப்பின் ஒரு பங்கை நில உடைமைக்காரன் விவசாயம், கட்டிடங்கள், ரயில்வேக்கள் அல்லது வேறு எந்த உற்பத்திக் காரியங்களுக்காகவும் பயன்படும் நிலத்தின் மீது தனக்குள்ள ஏகபோகம் காரணமாக வாடகை என்ற பெயரால் பறித்துக் கொள்கிறான். மற்றொரு புறத்தில், உழைப்புச் சாதனங்களைப் பெற்றிருப்பதே வேலைக்கமர்த்தும் முதலாளியை உபரி மதிப்பை உற்பத்தி செய்யவும் அல்லது வேறு விதமாகச் சொன்னால் ஊதியம் கொடுக்காத உழைப்பில் ஒரு பகுதியைத் தனதாக்கிக் கொள்ளவும் வல்லவனுக்குகிறது. இந்த விஷயமே உழைப்புச் சாதனங்களை உடைமையாகக் கொண்டு அவற்றை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ வேலைக்கமர்த்தும் முதலாளிக்குக் கடனாகக் கொடுப்பவனை, ஒரு வார்த்தையில் சொன்னால் லேவாதேவி முதலாளியை, அந்த உபரி மதிப்பின் இன்னொரு பகுதியை வட்டி என்ற பெயரால் கோரிப் பெற வல்லவனுக்குகிறது. இவ்வாறாக, வேலைக்கமர்த்

தும் முதலாளிக்கு அந்த வகையில் தொழில் அல்லது வர்த்தக லாபம் என்று அழைக்கப்படுவது மட்டுமே மிஞ்சுகிறது.

மேற்சொன்ன மூன்று வகையோரிடையே ஒட்டு மொத்த உபரி மதிப்பின் இந்தப் பிரிவினை எந்த விதிகளைக் கொண்டு ஒழுங்காக்கப்படுகிறது என்ற பிரச்சினை நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டது. எனினும் முன்கூறியவற்றிலிருந்து கீழ்க்கண்டவை விளைகின்றன:

வாடகை, வட்டி, தொழில் லாபம் இவையெல்லாம் பண்டத்தின் உபரி மதிப்பினுடைய அல்லது அதில் உள்ளடங்கியுள்ள ஊதியம் தரப்படாத உழைப்பினுடைய வெவ்வேறு பகுதிகளின் வெவ்வேறு பெயர்கள் மட்டுமே; அவை ஒரே மாதிரியாக இந்த ஊற்றுக்கண்ணிலிருந்து, இந்த ஊற்றுக் கண்ணிலிருந்து மட்டுமே பெறப்படுகின்றன. அவை நேராக நிலத்திலிருந்து அல்லது நேராக மூலதனத்திலிருந்து பெறப்படுவதில்லை. ஆனால் நிலமும் மூலதனமும் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு, வேலைக்கமர்த்தும் முதலாளி தொழிலாளியிடமிருந்து பிழிந்தெடுக்கும் உபரி மதிப்பிலிருந்து தங்கள் பங்குகளைப் பெற உதவுகின்றன. தொழிலாளியைப் பொறுத்தவரை, தன்னுடைய உபரி உழைப்பின், அல்லது ஊதியம் பெறாத உழைப்பின் மூலமாக உண்டாகும் உபரி மதிப்பு முழுவதையுமே வேலைக்கமர்த்தும் முதலாளி தன் பைக்குள் போட்டுக் கொள்கிறானா அல்லது அதன் பகுதிகளை வாடகை, வட்டி என்ற பெயரால் மூன்றாம் தரப்பினருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறானா என்பது இரண்டாந்தர முக்கியத்துவம் உள்ள விஷயமே ஆகும். ஒருவேளை, வேலைக்கமர்த்தும் முதலாளி தனது சொந்த மூலதனத்தையே உபயோகப்படுத்திக் கொள்பவனாக, தானே நில உடைமைக்காரனாக இருந்தால், அப்போது தான் உபரி மதிப்பு முழுவதும் அவன் பைக்குள் செல்லும்.

வேலைக்கமர்த்தும் முதலாளி உபரி மதிப்பிலிருந்து இறுதியாகத் தனக்கென்று வைத்துக் கொள்ள முடியக்கூடிய பங்கு என்னவாக இருந்தாலும், இந்த உபரி மதிப்பைத் தொழிலாளியிடமிருந்து நேரடியாகப் பிழிந்தெடுப்பவன்

அவனே தான். எனவே, வேலைக்கமர்த்தும் முதலாளிக்கும் கூலி உழைப்பாளிக்குமிடையே உள்ள இந்த உறவின் மீது தான் முழுக் கூலி அமைப்பு முறையும் தற்போதைய முழு உற்பத்தி முறையும் நிலை கொண்டிருக்கின்றன. ஆகையால், நமது விவாதத்தில் கலந்து கொண்ட சகபிரஜைகள் சிலர், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் விலைவாசி உயர்வு வேலைக்க மர்த்தும் முதலாளியையும் நில உடைமைக்காரனையும் பணம் படைத்த முதலாளியையும் வேண்டுமானால் வரி வசூலிப்பவனையும் சமமற்ற அளவுகளில் பாதிக்கலாம் என்று கூறியதில் உண்மையிருந்தாலும், அவர்கள் விஷயங்களை நய மாக மழுப்பவும் வேலைக்கமர்த்தும் முதலாளிக்கும் தொழி லாளிக்குமிடையே உள்ள இந்த அடிப்படையான உறவை இரண்டாம் பட்சமாகக் காட்டவும் முயன்றது தவறாகும்.

மேலே கூறப்பட்டதிலிருந்து இன்னொரு விளைவும் ஏற்படுகிறது.

பண்டத்தின் மதிப்பில் கச்சாப் பொருள்கள், இயந்திரங் கள் ஆகியவற்றின் மதிப்பை மட்டும், சுருங்கச் சொன்னால் பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை மட்டும் குறிக்கும் பகுதி எவ்வகையான வருவாயாகவும் அமைவதில்லை; அது மூலதனத்தை மட்டுமே மீட்டளிக் கிறது. இந்தப் பிரச்சினை ஒருபுறமிருக்க, பண்டத்தின் மதிப்பின் மற்றொரு பகுதி அதாவது வருவாயாக அமையக் கூடிய அல்லது கூலி, லாபம், வாடகை, வட்டி என்ற ரூபங்களில் செலவழிக்கப்படக்கூடிய பகுதி கூலியின் மதிப் பால், வாடகையின் மதிப்பால், லாபங்களின் மதிப்பால், இன்னும் இது போன்றவற்றால் அமைந்திருக்கிறது என்று நினைப்பது தவறு. நாம் கூலி விஷயத்தை ஒதுக்கி வைத்து விட்டு, தொழில் லாபங்கள், வட்டி, வாடகை ஆகியவற் றைப் பற்றி மட்டும் முதலில் பரிசீலிப்போம். பண்டத்தில் அடங்கியிருக்கும் உபரி மதிப்பு அல்லது ஊதியமற்ற உழைப்பு செயலாக்கப்பட்டிருக்கும் அதன் மதிப்பின் பகுதி மூன்று வெவ்வேறு பெயர்களைக் கொண்ட மூன்று வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிகிறது என்பதைச் சற்று முன்னர் பார்த் தோம். ஆனால் பண்டத்தின் இந்தப் பகுதியின் மதிப்பு இந்த

மூன்று பிரிவுகளின் தனித்தனியான மதிப்புகளின் கூட்டுத் தொகை கொண்டு அமைந்திருக்கிறது அல்லது உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது முற்றிலும் தவறாகும்.

ஒரு மணி நேர உழைப்பால் ஆறு பென்னி மதிப்பு ஏற்படுமானால், தொழிலாளியின் வேலை நேரம் பன்னிரண்டு மணிகளானால், இதில் பாதி நேரம் ஊதியம் தரப்படாத உழைப்பானால் இந்த உபரி உழைப்பு பண்டத்தோடு மூன்று ஷில்லிங் உபரி மதிப்பை அதாவது எவ்வித ஈடும் கொடுக்கப் படாத மதிப்பைக் கூட்டும். இந்த மூன்று ஷில்லிங் உபரி மதிப்பே, வேலைக்கமர்த்தும் முதலாளி நில உடைமைக்காரனோடும் லேவாதேவிக்காரனோடும் எந்த விகிதாச்சாரத்தில் வேண்டுமானாலும் பிரித்துக் கொள்ளக்கூடிய முழு நிதியாக அமைகிறது. இந்த மூன்று ஷில்லிங் மதிப்பே அவர்கள் தங்களுக்குள் பிரித்துக் கொள்வதற்குள்ள மதிப்பின் வரம்பாக அமைகிறது. ஆனால் வேலைக்கமர்த்தும் முதலாளி தானே தன் லாபத்துக்காகவென்று பண்டத்தின் மதிப்போடு ஒரு எதேச்சாதிகாரமான மதிப்பைக் கூட்டுவதாகவும் அத்தோடு நில உடைமைக்காரனுக்கென்றும், பிற வகைகளிலும் மதிப்புகள் சேர்க்கப்படுவதாகவும் எதேச்சாதிகாரமாகத் தீர்மானிக்கப்பட்ட இந்தக் கூடுதலான மதிப்புகள் மொத்த மதிப்பாக அமைவதாகவும் விஷயம் நிகழ்வதில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட மதிப்பு மூன்று பகுதிகளாகப் பிரிவினையாகும் விஷயத்தை அந்த மதிப்பு மூன்று தனித்தனியான மதிப்புகளின் கூட்டுச் சேர்க்கையால் உருவாகும் விஷயத்தோடு சேர்த்துக் குழப்பி, வாடகை, லாபம், வட்டி, இவை பெறப்படும் கூட்டு மதிப்பை ஒரு எதேச்சாதிகாரமான பரிமாணமாக மாற்றும் பெருவழக்கான கருத்தோட்டம் எவ்வளவு தவறானது என்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஒரு முதலாளிக்குக் கிடைக்கும் மொத்த லாபம் 100 பவுனுக்குச் சமமானால் அந்தத் தொகையை முழுமையான பரிமாணம் என்ற வகையில் கணக்கெடுக்கும் போது அதை நாம் லாபத் தொகை என்கிறோம். ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கும் அதே 100 பவுனுக்கும் உள்ள விகிதாச்சாரத்தைக் கணக்கிடும் பொழுது, நாம் இந்தச் சார்புநிலை அளவை,

லாப விகிதம் என்கிறேம். இந்த லாப விகிதத்தை இரு வகைகளில் கூறலாம் என்பது தெளிவு.

கூலிக்காக ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் 100 பவுன் என்று வைத்துக் கொள்வோம். உபரி மதிப்பாகச் சிருஷ்டிக்கப் பட்டதும் 100 பவுன் என்று வைத்துக் கொள்வோம். தொழிலாளியின் வேலை நேரத்தில் பாதி ஊதியம் தரப்படாத உழைப்பு கொண்டது என்பதை இது நமக்குக் காட்டும். கூலிக்காக ஈடுபடுத்திய மூலதனத்தின் மதிப்பைக் கொண்டு இந்த லாபத்தை அளவிட்டால், லாப விகிதம் நூறு சதவிகிதம் ஆகிறது என்று நாம் சொல்வோம்; ஏனென்றல் ஈடுபடுத்தப்பட்ட மதிப்பு நூருகவும் பெறப் பட்ட மதிப்பு இரு நூருகவுமிருக்கும்.

வேறு வகையில், கூலியாக ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தை மட்டுமின்றி, ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தால், உதாரணமாக, மொத்த மூலதனம் 500 பவுனில், 400 பவுன் கச்சாப் பொருள்கள், இயந்திரங்கள் முதலியவற்றின் மதிப்பைக் குறிப்பதாக இருக்குமானுல், அப்போது லாப விகிதம் இருபது சதவிகிதம் மட்டும்தான் என்று சொல்வோம்; ஏனென்றல் லாபம் ஆகிய நூறு, ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் ஐந்தில் ஒரு பங்காகத்தானிருக்கும்.

லாப விகிதத்தைப் பற்றிக் குறிப்பிட்ட முதல் முறையே ஊதியம் கொடுக்கப்பட்ட உழைப்புக்கும் ஊதியம் கொடுக்கப்படாத உழைப்புக்குமிடையே உள்ள உண்மையான விகிதாச்சாரத்தை, உழைப்பின் exploitation* (இந்தப் பிரெஞ்சுச் சொல்லை உபயோகப்படுத்த நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்) உடைய உண்மையான தரத்தை உங்களுக்கு எடுத்துக்காட்டும் ஒரே முறையாகும். இரண்டாவது முறை பொது வழக்கிலிருக்கும் முறை, உண்மையில் சில நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையே. எவ்வகையிலும், முதலாளி தொழிலாளியிடமிருந்து அபகரிக்கும் இலவச உழைப்பின் அளவை மூடி மறைப்பதற்கு இது மிகவும் உபயோகமாக இருக்கிறது.

* — சுரண்டல். — ப-ர்.

இதற்கு மேலும் நான் சொல்ல வேண்டியிருக்கிற விஷயங்களில் லாபம் என்னும் சொல்லே, முதலாளி அபகரிக்கும் உபரி மதிப்பின் முழுத் தொகைக்குமே தான்—அது பல்வேறு தரப்பினரிடையே செய்து கொள்ளப்படும் பிரிவினையைப் பற்றிக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல்—உபயோகிக்கப் போகிறேன். அதேபோல, லாப விகிதம் என்னும் சொற்களைப் பயன்படுத்துகையில் கூலியாக ஈடுபடுத்தப் படும் மூலதனத்தின் மதிப்பின் விகிதமாகவே லாபத்தை எப்போதும் அளவிடப் போகிறேன்.

## 12. லாபம், கூலி, விலைகள் இவற்றின் பொது விகிதாச்சாரம்

பண்டத்தின் மதிப்பிலிருந்து அதில் பயன்படுத்தப் பட்டுள்ள கச்சாப் பொருள்கள் மற்றும் பிற உற்பத்திச் சாதனங்களின் மீட்டளிக்கும் மதிப்பைக் கழித்துவிட்டால், அதாவது அதில் அடங்கியுள்ள பழைய உழைப்பின் மதிப்பைக் கழித்துவிட்டால், எஞ்சியிருக்கும் அதன் மதிப்பு கடைசியாக வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளி கூட்டிய உழைப்பின் அளவு ஆகிவிடும். அந்தத் தொழிலாளி தினசரி பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்தால், பன்னிரண்டு மணி நேர சராசரி உழைப்பு ஆறு ஷில்லிங் பெறுமான ஓரளவு தங்கத்தில் பருவடிவு பெற்றிருந்தால், இந்த ஆறு ஷில்லிங் கூடுதல் மதிப்பே அவனது உழைப்பால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரே மதிப்பாக இருக்கும். அவனது உழைப்பு நேரத்தால் தீர்மானிக்கப்படும் இந்தக் குறிப்பிட்ட மதிப்புதான் அவனும் முதலாளியும் தங்கள் தங்கள் பங்குகளை அல்லது ஈவுகளைப் பெற வேண்டியுள்ள ஒரே தொகை, கூலியாகவும் லாபமாகவும் பிரித்துக் கொள்ளப்பட வேண்டியுள்ள ஒரே மதிப்பு ஆகும். இந்த மதிப்பு இரு தரப்பாரிடையேயும் எத்தகைய வெவ்வேறான விகிதாச்சாரங்களில் பிரித்துக் கொள்ளப்பட்டாலும் அதன் அளவு மாற்றமடையாதென்பது தெளிவு. அதோடு, ஒரு தொழிலாளிக்குப் பதிலாக முழு உழைக்கும் ஜனப் பகுதியையே வைத்தாலும், உதாரண

மாக ஒரு வேலை நாளைக்குப் பதிலாக ஒரு கோடி இருபது லட்சம் வேலை நாட்களை வைத்தாலும் எந்த மாற்றமும் ஏற்படாது.

முதலாளியும் தொழிலாளியும் இந்த வரையறுக்கப் பட்ட மதிப்பைத்தான், அதாவது தொழிலாளியின் ஒட்டு மொத்த உழைப்பைக் கொண்டு கணிக்கப்படும் மதிப்பைத் தான் தங்களுக்குள் பிரித்துக் கொள்ள வேண்டும் என்கிற போது, இதில் ஒருவர் எவ்வளவு அதிகம் பெறுகிறாரோ அவ்வளவு மற்றவருக்குக் குறையும்; ஒருவர் எவ்வளவு குறைவாகப் பெறுகிறாரோ அவ்வளவு மற்றவருக்கு அதிக மாகும். எப்போதானாலும் ஒரு குறிப்பிட்ட பரிமாணத்தில் ஒரு பகுதி அதிகரித்தால் இன்னொரு பகுதி அந்த அளவுக்குக் குறையவே செய்யும். கூலி மாறினால் லாபமும் எதிர்த் திசையில் மாற்றமடையும். கூலி குறைந்தால், லாபம் அதி கரிக்கும்; கூலி அதிகரித்தால், லாபம் குறையும். நாம் முன் சொன்ன உதாரணத்தின்படி தொழிலாளி தான் சிருஷ்டித்த மதிப்பில் பாதிக்குச் சமமாக மூன்று ஷில்லிங் பெற்றால் அல்லது அவனது முழு வேலை நாள் பாதி ஊதியமுள்ளதாக வும் பாதி ஊதியமில்லாததாகவும் இருந்தால், லாப விகிதம் 100 சதவிகிதமாக இருக்கும்; ஏனென்றால் முதலாளியும் மூன்று ஷில்லிங்குகள் பெறுவான். தொழிலாளி இரண்டு ஷில்லிங்குகள் மட்டும் பெற்றால் அல்லது முழு நாளில் மூன் றில் ஒரு பங்கு மட்டும் தனக்காகவென்று வேலை செய்தால், முதலாளிக்கு நான்கு ஷில்லிங்குகள் கிடைக்கும்; அப்போது லாப விகிதம் 200 சதவிகிதமாக இருக்கும். தொழிலாளி நான்கு ஷில்லிங்குகள் பெற்றால், முதலாளி இரண்டு ஷில் லிங்குகள்தான் பெறுவான்; அப்போது லாப விகிதம் 50 சதவிகிதத்திற்கு வீழ்ச்சியுறும். ஆயினும் இந்த மாற்றங்கள் பண்டத்தின் மதிப்பை எவ்வகையிலும் பாதிக்கமாட்டா. எனவே, பொதுவான கூலி உயர்வு பொதுவான லாப விகி தத்தைக் குறைக்குமே தவிர, பண்டங்களின் மதிப்புகளைப் பாதிக்காது.

ஆனால் இறுதியாகத் தங்களது மார்க்கெட் விலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும் பண்டங்களின்

மதிப்புகள் அவற்றில் பொதிந்துள்ள உழைப்பின் மொத்த அளவுகளைக் கொண்டு மட்டும் தீர்மானிக்கப்படுகின்றனவே தவிர, ஊதியமுள்ள உழைப்பு, ஊதியமில்லாத உழைப்பு என்னும் பிரிவினையால் அல்ல என்ற போதிலும், இதைக் கொண்டு, உதாரணமாக, பன்னிரண்டு மணி நேரத்தில் உற்பத்தியாகும் தனிரகப் பண்டங்களின் மதிப்புகளோ, அல்லது தொகுப்பான பண்டங்களின் மதிப்புகளோ நிலையான வையாக இருக்கும் என்று கூறிவிட முடியாது. ஒரு குறிப் பிட்ட உழைப்பு நேரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது குறிப்பிட்ட உழைப்பின் அளவைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கை அல்லது திரள், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத் திருக்குமேயன்றி, அந்த உழைப்பின் நேரப்பரப்பையோ அல்லது நீடிப்பையோ பொறுத்திருக்காது. உதாரணமாக, நூற்கும் உழைப்பின் ஒரு குறிப்பிட்ட உற்பத்தித் திறனைக் கொண்டு, பன்னிரண்டு மணி நேர வேலை நாளில் பன் னிரண்டு பவுண்டு நூல் உற்பத்தி செய்யப்படலாம்; அதே கால அளவில் இதைவிடக் குறைந்த உற்பத்தித் திறனைக் கொண்டு இரண்டு பவுண்டு நூல் மட்டுமே உற்பத்தி செய்யப் படலாம். அப்போது, பன்னிரண்டு மணி நேரச் சராசரி உழைப்பு ஆறு ஷில்லிங் மதிப்பில் செயலாக்கப்பட்டிருக்கிற தென்றால், முதலில் கூறிய இனத்தில் பன்னிரண்டு பவுண்டு நூலின் விலை ஆறு ஷில்லிங்குகளாக இருக்கும்; இரண்டா வது கூறிய இனத்தில் இரண்டு பவுண்டு நூலின் விலை கூட ஆறு ஷில்லிங்குகளாகவே இருக்கும். எனவே, ஒரு பவுண்டு நூலின் விலை ஒரு இனத்தில் ஆறு பென்னிகளாகவும் இன் னொரு இனத்தில் மூன்று ஷில்லிங்குகளாகவுமிருக்கும். இந்த விலை வித்தியாசம் ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தித் திறன்களிலுள்ள வித்தியாசத்திலிருந்துதான் ஏற்படும். உற் பத்தித் திறன் அதிகமாயிருக்கையில் ஒரு பவுண்டு நூலில் ஒரு மணி நேர உழைப்பு செயலாக்கப்படும்; உற்பத்தித் திறன் குறைவாயிருக்கையில் ஒரு பவுண்டு நூலில் ஆறு மணி நேர உழைப்பு செயலாக்கப்படும். எனவே, முதல் வகையில், கூலி ஒப்பு நோக்கில் உயர்வாகவும், லாப விகிதம்

குறைவாகவும் இருந்தாலும் ஒரு பவுண்டு நூலின் விலை ஆறு பென்னிகளாக மட்டுமே இருக்கும்; இரண்டாவது வகையில், கூலி குறைவாகவும் லாப விகிதம் அதிகமாகவுமிருந்தாலும் ஒரு பவுண்டு நூலின் விலை மூன்று ஷில்லிங்குகளாக இருக்கும். இது இப்படித் தான் இருக்கும்; ஏனென்ருல், ஒரு பவுண்டு நூலின் விலை அதில் செலுத்தப்பட்டுள்ள உழைப்பின் மொத்த அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறதே தவிர, அந்த மொத்த அளவின் ஊதியமுள்ள உழைப்பு, ஊதியமில்லாத உழைப்பு என்னும் விகிதாச்சாரப் பிரிவினை கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. எனவே, உயர்ந்த விலை உழைப்பு குறைந்த விலைப் பண்டங்களையும், குறைந்த விலை உழைப்பு உயர்ந்த விலைப் பண்டங்களையும் உற்பத்தி செய்யும் என்று நான் முன்னுல் கூறிய உண்மை இவ்வாருகத் தனது முரணுரைத் தோற்றத்தை இழந்துவிடுகிறது. இது எதைக் குறிக்கிறது? ஒரு பண்டத்தின் மதிப்பு அதனுள் பொதிந்திருக்கும் உழைப்பின் அளவினுல் கட்டுப்படுத்தப்படுகிறது; அதனுள் பொதிந்திருக்கும் அந்த உழைப்பின் அளவு ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உற்பத்தித் திறனை முற்றிலும் பொறுத்திருக்கிறது; எனவே, உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்துக்கும் ஏற்ப உழைப்பின் அளவும் மாறும் என்னும் பொது விதியையே இது குறிக்கிறது.

## 13. கூலி உயர்வுக்காகவோ அல்லது அது குறைக்கப்படுவதை எதிர்த்தோ நடந்த போராட்டங்களின் முக்கிய செய்திகள்

கூலி உயர்வைப் பெற, அல்லது கூலி வெட்டை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களின் முக்கிய சம்பவங்களைப் பற்றி இப்போது முழு கவனத்தோடு பரிசீலிப்போம்.

**1) உழைக்கும் சக்தியின் மதிப்பு** அல்லது இன்னும் பெரு வழக்கான பேச்சு முறையில் சொல்வதானுல், **உழைப்பின் மதிப்பு** அத்தியாவசியப் பொருள்களின் மதிப்பை, அல்லது

அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் அளவைக் கொண்டு தீர்மானமாகிறது என்று நாம் பார்த்தோம். அப்போது ஒரு குறிப்பிட்ட நாட்டில், ஒரு தொழிலாளிக்குச் சராசரியாகத் தினசரி தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களின் மதிப்பு ஆறு மணி நேர உழைப்பு பொதிந்திருக்கும் மூன்று ஷில்லிங்குகளுக்குச் சமமானல், அந்தத் தொழிலாளி தனது அன்றாடப் பராமரிப்புக்கு ஈடானதை உற்பத்தி செய்ய தினம் ஆறு மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கும். முழு வேலை நாள் பன்னிரண்டு மணி நேரம் கொண்டதாக இருந்தால், முதலாளி அவனது உழைப்பின் மதிப்பாக மூன்று ஷில்லிங்குகளை அவனுக்குக் கொடுப்பான். இந்த வேலை நாளில் பாதி ஊதியமில்லாத உழைப்பாக இருக்கும்; எனவே லாபம் 100 சதவிகிதமாக இருக்கும். ஆனல் உற்பத்தித் திறன் குறைந்ததன் காரணமாக அதே அளவு விவசாய விளைபொருள்களை உற்பத்தி செய்ய அதிக உழைப்பு தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்; அதனல் அன்றாட சராசரி அத்தியாவசியப் பொருள்களின் விலை மூன்று ஷில்லிங்காக இருந்தது, நான்கு ஷில்லிங்காக உயர்ந்து விடுகிறது என்றும் வைத்துக் கொள்வோம். அப்பொழுது உழைப்பின் மதிப்பு மூன்றில் ஒரு பங்கு அல்லது $33^1/_3$ சதவிகிதம் அதிகரிக்கும். தொழிலாளிக்கு அவனது பழைய வாழ்க்கைத் தரத்தின்படி தினசரிப் பராமரிப்புக்கு ஈடானதை உற்பத்தி செய்ய வேலை நாளில் எட்டு மணி நேரம் தேவைப்படும். எனவே, உபரி உழைப்பு ஆறு மணியிலிருந்து நான்கு மணியாகக் குறையும்; லாப விகிதம் 100 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதத்திற்கு வீழ்ச்சியுறும். தொழிலாளி கூலி உயர்வைக் கோரும் போது, தனது பண்டத்தின் அடக்க விலை கூடிவிடுகையில் அதன் கூடுதல் மதிப்பைப் பெற முயலும் மற்ற எந்தப் பண்ட விற்பனையாளனையும் போலவே, தனது உழைப்பின் கூடுதல் மதிப்பு தனக்கு அளிக்கப்பட வேண்டும் என்றே கோருகிறன். கூலி உயரவில்லை என்றல், அல்லது அத்தியாவசியப் பொருள்களின் அதிகரித்த மதிப்பை ஈடு செய்யும் வகையில் போதுமானபடி கூலி உயரவில்லை என்றல், உழைப்

பின் விலை, உழைப்பின் மதிப்பிற்கும் கீழாகத் தாழ்வுறும்; தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் மோசமடையும்.

ஆனால் எதிர்த் திசையிலும் கூட ஒரு மாற்றம் ஏற்படக் கூடும். உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வால், முன்னர் தேவைப்பட்ட அதே அளவு சராசரி அன்றாட அத்தியாவசியப் பொருள்கள் மூன்று ஷில்லிங்கிலிருந்து இரண்டு ஷில்லிங்காகக் குறையலாம்; வேறு விதமாகச் சொன்னால், அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் மதிப்புக்கு ஈடானதைப் புனருற்பத்தி செய்ய வேலை நாளில் ஆறு மணி நேரத்துக்குப் பதிலாக நான்கு மணி நேரம் மட்டுமே தேவைப்படுவதாக இருக்கலாம். இப்போது தொழிலாளி இரண்டு ஷில்லிங்குகள் கொடுத்தே, முன்பு மூன்று ஷில்லிங்குகள் கொடுத்து எவ்வளவு அத்தியாவசியப் பொருள்களை வாங்கினானோ அவற்றை வாங்க முடியும். உண்மையில், உழைப்பின் மதிப்பு குறைந்தாலும், அந்தக் குறைந்த மதிப்பைக் கொண்டே, முன்னர் பெற்ற அளவு பண்டங்களைப் பெற முடியும். அப்போது லாபம் மூன்று ஷில்லிங்கிலிருந்து நான்கு ஷில்லிங்காகவும், லாப விகிதம் 100 சதவிகிதத்திலிருந்து 200 சதவிகிதமாகவும் உயரும். தொழிலாளியின் முழு வாழ்க்கைத் தரம் மாறாமல் அப்படியே இருக்குமாயினும், அவனுடைய சார்புநிலைக் கூலியும், அதையொட்டி முதலாளியின் சமூக அந்தஸ்தோடு ஒப்பிடும் போது அவனது சார்புநிலைச் சமூக அந்தஸ்தும் குறைவுபட்டேயிருக்கும். அவ்வாறாகச் சார்பு நிலைக் கூலி குறைக்கப்படுவதைத் தொழிலாளி எதிர்த்துப் போராடினால், தனது சொந்த உழைப்பின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்களின் விளைவில் குறித்த பங்கு பெற முயற்சிக்கவும் சமூக மட்டத்தில் தனது முந்திய சார்பு நிலை அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்ளவும் மட்டுமே அவன் முயல்கிறான். இப்படி, தானியச் சட்டங்கள் ரத்தான பிறகு, தானியச் சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது அளிக்கப்பட்ட புனிதமான வாக்குறுதிகளைப் படுமோசமாக மீறி இங்கிலாந்து நாட்டின் ஆலை முதலாளிகள் கூலியைப் பொதுவாகப் பத்து சதவிகிதம் குறைத்தார்கள். தொழிலாளர்களின் எதிர்ப்பு முதலில்

சிதறடிக்கப்பட்டது என்றாலும், இப்போது நான் இங்கே விவரித்துக் கொண்டிருக்க முடியாத சில சந்தர்ப்பச் சூழ்நிலைமைகள் காரணமாக, பத்து சதவிகிதக் கூலி இழப்பு பின்னல் திரும்ப அடையப்பட்டது.

2) அத்தியாவசியப் பொருள்களின் மதிப்புகளும் அவற்றைத் தொடர்ந்து உழைப்பின் மதிப்பும் மாறாது அப்படியே இருக்கலாம். ஆனால் ஏற்கெனவே பணத்தின் மதிப்பில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவற்றின் பணவிலைகளில் ஒரு மாறுதல் ஏற்படக் கூடும்.

வளம் மிகுந்த புதுத் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலமாக, இப்போது, உதாரணமாக, இரண்டு அவுன்ஸ் தங்கத்தை உற்பத்தி செய்வதற்கு, முன்பு ஒரு அவுன்ஸ் தங்கத்தை உற்பத்தி செய்ததற்கான உழைப்பைவிட அதிகமான உழைப்பு தேவைப்படாதிருக்கலாம். அந்நிலையில் தங்கத்தின் மதிப்பு பாதியாக அல்லது ஐம்பது சதவிகிதமாகக் குறையும். அப்போது, இதர எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் போலவே உழைப்பின் மதிப்பும் முந்திய பணவிலைகளின் இரட்டிப்பு மடங்குகளால் குறிக்கப்படும். முன்னர் ஆறு ஷில்லிங்குகளால் குறிக்கப்பட்ட பன்னிரண்டு மணி நேர உழைப்பு இப்போது பன்னிரண்டு ஷில்லிங்குகளால் குறிக்கப்படும். தொழிலாளியின் கூலி ஆறு ஷில்லிங்குகளாக உயர்வதற்குப் பதிலாக முன் போலவே மூன்று ஷில்லிங்குகளாகவே இருந்தால் அவனது உழைப்பின் பணவிலை அவனது உழைப்பின் பாதி மதிப்புக்கு மட்டுமே சமமாக இருக்கும். இதனால் அவனது வாழ்க்கைத் தரம் மட்டுமீறிய வகையில் படுமோசமடையும். அவனது கூலி உயர்வடைந்த போதிலும், தங்கத்தின் மதிப்பு வீழ்ச்சிக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அந்த உயர்வு ஏற்படாவிட்டால் அப்போதும் அதிக அல்லது குறைந்த அளவில் இவ்வாறு நிகழும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் உழைப்பின் உற்பத்தித் திறன்களிலோ, அல்லது சப்ளையிலும் கிராக்கியிலுமோ, அல்லது பண்டங்களின் மதிப்புகளிலோ எவ்வித மாற்றமும் ஏற்படாது. அந்த மதிப்புகளின் பணப் பெயர்களைத் தவிர எதுவுமே மாறியிருக்காது. இது போன்ற

நிலைமையில் தொழிலாளி விகிதாச்சார அளவில் கூலி உயர்வு வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது என்று சொல்வது, அவன் பொருள்களாகப் பெறுவதற்குப் பதிலாக வெறும் பெயர்களைப் பெறுவதோடு திருப்தியடைய வேண்டும் என்று கூறுவதாகும். மேற்சொன்னது போன்று பணம் மலியும் போதெல்லாம், முதலாளிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு தொழிலாளியை வஞ்சிப்பதற்கு விழிப் போடிருக்கிறார்கள் என்பதைக் கடந்த காலச் சரித்திரமனைத் தும் நிரூபிக்கிறது. புதிய தங்க வயல்கள் கண்டுபிடிக்கப் பட்டதாலும், வெள்ளிச் சுரங்கங்கள் முன்னை விட நன்கு வேலை செய்வதாலும், பாதரசம் முன்னிலும் மலிவாகக் கிடைப்பதாலும் விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடைந்துவிட்டது என்று பொருளியலாளர் களைப் பெருந்தொகையில் கொண்ட ஒரு பிரிவு அறுதியிட்டுக் கூறுகிறது. தற்போது ஐரோப்பாவில் கூலி உயர்வுக்காகப் பரந்த அளவிலும் ஒரே காலத்திலும் நடக்கும் முயற்சிகளை இது விளக்கும்.

3) இதுவரை நாம், வேலை நாளுக்குக் குறிப்பிட்ட வரம்புகள் உண்டு என்றே வைத்துப் பேசி வந்தோம். என்றா லும் வேலை நாளுக்கு, அதற்கென்று, நிரந்தரமான வரம்பு கள் கிடையா. வேலை நாளை உழைப்பவனின் உடல் வலிமை இடங்கொடுக்கும் எல்லை வரையில் நீட்டுவது மூலதனத்தின் நிரந்தரமான போக்காகும்; ஏனென்றால் அப்பொழுதுதான் அந்த அளவுக்கு உபரி உழைப்பும் அதன் விளைவாகக் கிடைக் கும் லாபமும் அதிகரிக்கும். மூலதனம் வேலை நாளை நீட்டு வதில் எவ்வளவு அதிகமாக வெற்றி பெறுகிறதோ, அவ் வளவு அதிகமாக அது பிறரின் உழைப்பை அபகரிக்கும். பதினேழாம் நூற்றாண்டிலும் ஏன் பதினெட்டாம் நூற்றாண் டின் முதல் அறுபத்தாறு வருடங்களிலும்கூட இங்கிலாந்து முழுவதிலும் பத்து மணி நேர வேலை நாள்தான் மாமூலான வேலை நாளாக இருந்தது. உண்மையில் பிரிட்டிஷ் உழைப் பாளி மக்களை எதிர்த்து பிரிட்டிஷ் நிலப்பிரபுக்கள் நடத்திய யுத்தமான ஜாகோபியன் எதிர்ப்பு யுத்தத்தின்போது[35], மூலதனம் வெறியாட்டம் போட்டு, வேலை நாளைப் பத்து

மணி நேரத்திலிருந்து, பன்னிரண்டு, பதினன்கு, பதினெட்டு மணி நேரமாக நீடித்தது. மால்தூஸ் எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடியவர் என்று எவ்வகையிலும் சந்தேகப்பட முடியாதவர்; அப்படிப்பட்டவரே 1815ம் வருட வாக்கில் வெளியிடப்பட்ட ஒரு பிரசுரத்தில், இது போன்ற நிலைமை நீடிக்குமாஞல் நாட்டின் வாழ்வு அதன் ஊற்றுக்கண்ணி லேயே தாக்கப்பட்டதாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.[36] புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் பரந்த அளவில் புகுத்தப்படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1765ம் வருட வாக்கில், ''தொழிலேப் பற்றி ஒரு கட்டுரை'' என்னும் தலேப்பில் இங்கிலாந்தில் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. தொழிலாளி வர்க்கத்தின் பரம வைரியான இந்தப் பிரசுரத் தின் அஞமதேய ஆசிரியர் வேலே நாளின் வரம்புகளே விஸ்தரிக்க வேண்டியதின் அவசியத்தை ஆத்திரத்தோடு வற்புறுத்துகிருர். இதை நிறைவேற்றுவதற்கு வேறு சில வழிகளோடு, வேலே விடுதிகளே[37] நிறுவ வேண்டுமென்றும் அவை ''பயங்கர விடுதிகளாக'' இருக்க வேண்டுமென்றும் அவர் யோசனே கூறுகிருர். இந்தப் ''பயங்கர விடுதிகளுக்கு'' அவர் நிர்ணயிக்கும் வேலே நாள் வரம்பு எவ்வளவு? பன்னிரண்டு மணி நேரம்; 1832ல் முதலாளிகளும் அரசியல் பொருளி யலாளர்களும் அமைச்சர்களும் எந்த நேரம் உண்மையில் அமுலிலிருப்பதோடு பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தை களுக்கு அவசியமான உழைப்பு நேரமும்கூட என்று அறிவித்தார்களோ அதே பன்னிரண்டு மணி நேரம்.

தனது உழைக்கும் சக்தியை விற்பதன் மூலம்—தற் போதைய அமைப்பு முறையின் கீழ் அவன் அவ்வாறு செய்து தீர வேண்டும்—தொழிலாளி, அந்தச் சக்தியை உபயோ கித்துக் கொள்ள முதலாளிக்குத் தருகிருன்; ஆஞல் குறிப் பிட்ட பகுத்தறிவு வரம்புகளுக்குட்பட்டே. அவன் தனது உழைக்கும் சக்தியை அதைப் பராமரிக்கவே—அதன் இயல் பான தேய்மானம் ஒரு புறமிருந்தாலும்— விற்கிருனே தவிர அதை அழிப்பதற்காக அல்ல. அவன் தன்னுடைய உழைக்கும் சக்தியை அதன் அன்ருட அல்லது வாராந்தர மதிப்புக்கு விற்பதில், இரண்டு நாளேய அல்லது இரண்டு வாரத்தியத்

தேய்மானத்தையோ, சேதாரத்தையோ ஒரு நாள் அல்லது ஒரு வாரத்தில் அந்த உழைக்கும் சக்திக்கு ஏற்படுத்திவிடக் கூடாது என்னும் விஷயம் தொக்கி நிற்கிறது. 1,000 பவுன் பெறுமானமான ஒரு இயந்திரத்தை எடுத்துக் கொள்ளுங் கள். அந்த இயந்திரம் பத்து வருடங்களில் பயன்பட்டு முடிந்து விடுமானுல், அது உற்பத்தி செய்ய உதவும் பண்டங்களின் மதிப்பில் ஆண்டுதோறும் 100 பவுன்களேக் கூட்டும். அது ஐந்து வருடங்களுக்குள் பயன்பட்டு முடிந்து விடுமானுல் 200 பவுன்களேக் கூட்டும். வேறு விதமாகச் சொன்னுல் அதன் வருடாந்தரத் தேய்மானத்தின் மதிப்பு அது பயன்பட்டு முடிந்த காலத்திற்குத் தலே கீழ் வீதத் திலிருக்கும். ஆனுல் இந்த அம்சத்தில் தொழிலாளிக்கும் இயந்திரத்திற்கும் வேறுபாடு உண்டு. இயந்திரம் அதன் உபயோகத்துக்கு நேர் ஈடாகத் தேய்வதில்லே. மாருக மனிதனே, வெறுமே அளவில் கூடுதலான வேலேயால் தோற்றத்திற்குப் புலனுவதைவிட அதிகமான வீதாச்சாரத் தில் சிதைகிருன்.

வேலே நாளே அதன் முந்திய பகுத்தறிவு ரீதியான வரம்புகளுக்குக் குறைப்பதற்கு முயற்சிகள் செய்வதன் மூலம், அல்லது, மாமூலான வேலே நாளேச் சட்ட ரீதியாக நிர்ணயிக்கச் செய்யத் தங்களால் முடியாத போது, தங் களிடமிருந்து அபகரிக்கப்பட்ட உபரி நேரத்துக்கு ஏற்ற வீதாச்சாரத்தில் மட்டுமின்றி, அதற்கும் அதிகமான வீதாச் சாரத்தில் கூலியை உயர்த்தி மட்டுமீறிய வேலேயைக் கட்டுப்படுத்த முயற்சிகள் செய்வதன் மூலம் தொழிலாளிகள் தங்களுக்கும் தங்கள் இனத்துக்கும் ஆற்ற வேண்டிய கட மையைத்தான் நிறைவேற்றுகிருர்கள். மூலதனத்தின் கொடு மையான சுரண்டலுக்கு அவர்கள் வரம்புகள் மட்டுமே கட்டுகிருர்கள். நேரம் தான் மனிதனுடைய வளர்ச்சிக்கான பரப்பாகும். சுயேச்சையாகச் செலவழிப்பதற்குரிய நேரம் எவனிடம் இல்லேயோ, உண்ணல், உறங்கல் முதலிய வெறும் உடல் தேவைகளுக்கான இடைக்காலம் தவிர எவனுடைய வாழ்நாள் முழுவதும் முதலாளிக்காக உழைப்பதில் மூழ்கிப் போய்விடுகிறதோ, அவன் சுமை மிருகத்திற்கும்

கீழானவனுகிருன். அவன் பிறருக்குச் செல்வத்தை உற்பத்தி செய்யும் இயந்திரமாகி, உடல் சிதைந்து, பண்பற்ற உள்ளம் கொண்டவனுகிருன். என்ருலும் நவீனகாலத் தொழில்களின் வரலாறு காட்டுவது என்ன? மூலதனம் கட்டுப்படுத்தப்பட வில்லை என்ருல், தொழிலாளி வர்க்கம் முழுவதையும் இந்த இழிவினும் இழிநிலையில் தள்ளுவதற்கு அது விளைவைப் பற்றிக் கவலைப்படாமல், ஈவு இரக்கமற்றுப் பாடுபடும் என்பதையே நவீன காலத் தொழில்களின் வரலாறு முழுவதும் எடுத்துக் காட்டுகிறது.

வேலை நாளை நீட்டி, முதலாளி அதிகக் கூலி கொடுத்த போதிலும் உழைப்பின் மதிப்பைக் குறைக்கக் கூடும். பிழிந்தெடுக்கப்படும் கூடுதல் உழைப்பினளவுக்கும் அதனுல் உழைக்கும் சக்திக்கு அதிவிரைவாக ஏற்படும் சேதாரத்துக்கும் ஈடாகக் கூலி உயரவில்லை என்ருல் இவ்வாறு நிகழும். இதை இன்னெரு வகையிலும் செய்யலாம். உதாரணமாக, ஆங்கில பூர்ஷ்வாப் புள்ளிவிவர நிபுணர்கள், லங்காஷயர் ஆ பகளில் தொழிலாளர் குடும்பங்களின் சராசரிக் கூலி உயர்ந்து விட்டது என்று உங்களுக்குக் கூறுவார்கள். ஆனுல், குடும்பத் தலைவன் ஆகிய ஆடவன் மட்டுமின்றி, அவனுடைய மனைவி, மூன்று அல்லது நான்கு குழந்தைகளும்கூட இப்போது மூலதனத்தின் தேர்ச் சக்கரங்களுக்கு அடியில் எறியப்பட்டிருக்கிருர்கள் என்பதையும் அவர்களுடைய மொத்தக் கூலி உயர்வு அந்தக் குடும்பத்திலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட மொத்த உபரி உழைப்புக்கு ஈடாகவில்லை என்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள்.

தொழிற்சாலைச் சட்டங்களுக்கு உட்பட்டிருக்கும் எல்லாத் தொழில்களிலும் இப்போது நிலவுவது போன்ற, குறிப்பிட்ட வேலை நாள் வரம்புகளுக்குள்ளும், உழைப்பின் மதிப்பினது பழைய அளவைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேனும் கூலி உயர்வது அவசியமாகலாம். உழைப்பின் தீவிரத்தை அதிகரிப்பதன் மூலம், ஒரு மனிதன் முன்பு இரண்டு மணி நேரத்தில் எவ்வளவு ஜீவ சக்தியைச் செலவழித்தானே அவ்வளவு ஜீவ சக்தியை இப்போது ஒரு மணி நேரத்தில் செலவழிக்கும்படி செய்யலாம். இது, தொழிற்சாலைச்

சட்டங்களின் கீழ் வந்துள்ள தொழில்களில், இயந்திரங்களை விரைவுபடுத்துவதன் மூலமும் ஒரே நபர் மேற்பார்க்கும் இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலமும் ஓரளவுக்கு அமுலுக்கு வந்துள்ளது. ஒரு மணி நேரத்தில் செலவழிக்கப்படும் உழைப்பின் தீவிரம் அல்லது ஒட்டு மொத்த அளவு எந்த அளவுக்கு அதிகரிக்கிறதோ அதற்கு ஓரளவு சரியான வீதாச்சாரத்திலாவது வேலை நாள் குறையுமானல், அதுவே தொழிலாளரின் வெற்றியாகும். இந்த வரம்பு மீறப்படுமானல் அவன் ஒரு வடிவத்தில் பெற்றதை இன்னொரு வடிவத்தில் இழந்துவிடுகிறன். அப்போது, பத்து மணி நேர வேலையும்கூட இதற்கு முன்னர் பன்னிரண்டு மணி நேர வேலையைப் போலவே நாசகரமானதாகிவிடக் கூடும். உழைப்பின் தீவிரம் அதிகரிப்பதற்கு ஏற்பக் கூலியும் உயர வேண்டும் என்று போராடுவதன் மூலம் மூலதனத்தின் இந்தப் போக்கைக் கட்டுப்படுத்துவதில், தொழிலாளி, தனது உழைப்பு மதிப்பு குறைவதையும் தனது இனம் க்ஷீணிப்பதையும் எதிர்க்க மட்டுமே செய்கிறன்.

4) முதலாளித்துவ உற்பத்தி, இப்போது நான் விளக்குவதற்கு அவசியம் இல்லாத காரணங்களால் சில குறிப்பிட்ட பருவ வட்டங்களுக்குள் இயங்குகிறது என்பதை நீங்களெல்லோரும் அறிவீர்கள். அமைதி, வளரும் ஊக்கம், சுபிட்சம், அமித உற்பத்தி, நெருக்கடி, ஸ்தம்பிப்பு என்னும் கட்டங்களில் அது இயங்கிவருகிறது. பண்டங்களின் மார்க்கெட் விலைகளும், லாபத்தின் மார்க்கெட் விகிதங்களும் இந்தக் கட்டங்களைப் பின்பற்றி, ஒரு சமயம் அவற்றின் சராசரிகளுக்குக் கீழே வீழ்ந்தும், இன்னெரு சமயம் அவற்றிற்கு மேல் உயர்ந்தும் வருகின்றன. வட்டம் முழுவதையும் எடுத்துக் கொண்டு பரிசீலித்தால், மார்க்கெட் விலையின் ஒரு திரிபு இன்னொரு திரிபைச் சமன் செய்து கொள்வதையும், வட்டத்தின் சராசரியை எடுத்துக் கொண்டால் பண்டங்களின் மார்க்கெட் விலைகள் அவற்றின் மதிப்புகளால் கட்டுப்படுத்தப்படுவதையும் நீங்கள் காண்பீர்கள். நல்லது! மார்க்கெட் விலைகள் வீழ்ச்சியுறும் கட்டத்தின் போதும் நெருக்கடி, ஸ்தம்பிப்பு ஆகிய கட்டங்களின்

போதும் தொழிலாளி முற்றும் வேலையிலிருந்து தள்ளப் படாது போனாலும், அவனது கூலி குறையும் என்பது மட்டும் நிச்சயம். தான் ஏமாற்றப்படாதிருக்க வேண்டுமானால், மார்க்கெட் விலைகளின் இப்படிப்பட்ட வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், எந்த விகிதாச்சார அளவுக்குக் கூலியைக் குறைப்பது அவசியமாகி விட்டது என்பதைக் குறித்து அவன் முதலாளியோடு தர்க்கித்துப் போராட வேண்டும். சுபிட்சக் கட்டங்களின் போது, கூடுதலான லாபங்கள் ஏற்படும் சமயத்தில் அவன் கூலி உயர்வுக்குப் போராடவில்லை என்றால் ஒரு தொழில் வட்டம் முழுவதையும் சராசரியாக எடுத்துக் கொண்டு பார்க்கையில், அவன் தனது சராசரிக் கூலியை அல்லது தனது உழைப்பின் மதிப்பைக் கூடப் பெறமாட்டான். வட்டத்தின் பிரதிகூலமான கட்டங்களால் அவனது கூலி நிச்சயமாகப் பாதிக்கப்பட்டிருக்கையில், வட்டத்தின் சுபிட்சக் கட்டங்களில், முன்னால் ஏற்பட்ட இழப்புக்கு அவன் நஷ்ட ஈடு கேட்காதிருக்க வேண்டும் என்று கோருவது மதியீனத்தின் சிகரமாகும். கிராக்கி, சப்ளை, இவற்றின் தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்களின் காரணமாக இடைவிடாது மாறிக்கொண்டிருக்கும் மார்க்கெட் விலைகளின் ஈடு கட்டுதல் மூலம் மட்டுமே பொதுவாக எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் பணமாக்கப்படுகின்றன. இப்போதைய அமைப்பு முறைப்படி மற்றப் பண்டங்களைப் போலவே உழைப்பும் ஒரு பண்டமே. ஆகையால் அது தன் மதிப்புக்கு நேரான ஒரு சராசரி விலையைப் பெற வேண்டுமானால் அதே ஏற்ற இறக்கங்களை அனுபவித்தாக வேண்டும். உழைப்பை ஒரு புறத்தில் பண்டமாகப் பாவிப்பதும், இன்னொரு புறத்தில் பண்டங்களின் விலைகளைத் தீர்மானிக்கும் விதிகளிலிருந்து விலக்கி வைக்க முயல்வதும் அபத்தமாகும். ஓர் அடிமை நிரந்தரமான, குறிப்பிட்ட பராமரிப்பு அளவைப் பெறுகிறான்; கூலி உழைப்பாளி அப்படியல்ல. ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படும் கூலி வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதற்காகவாவது இன்னொரு சந்தர்ப்பத்தில் கூலி உயர்வு பெற அவன் முயற்சிக்க வேண்டும். அவன் முதலாளியின் சித்தத்தையும், அதிகாரத்தையும் ஒரு நிரந்தரமான பொருளாதார விதி

என்று ஏற்றுக்கொள்ள இணங்கிவிடுவானேயானால், அப்போது அவன் அடிமைக்குள்ள பாதுகாப்பு இன்றி, அந்த அடிமையின் எல்லாத் துயரங்களையும் அனுபவிப்பான்.

5) நான் ஆராய்ந்த எல்லா உதாரணங்களிலும்—இவை நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது என்று சொல்லலாம்—ஒரு விஷயத்தை நீங்கள் பார்த்தீர்கள். அதாவது, கூலி உயர்வுக்கான போராட்டம் முன் நிகழ்ந்த மாற்றங்களின் அடிச் சுவட்டையொட்டியே நடைபெறுகிறது என்பதையும், உற்பத்தி அளவில், உழைப்பின் உற்பத்தித் திறன்களில், உழைப்பின் மதிப்பில், பணத்தின் மதிப்பில், பிழிந்தெடுக்கப்பட்ட உழைப்பின் நேரநீடிப்பில் அல்லது தீவிரத்தில், கிராக்கி, சப்ளை இவற்றின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்தும் தொழில் வட்டத்தின் பல்வேறு கட்டங்களையொட்டியும் மார்க்கெட் விலைகளின் ஊசலாட்டங்களில் முன்னரே ஏற்பட்ட மாற்றங்களின் தவிர்க்க முடியாத விளைவே இந்தக் கூலி உயர்வுப் போராட்டம் என்பதையும், சுருங்கச் சொன்னால் மூலதனத்தின் முந்திய நடவடிக்கைக்கெதிரான உழைப்பின் எதிர் நடவடிக்கைகளே இந்தக் கூலி உயர்வுப் போராட்டம் என்பதையும் நீங்கள் கண்டீர்கள். கூலி உயர்வுக்கான போராட்டத்தை இந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளிலிருந்தெல்லாம் நீங்கள் தனித்துப் பார்ப்பீர்களேயானால், கூலியின் மாற்றங்களை மட்டும் காணுவீர்களேயானால், அக்கூலி இதர எந்த மாற்றங்களிலிருந்து தோன்றுகிறதோ அம்மாற்றங்களைப் புறக்கணித்துவிட்டுப் பார்ப்பீர்களேயானால், தவறான முடிவுகளுக்கு வருவதற்காகவே நீங்கள் தவறான ஆதாரக் கூற்றிலிருந்து ஆரம்பித்தவர்களாவீர்கள்.

## 14. மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலுள்ள போராட்டமும் அதன் விளைவுகளும்

1) தொழிலாளர்கள் கூலி வெட்டுக்கு எதிராக அவ்வப்போது நடத்தும் எதிர்ப்பும் கூடுதலான கூலி பெற அவர்கள் அவ்வப்போது செய்யும் முயற்சிகளும் கூலி

அமைப்பு முறையிலிருந்து பிரிக்க முடியாதவை என்பதை யும் இவையெல்லாம் உழைப்பு ஒரு பண்டமாகவும் எனவே விலைகளின் பொது இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதி களுக்குட்பட்டதாகவும் இருப்பதனுல் ஏற்படும் விளைவுகள் என்பதையும் காட்டினேன். மேலும், பொதுவான கூலி உயர்வு பொதுவான லாப விகிதம் குறைவதற்கு இட்டுச் செல்லும், ஆனுல் பண்டங்களின் சராசரி விலைகளையோ அல்லது மதிப்புகளையோ பாதிக்காது என்பதையும் காட்டினேன். இதற்கு மேல் இப்போது நம் முன் இறுதியாக எழுந்துள்ள கேள்வி, மூலதனத்துக்கும் உழைப்பிற்குமிடையே நடக்கும் இந்த இடைவிடாத போராட்டத்தில் உழைப்பு எந்த அளவுக்கு வெற்றி பெற முடியும் என்பதே.

இதற்கு நான் ஒரு பொதுமைப்படுத்தலின் மூலம் பதில் சொல்லலாம். அதாவது, மற்றெல்லாப் பண்டங்களையும் போலவே உழைப்பைப் பொறுத்தவரையிலும்கூட அதன் மார்க்கெட் விலை காலக்கிரமத்தில் அதன் மதிப்போடு இசைந்து போகும்; எனவே, என்ன ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டாலும்—தொழிலாளி தன்னுல் செய்ய முடிந்ததை யெல்லாம் செய்தாலும்—சராசரியில், அவன் தன்னுடைய உழைப்பின் மதிப்பை மட்டுமே பெறுவான்; அந்த உழைப் பின் மதிப்பு அவனுடைய உழைக்கும் சக்தியின் மதிப்பாக ஆகிறது; அம்மதிப்பு அந்தச் சக்தியின் பராமரிப்புக்கும் புனருற்பத்திக்கும் தேவையான அத்தியாவசியப் பொருள் களின் மதிப்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது; அந்த அத்தியாவசியப் பொருள்களின் மதிப்பு தன் முறையில் அப் பொருள்களை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப் பின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது என்று கூறலாம்.

ஆனுல் உழைக்கும் சக்தியின் மதிப்பை அதாவது உழைப் பின் மதிப்பை மற்றெல்லாப் பண்டங்களின் மதிப்புகளிலிருந் தும் வேறுபடுத்திக் காட்டும் சில விசேஷ அம்சங்களிருக் கின்றன. உழைக்கும் சக்தியின் மதிப்பு இரண்டு மூலக் கூறுகளால் ஆனது: ஒன்று வெறும் உடல் வகை சம்பந்தப் பட்டது, மற்றொன்று வரலாற்று அல்லது சமூக வகை

சம்பந்தப்பட்டது. அதன் இறுதியான வரம்பு உடல் வகை மூலக்கூற்றாலேயே தீர்மானிக்கப்படுகிறது, அதாவது தன்னைப் பராமரித்துக் கொள்ளவும் புனருற்பத்தி செய்யவும் தனது உடல் வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ளவும் தொழிலாளி வர்க்கம் ஜீவனத்துக்கும் இன விருத்திக்கும் முற்றிலும் இன்றியமையாத அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றாக வேண்டும். எனவே, இந்த இன்றியமையாத அத்தியாவசியப் பொருள்களின் மதிப்பு, உழைப்பு மதிப்பின் இறுதியான வரம்பை உருவாக்குகிறது. மற்றொரு புறத்தில் வேலை நாளின் நேரமும் கூட முடிவான ஆனால் வளைந்து கொடுக்கும் வரம்புகளால் வரையறுக்கப்படுகிறது. அதன் இறுதி வரம்பு உழைப்பாளியின் உடல் சக்தியால் தரப்படுகிறது.அவனுடைய ஜீவ சக்திகளின் அன்றாட வெளியேற்றம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் போனால் அதைப் புதிதாகத் தினந்தோறும் பயன்படுத்த முடியாது. என்றாலும், நாம் கூறியது போல, இந்த வரம்பு மிகவும் வளைந்து கொடுக்கக் கூடியது. நீண்ட வாழ்வும், ஆரோக்கியமுமுள்ள தொடர்ச்சியான தலைமுறைகளைப் போலவே அடுத்தடுத்து விரைவாகத் தோன்றும், ஆரோக்கியமற்ற அற்பாயுள் கொண்ட தலைமுறைகளும் உழைப்பு மார்க்கெட்டின் தேவையை நன்கு பூர்த்தி செய்யும்.

இந்த வெறும் உடல் வகை மூலக்கூற்றைத் தவிர, ஒவ்வொரு நாட்டிலும் உழைப்பின் மதிப்பு ஒரு பாரம்பரியமான வாழ்க்கைத் தரத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது. உடல் சார்ந்த வாழ்க்கை மட்டுமின்றி, மக்கள் எந்த சமூக நிலைகளில் வைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறார்களோ அவற்றிலிருந்து எழும் சில தேவைகளைத் திருப்திப்படுத்துவதும் இதில் அடங்கும். இந்தப் பாரம்பரியமான வாழ்க்கைத் தரத்தில் ஆங்கில வாழ்க்கைத் தரம் அயர்லாந்திய வாழ்க்கைத் தரத்துக்கும் ஜெர்மானிய விவசாயியின் வாழ்க்கைத் தரம் லாத்விய விவசாயியின் வாழ்க்கைத் தரத்துக்கும் கொண்டு வரப்படலாம். இவ்விஷயத்தில் சரித்திர பூர்வமான பாரம்பரியமும் சமூகப் பழக்கவழக்கங்களும் வகிக்கும் முக்கியமான பங்கைத் திரு. தார்ண்டன் எழுதிய

''மக்களின் மிகைப்பெருக்கம்'' என்னும் நூலிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். பண்ணை அடிமை முறையிலிருந்து இங்கிலாந்தின் பல்வேறு விவசாய மாவட்டங்கள் ஏறத்தாழ எந்த சாதகச் சூழ்நிலைகளில் விடுபட்டனவோ, ஏறத்தாழ அதே அளவில் அம்மாவட்டங்களில் இன்றுங்கூட சராசரிக் கூலி வேறுபட்டிருப்பதை இந்நூலில் அவர் காட்டியிருக்கிறார்.

உழைப்பின் மதிப்பில் சேரும் இந்தச் சரித்திரபூர்வமான அல்லது சமூகவகை மூலக்கூறு விரிவாக்கப்படலாம்; அல்லது குறைக்கப்படலாம்; அல்லது உடல் வரம்பைத் தவிர எதுவும் எஞ்சியிராத வகையில் அறவே மறைந்து போகுமாறும் செய்யப்படலாம். பிரெஞ்சு நாஸ்திகர்களின் துராக்கிரமிப்பிலிருந்து நமது புனிதமான மதத்தின் சௌகரியங்களைக் காப்பாற்றுவதற்காகவே ஜாக்கொபின் எதிர்ப்பு யுத்தம் நடத்தப்பட்டது என்று திருத்த முடியாத வரிவிழுங்கியும் தண்டச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவனுமாகிய கிழட்டு ஜார்ஜ் ரோஸ் கூறுவது வழக்கம். இந்த ஜாகோபியன் எதிர்ப்பு யுத்தத்தின் போது, நமது முந்திய கூட்டங்கள் ஒன்றில் மிகவும் பரிவுடன் கையாளப்பட்ட நேர்மையான இங்கிலாந்துப் பண்ணைச்சொந்தக்காரர்கள் விவசாயத் தொழிலாளிகளின் கூலியை வெறும் உடல் வரம்புக்குக் கீழும் குறைத்தனர். உழைப்பாளிகளின் உடல் பராமரிப்புக்கும் சந்ததி விருத்திக்கும் இன்றியமையாத பற்றுக்குறை ஏழைகள் சட்டங்களின்[38] அடிப்படையில் அகதிகள் நிதியின் வாயிலாக இட்டு நிரப்பப்பட்டது. கூலித் தொழிலாளியை அடிமையாகவும் ஷேக்ஸ்பியர் பெருமைப்பட்டுக் கொண்ட குடியானவனை ஓட்டாண்டியாகவும் மாற்றுவதற்கு இது அற்புதமான வழியாக இருந்தது.

வெவ்வேறு நாடுகளில் நிலவும், அல்லது ஒரே நாட்டின் வெவ்வேறு வரலாற்றுக் காலகட்டங்களில் நிலவி வந்திருக்கும் கூலி மட்டம் அல்லது உழைப்பின் மதிப்பை ஒப்பிட்டுப் பார்த்தால், உழைப்பின் மதிப்பு தானே நிலையானதல்ல, மாறக்கூடிய பரிமாணம், மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் நிரந்தரமானவை என வைத்துக்

கொண்டாலும் அது மாறக்கூடியதே என்பதை நீங்கள் காண்பீர்கள்.

இதே மாதிரி ஒப்பிட்டுப் பார்த்தால், லாபத்தின் மார்க்கெட் விகிதங்கள் மட்டுமின்றி, அதன் சராசரி விகிதங்களும் மாறுவது நிரூபணமாகும்.

ஆனால் லாபங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவற்றின் குறைந்தபட்ச அளவை நிர்ணயிக்கும் விதி எதுவுமில்லை. அவற்றின் வீழ்ச்சிக்கு எது இறுதி வரம்பு என்பதை நம்மால் கூற முடியாது. அந்த வரம்பை நம்மால் ஏன் நிர்ணயிக்க முடியாது? ஏனென்றால், கூலியின் குறைந்தபட்ச அளவை நம்மால் நிர்ணயிக்க முடிந்தாலும் அதன் அதிகபட்ச அளவை நம்மால் நிர்ணயிக்க முடியாது. வேலை நாளின் வரம்புகள் கொடுக்கப்பட்டிருந்தால் உடல் பராமரிப்புக்குத் தேவையான கூலி எவ்வளவு குறைந்தபட்சமாகக் கொடுக்கப் படுகிறதோ அவ்வளவு அதிகபட்சமாக லாபமிருக்கும்; கூலி இவ்வளவு என்று கொடுக்கப்பட்டிருந்தால், தொழிலாளியின் உடல் சக்திகள் இடம் கொடுக்குமளவுக்கு வேலை நாள் எவ்வளவு நீடிக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகபட்சமாக லாபமிருக்கும் என்று மட்டுமே நம்மால் கூற முடியும். எனவே, லாபத்தின் அதிகபட்சம் உடல் பராமரிப்புக்குத் தேவையான கூலியின் குறைந்தபட்சத்தைக் கொண்டும், உடல் இடம் கொடுக்குமளவுக்கு அதிகபட்சமாக வேலை நாள் நீடிக்கப்படுவதைக் கொண்டும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த அதிகபட்ச லாப விகிதத்தின் இரண்டு வரம்புகளுக்கிடையே மிகப்பல வேறுபாடுகள் இருப்பது சாத்தியம் என்பது தெளிவு. இதன் உண்மையான அளவு மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது; இப்போராட்டத்தில் தொழிலாளியின் உடல் பராமரிப்புக்குத் தேவையான கூலியைக் குறைந்தபட்சத்துக்குக் குறைக்கவும் அவனது உடல் இடம் கொடுக்குமளவுக்கு வேலை நாளை அதிகப்பட்சத்துக்கு நீடிக்கவும் முதலாளி இடைவிடாது முயற்சிக்கிறான். இதே நேரம் தொழிலாளியோ அதற்கு நேர் எதிர்த்திசையில் செல்ல இடைவிடாது முயற்சிக்கிறான்.

இவ்விஷயம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தரப்புகளின் பலங்களின் விகிதாச்சாரத்தைப் பொறுத்த பிரச்சினையாக ஆகிவிடுகிறது.

2) இங்கிலாந்து நாட்டில் வேலை நாளை வரையறுப்பதைப் பொறுத்தவரையில், மற்றெல்லா நாடுகளிலும் போலவே, சட்டங்களின் தலையீடின்றி ஒருபோதும் முடிவு செய்யப்பட்டதில்லை. தொழிலாளர்களின் இடையறாத நிர்ப்பந்தமில்லாமல் அந்தத் தலையீடு ஒரு நாளும் சாத்தியமாகியிருக்காது. ஆனால் எப்படியிருப்பினும் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே தனிப்பட்ட ஒப்பந்தம் ஏற்படுவதன் மூலம் இந்தப் பலனை அடைவது சாத்தியமாகவில்லை. இந்தப் பொதுவான அரசியல் நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதிலிருந்தே ஒரு விஷயம் நிரூபணமாகிறது, அதாவது வெறும் பொருளாதார நடவடிக்கைகளில் மூலதனமே அதிக வலிமையுள்ள தரப்பு என்பது.

உழைப்பின் மதிப்பிற்குள்ள வரம்புகளைப் பொறுத்தவரையில் அவற்றின் யதார்த்தமான நிர்ணயிப்பு எப்போதும் சப்ளையையும் கிராக்கியையும் பொறுத்திருக்கிறது, அதாவது மூலதனம் சம்பந்தப்பட்டமட்டில் உழைப்புக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியையும் தொழிலாளர்கள் அந்த உழைப்பை சப்ளை செய்வதையுமே பொறுத்திருக்கிறது என்ற அர்த்தத்திலேயே இதை நான் கூறுகிறேன். குடியேற்ற நாடுகளில் சப்ளை, கிராக்கி விதி தொழிலாளிக்குச் சாதகமாகவே இருக்கிறது. எனவே தான் அமெரிக்காவில் ஒப்புநோக்கில் உயர்ந்த அளவு கூலி மட்டம் நிலவுகிறது. அங்கே மூலதனம் மிகவும் சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனினும் அங்கே கூலி உழைப்பாளிகள் சுதந்திரமான, சுயபராமரிப்புள்ள விவசாயிகளாகத் தொடர்ச்சியாக மாறுவதன் மூலம் உழைப்பு மார்க்கெட் இடைவிடாது காலியாவதை மூலதனத்தால் தடுக்க முடியாது. அமெரிக்க மக்களின் ஒரு மிகப்பெரிய பகுதிக்குக் கூலித் தொழிலாளி என்னும் நிலை ஒரு இடைக்காலமான நிலையாகத்தானிருக்கிறது. அவர்கள் விரைவிலோ அல்லது காலம் கழித்தோ

இந்நிலையிலிருந்து நிச்சயமாக வெளியேறி விடுவார்கள். குடியேற்ற நாடுகளில் இருந்த இந்த நிலையை சீராக்கும் பொருட்டு தந்தை போல் பரிவு கொண்ட பிரிட்டிஷ் சர்க்கார் நவீனக் குடியேற்றத் தத்துவத்தைச் சில காலத்திற்கு ஏற்றுக் கொண்டது. ஒரு கூலித் தொழிலாளி மிகத் துரிதமாகச் சுயேச்சை விவசாயியாக மாறுவதைத் தடுப்பதற்காகக் குடியேற்ற நாட்டு நிலங்களுக்குச் செயற்கையாக அதிக விலை நிர்ணயிப்பது இந்த நவீனக் குடியேற்றத் தத்துவமாகும்.

ஆனால் இப்போது நாம் பழைய நாகரிக நாடுகளின் விஷயத்திற்கு வருவோம். இந்த நாடுகளில் உற்பத்தியின் சகல நிகழ் முறைகளிலும் மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிறது. உதாரணமாக, 1849 முதல் 1859 வரை இங்கிலாந்தில் விவசாயத் தொழிலாளிகளின் கூலி அதிகரித்ததை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் விளைவு என்னயிற்று? நமது நண்பர் வேஸ்டன் என்ன யோசனை கூறியிருந்திருப்பாரோ அப்படி பண்ணைக்காரர்களால் கோதுமையின் மதிப்பையோ அதன் மார்க்கெட் விலைகளையோகூட உயர்த்த முடியவில்லை. அதற்கு மாருக, கோதுமையின் மதிப்பும் மார்க்கெட் விலைகளும் வீழ்ச்சியடைவதை ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்தது. ஆயினும் இந்தப் பதினெரு வருடங்களில் அவர்கள் விவசாயத்தில் எல்லா விதமான இயந்திரங்களையும் புகுத்தினர்; அதிகமான விஞ்ஞான முறைகளைப் பின்பற்றினர்; பயிரிடப்படக்கூடிய நிலங்களில் ஒரு பகுதியை மேய்ச்சல் நிலங்களாக மாற்றினர்; பண்ணைகளைப் பெரிதாக்கினர்; இதனையொட்டி உற்பத்தியையும் பெருக்கினர். இவற்ருலும், இதர நிகழ் முறைகளாலும் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்து, உழைப்பின் கிராக்கியைக் குறைத்தனர். இதன் மூலம் விவசாய மக்கள் தொகையைத் தேவைக்கு மேற்பட்ட உபரியாக்கினர். இதுதான் வெகுகாலத்துக்கு முன்னரே குடியேற்றம் நிகழ்ந்துள்ள நாடுகளில் கூலி உயர்வுக்கெதிராக விரைவாகவோ, மெதுவாகவோ மூலதனம் மேற்கொள்கின்ற பொதுவான எதிர்நடவடிக்கை முறையாகும். இயந்திரங்கள் உழைப்போடு இடைவிடாது போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் உழைப்பின் விலை ஒரு குறிப்பிட்ட

உச்சத்தை எட்டிய பிறகுதான் அவை பெரும்பாலும் புகுத்தப்பட முடியும் என்றும் ரிக்கார்டோ சரியாகக் கூறினார்.[39] ஆனால் இயந்திரங்களைப் பயன்படுத்துவது உழைப்பின் உற்பத்தித் திறன்களை அதிகப்படுத்தும் அநேக முறைகளில் ஒன்றாகும். தேர்ச்சியற்ற உழைப்பை ஒப்புநோக்கில் உபரியாக்கும் இதே வளர்ச்சிப் போக்குதான் மறு புறத்தில் தேர்ச்சியுள்ள உழைப்பை எளிதாக்கி அதன் மதிப்பைக் குறைக்கிறது.

இதே விதி இன்னொரு ரூபத்திலும் நடைமுறையிலிருக்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறன்கள் வளர்ச்சியடையும் போது மூலதனக் குவியல் அதிகரிக்கும்; கூலி விகிதம் ஒப்பு நோக்கில் கூடுதலாக இருந்தால் கூட இது நிகழும். எனவே, மூலதனத்தின் விரைந்த பெருக்கம், தொழிலாளியின் உழைப்புக்கு அதிகப்படியான கிராக்கியை உத்தரவாதம் செய்வதன் மூலம் அவனுக்குச் சாதகமாகித் தீர வேண்டும் என்று நவீனத் தொழில் துறை குழந்தைப் பருவத்தில் இருந்த போது ஆடம் ஸ்மித் கருதியது போலவே எவரும் முடிவு செய்யக் கூடும். இதே கண்ணோட்டத்தோடு தான் இன்றைய பல எழுத்தாளர்களும், கடந்த இருபதாண்டுகளில் இங்கிலாந்து மூலதனம் ஜனத் தொகையைக் காட்டிலும் இவ்வளவு துரிதமாக வளர்ந்திருக்கும்போது கூலி இன்னும் அதிகமாக ஏன் உயரவில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால் மூலதனக் குவியல் பெருகி வரும் அதே சமயம் மூலதனத்தின் உள்ளமைப்பிலும் அதிகரித்து வரும் மாற்றம் நிகழ்கிறது. மூலதனத்தில் நிலையான மூலதனமும்; இயந்திரங்களும், கச்சாப் பொருள்களும், மற்றும் எல்லாவகையான ரூபங்களிலுமுள்ள உற்பத்திச் சாதனங்களும் அடங்கிய பகுதியானது கூலி பட்டுவாடா செய்யவோ அல்லது உழைப்பை விலை கொடுத்து வாங்கவோ செலவழிக்கப்படும் பகுதியை விட மேலும் மேலும் அதிகரிக்கிறது. இந்த விதியைத் திரு. பார்ட்டன், ரிக்கார்டோ, ஸிஸ்மொன்டீ, பேராசிரியர் ரிச்சர்டு ஜோன்ஸ், பேராசிரியர் ராம்ஸே, ஷெர்பூலியே இன்னும் இதரர்கள் கிட்டத்தட்டத் துல்லியமாகவே கூறியுள்ளனர்.

மூலதனத்தின் இந்த இரண்டு பகுதிகளும் ஆரம்பத்தில் ஒன்றுக்கு ஒன்று என்னும் விகிதாச்சாரத்தில் இருந்தால், தொழில் வளர்ச்சியுறும் போது அது ஐந்துக்கு ஒன்று என்னும் விகிதாச்சாரமாகவும் பிற வகைகளிலும் மாறும். உதாரணமாக, மொத்த மூலதனம் 600ல் இயந்திர சாதனங்கள், கச்சாப் பொருள்கள், முதலியவற்றிற்கு 300ம், கூலிக்காக 300ம் ஒதுக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது, 300 தொழிலாளர்களுக்குப் பதிலாக 600 தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு மூலதனம் இரு மடங்கானாலே போதும். மொத்த மூலதனம் 600ல் இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள், முதலியவற்றிற்கு 500ம், கூலிக்கு 100ம் மட்டும் ஒதுக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது 300 தொழிலாளர்களுக்குப் பதிலாக 600 தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு இதே மூலதனம் 600லிருந்து 3,600 ஆக உயர வேண்டும். எனவே தொழில் வளரும் போது உழைப்புக்கான கிராக்கி மூலதனக் குவியலுக்குச் சரிசமமாக அதிகரிப்பதில்லை. அது அதிகரிக்கத்தான் செய்கிறது என்றாலும் முழு மூலதனப் பெருக்கத்தோடு ஒப்பிடும் போது நிரந்தரமாகக் குறைந்து வரும் விகிதத்திலேயே அதிகரிக்கிறது.

நவீனத் தொழில்களின் வளர்ச்சியானது நிலைமையை மேலும் மேலும் முதலாளிக்குச் சாதகமாகவும் தொழிலாளிக்குப் பாதகமாகவுமே ஆக்கிக்கொண்டு போகிறது. இதன் விளைவாக முதலாளித்துவ உற்பத்தி முறையின் பொதுவான போக்கு கூலியின் சராசரி அளவைக் குறைப்பதாக அல்லது உழைப்பின் மதிப்பைக் கிட்டத்தட்ட அதன் குறைந்தபட்ச வரம்புக்குத் தள்ளுவதாக இருக்கிறதே தவிர, அதை உயர்த்துவதாக இல்லை. இதைக் காட்டுவதற்கு மேற்சொன்ன சில குறிப்புகள் போதும். இந்த முறையின் கீழ் நிலைமை இவ்வாறிருக்கும் போது, தொழிலாளி வர்க்கம் மூலதனத்தின் அத்துமீறல்களை எதிர்ப்பதை விட்டுவிட வேண்டும், தற்காலிக மேம்பாட்டுக்கு அவ்வப்போது கிட்டும் வாய்ப்புகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சிகளையும் கைவிட வேண்டும் என்று இது அர்த்தப்படுமா?

அவ்வாறு அவர்கள் செய்தால், கடைத்தேற வகையற்ற ஒன்றுமில்லாத பஞ்சைக் கும்பலுக்குச் சமமான நிலைக்கு இறங்கி விடுவார்கள். கூலி மட்டத்துக்காகத் தொழிலாளர்களின் போராட்டங்கள் கூலி அமைப்பு முறை முழுவதுடனும் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கிறது என்றும் 100 சம்பவங்களில் 99ல் அவர்களின் கூலி உயர்வுப் போராட்டம் ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பு மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளச் செய்யும் முயற்சியாகவே இருக்கிறது என்றும் உழைப்பின் விலைக்காக முதலாளிகளுடன் போராடுவதன் அவசியம் தொழிலாளர்களது நிலைமையில் உள்ளடங்கியிருக்கிறது என்றும் இந்த நிலைமை அவர்கள் தங்களையே பண்டங்கள் போல விற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கிறது என்றும் நான் எடுத்துக்காட்டிவிட்டேன் என்று நினைக்கிறேன். தொழிலாளர்கள் மூலதனத்திற்கெதிரான தங்களது அன்றாடப் போராட்டத்தில் கோழைத்தனமாக விட்டுக் கொடுப்பதன் மூலம், எந்த ஒரு பெரிய இயக்கத்தையும் நடத்துவதற்குத் தங்களை அருகதையற்றவர்களாக்கிக் கொள்வார்கள் என்பது நிச்சயம்.

அதே சமயம், கூலி முறை அமைப்பின் கீழ் நிலவும் பொதுவான அடிமைத்தனம் ஒரு புறமிருக்க, இந்த அன்றாடப் போராட்டங்களின் இறுதி விளைவுகளைப் பற்றித் தொழிலாளி வர்க்கம் மிகைப்படுத்திக் கொண்டு விடக் கூடாது. விளைவுகளை எதிர்த்து அவர்கள் போராட்டம் நடத்துகிறார்களே தவிர, அந்த விளைவுகளுக்கான காரணங்களை எதிர்த்தல்ல; தங்களது நிலைமையை மோசமாக்கும் போக்கை அவர்கள் தடுத்து நிறுத்துகிறார்களே தவிர, அதன் திசை வழியை மாற்ற வில்லை; அவர்கள் நோயின் கடுமையைத் தணித்துக் கொள்கிறார்களே தவிர, நோயை குணப்படுத்திக் கொள்ளவில்லை. இவற்றைத் தொழிலாளி வர்க்கம் மறந்துவிடக் கூடாது. எனவே, மூலதனத்தின் ஓய்வு ஒழிவு இல்லாத ஆக்கிரமிப்பாலோ அல்லது மார்க்கெட் நிலவரத்தின் மாற்றங்களாலோ விளையும் இந்தத் தவிர்க்க முடியாத கொரில்லாப் போராட்டங்களில் தொழிலாளர்கள் தங்களை முழுக்க முழுக்க மூழ்கடித்துக் கொண்டுவிடக்

கூடாது. இன்றுள்ள அமைப்பு முறை, சகல துன்ப துயரங்களையும் விளைக்கும் அதே சமயத்தில், சமூகத்தின் பொருளாதாரப் புனர் நிர்மாணத்திற்குத் தேவையான பொருளாயத நிலைமைகளையும் சமூக வடிவங்களையும் அது உண்டு பண்ணுகிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். "நியாயமான வேலை நாளுக்கு நியாயமான கூலி" என்னும் பழைய குறிக்கோளுக்குப் பதிலாகக் "கூலி அமைப்பு முறை ஒழிக!" என்னும் புரட்சிகரமான கோஷத்தைத் தொழிலாளிகள் தங்கள் பதாகையில் பொறித்துக் கொள்ள வேண்டும்.

நான் எடுத்துக்கொண்ட விஷயத்தை விளக்குவதற்காக இந்த மிக நீண்ட, ஒருகால் அலுப்புத் தட்டக் கூடிய விரிவுரையை நிகழ்த்த வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இனி கீழ்க்கண்ட முடிவுகளைக் கூறிவிட்டு எனது சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன்:

முதலாவதாக, கூலியின் விகிதத்தில் பொது உயர்வு பொதுவான லாப விகிதத்தில் வீழ்ச்சியை விளைவிக்கும் என்ருலும் மொத்தத்தில் பண்டங்களின் விலைகளைப் பாதிக்காது.

இரண்டாவதாக, முதலாளித்துவ உற்பத்தி முறையின் பொதுவான போக்கு சராசரிக் கூலியின் மட்டத்தை உயர்த்துவது அல்ல, குறைப்பதாகும்.

மூன்ருவதாக, மூலதனத்தின் ஆக்கிரமிப்புக்கெதிரான போராட்டக் கேந்திரங்களாகத் தொழிற்சங்கங்கள் நன்கு செயல்படுகின்றன. தங்கள் சக்தியைச் சரியற்ற முறையில் உபயோகிப்பதுதான் அவை தோல்வி அடைவதற்கு ஓரளவு காரணம். நிலவும் அமைப்பை மாற்றுவதற்காக ஒரே சமயத்தில் முயற்சி செய்வதற்குப் பதிலாக, தொழிலாளி வர்க்கத்தின் இறுதி விமோசனத்திற்காக, அதாவது கூலி அமைப்பு முறையை முடிவாக ஒழித்துக் கட்டுவதற்காகத் தங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட சக்திகளை நெம்புகோலாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, நிலவும் அமைப்பின் விளைவுகளுக்கு எதிரான கொரில்லாப் போருக்குள் தங்களைக் குறுக்கிக் கொள்வதனுல் அவை பொதுவாகத் தோல்வி அடைகின்றன.

*1865ம் ஆண்டு மே மாத முடிவுக்கும்—*
*ஜூன் 27க்கும் இடையில்*
*கா. மார்க்சால் எழுதப்பட்டது*

*ஆங்கில மொழிப்*
*பிரசுரத்தின்படி*
*அச்சிடப்பட்டது*

*லண்டனில் 1898ல் முதலில்*
*ஒரு தனிப்பிரசுரமாக*
*வெளியிடப்பட்டது*

கா. மார்க்ஸ்

# தற்காலிக மத்தியக் கவுன்சிலின் பிரதிநிதிகளுக்கு சில பிரச்சினைகளைப் பற்றிய ஆணைகள்[40]

## 1. சர்வதேச சங்கத்தின் ஒழுங்கமைப்பு

மொத்தத்தில் தற்காலிக மத்தியக் கவுன்சில் தற்காலிக விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கமைப்புத் திட்டத்தைச் சிபாரிசு செய்கிறது. இந்தத் திட்டத்தின் சரியான தன்மையும் ஒன்றுபட்ட நடவடிக்கைக்குப் பாதகமில்லாமல் வெவ்வேறு நாடுகளுக்கும் ஏற்ற வகையில் அதைத் தகவமைத்துக் கொள்ளும் இணக்கமும் இரண்டு வருட கால அனுபவத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த வருடத்துக்கு மத்தியக் கவுன்சிலின் தலைமையிடமாக லண்டனைச் சிபாரிசு செய்கிறோம்; ஐரோப்பாக் கண்டத்திலிருக்கும் நிலைமை தலைமையிடத்தை மாற்றுவதற்குச் சாதகமாகத் தோன்றவில்லை.

இயல்பாகவே மத்தியக் கவுன்சில் உறுப்பினர்களைக் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கும் (தற்காலிக விதிமுறைகளின் 5வது ஷரத்து). தங்களுடைய எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள அவர்களுக்கு அதிகாரமுண்டு.

காங்கிரஸ் பொதுச் செயலாளரை ஒரு வருடப் பதவிக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கும். சங்கத்தால் ஊதியம் கொடுக்கப்படும் அதிகாரியாக இவர் ஒருவரே இருப்பார். அவருக்கு வாரம் இரண்டு பவுன் ஊதியம் கொடுக்குமாறு பிரேரணை செய்யப்படுகிறது.

சங்கத்தின் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினருக்கும் ஒரே மாதிரியான வருடாந்தரக் கட்டணம் அரைப் பென்னியாகும் (ஒருவேளை ஒரு பென்னியாகவும் இருக்கலாம்). உறுப்பினர் அட்டைகளின் அடக்க விலை கூடுதலாக வசூலிக்கப் படும்.

பரஸ்பர உதவிச் சங்கங்களை ஏற்படுத்தி அவற்றை சர்வதேசியப் பிணைப்பின் மூலம் இணைக்குமாறு சங்கத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளும் பொழுது இந்த விஷயத்தில் (பரஸ்பர உதவிச் சங்கங்களை அமைத்தல், சங்க உறுப்பினர்கள் அனாதைக் குழந்தைகளுக்குத் தார்மிக மற்றும் பொருளாயத உதவியளித்தல்) முயற்சியைத் தொடங்கி வைக்கின்ற பொறுப்பை சென்ற செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மாநாட்டில்[41] இதை முதலில் பிரேரணை செய்த சுவிஸ்காரர்களிடம் ஒப்படைக்கிறோம்.

## 2. மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் சங்கத்தின் உதவியைக் கொண்டு சர்வதேசிய ரீதியில் முயற்சிகளை ஒன்றிணைத்தல்

(அ) பொதுவான கருத்தோட்டத்திலிருந்து, பல்வேறு நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலைக்காக இதுவரை செய்யப்பட்டு வரும் தொடர்பில்லாத போராட்டங்களை ஒன்றுசேர்ப்பதையும் பொதுமைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட சர்வதேச சங்கத்தின் மொத்த நடவடிக்கையையும் இந்தப் பிரச்சினை தழுவியிருக்கிறது.

(ஆ) வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் நடைபெறும் சமயத்தில் உள்நாட்டுத் தொழிலாளிகளுக்கு எதிரான கருவியாக அந்நியத் தொழிலாளிகளைத் தவறாக உபயோகிப்பதற்கு எப்பொழுதுமே தயாராக இருக்கின்ற முதலாளிகளின் சூழ்ச்சிகளை முறியடித்தது நம் சங்கம் இது வரை குறிப்பிடத்தக்க வெற்றியோடு நிறைவேற்றியிருக்கும் பணிகளில் ஒன்றாகும். வெவ்வேறு நாடுகளையும் சேர்ந்த

தொழிலாளர்களை ஒரு விடுதலைச் சேனையைச் சேர்ந்த சகோதரர்களாகவும் தோழர்களாகவும் உணர்வதோடு மட்டு மல்லாமல் செயல்பட வைப்பது இச்சங்கத்தின் மாபெரும் நோக்கங்களில் ஒன்றாகும்.

(இ) எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தினரின் நிலைமையைப் பற்றி தொழிலாளி வர்க்கத்தினரே நடத்து கின்ற புள்ளிவிவர ஆராய்ச்சியை ''சர்வதேசிய ரீதியில் முயற்சிகளை ஒன்றிணைக்கின்ற'' ஒரு மாபெரும் நடவடிக்கை யாக நாம் சிபாரிசு செய்கின்றோம். இதில் ஏதாவதொரு அளவுக்கு வெற்றியடைய வேண்டுமென்றால், நடவடிக்கை எடுக்கத் தேவையான விவரங்கள் வேண்டும். இத்தகைய மாபெரும் பணியைத் தொடங்கி வைப்பதன் மூலம் தங் களுடைய சொந்தத் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிப் பதற்குரிய தகுதியைத் தொழிலாளர்கள் நிரூபிக்க முடியும். ஆகவே பின்வரும் பிரேரணையை முன்வைக்கின்றோம்:

நம் சங்கத்தின் கிளைகள் இருக்கின்ற ஒவ்வொரு ஸ்தலத்திலும் உடனடியாக இந்த வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும்; இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அம்சங்களைப் பற்றி ஆதாரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் உள்ள எல்லாத் தொழிலாளர்களையும் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றி புள்ளியியல் விவரங்களைச் சேகரிக்கின்ற பணியில் பாடுபடுமாறும் அறிக்கைகளையும் ஆதாரங்களையும் மத்திய கவுன்சிலுக்கு அனுப்பி வைக்குமாறும் காங்கிரஸ் கேட்டுக் கொள்ள வேண்டும். மத்திய கவுன்சில் அவற்றை அடிப் படையாகக் கொண்டு ஒரு பொது அறிக்கையை விரித் துரைக்க வேண்டும்; ஆதாரங்களைப் பிற்சேர்க்கையாக இணைத்துத் தர வேண்டும்.

இந்த அறிக்கையும் பிற்சேர்க்கையும் அடுத்த வருடாந் திரக் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அதன் அங்கீகாரத்துக்குப் பிறகு சங்கச் செலவில் அச்சிட்டு வெளி யிடப்பட வேண்டும்.

## பொதுவான ஆராய்ச்சித் திட்டம்
(ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் தகுந்தபடி இதைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம்)

1. உற்பத்தித் தொழிலின் பெயர்.
2. இதில் வேலை செய்பவர்களின் வயது மற்றும் பால் வேறுபாடு.
3. இதில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை.
4. ஊதியங்களும் கூலிகளும்: (அ) பயிற்சியாளர்கள்; (ஆ) நாள் கூலி அல்லது வேலை அளவைப் பொறுத்த கூலி; தரகர்கள் கொடுக்கின்ற கூலி விகிதம். வாரந்தர, வருடச் சராசரிக் கூலி.
5. (அ) தொழிற்சாலைகளில் வேலை நேரம். (ஆ) சிறிய அளவில் தொழில் நடத்துபவர்களிடம் வேலை செய்யும் நேரம் மற்றும் வீட்டில் வேலை செய்யும் நேரம் (இவ்வகையான உற்பத்தித் தொழில்கள் நடைபெறுமாஞல்). (இ) இரவு வேலை மற்றும் பகல் வேலை.
6. உணவுக்கு ஒதுக்கப்படும் நேரங்கள் மற்றும் தொழிலாளர்கள் நடத்தப்படும் முறை.
7. பட்டறை நிலைமைகள் மற்றும் வேலை செய்யும் நிலைமைகள்: பட்டறைகளின் இடப் பற்ருக்குறை; காற்ருேட்ட வசதியின்மை, சூரிய ஒளி வருவதற்கு வசதியில்லாதிருத்தல், வாயு விளக்குகளை உபயோகித்தல்; சுத்தம், இதரவை.
8. வேலையின் தன்மை.
9. வேலையின் காரணமாக உடல் நிலைக்கு ஏற்படும் பாதிப்பு.
10. ஒழுக்க நிலைமைகள். பயிற்சி முறை.
11. உற்பத்தித் தொழிலின் நிலைமை: பருவ காலத் தொழிலா அல்லது அநேகமாக வருட முழுவதும் ஒரே சீராக நடைபெறுகின்ற தொழிலா, அதிகமான ஏற்ற இறக்கங்கள் உண்டா, அந்நியப் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருக்

கிறதா, பிரதான நோக்கம் உள்நாட்டு வியாபாரமா அல்லது வெளிநாட்டு வியாபாரமா, இதரவை.

## 3. வேலை நேரக் குறைப்பு

உழைக்கும் நேரத்தைக் குறைப்பது ஒரு பூர்வாங்க நிபந்தனையாகும்; அது இல்லையென்றால் தொழிலாளர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கும் அவர்களது விடுதலைக்கும் கூடுதலாகச் செய்யப்படுகின்ற எல்லா முயற்சிகளுமே பயனில்லாமற் போய்விடும்.

ஒவ்வொரு மக்களினத்தின் மாபெரும் அங்கமாகிய தொழிலாளி வர்க்கத்தின் ஆரோக்கியத்தையும் உடல் பலத்தையும் மீட்டுக் கொடுப்பதற்கும் அறிவு பூர்வமான வளர்ச்சி, நேச உறவுகள், சமூக மற்றும் அரசியல் நடவடிக்கையின் சாத்தியத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் அது அவசியமாகும்.

ஒரு நாளுக்கு வேலை நேரம் எட்டு **மணியாக** சட்டபூர்வமான **ரீதியில் விதிக்கப்பட** வேண்டுமென்று நாம் கூறுகிறோம். இத்தகைய வேலை நேரக் குறைப்பு அமெரிக்க ஐக்கிய நாட்டின் தொழிலாளர்களுடைய பொதுவான கோரிக்கையாகும்.[42] காங்கிரஸ் இதைப் பற்றி முடிவு செய்வது அதை உலக முழுவதிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினரின் பொதுச் செயல்திட்டக் கோரிக்கையாக உயர்த்தும்.

ஒரு நாளில் எட்டு மணி உழைக்கும் நேரத்தைக் கணக்கிடுகின்ற **காலப் பகுதி** நிர்ணயம் செய்யப்படவில்லையென்றால் சட்டபூர்வமான எல்லா வரையறைகளும் தோல்வியடைய நேரும், மூலதனம் அவற்றை நொறுக்கிவிடும் என்பதைத் தொழிற்சாலைச் சட்டங்களைப் பற்றி ஒப்பீட்டளவில் குறைந்த கால அனுபவத்தையே கொண்டுள்ள ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த சங்கத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறோம். உழைப்பதற்கு எட்டு மணி நேரத்தையும் உணவு சாப்பிடக் கூடுதலான இடைவேளையையும் சேர்த்து அந்தக் காலப் பகுதியின் அளவு நிர்ணயிக்கப்பட

வேண்டும். உதாரணமாக, உணவு சாப்பிடத் தரப்படுகின்ற வெவ்வேறு இடைவேளைகளின் மொத்த நேரம் ஒரு மணி என்றால் சட்டபூர்வமான பகல் வேலை ஒன்பது மணி நேரங்களாக, அதாவது காலையில் ஏழு மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை அல்லது காலையில் எட்டு மணியிலிருந்து மாலையில் ஐந்து மணி வரை, மற்றும் இதே விதத்தில் இருக்க வேண்டும். சட்டத்தால் குறிப்பிடப்படுகின்ற தொழில்களுக்கு அல்லது தொழிற் பிரிவுகளுக்கு மட்டும் இரவு வேலை விசேஷ சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படலாம். எல்லாவிதமான இரவு வேலைகளையும் ஒழிக்கப் பாடுபட வேண்டும்.

இந்தப் பாரா வயது வந்த ஆண்கள் அல்லது பெண்களுக்கு மட்டுமே உரியதாகும். எனினும் பெண்கள் எல்லா விதமான இரவு வேலைகளிலிருந்தும் அவர்களுடைய மென்மையான உடலமைப்புக்கு ஆபத்தான எல்லாவிதமான வேலைகளிலிருந்தும் அல்லது விஷப் புகை மற்றும் வேறுவகையில் கெடுதலான பொருள்கள் அவர்கள் உடலில் படுவதிலிருந்தும் கண்டிப்பான முறையில் விலக்கி வைக்கப்பட வேண்டும். வயது வந்தவர்கள் என்று குறிப்பிடும் பொழுது பதினெட்டு வயதை அடைந்த அல்லது கடந்த எல்லா நபர்களையுமே நாம் குறிப்பிடுகின்றோம்.

## 4. குறைந்த வயதுடையவர்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பு (இரு பாலினரும்)

சமூக உற்பத்தி என்ற மகத்தான பணியில் இரு பாலினரையும் சேர்ந்த குழந்தைகள் மற்றும் குறைந்த வயதுடையவர்களைப் பங்கெடுக்குமாறு செய்கின்ற நவீன தொழில்துறைப் போக்கு முற்போக்கான, சரியான, நியாயமான போக்கு என்று நாங்கள் கருதுகிறோம்; ஆனால் முதலாளித்துவத்தின் கீழ் இது அருவருப்புக்குரிய வடிவங்களில் சிதைக்கப்படுகிறது. பகுத்தறிவுக்குப் பொருந்துகின்ற ஒரு சமூக அமைப்பில் எல்லாக் குழந்தைகளுமே ஒன்பது வயதிலிருந்து உற்பத்தியில் பங்கு கொள்ளும் உழைப்பாளியாக இருக்க வேண்டும். பொது இயற்கை விதியிலிருந்து, அதாவது சாப்பிட வேண்டுமென்றால் உழைக்க வேண்டும், மூளையைக்

கொண்டு மட்டுமல்ல, கைகளாலும் உழைக்க வேண்டும் என்ற விதியிலிருந்து உடல்திடமுடைய, வயதுவந்த எந்த நபருக்கும் விலக்களிக்கப்படக் கூடாது என்பதைப் போன்றதே இதுவும். எனினும் இப்பொழுது தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த இரு பாலினரான குழந்தைகள் மற்றும் குறைந்த வயதுடையவர்களையே நாம் எடுத்துக் கொள்கிறோம்.

உடலியல் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் என்று கருதுகிறோம்; இப்பிரிவுகளை வெவ்வேறு விதமாக நடத்த வேண்டும்: முதல் பிரிவு 9 வயது முதல் 12 முடிய; இரண்டாவது பிரிவு 13 வயது முதல் 15 முடிய; மூன்றாவது பிரிவு 16 மற்றும் 17 வயதுடையவர்களைக் கொண்டிருக்கும். முதல் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஒரு பட்டறையில் அல்லது வீட்டில் வேலை செய்தார்களென்றால் அவர்களுடைய வேலை நேரம் சட்டப்படி இரண்டு மணி நேரமாக இருக்க வேண்டும். இரண்டாவது பிரிவுக்கு நான்கு மணி நேரம், மூன்றாவது பிரிவுக்கு ஆறு மணி நேரம். மூன்றாவது பிரிவினருக்கு உணவு சாப்பிட அல்லது ஓய்வுக்காகக் குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் இடைவேளையாகக் கொடுக்கப்பட வேண்டும்.

தொடக்கப் பள்ளிக் கல்வியை ஒன்பது வயதாவதற்கு முன்னமேயே ஆரம்பிப்பது விரும்பத்தக்கதாகும். ஆனால், தொழிலாளியை மூலதனத்தைக் குவிப்பதற்குரிய வெறும் கருவியாகவும் வறுமையால் நசுக்கப்பட்ட பெற்றோர்களைத் தங்களுடைய சொந்தக் குழந்தைகளையே அடிமைகளாக விற்பனை செய்பவர்களாகவும் தரம் குறைக்கின்ற சமூக அமைப்பின் போக்குகளுக்கு எதிரான அத்தியாவசியமான மாற்று மருந்துகளையே நாம் இங்கே விவரிக்கின்றோம். குழந்தைகள் மற்றும் குறைந்த வயதுடையவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களுக்காகப் பாடுபட இயலாதவர்கள். ஆகவே அவர்களுக்காகப் பாடுபட வேண்டியது சமூகத்தின் கடமை.

முதலாளி வர்க்கத்தினர் மற்றும் மேற்குலத்தினர் தங்

களுடைய குழந்தைகளின் பால் தங்களுடைய கடமைகளைப் புறக்கணித்தால் அது அவர்களுடைய சொந்தத் தவறுதான். இந்த வர்க்கத்தினருடைய விசேஷ உரிமைகளைக் குழந்தை பகிர்ந்து கொள்ளும் பொழுது அவர்களுடைய தப்பெண்ணங் களாலும் பாதிக்கப்படுமாறு விதிக்கப்படுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் நிலை முற்றிலும் வேருனதாகும். தொழிலாளி தன்னுடைய நடவடிக்கையில் சுதந்திரமான நபரல்ல. பல விஷயங்களில் தன்னுடைய குழந்தைக்கு உண்மையில் நன்மை தருவது எது என்பதையோ அல்லது மனித வளர்ச்சியின் சகஜமான நிலைமைகளையோ புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர் அறிவில்லாதவராக இருக்கிறுர். எனினும் தொழிலாளி வர்க்கத்தில் அதிக முற்போக்கான பகுதியினர் தங்களுடைய வர்க்கத்தின், ஆகவே மனிதகுலத்தின் எதிர்காலம், வளர்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களின் தலைமுறையின் உருவாக்கத்தை முற்றிலும் சார்ந்திருக்கிறது என்பதை முழுமையாக உணர்கிருர்கள். மற்ற எல்லாவற்றுக்கும் முன்பாக, குழந்தைகளும் குறைந்த வயதுடையவர்களும் இன்றைய அமைப்பின் கீழ் நசுங்கிப் போவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். சமூகப் பகுத்தறிவைச் சமூக சக்தியாக மாற்றுவதன் மூலமாக மட்டுமே இதை நிறைவேற்ற முடியும். இன்றுள்ள சூழ்நிலைகளில் அரசின் அதிகாரத்தால் அமுல் நடத்தப்படுகின்ற பொதுச் சட்டங்களின் மூலமாக இதை நிறைவேற்றுவதைத் தவிர இதற்கு வேறு வழி கிடையாது. இத்தகைய சட்டங்களை அமுல் நடத்தும் பொழுது தொழிலாளி வர்க்கத்தினர் அரசாங்க அதிகாரத்தை வலுப்படுத்தவில்லை. அதற்கு மாருக, இப்பொழுது அவர்களுக்கு எதிராக உபயோகிக்கப்படுகின்ற அரசாங்க அதிகாரத்தைத் தங்களுடைய சொந்தக் கருவியாக மாற்றுகிருர்கள். அவர்கள் வீணுகச் செய்கின்ற எண்ணற்ற, தனிமைப்படுத்தப்பட்ட உதிரி முயற்சிகளுக்குப் பதிலாக ஒரு பொதுச் சட்டத்தின் மூலம் அதை நிறைவேற்றுகிருர்கள்.

எந்தப் பெற்ருேரும் மற்றும் வேலை கொடுப்பவரும் குழந்தைகள், குறைந்த வயதுடையவர்களுடைய

உழைப்பை—அது பயிற்சி மற்றும் வளர்த்தலோடு இணைக்கப்பட்டிருந்தாலொழிய—உபயோகப்படுத்த அனுமதிக்கப் படக்கூடாது என்று இந்தக் கருத்தோட்டத்திலிருந்து நாம் சொல்கிறோம்.

பயிற்சி மற்றும் வளர்த்தலின் மூலம் நாம் மூன்று விஷயங்களைப் புரிந்து கொள்கிறோம்:

முதலாவதாக, **அறிவு வளர்ச்சிக் கல்வி.**

இரண்டாவதாக, **உடல் வளர்ச்சிக் கல்வி,** உடற்பயிற்சி அரங்குகளிலும் இராணுவப் பயிற்சிகளிலும் கிடைப்பது போலும்.

மூன்றாவதாக, **தொழில்நுட்பவியல் பயிற்சி,** உற்பத்தியின் எல்லா நிகழ்வுகளையும் பற்றிய பொதுவான கோட்பாடு களைக் கற்றுக் கொடுப்பதோடு, அதே சமயத்தில் எல்லாத் தொழில்களுக்கும் உரிய தொடக்கநிலைக் கருவிகளின் செய்முறை உபயோகத்தில் குழந்தைக்கும் குறைந்த வயதுடையவருக்கும் பயிற்சி தருதல்.

அறிவு, உடல்நல, தொழில்நுட்பவியல் பயிற்சிக்குரிய படிப்படியான மற்றும் மென்மேலும் வளர்ச்சியடைகின்ற பாடதிட்டம் குழந்தைகளையும் குறைந்த வயதுடைய தொழிலாளர்களையும் வயதின் அடிப்படையில் பிரிப்பதற்குப் பொருந்தி வர வேண்டும். இத்தகைய தொழில் நுட்பவியல் பள்ளிகளை நடத்துவதற்குரிய செலவின் ஒரு பகுதியை அங்கே செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் சரிக்கட்ட வேண்டும்.

கூலி கொடுக்கப்படும் உற்பத்தி உழைப்பு, அறிவு வளர்ச்சியைத் தரும் கல்வி, உடற் பயிற்சி, பல் தொழிற் பயிற்சி ஆகியவை ஒன்றுசேரும் பொழுது அது தொழிலாளி வர்க்கத்தை, உயர்தர மற்றும் முதலாளி வர்க்கத்தினருடைய நிலைக்கு மிகக் கூடுதலாக உயர்த்தும்.

ஒன்பது முதல் பதினேழு வயதுடைய (அந்த வருடங்களையும் சேர்த்து) எல்லா நபர்களையும் இரவு வேலையிலும் உடல் நலக் கேடான தொழில்களிலும் ஈடுபடுத்துவது சட்டத்தால் கண்டிப்பாகத் தடை செய்யப்பட வேண்டும் என்பது சுயமாகவே விளங்கும்.

## 5. கூட்டுறவு உழைப்பு

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பணி தொழிலாளி வர்க்கத்தினரின் தன்னியல்பான இயக்கங்களை இணைப்பதும் பொதுமைப்படுத்துவதுமே. எவ்வகையான கோட்பாட்டளவிலான அமைப்பையும் விதிப்பதோ அல்லது சுமத்துவதோ அல்ல. எனவே காங்கிரஸ் கூட்டுறவைப் பற்றிய விசேஷமான அமைப்பு எதையும் பிரகடனம் செய்யக் கூடாது; சில பொதுவான கோட்பாடுகளை வகுத்துத் தருவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

(அ) வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய சக்திகளில் கூட்டுறவு இயக்கமும் ஒன்று என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். மூலதனத்துக்கு உழைப்பு கீழ்ப்படுத்தப்படுகின்ற இன்றுள்ள வறுமைப்படுத்துகின்ற எதேச்சாதிகாரமான அமைப்புக்குப் பதிலாக சுதந்திரமான மற்றும் சம உரிமைகளைக் கொண்ட உற்பத்தியாளர்களின் சங்கம் என்ற குடியரசுத் தன்மை கொண்ட நன்மைமிக்க அமைப்பை ஏற்படுத்த முடியும் என்று செய்முறையில் காட்டுவது அதன் பெருஞ் சிறப்பாகும்.

(ஆ) எனினும் தனிப்பட்ட கூலி அடிமைகள் தங்களுடைய தனிப்பட்ட முயற்சிகளால் விரிவடைய வேண்டிய குள்ள வடிவங்களாகக் குறுக்கப்பட்டிருக்கும் வரையிலும் கூட்டுறவு அமைப்பினுல் முதலாளித்துவ சமூகத்தை ஒரு போதும் மாற்றியமைக்க முடியாது. சமூக உற்பத்தியை சுதந்திரமான மற்றும் கூட்டுறவு உழைப்பின் ஒரு பெரிய, ஒத்திசைவான அமைப்பாக மாற்றுவதற்குப் பொதுவான சமூக மாற்றங்கள் அவசியப்படுகின்றன; சமுதாயத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட சக்திகளை அதாவது அரசு அதிகாரத்தை முதலாளிகள் மற்றும் நிலவுடைமையாளர்களிடமிருந்து உற்பத்தியாளர்கள் தமக்கே மாற்றிக் கொடுத்தாலன்றி, சமூக அமைப்பின் அடித்தள மாற்றங்களை ஒரு போதும் அடைய முடியாது.

(இ) தொழிலாளர்கள் கூட்டுறவு விற்பனை நிலையங்களைக்

காட்டிலும் கூட்டு உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்று நாம் சிபாரிசு செய்கிறோம். கூட்டுறவு விற்பனை நிலையங்கள் இன்றைய பொருளாதார அமைப்பின் மேற்பரப்பை மட்டுமே தொடுகின்றன; கூட்டு உற்பத்தி அதன் அடித்தளத்தைத் தாக்குகிறது.

(ஈ) எல்லாக் கூட்டுறவு சங்கங்களும் தங்களுடைய கூட்டு வருமானத்தில் ஒரு பகுதியைத் தங்களுடைய கோட்பாடுகளை—உதாரணத்தின் மூலமும் செய்முறையாகவும்—பரப்புவதற்கு, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், போதனை மற்றும் பிரச்சாரம் செய்வதோடு புதிய உற்பத்தி கூட்டுறவு அமைப்புகளை நிறுவுவதை ஊக்குவிப்பதற்கு ஒரு நிதியாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்கிறோம்.

(உ) கூட்டுறவு சங்கங்கள் சாதாரணமான பூர்ஷ்வா வர்க்கக் கூட்டுப் பங்குக் கம்பெனிகளாக (sociétés par actions) சீர்கேடடைந்து விடாமல் தடுப்பதற்காக, ஒவ்வொரு நிலையத்தின் தொழிலாளர்களும்—அவர்கள் பங்குதாரர்களாக இருந்தாலும் அல்லது அவ்வாறு இல்லாவிட்டாலும்—ஒரே அளவில் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தற்காலிகமான ஏற்பாடு என்ற முறையில், பங்குதாரர்களுக்குக் குறைவான வட்டி விகிதத்தை அனுமதிப்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

## 6. தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள். அவற்றின் கடந்த காலமும் நிகழ் காலமும் எதிர்காலமும்

(அ) அவற்றின் கடந்த காலம்.

மூலதனம் என்பது திரட்டப்பட்ட சமூக சக்தி. தொழிலாளியால் தன்னுடைய உழைக்கும் சக்தியை மட்டுமே கொடுக்க முடியும். எனவே மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே நியாயமான அடிப்படையில் ஒருபோதும் ஒப்பந்தம் ஏற்பட முடியாது. வாழ்க்கை மற்றும் உழைப்பின்

பொருளாயதச் சாதனங்களின் உடைமையை உயிருள்ள உற்பத்தி சக்திக்கு எதிராக வைக்கின்ற சமூகத்தின் அர்த்தத்தில் கூட இது நியாயமானதாக இல்லை. தொழிலாளர்களிடமிருக்கும் ஒரே சமூக சக்தி அவர்களுடைய எண்ணிக்கையே. எனினும் அந்த எண்ணிக்கையின் பலம் ஒற்றுமையின்மையினுல் உடைக்கப்படுகிறது. அவர்கள் தங்களுக்குள்ளாகவே தவிர்க்க முடியாத வகையில் போட்டியில் ஈடுபடுவதனுல் இந்த ஒற்றுமையின்மை தோற்றுவிக்கப்பட்டு நிரந்தரமடைகிறது.

குறைந்த பட்சம் வெறும் அடிமைகள் என்ற நிலைக்குச் சற்று மேலே தங்களை உயர்த்தக் கூடிய ஒப்பந்த ஷரத்துக்களைப் பெறுவதில் வெற்றியடைவதற்கு அந்தப் போட்டியை அகற்றுவதற்காக அல்லது குறைந்த பட்சம் கட்டுப்படுத்துவதற்காகத் தொழிலாளர்கள் தாளுகவே செய்த முயற்சிகளில்தான் தொழிற்சங்கங்கள் ஆரம்பத்தில் தோன்றின. எனவே தொழிற்சங்கங்களின் உடனடியான நோக்கம் அன்ருடத் தேவைகளோடு மூலதனத்தின் இடைவிடாத அத்துமீறல்களைத் தடுப்பதற்குரிய உத்திகளோடு சுருக்கமாகச் சொல்வதென்ருல் கூலிகளையும் வேலை செய்யும் நேரத்தையும் பற்றிய பிரச்சினைகளோடு நின்று விட்டது. தொழிற்சங்கங்களின் இந்த நடவடிக்கை நியாயமானது மட்டுமல்ல, அவசியமானது. இன்றைய உற்பத்தி முறை நீடிக்கின்ற வரையில் இதை நிறுத்த முடியாது. இதற்கு மாருக, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் தொழிற்சங்கங்களை உருவாக்குவதிலும் அவற்றை இணைப்பதிலும் அதைப் பொதுமைப்படுத்த வேண்டும். மறு பக்கத்தில், முதலாளி வர்க்கத்துக்கு மத்திய கால நகராட்சி மன்றங்களும் கம்யூன்களும் இருந்ததைப் போல தொழிற்சங்கங்கள்—தமக்கே சுய-உணர்வில்லாமல்—தொழிலாளி வர்க்கத்தின் ஒழுங்கமைப்பு மையங்களாக உருவாகி இருந்தன. மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே நடைபெறுகின்ற கொரில்லாப் போராட்டத்திற்குத் தொழிற்சங்கங்கள் அவசியமென்ருல், கூலி உழைப்பு என்ற அமைப்பு மற்றும் மூலதனத்தின் ஆட்சியை அகற்றுவதற்குரிய ஸ்தாபன ரீதியாக அமைக்கப்பட்ட சக்தி என்ற

வகையில் அவை இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

(ஆ) அவற்றின் நிகழ் காலம்.

தொழிற்சங்கங்கள் மூலதனத்துக்கு எதிரான ஸ்தல மற்றும் உடனடியான போராட்டங்களில் மற்றவைகளை விலக்கி மிக அதிகமான கவனத்தைச் செலுத்தி வந்திருப்பதால் கூலி அடிமை என்ற முறையையே எதிர்த்துப் போராடுவதற்கு அவை பலமாக இருப்பதை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. எனவே அவை பொதுவான சமூக மற்றும் அரசியல் இயக்கங்களிலிருந்து அதிகமான அளவுக்கு ஒதுங்கியிருந்தன. எனினும் சமீப காலத்தில் தொழிற்சங்கங்கள் தமது மகத்தான வரலாற்று ரீதியான இலட்சியக் கடமையைப் புரிந்து கொள்கின்ற வகையில் விழித்துக் கொண்டுவிட்டன என்பது பின்வரும் உதாரணங்களிலிருந்து தோன்றுகிறது. இங்கிலாந்தில் இன்றைய அரசியல் இயக்கத்தில்[43] அவர்கள் பங்கு கொண்டிருத்தல், அமெரிக்க ஐக்கிய நாட்டில் தங்களுடைய பணிகளைப் பற்றி விரிந்த கருத்துக்களைக் கொண்டிருத்தல்[44], ஷெஃபில்டில் சமீபத்தில் நடைபெற்ற தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளின் மாபெரும் மாநாட்டில்[45] பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருத்தல் இதற்கு உதாரணங்களாகும்:

''எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒரே சகோதரப் பிணைப்பில் ஒன்றுசேர்ப்பதற்காக சர்வதேசச் சங்கம் செய்து வருகின்ற முயற்சிகளை இம்மாநாடு முழுமையாகப் பாராட்டுகின்றது; அந்தச் சங்கம் அனைத்துத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கும் வளமான வாழ்க்கைக்கும் கணிசமான அளவுக்கு உதவும் என்று நம்புவதால் இங்கே பிரதிநிதிகளாக வந்துள்ள எல்லா அமைப்புகளும் சர்வதேச சங்கத்துடன் இணைவதை மிகவும் மனப்பூர்வமாகச் சிபாரிசு செய்கின்றது.''

(இ) அவற்றின் எதிர்காலம்.

அவற்றின் முதல் நோக்கங்களைத் தவிர, தொழிலாளி வர்க்கத்தின் **முழுமையான விடுதலையை** தங்களுடைய மாபெரும் நோக்கமாகக் கொண்டு அதைத் திரட்டும்

அமைப்பு மையங்களாக உணர்வுடன் செயலாற்றுவதற்கு இப்பொழுது அவை கற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் திசையில் செல்ல முனைகின்ற ஒவ்வொரு சமூக, அரசியல் இயக்கத்துக்கும் அவை உதவி செய்ய வேண்டும். அனைத்துத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவாளர்களாகவும் பிரதிநிதி களாகவும் தம்மைக் கருதி அவ்விதமாகச் செயலாற்றும் பொழுது அவை, சங்கத்தில் இல்லாத தொழிலாளர்களைத் தங்கள் அணிகளில் சேர்க்குமாறு செய்ய வேண்டும். மிகவும் மோசமான கூலி கொடுக்கப்படுகின்ற தொழில்களை, உதாரணமாக, பாதகமான நிலைமைகளின் காரணமாக சக்தியில்லாதவர்களாக இருக்கும் விவசாயத் தொழிலாளர் களுடைய நலன்களுக்காக அவை அதிகமான கவனத்தோடு பாடுபட வேண்டும். தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் குறுகிய நோக்குடையவையோ அல்லது சுயநலமானவையோ அல்ல, கீழே மிதிக்கப்பட்டுக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் விடுதலையே அவற்றின் நோக்கம் என்பதை உலகத் தினர் நம்புகின்ற வகையில் அவை நடந்து கொள்ள வேண்டும்.

## 7. நேரடியான வரியும் மறைமுக வரியும்

(அ) வரிவிதிப்பு முறையில் எப்படிப்பட்ட மாற்றங் களைச் செய்தாலும் அவை உழைப்புக்கும் மூலதனத்துக்கு மிடையே உள்ள உறவுகளில் எவ்விதத்திலும் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

(ஆ) எனினும், இரண்டு வரி விதிக்கும் முறைகளில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதால் மறைமுக வரிகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும், அவற்றுக்கு பதிலாக நேரடியான வரிகள் பொதுவாக அமுல்நடத்தப்பட வேண்டும் என்று நாம் சிபாரிசு செய்கிறோம்.

ஏனென்றால் மறைமுக வரிகளினால் பண்டங்களின் விலை கள் அதிகரிக்கின்றன. வியாபாரி பண்டங்களின் விலைகளோடு மறைமுக வரிகளை மட்டுமல்லாமல் அவற்றுக்காகத் தரு

கின்ற மூலதனத்துக்கு வட்டியையும் லாபத்தையும் கூடச் சேர்த்துக் கொள்கிறார்.

ஏனென்றால் ஒரு நபர் அரசுக்குக் கொடுப்பது எவ்வளவு என்பதை மறைமுக வரி அவரிடமிருந்து மறைக்கிறது. ஆனால் நேரடியான வரியோ ஒளிவு மறைவில்லாதது, நயமற்றது, மிகக் குறைவான அறிவுடையவர்கள்கூட அதைப் புரிந்து கொள்ளத் தவற முடியாது. ஆகவே நேரடியான வரி அரசாங்கத்தைக் கண்காணிக்குமாறு ஒவ்வொரு நபரையும் தூண்டுகிறது. ஆனால் மறைமுக வரியோ சுயநிர்வாகத்திற்கான எல்லாப் போக்குகளையும் ஒழித்துவிடுகிறது.

## 8. சர்வதேசிய கடன்

இதற்கான முன்முயற்சி பிரெஞ்சுப் பிரிவுக்கு விடப்படுகிறது.

## 9. போலிஷ் பிரச்சினை

(அ) ஐரோப்பாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது ஏன்? முதலாவதாக, பூர்ஷ்வா வர்க்க எழுத்தாளர்களும் கிளர்ச்சிக்காரர்களும் ஐரோப்பாவில்—அயர்லாந்தில் கூட—பல தேசிய இனங்களை ஆதரித்தபோதிலும் இந்தப் பிரச்சினையைப் பற்றி மௌனம் சாதித்துச் சதி செய்கிறார்கள். இத்தகைய மௌனத்துக்குக் காரணமென்ன? ஏனென்றால் பிரபுக்கள் மற்றும் முதலாளி வர்க்கத்தினர் இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் இருக்கின்ற இருளடர்ந்த ஆசிய வல்லரசை முன்னேறிவருகின்ற தொழிலாளி வர்க்கத் தலைமைக்கு எதிரான கடைசிப் பாதுகாப்பாகக் கருதுகிறார்கள். போலந்தை ஜனநாயக அடிப்படையில் மீட்டுக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே அந்த வல்லரசைத் தீவிரமாக ஒடுக்க முடியும்.

(ஆ) மத்திய ஐரோப்பாவில் குறிப்பாக ஜெர்மனியில் இன்று நிலவும் மாற்றமடைந்துள்ள நிலைமையில், ஒரு ஜனநாயக போலந்தை ஏற்படுத்துவது முன்னெப்போதும்

இல்லாத அளவுக்கு அவசியமாக இருக்கிறது. அது இல்லையென்றால் ஜெர்மனி புனிதக் கூட்டணியின்[46] எல்லைக் காவல் நிலையமாகிவிடும்; அது இருந்தால் குடியரசு பிரான்சோடு ஒத்துழைக்கும். இந்த மாபெரும் ஐரோப்பியப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படுகின்ற வரை தொழிலாளி வர்க்க இயக்கம் தொடர்ச்சியாகத் தடைப்படும், தடுக்கப்படும், பின்னால் தள்ளப்படும்.

(இ) போலந்தைக் கூறு போட்ட நாடுகளில் ஜெர்மனியும் ஒன்று என்பதால் இந்த விஷயத்தில் முன்முயற்சி எடுப்பது ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் விசேஷமான கடமையாகும்.

## 10. இராணுவங்கள்

(அ) மிகப் பெரிய எண்ணிக்கையில் இருக்கின்ற நிரந்தர இராணுவங்கள் உற்பத்தியில் ஏற்படுத்துகின்ற தீங்கான விளைவு எல்லாவிதமான முதலாளி வர்க்கக் காங்கிரஸ்களிலும் சமாதான, பொருளாதார, புள்ளியியல், பொதுநல மற்றும் சமூகவியல் காங்கிரஸ்களிலும் போதுமான அளவுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் இதைப் பற்றிவிரிவாக எழுதுவது அவசியமில்லையென்று நினைக்கிறோம்.

(ஆ) மக்களுக்குப் பொதுவான இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களை உபயோகிப்பதைப் பற்றிப் பொதுமுறையான பயிற்சியும் கொடுக்க வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

(இ) போலீஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி தருகின்ற வகையில் அமைக்கப்படுகின்ற சிறு நிரந்தர இராணுவங்களை ஒரு தற்காலிக அவசியம் என்ற அளவில் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். குடிமகனாக உள்ள ஒவ்வொரு ஆணும் இந்த இராணுவங்களில் மிகக் குறுகிய காலத்துக்குப் பணி புரிய வேண்டும்.

## 11. மதப் பிரச்சினை

இதற்கான முன்முயற்சி பிரெஞ்சுப் பிரிவுக்கு விடப்படுகிறது.

*கா. மார்க்சினல் 1866 ஆகஸ்ட் கடைசியில் எழுதப்பட்டது*

*The International Courier எண் 6-7 இதழ்களில் 1867 பிப்ரவரி 20ந் தேதியிலும் மற்றும் 8-10 இதழ்களில் 1867 மார்ச் 13ந் தேதியிலும் Le Courrier international எண் 10-11 இதழ்களில் 1867 மார்ச் 9 மற்றும் 16ந் தேதிகளிலும் Der Vorbote எண் 10-11 இதழ்களில் 1866 அக்டோபர் மற்றும் நவம்பரிலும் வெளியிடப்பட்டது*

*The International Courier வாசகத்தின்படி அச்சிடப்பட்டது*

கா. மார்க்ஸ்

# அமெரிக்க ஐக்கிய நாட்டின் தேசியத் தொழிலாளர் சங்கத்துக்கு வேண்டுகோள்[47]

*தோழர்களே, தொழிலாளர்களே!*

நம் சங்கத்தை அறிமுகப்படுத்தும் செயல்திட்டத்தில் நாம் பின்வருமாறு கூறினோம்: ''அட்லாண்டிக் பெருங்கடலின் மறு பக்கத்தில் அடிமை முறையை நிரந்தரமாக்குவதற்கும் அதைப் பரப்புவதற்கும் நடைபெற்ற அவமானகரமான புனித யுத்தத்தில் மேற்கு ஐரோப்பா தலை தெறிக்கக் குதிப்பதிலிருந்து அதைக் காப்பாற்றியது ஆளும் வர்க்கத்தினருடைய மதிநுட்பமல்ல; இந்தக் குற்றவாளித்தனமான தவறை இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்தினர் வீரத்தோடு எதிர்த்ததே அதற்குக் காரணம்.''* அட்லாண்டிக் பெருங்கடலின் இரு பக்கங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி மிக்க இயக்கத்தை வரையறுக்கப்பட முடியாத காலத்துக்குப் பின்னால் தள்ளுவதுதான் இந்த யுத்தத்தின் மிகத் தெளிவான விளைவாக இருக்குமாதலால் இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்துகின்ற பணியில் உங்களுடைய முறை இப்பொழுது வந்துவிட்டது.

ஐக்கிய அமெரிக்க நாட்டை இங்கிலாந்தோடு ஒரு யுத்தத்தில் இழுத்துவிட வேண்டுமென்று அதிகமான கவலையோடு முயற்சி செய்து கொண்டிருக்கும் ஐரோப்பிய அரசுகள் இருக்கின்றன என்பதை உங்களிடம் நாங்கள்

---

* *இத்தொகுதி, பக்கங்கள் 23—24 பார்க்கவும்.*—ப-ர்.

சொல்லத் தேவையில்லை. வர்த்தகப் புள்ளிவிவரங்களை மேலோட்டமாகப் பார்த்தால் கூட ருஷ்யாவின் கச்சாப் பொருள் ஏற்றுமதி—ஏற்றுமதி செய்வதற்கு ருஷ்யாவில் வேறு எந்தப் பொருளும் இல்லை—அமெரிக்கப் போட்டிக்கு முன்னால் வேகமாகப் பின்வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில், உள்நாட்டு யுத்தம் திடீரென்று நிலைமையை மாற்றி விட்டது என்பது தெரியும். அமெரிக்க ஏர்க்கருவிகளைப் போர்வாள்களாக மாற்றினால் அது, உங்கள் குடியரசின் ராஜியத் தலைவர்கள் தங்கள் மெய்யறிவில் தமது இரகசிய ஆலோசகராகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட எதேச்சாதிகார வல்லரசை அதற்கு ஏற்படப்போகின்ற வக்கற்ற நிலைமையிலிருந்து இப்போது ஓரளவுக்குக் காப்பாற்றும். ஆனால் ஏதாவதொரு அரசாங்கத்தின் குறிப்பிட்ட நலன்களுக்கு அப்பாற்பட்ட வகையில், நம்மிடையே வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் சர்வதேச ஒத்துழைப்பை ஒருவரையொருவர் அழித்துக் கொள்கின்ற யுத்தமாக மாற்றுவது நம்மை ஒடுக்குகின்றவர்களின் பொதுவான நலனுக்கு உகந்ததுதானே?

திரு. ஆப்ரஹாம் லிங்கன் மறுபடியும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது நாம் அனுப்பிய பாராட்டுச் செய்தியில் அமெரிக்க சுதந்திர யுத்தம் முதலாளி வர்க்கத்தின் முன்னேற்றத்தில் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்ததைப் போல அமெரிக்க உள்நாட்டு யுத்தம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு முக்கியத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்* என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருந்தோம். மெய்யாகவே, அடிமை முறை எதிர்ப்பு யுத்தம் வெற்றியடைந்தது தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது. அமெரிக்காவுக்குள்ளாகவே உங்களுடைய பழைய கட்சிகளாலும் அவர்களுடைய தொழில் முறை அரசியல்வாதிகளாலும் ஒழிக்க வேண்டும் என்று நினைக்கப்பட்ட சுதந்திரமான தொழிலாளி வர்க்க இயக்கம்

---

* இத்தொகுதி, பக்கம் 33 பார்க்கவும்.—ப-ர்.

அன்றைய தினத்திலிருந்தே புத்துயிர் பெற்றுவிட்டது. அது முதிர்ச்சியடைய வேண்டுமென்றால் பல வருட காலத்துக்குச் சமாதானம் நிலவ வேண்டும். அதை நசுக்குவதற்கு அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஒரு யுத்தம் தேவைப்படுகிறது.

உள்நாட்டு யுத்தத்தின் நேரடியான, எளிதில் அறியக் கூடிய விளைவு அமெரிக்கத் தொழிலாளியின் நிலை சீர்கேடடைந்ததாகும். ஐரோப்பாவைப் போலவே அமெரிக்காவிலும் தேசியக் கடன் என்ற இராட்சசச் சுமை ஒவ்வொரு கையாக மாற்றிக் கொடுக்கப்பட்டுக் கடைசியில் தொழிலாளி வர்க்கத்தின் தோள்களில் சுமத்தப்பட்டு விட்டது. 1860ம் வருடத்திலிருந்து அவசியப் பொருள்களின் விலைகள் 78 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றன; ஆனால் தேர்ச்சி இல்லாத தொழிலாளர்களின் கூலி 50 சதவிகிதமும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் கூலி 60 சதவிகிதமும் மட்டுமே அதிகரித்திருக்கிறது என்று உங்களுடைய அரசுத் தலைவர்களில் ஒருவர் கூறுகிறார்.

''அமெரிக்காவில் இப்பொழுது ஓட்டாண்டி நிலை மக்கள் தொகையைக் காட்டிலும் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது'' என்று அவர் புகார் செய்கிறார்.

மேலும் யுத்தத்தினால் வளர்க்கப்பட்ட நிதியதிபர்கள், திடீர்ப் பிரபுக்கள்[48] மற்றும் அவர்களைப் போன்ற கயவர்களின் புதுப்பாணியான இன்ப வாழ்க்கையைத் தொழிலாளி வர்க்கத்தின் துன்பங்கள் எதிர்வண்ணப் பின்னணியாக மெருகிட்டுக் காட்டுகின்றன. இவை எப்படியிருந்தாலும் கூட அடிமைக்கு விடுதலை கொடுத்து அதன் மூலம் உங்களுடைய சொந்த வர்க்க இயக்கத்துக்கு தார்மிக உந்துதலைக் கொடுத்ததன் மூலம் உள்நாட்டு யுத்தம் அதை ஈடுகட்டிவிட்டது. உயர்ந்த நோக்கங்களாலும் மாபெரும் சமூக அவசியத்தாலும் தூய்மை அடையாது பழைய உலகத்தின் வகையைச் சேர்ந்த புதிய யுத்தம் அடிமை விலங்குகளை நொறுக்குவதற்கு பதில் சுதந்திரமான தொழிலாளியை அடிமைப் படுத்தும் சங்கிலிகளைத் தயாரிக்கும். அது தன் பாதையில்

விட்டுச் செல்கின்ற துன்பக்குவியல் உங்கள் முதலாளிகள் நிரந்தர இராணுவம் என்ற ஆன்மா இல்லாத வாளை உபயோகித்துத் தொழிலாளி வர்க்கத்தை அதன் துணிச்சலான மற்றும் நியாயமான விருப்பார்வங்களிலிருந்து பிரித்து வைக்கத் தேவையான நோக்கத்தையும் சாதனங்களையும் உடனே கொடுக்கும்.

வரலாற்று அரங்கில் தொழிலாளி வர்க்கம் இனியும் அடிமைத்தனமான ஏவலாட்களாக இல்லாமல்—தங்களுடைய சொந்தப் பொறுப்பை உணர்ந்த பாத்திரங்களாக, தங்களுடைய எஜமானர்கள் என்றழைக்கப்படுவோர் யுத்தம் என்று கூச்சலிடும் பொழுது சமாதானத்துக்கு ஆணையிடுகின்ற தகுதியுடையவர்களாகக் கடைசியாக இப்பொழுது உயர்ந்து விட்டார்கள் என்பதை உலகத்துக்கு நிரூபிக்கின்ற புகழ் மிக்க கடமை உங்களைச் சார்ந்திருக்கிறது.

**லண்டன்**
**மே 12, 1869**

*கா. மார்க்சினால்*
*எழுதப்பட்டது*

*Address to the National*
*Labour Union of the*
*United States*
London 1869 *என்ற தலைப்புடன்*
*1869ல் லண்டனில்*
*துண்டுப்பிரசுரமாக*
*வெளியிடப்பட்டது*

*இப்பிரசுரத்தின்படி*
*அச்சிடப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# "ஜெர்மனியில் விவசாயிகள் யுத்தம்" என்ற புத்தகத்துக்கு எழுதிய முன்னுரை[49]

## *1870ல் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரை*

*1850ம் வருடத்தின் கோடைகாலத்தில் அப்பொழுது தான் முடிவடைந்திருந்த எதிர்ப்புரட்சியைப் பற்றிய நினைவுகள் இன்னும் பசுமையாகவே இருந்த பொழுது இந்த நூல் லண்டனில் எழுதப்பட்டது. அது Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue என்ற பத்திரிகையின்[50] 5—6 இதழ்களில் (பதிப்பாசிரியர்—கார்ல் மார்க்ஸ், ஹாம்பர்க், 1850) வெளியிடப்பட்டது. ஜெர்மனியிலுள்ள என்னுடைய அரசியல் நண்பர்கள் அதை மறுபதிப்புச் செய்ய விரும்பியதால் அவர்களுடைய விருப்பத்துக்கு நான் இணங்கினேன். ஏனென்றால் இந்த நூல் இன்னும் இன்றைய காலத்துக்குரிய பொருத்தத்தைக் கொண்டிருக் கிறது. அதுவும் எனக்கு வருத்தத்தையே கொடுக்கிறது.*

*சுயேச்சையான ஆராய்ச்சியின் மூலம் சேகரிக்கப்பட்ட விஷயங்களைக் கூறுவதாக அது எத்தகைய உரிமையையும் முன்வைக்கவில்லை. இதற்கு மாருக, விவசாயிகளின் கலகங் களையும் தாமஸ் முன்சேரைப் பற்றியுமுள்ள மொத்த விவரங்*

கள் அனைத்துமே ஸிம்மெர்மானிடமிருந்து[51] எடுத்துக் கொள்ளப்பட்டவையே. அப்புத்தகத்தில் அங்குமிங்கும் சில இடைவெளிகள் இருந்தபோதிலும் உண்மையான விவரங்களைத் திரட்டிக் கொடுத்திருக்கும் மிகச் சிறந்த புத்தகமாக இன்னும் அதுவே இருக்கிறது. மேலும் வயோதிக ஸிம்மெர்மான் அந்தப் பொருளை நன்கு ரசித்தார். இப்புத்தகத்தில் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அங்குமிங்கும் ஆதரிக்குமாறு அவரைத் தூண்டிய அதே புரட்சிகரமான இயல்புணர்ச்சி பிற்காலத்தில் பிராங்க்பர்ட்டில் தீவிர இடதுசாரி அணியினரில்[52] மிகச் சிறந்தவர்களில் ஒருவராக அவரை மாற்றியது.

எனினும் மேற்கூறிய எல்லாவற்றுக்கும் நேர்மாறாக, ஸிம்மெர்மான் அளிக்கும் விளக்கவுரையில் உள்தொடர்புகள் இல்லையென்றால்; அந்தக் காலத்தின் அரசியல்-மத விவாதங்களை சமகாலத்தைச் சேர்ந்த வர்க்கப் போராட்டங்களின் பிரதிபலிப்பாகக் காட்டுவதில் அவர் வெற்றியடையவில்லை என்றால், இந்த வர்க்கப் போராட்டங்களில் ஒடுக்குபவர்களையும் ஒடுக்கப்படுபவர்களையும், தீய மனிதர்களையும் நல்ல மனிதர்களையுமே, தீய மனிதர்கள் கடைசியாக வெற்றியடைவதையும் அவர் பார்க்கிறார் என்றால், போராட்டம் வெடித்தெழுந்ததையும் அதன் விளைவையும் நிர்ணயித்த சமூக உறவுகளைப் பற்றிய அவருடைய கருத்தோட்டம் மிகக் குறைபாடானதாக இருக்கிறதென்றால் அவையனைத்தும் அந்தப் புத்தகம் பிறந்த காலத்திற்குரிய குறையாகும். அதற்கு மாறாக, அந்தக் காலத்தை வைத்துப் பார்க்கும் பொழுது அந்தப் புத்தகம் யதார்த்த ரீதியாகவே எழுதப்பட்டிருக்கிறது; வரலாற்றைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் ஜெர்மன் கருத்துமுதல்வாத நூல்களில் அது பாராட்டத்தக்க விதிவிலக்காகும்.

என்னுடைய நூல் போராட்டத்தின் வரலாற்று ரீதியான நிகழ்வுப்போக்கைப் பொது அம்சங்களில் மட்டுமே தீட்டிக் காட்டும் பொழுது விவசாயிகள் யுத்தத்தின் தோற்றத்தையும், அதில் பங்கு வகித்த பல்வேறு கட்சிகளின் நிலைகளையும், தங்களுடைய சொந்த மனங்களில் தங்களுடைய

நிலைகளுக்குத் தெளிவேற்படுத்திக் கொள்வதற்காக அந்தக் கட்சிகள் கொண்ட அரசியல் மற்றும் மதத் தத்துவங்களையும், கடைசியாக, இந்த வர்க்கங்களின் சமூக வாழ்க்கையின் வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட நிலைமைகளின் அவசியமான இறுதி முடிவாகிய அந்தப் போராட்டத்தின் முடிவையும் விளக்க முயற்சிக்கிறது. அதாவது அந்தக் காலத்தில் ஜெர்மனியில் இருந்த அரசியல் அமைப்பும் அதற்கு எதிரான கலகங்களும் மற்றும் சமகாலத்திய அரசியல், மதத் தத்துவங்களும் அன்றைக்கு ஜெர்மனியில் இருந்த விவசாயம், தொழில், நிலம் மற்றும் நீர் வழிப் போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் பணப் புழக்கம் ஆகியவை அடைந்த வளர்ச்சிக் கட்டத்தின் காரணங்கள் அல்ல, விளைவுகளே என்று எடுத்துக் காட்டுவதற்கு அதில் முயற்சி செய்யப்பட்டது. வரலாற்றைப் பற்றிய ஒரே பொருள் முதல்வாதக் கருதுகோள் இதுவே. இது என்னிடமிருந்து ஆரம்பமாகவில்லை. மார்க்சிடமிருந்தே ஆரம்பமாகிறது. இதே *Revue*இல் வெளியிடப்பட்ட, 1848-49ம் வருடங்களில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய அவருடைய நூலிலும்* **லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்** என்ற நூலிலும்** இதைக் காண முடியும்.

1525ம் வருட ஜெர்மன் புரட்சிக்கும் 1848-49ம் வருடப் புரட்சிக்கும் உள்ள இணை அந்தக் காலத்தில் முழுவதும் நிராகரிக்கப்பட முடியாத அளவுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. எனினும், ஸ்தலங்களில் ஏற்பட்ட கலகங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஒரே அரசருடைய இராணுவம் நசுக்கிய சம்பவங்களின் போக்கில் ஒற்றுமை இருந்தாலும், இரண்டு உதாரணங்களிலுமே நடுத்தர வகுப்பினர் நடத்தையில் கோமாளித்தனமான ஒற்றுமை

---

* கா. மார்க்ஸ், **பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்** (இப்பதிப்பு, தொகுதி 2, பக்கங்கள் 130—312 பார்க்க). —ப-ர்.

** இப்பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 7—199 பார்க்க. —ப-ர்.

அதிகமாக இருந்தாலும் வேறுபாடுகள் தெளிவாகவும் தனித்த முறையிலும் இருந்தன.

''1525ம் வருடப் புரட்சியினால் லாபமடைந்தவர்கள் யாவர்? அரசர்களே. 1848ம் வருடப் புரட்சியினால் லாபமடைந்தவர்கள் யாவர்? பெரும் அரசர்களை, ஆஸ்திரியாவும் பிரஷ்யாவுமே. 1525ம் வருடத்தின் சிறிய அரசர்களுக்குப் பின்னால் நடுத்தர வகுப்பினர் நின்று கொண்டிருந்தார்கள்; அவர்கள் வரிகளின் மூலம் அரசர்களைத் தங்களோடு பிணைத்துக் கொண்டிருந்தார்கள். 1850ம் வருடத்தின் பெரிய அரசர்களுக்குப் பின்னால், ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்கும் பின்னால் நவீன பெரிய முதலாளித்துவ வர்க்கம் நின்று கொண்டிருக்கிறது; தேசியக் கடன் மூலமாக அவர்களை வேகமாகத் தன்னுடைய நுகத்தடியின் கீழ் கொண்டு வருகிறது. பெரும் முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பின்னால் பாட்டாளி வர்க்கத்தினர் நிற்கிறார்கள்.''*

இந்தக் கருத்துரையில் ஜெர்மன் முதலாளி வர்க்கத்தினருக்கு அதிகமான, மிகவும் அதிகமான மரியாதை செய்யப்பட்டிருக்கிறதென்பதை நான் வருத்தத்தோடு கூறுகிறேன். ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளிலுமே முடியாட்சியை ''தேசியக் கடன் மூலமாக வேகமாகத் தன்னுடைய நுகத்தடியின் கீழ் கொண்டு வரும்'' வாய்ப்பு அவர்களுக்கு இருந்ததென்பது உண்மையே; ஆனால் அவர்கள் இந்த வாய்ப்பை எங்குமே என்றுமே பயன்படுத்தவில்லை.

1866ம் வருட யுத்தத்தின் விளைவாக[53] ஆஸ்திரியா முதலாளி வர்க்கத்தினருடைய மடியில் பரிசைப் போல விழுந்தது. ஆனால் அவர்களுக்கு இன்னும் ஆட்சி செய்வதற்குத் தெரியவில்லை. அவர்கள் சக்தியற்றவர்கள், எதையும் செய்யத் தகுதியற்றவர்கள். அவர்கள் ஒன்றை மட்டுமே செய்யக் கூடியவர்கள். தொழிலாளர்கள் தலையைத் தூக்கியவுடனேயே அவர்களை ஆவேசமாகத் தாக்குவதே அது.

* F. Engels, *The Peasant War in Germany*, Moscow, 1965, p. 127.—ப-ர்.

ஹங்கேரியர்களுக்கு அவர்கள் அவசியம் என்பதனுல் மட்டுமே அவர்கள் இன்னும் தலைமையிலிருக்கிருர்கள்.

பிரஷ்யாவில்? தேசியக் கடன் மிக அதிகமாக உயர்ந்திருப்பதும் பற்ருக்குறை நிரந்தரமான கூருகியிருப்பதும் அரசின் செலவு வருடந்தோறும் அதிகமாகிக் கொண்டிருப்பதும் சட்டமன்றத்தில் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குப் பெரும்பான்மை இருப்பதும் அவர்களுடைய ஒப்புதலின்றி வரிகளை அதிகரிக்கவோ, புதிய கடன்களைப் பெறுவதோ முடியாதென்பதும் உண்மையே. ஆனுல் அரசின் மீது அவர்களுடைய அதிகாரம் எங்கே? சில மாதங்களுக்கு முன்பு அரசில் மறுபடியும் பற்ருக்குறை நிலைமை ஏற்பட்ட பொழுது முதலாளித்துவ வர்க்கத்தினர் மிகச் சாதகமான நிலைமையைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் இன்னும் சிறிதளவு மட்டும் இழுத்துப் பிடித்திருந்தால் கூட, இன்னும் விரிவான சலுகைகளைக் கொடுக்குமாறு நிர்ப்பந்தித்திருக்க முடியும். அவர்கள் என்ன செய்தார்கள்? சுமார் ஒன்பது மில்லியன்களை—ஒரு வருடத்துக்கு அல்ல, ஒவ்வொரு வருடத்துக்கும் வரப்போகின்ற எல்லாக் காலத்துக்கும் — அரசாங்கத்தின் காலடியில் கொட்டுவதற்குத் தங்களை அனுமதித்ததே போதுமான சலுகை என்று அவர்கள் கருதுகிருர்கள்.

சட்டமன்றத்திலிருக்கும் பரிதாபமான ''தேசிய-மிதவாதிகளை''[54], அவர்களுடைய தகுதிக்கும் அதிகமாகக் குறை கூற நான் விரும்பவில்லை. அவர்களுக்குப் பின்னுல் நின்றவர்கள், முதலாளித்துவ வர்க்கத்தின் பெருந்திரளானவர்கள் அவர்களை இக்கட்டான நிலைமையில் கைவிட்டுப் போய் விட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தப் பெருந்திரளினர் ஆட்சி செய்ய விரும்பவில்லை. அவர்கள் 1848ம் ஆண்டை இன்னும் நினைவில் வைத்திருக்கிருர்கள்.

ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் இப்படிப்பட்ட வியக்கத்தக்க கோழைத்தனத்தைக் காட்டுவது ஏன் என்பதைப் பிறகு விவாதிப்போம்.

மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை மேலே கூறப்பட்ட கருத்துரை முற்றிலும் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

1850ம் வருட முதலாக சிறிய அரசுகள் மென்மேலும் திட்டவட்டமான முறையில் பின்னுக்குத் தள்ளப்பட்டு இப்பொழுது பிரஷ்ய அல்லது ஆஸ்திரிய சூழ்ச்சிகளுக்குக் கருவியாக மட்டுமே பயன்பட்டு வருதல்; தனியான ஆதிக்கம் நடத்துவதற்காக ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்குமிடையே மென்மேலும் வன்முறையான போராட்டம்; கடைசியாக அது பலாத்காரமான முறையில் 1866ம் வருடத்தில் தீர்க்கப்பட்டது, அதன் பலனுக ஆஸ்திரியா தன்னுடைய சொந்த மாகாணங்களைத் தக்கவைத்துக் கொண்டது, பிரஷ்யா வட பகுதி முழுவதையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடிமைப்படுத்திக் கொண்டது[55], தென்மேற்கிலேயுள்ள மூன்று அரசுகளும்* தற்பொழுது எந்த உதவியுமில்லாமல் விடப்பட்டிருத்தல்.

இந்த மகோன்னதமான நாடகத்தில் ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்துக்குப் பின்வருவன மட்டுமே முக்கியமானதாகும்:

முதலாவதாக, பொது வாக்குரிமை தொழிலாளர்கள் சட்டமன்றத்தில் நேரடியான பிரதிநிதித்துவம் பெறுவதற்குரிய சாதனத்தைக் கொடுத்திருக்கிறது.

இரண்டாவதாக, ஆண்டவன் அருளால் வகிக்கப்பட்ட மற்ற மூன்று மகுடங்களை விழுங்கியதன் மூலம் பிரஷ்யா ஒரு நல்ல உதாரணத்தை முன்வைத்திருக்கிறது.[56] அது முன்பு ஆண்டவன் அருளால் அப்பழுக்கற்ற மகுடத்தைச் சூடிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டது. இந்த நடவடிக்கைக்குப் பிறகு அதே அப்பழுக்கற்ற மகுடத்தை அது இன்னும் சூடியிருப்பதாக தேசிய-மிதவாதிகள் கூட நம்புவதில்லை.

மூன்ருவதாக, இப்பொழுது ஜெர்மனியில் புரட்சிக்கு எதிராக ஒரே ஒரு தீவிரமான எதிரியே இருக்கிறது. அது பிரஷ்ய அரசாங்கமே.

நான்காவதாக, கடைசியில் ஜெர்மானிய ஆஸ்திரியர்கள் தாங்கள் எப்படியிருக்க விரும்புகிருர்கள்—ஜெர்மானி

* —பவேரியா, பாடேன், வூர்டெம்பர்க்.—ப-ர்.

யர்களாகவா அல்லது ஆஸ்திரியர்களாகவா—யாரோடு சேர்ந்திருக்க விரும்புகிறார்கள்—ஜெர்மனியோடா அல்லது அவர்களுடைய ஜெர்மனிக்கு அப்பாலுள்ள, லேய்தா நதியின் மறு பக்கத்திலுள்ள ஒட்டுச்சதையோடா—என்பதை இப்பொழுதாவது முடிவு செய்ய வேண்டியிருக்கும். அவர்கள் ஏதாவதொன்றைக் கைவிட வேண்டும் என்பது நெடுங்காலத்துக்கு முன்பே தெளிவாகிவிட்டது; ஆனால் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் இதைத் தொடர்ச்சியாகவே மழுப்பி வருகிறார்கள்.

1866ம் வருடத்தின் மற்ற முக்கியமான விவாதப் பிரச்சினைகள் சம்பந்தமாக—ஒரு பக்கத்தில் ''தேசிய-மிதவாதிகளுக்கும்'' மறு பக்கத்தில் ''மக்கள் கட்சிக்கு''மிடையே[57] இவை அன்று முதல் வெறுப்பேற்படுத்தும் அளவுக்கு விவாதிக்கப்பட்டு வருகின்றன—இந்த இரு கருத்துக்களும் ஒரே குறுகிய மனப்பான்மையின் எதிர்முனைகள் என்பதனால் மட்டுமே அவை ஒன்றுக்கொன்று தீவிரமான பகைமை கொண்டிருக்கின்றன என்பதை அடுத்த சில வருடங்களின் வரலாறு நிரூபிக்க வேண்டும்.

1866ம் வருடம் ஜெர்மனியின் சமூக உறவுகளில் அநேகமாக ஒன்றையுமே மாற்றவில்லை. எடைகள் மற்றும் அளவைகளின் ஒரே சீரான அமைப்பு, இடம் பெயரும் சுதந்திரம், தொழிற் சுதந்திரம் மற்றும் இதர சில முதலாளித்துவச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை அதிகாரவர்க்கம் அங்கீகரிக்கக் கூடிய எல்லைகளுக்குள்ளாகவே இருக்கின்றன. மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த முதலாளி வர்க்கம் நீண்ட காலமாகவே அனுபவித்து வந்திருக்கும் அளவுக்குக் கூட இவை வரவில்லை. அதிகார வர்க்க சலுகைகள் அமைப்பு[58] என்ற முக்கியமான குறையை இவை தொடாமலேயே விட்டு விடுகின்றன. பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை இடம் பெயரும் சுதந்திரம், குடியுரிமை பெறுதல், பாஸ்போர்ட்டுகளை ஒழித்தல், இதரவைகளைப் பற்றிய எல்லாச் சட்டங்களும் வழக்கமான போலீஸ் செய்முறைகளினால் எப்படிப் பார்த்தாலும் அநேகமாக வெறும் பிரமையாக்கப்பட்டிருக்கின்றன.

1866ம் வருட மகோன்னத நாடகத்தைக் காட்டிலும்

முக்கியமானது 1848ம் வருடத்துக்குப் பிறகு ஜெர்மன் தொழில்துறை மற்றும் வர்த்தகம், இரயில் போக்குவரத்து, தந்திப் போக்குவரத்து மற்றும் கடற்கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சியே. இதே காலத்தில் இங்கிலாந்தோடு அல்லது பிரான்சோடு கூட ஒப்பிடும் பொழுது இந்த முன்னேற்றம் எவ்வளவு பின்னுலிருந்தாலும் ஜெர்மனிக்கு இது முன்னுல் எப்போதும் ஏற்படாததாகும்; இதற்கு முன்பு ஒரு நூற்ருண்டு முழுவதிலும் ஏற்பட்டதைக் காட்டிலும் அதிகமான சாதனையை இருபது வருடங்களில் நிறைவேற்றியிருக்கிறது. இப்பொழுதுதான் ஜெர்மனி உலக வர்த்தகத்துக்குள்—தீவிரமாகவும் திரும்ப முடியாதபடியும்—இழுக்கப்பட்டு விட்டது. தொழிலதிபர்களின் மூலதனம் வேகமாகப் பன்மடங்கு பெருகியிருக்கிறது; முதலாளி வர்க்கத்தினருடைய சமூக நிலைமையும் அதற்கேற்ப உயர்ந்திருக்கிறது. தொழில்துறை வளப்பெருக்கத்துக்கு மிகவும் நிச்சயமான சின்னமாகிய **கள்ளவியாபாரம்** பெரும் அளவில் தன்னை நிறுவிக் கொண்டுவிட்டது; தன்னுடைய வெற்றித் தேரில் கவுன்ட்டுகளையும் கோமகன்களையும் கட்டிக் கொண்டு பவனி வருகிறது. இன்று ஜெர்மன் மூலதனம் ருஷ்ய மற்றும் ருமேனிய இரயில் பாதைகளை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது—அதற்கு ஆபத்தேற்படாதிருக்கட்டும்! ஆனுல் அவர்கள் பதினைந்து வருடங்களுக்கு முன்பு கூட ஜெர்மானிய இரயில் பாதைகளை அமைக்க ஆங்கிலத் தொழில் முனைவர்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். அப்படியானுல் முதலாளி வர்க்கம் அதோடு சேர்த்து அரசியல் அதிகாரத்தையும் வென்றெடுக்காதது, அரசாங்கத்திடம் இவ்வளவு கோழைத்தனமாக நடந்து கொள்வது எப்படி சாத்தியம்?

ஜெர்மன் முதலாளி வர்க்கம்—வழக்கமான ஜெர்மானிய முறையில்—மிகவும் தாமதமாக வந்து சேர்ந்திருப்பது அதன் அவப்பேறுதான். மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முதலாளி வர்க்கம் அரசியல் ரீதியில் தேய்வுக் கட்டத்தில் இருக்கும் நேரத்தில் அதற்கு ஒளி மிக்க காலம் ஏற்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் முதலாளி வர்க்கம் தனது சொந்தமான பிரதிநிதியை, பிரைட் என்பவரை அரசாங்கத்

துக்குள் நுழைப்பதற்கு வாக்குரிமையை விரிவுபடுத்திய தனுல் மட்டுமே முடிந்தது. இதன் விளைவுகள் எல்லாவித மான முதலாளி வர்க்க ஆட்சிக்கும் முடிவு கட்டப் போவது உறுதி. பிரான்சில் முதலாளி வர்க்கம்—ஒரு முழுமையான வர்க்கம் என்ற முறையில்—குடியரசின் கீழ் 1849, 1850 ஆகிய இரண்டு வருடங்களுக்கு மட்டுமே அதிகாரத்தை வகித்த பொழுது அது தன்னுடைய அரசியல் அதிகாரத்தை லுயீ போனபார்ட்டிடமும் இராணுவத்திடமும் ஒப்படைத்த பிறகுதான் தன்னுடைய சமூக வாழ்க்கையைத் தொடர முடிந்தது. மிக அதிகமான வளர்ச்சியடைந்த மூன்று ஐரோப் பிய நாடுகளின் இடைச் செயல் அமோகமான அளவுக்கு அதிகரித்த பொழுது, இங்கிலாந்திலும் பிரான்சிலும் முதலாளி வர்க்கத்தின் ஆட்சியின் உபயோகம் காலாவதி யான பிறகு ஜெர்மனியில் முதலாளி வர்க்கம் அமைதியான, வசதியான முறையில் அரசியல் ஆட்சியில் நிலையாக உட் காருவதென்பது இன்று இனிமேல் சாத்தியமல்ல.

இதற்கு முன்னுலிருந்த எல்லா ஆளும் வர்க்கங் களிலிருந்தும் வேறுபட்டிருக்கும் வகையில் முதலாளி வர்க்கத்திடம் ஒரு தனித்தன்மை இருக்கிறது. அதனுடைய வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை இருக்கிறது; அதற்குப் பிறகு அதன் அதிகார சாதனங்களின்—ஆகவே முதன்முதலாக அதன் மூலதனத்தின்—கூடுதலான ஒவ்வொரு அதிகரிப்பும் அதை அரசியல் ஆட்சி வகுப்பதற்கு மென்மேலும் தகுதி யற்றதாகவே செய்கிறது. "பெரிய முதலாளிகளுக்குப் பின்னுல் பாட்டாளி வர்க்கத்தினர் நின்று கொண்டிருக்கிறுர்கள்". முதலாளி வர்க்கம் தன்னுடைய தொழில் துறையையும் வர்த்தகத்தையும் போக்குவரத்துச் சாதனங்களையும் எந்த அளவில் பெருக்குகிறதோ அதே அளவில் அது பாட்டாளி வர்க்கத்தை உற்பத்தி செய்கிறது. ஒரு குறிப்பிட்ட நிலை யில்—இது எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் அல்லது ஒரே வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்பட வேண்டுமென்பது அவசியமல்ல—பாட்டாளி வர்க்கம் தனது எதிரிணையாகத் தன்னை மிஞ்சி வளர்ந்து கொண்டிருப்பதை முதலாளி வர்க் கம் கவனிக்கிறது. அந்தக் கணத்திலிருந்தே அது தனித்த

அரசியல் ஆட்சிக்குத் தேவையான பலத்தை இழந்துவிடுகிறது. அது தனக்குக் கூட்டாளிகளைத் தேடுகிறது; சந்தர்ப்பங்களின் அவசியத்துக்கேற்ப இக்கூட்டாளிகளோடு தன்னுடைய ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறது அல்லது ஆட்சி முழுவதையும் விட்டுக் கொடுக்கிறது.

ஜெர்மனியில் முதலாளி வர்க்கத்திற்கு இந்தத் திருப்புமுனை ஏற்கெனவே 1848ம் வருடத்திலேயே வந்து விட்டது. அப்பொழுதே ஜெர்மன் முதலாளி வர்க்கம் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்திடம் அதிகமாகவே பயமடைந்திருந்தது நிச்சயமானதே. 1848 ஜூன் மாதத்தில் பாரிசில் நடைபெற்ற சண்டை[59] எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை முதலாளி வர்க்கத்துக்குக் காட்டியது; அதே பயிர் விளையக் கூடிய விதை ஜெர்மன் மண்ணிலும் முன்பே ஊன்றப்பட்டுவிட்டது என்பதை நிரூபிக்கின்ற அளவுக்கு ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் அமைதியில்லாதிருந்தது; அந்த நாளிலிருந்தே முதலாளி வர்க்கத்தின் எல்லா அரசியல் நடவடிக்கையிலிருந்தும் கூர்முனை அகற்றப்பட்டுவிட்டது. அது கூட்டாளிகளைத் தேடியது, விலையைப் பற்றிக் கருதாமல் தன்னை அவர்களுக்கு விற்பனை செய்து கொண்டது. இன்றும் கூட அது ஒரு காலடி கூட முன்னேறவில்லை.

இந்தக் கூட்டாளிகள் அனைவரும் இயற்கையிலேயே பிற்போக்கானவர்கள். இராணுவத்தையும் அதிகாரவர்க்கத்தையும் கொண்டிருக்கும் முடியாட்சி இருக்கிறது; நிலப்பிரபுத்துவத்தின் பெரும் பிரபுக்குலம் இருக்கிறது. சிறிய காய்கறி ஜங்கர்கள் இருக்கிறார்கள்; மதகுருக்களும் கூட இருக்கிறார்கள். முதலாளி வர்க்கம் இவர்கள் எல்லோருடனுமே—தன் விலைமதிப்பற்ற தோலைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் என்றாலும் கூட— ஒப்பந்தங்களையும் பேரங்களையும் செய்து கொண்டது. கடைசியில் அதனிடம் பேரம் பேசுவதற்குக் கூட எதுவுமே மிஞ்சவில்லை. பாட்டாளி வர்க்கம் எவ்வளவு அதிகமாக வளர்ச்சியடைந்ததோ, எவ்வளவு அதிகமாக ஒரு வர்க்கம் என்று உணர்ந்து ஒரு வர்க்கம் என்று நடந்து கொண்டதோ அந்த அளவுக்கு

அதிகமான கோழைத்தனத்தை முதலாளி வர்க்கம் பெற்றது. சடோவாவில்[60] பிரஷ்யர்களின் வியக்கத்தக்க வகையில் மோசமான போர்த்திட்டம் ஆஸ்திரியர்களின் அதைக் காட்டிலும் மிக மோசமான (அது எவ்வளவு வியப்புக்குரிய தாய் இருந்தாலும்) போர்த்திட்டத்தின் மீது வெற்றி யடைந்த பொழுது யார் மிகவும் நிம்மதியான பெருமூச்சு விட்டார்கள்—பிரஷ்ய முதலாளிகளா (அவர்களும் சடோ வாவில் தோற்கடிக்கப்பட்டார்கள்) அல்லது ஆஸ்திரிய முதலாளிகளா—என்று சொல்வது கடினம்.

1870ம் வருடத்தைச் சேர்ந்த நமது பெரிய முதலாளி கள் 1525ம் வருடத்தைச் சேர்ந்த நடுத்தர வகுப்பினர் நடந்து கொண்ட துல்லியமான அதே முறையில் இன்னும் நடந்து கொள்கிறார்கள். குட்டி முதலாளி வர்க்கத்தையும் கைவினைஞர்களையும் கடைக்காரர்களையும் பொறுத்தவரை அவர்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார் கள். எந்த வழியிலாவது பெரிய முதலாளி வர்க்கத்துக்குள் நுழைந்து விடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். பாட் டாளி வர்க்கத்திற்குள் தூக்கி எறியப்பட்டுவிடுவோமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அச்சத்துக்கும் நம்பிக் கைக்குமிடையே ஊசலாடிக் கொண்டு போராட்டத்தின் போது அவர்கள் தங்களுடைய விலைமதிப்பற்ற உடலைக் காப்பாற்றிக் கொள்வார்கள்; போராட்டம் முடிந்ததும் வெற்றியடைந்தவர்களின் பக்கம் சேர்ந்து விடுவார்கள். இது அவர்களுடைய இயல்பு.

1848ம் வருடத்திலிருந்து தொழில்துறையில் ஏற்பட்ட பேரெழுச்சியோடு பாட்டாளி வர்க்கத்தின் சமூக, அரசி யல் நடவடிக்கையும் ஒட்டி வந்திருக்கிறது. ஜெர்மன் தொழி லாளர்கள் தங்களுடைய தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவு சங்கங்களிலும் அரசியல் ஸ்தாபனங்களிலும் மற்றும் பொதுக் கூட்டங்களிலும் தேர்தல்களிலும் ரைஹ்ஸ்டாக் என்று சொல்லப்படுவதிலும் இன்று வகிக்கும் பாத்திரமே கடந்த இருபது வருடங்களில் வெளியில் தெரியாமல் ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் தீவிரமான மாற்றத்துக்குப் போதுமான சான்றாகும். ஜெர்மன் தொழிலாளர்கள் மட்டுமே தொழிலாளர்

களையும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் நாடாளு மன்றத்துக்கு அனுப்பிவைப்பதில் வெற்றியடைந்திருக் கிறார்கள் என்பது அவர்களுக்குப் பெருமையளிப்பதாகும். இத்தகைய சிறப்பான சாதனையைப் பிரெஞ்சுத் தொழி லாளர்களோ அல்லது இங்கிலாந்துத் தொழிலாளர்களோ இதுவரை சாதிக்கவில்லை.

ஆனால் பாட்டாளி வர்க்கமும் கூட 1525ம் வருடத்தின் இணை என்ற நிலையை மீறி இன்னும் வளர்ச்சியடையவில்லை. தன் வாழ்க்கை முழுவதிலும் கூலியை மட்டுமே நம்பியிருக்கும் வர்க்கம் ஜெர்மன் மக்களில் பெரும்பான்மையை அடை கின்ற நிலை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. ஆகவே அந்த வர்க்கமும் கூட்டாளிகளைத் தேடுமாறு நிர்ப்பந் திக்கப்படுகிறது. இந்தக் கூட்டாளிகளைக் குட்டி முதலாளி வர்க்கம், நகரங்களிலுள்ள லும்பன் பாட்டாளி வர்க்கம், சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரிடம் மட்டுமே காண முடியும்.

குட்டி முதலாளி வர்க்கத்தைப் பற்றி நாம் மேலே குறிப்பிட்டோம். ஒரு வெற்றி கிடைக்கும் வரை அவர்கள் மிகவும் நம்பமுடியாதவர்கள். ஆனால் வெற்றி கிட்டியதும் சாராயக் கடைகளில் அவர்கள் போடும் கூச்சலுக்கு அளவே இருக்காது. எனினும் அவர்கள் மத்தியில் மிகவும் நல்ல சக்திகள் இருக்கின்றன; இவர்கள் தாங்களாகவே தொழி லாளர்களோடு இணைந்து கொள்கிறார்கள்.

பெரிய நகரங்களில் கூட்டமாக இருக்கும் லும்பன் பாட்டாளி வர்க்கத்தினர் எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த கழிசடைச் சக்திகளின் கசடு எனலாம். சாத்தியமான கூட் டாளிகளிலேயே இவர்கள் தான் மிகவும் மோசமானவர் கள். இவர்கள் முற்றிலும் கைக்கூலி வாங்குகின்ற, மானங் கெட்ட கும்பல். பிரெஞ்சுத் தொழிலாளர்கள் ஒவ்வொரு புரட்சியின் போதும் தங்களுடைய வீடுகளில்: "Mort aux voleurs!"—''திருடர்களைக் கொல்வோம்!'' என்று பொறித் தார்கள், அவர்களில் பலரைச் சுட்டுக் கொன்றார்கள் என்றால், சொத்துக்கு அவர்கள் கொடுத்த மரியாதையினால் அப்படிச் செய்யவில்லை; எல்லாவற்றையும் காட்டிலும்

இந்தக் கும்பலை ஒழித்துக் கட்டுவது அவசியம் என்று சரியாகக் கருதியதனால் அப்படிச் செய்தார்கள். இந்தப் போக்கிரிகளைத் தனக்குக் காவலர்களாகப் பயன்படுத்துகின்ற அல்லது அவர்களுடைய ஆதரவை நம்புகின்ற ஒவ்வொரு தொழிலாளர் தலைவரும் இயக்கத்துக்குத் துரோகம் செய்வதை இந்த நடவடிக்கையால் மட்டுமே நிரூபிக்கிறார்.

**சிறு விவசாயிகள்** (ஏனென்றால் பெரிய விவசாயிகள் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்) வேறு விதமானவர்கள்:

அவர்கள் ஒன்று **நிலப்பிரபுத்துவ விவசாயிகளாக** இருக்கிறார்கள்; அவர்கள் தங்களுடைய கருணை நிறைந்த பிரபுக்கு இன்னும் கட்டாய சேவை செய்ய வேண்டும். பண்ணையடிமைத்தனத்திலிருந்து இந்த மக்களை விடுவிக்கின்ற அதனுடைய கடமையில் முதலாளி வர்க்கம் தவறி விட்டபடியால் அவர்கள் தொழிலாளி வர்க்கத்திடமிருந்து மட்டுமே முக்தியை எதிர்பார்க்க முடியும் என்று அவர்களை நம்பச் செய்வது கடினமானதல்ல.

அல்லது அவர்கள் **குத்தகை விவசாயிகளாக** இருக்கிறார்கள். இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பெரும் அளவுக்கு அயர்லாந்திலிருக்கும் அதே மாதிரியான நிலையில் தான் இருக்கிறார்கள். குத்தகை மிக அதிகமாக உயர்த்தப் படுவதால் சராசரியான விளைச்சல் இருக்கும் சமயங்களில் விவசாயியும் அவருடைய குடும்பமும் வருமானத்துக்குள் வாழ்க்கை நடத்துவது மிகச் சிரமமாக இருக்கிறது. மோசமான விளைச்சல் ஏற்படும் சமயங்களில் அவர் பட்டினியின் விளிம்பில் நிற்கிறார். அவரால் குத்தகைப் பணத்தைக் கட்ட முடியாது. ஆகவே அவர் முற்றிலும் நிலவுடைமையாளரின் தயவை நம்பியிருக்கிறார். நிர்ப்பந்திக்கப் பட்டாலொழிய முதலாளி வர்க்கம் இந்த மக்களுக்கு ஒருக்காலும் எதுவும் செய்யப் போவதில்லை. இவர்கள் தொழிலாளர்களைத் தவிர வேறு யாரிடமிருந்து முக்தியை எதிர்பார்க்க முடியும்?

தாங்கள் **சொந்தமாக வைத்திருக்கும் துண்டு நிலங்களை** உழுது பயிரிடுகின்ற விவசாயிகள் மட்டுமே கடைசியில்

மிஞ்சுகிறார்கள். மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களை ஒத்திக்கடன் சுமை மிக மோசமாக அழுத்து கிறது. ஆகவே குத்தகை விவசாயி நிலவுடைமையாளரை நம்பியிருப்பதைப் போல அவர்கள் வட்டிக்கடைக்காரரை நம்பியிருக்கிறார்கள். மிகவும் குறைவான கூலி மட்டுமே அவர்களுக்கு மிஞ்சுகிறது. மேலும் சில வருடங்களில் நல்ல அறுவடையும் சில வருடங்களில் மோசமான அறுவடை யும் ஏற்படுவதால் இந்தக் கூலியும் கூட மிகவும் நிச்சய மற்றதாகும். இவர்கள் முதலாளி வர்க்கத்திடமிருந்து எதிர் பார்ப்பதற்கு ஏதுமில்லை. ஏனென்றால் அந்த முதலாளி வர்க் கம்தான் முதலாளித்துவ வட்டிக்கடைக்காரர்கள்தான் இவர் களுடைய இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். இந்த விவசாயி களில் மிகப் பெரும்பான்மையினர் இன்னும் தங்களுடைய சொத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை யில் இந்தச் சொத்து வட்டிக்கடைக்காரருக்குத்தான் சொந்தமானதாக இருக்கிறதே தவிர, அவர்களுக்கு அல்ல. எப்படியிருந்தாலும் மக்களைச் சார்ந்திருக்கும் ஒரு அரசாங் கம் எல்லா ஒத்திக்கடன்களையும் அரசுக்குரிய கடன்களாக மாற்றிக் கொண்டு அதன் மூலம் வட்டி விகிதங்களைக் குறைத்தால் மட்டுமே அவர்களை வட்டிக்கடைக்காரரிட மிருந்து விடுவிக்க முடியும் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இதைத் தொழிலாளி வர்க்கம் மட்டுமே நிறைவேற்ற முடியும்.

நடுத்தரமான மற்றும் பெரிய நிலவுடைமை இருக்கும் இடங்களில் கிராமப்பகுதியில் மிகவும் அதிகமான எண்ணிக் கை கொண்ட வர்க்கமாக **விவசாயத் தொழிலாளர்கள்** இருக் கிறார்கள். ஜெர்மனியின் வட பகுதி மற்றும் கிழக்குப் பகுதி முழுவதும் இதுதான் நிலைமை; அங்கே நகரங்களின் தொழில் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய **மிக அதிக எண்ணிக்கையுள்ள, மிக இயல்பான** நேச சக்திகளைக் காண்கிறார்கள். முதலாளி ஆலைத் தொழிலாளிக்கு எதிராக நிற்கின்ற அதே முறையில் நிலவுடைமையாளர் அல்லது பெரிய குத்தகையாளர் விவசாயத் தொழிலாளிக்கு எதிராக நிற்கிறார். முந்தியவருக்கு உதவி செய்கின்ற அதே நட

வடிக்கைகள் பிந்தியவருக்கு உதவியாக இருக்க வேண்டும். தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் முதலாளிகளின் மூலதனத்தை அதாவது, உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றையும் வாழ்க்கைச் சாதனங்களையும் சமூக உடைமையாக அதாவது தாங்கள் பொதுவான முறையில் பயன்படுத்துகின்ற தங்களுடைய சொந்த உடைமையாக மாற்றிக் கொள்வதன் மூலமாக மட்டுமே தங்களை விடுவித்துக் கொள்ள முடியும். அதைப் போல விவசாயத் தொழிலாளர்கள், முதன்முதலாக தங்களுடைய முக்கியமான உழைப்புப் பொருளாகிய நிலத்தைப் பெரிய விவசாயிகள், இன்னும் அவர்களைக் காட்டிலும் பெரிய நிலப்பிரபுக்களின் தனியுடைமை என்ற நிலைமையிலிருந்து எடுத்துப் பொது உடைமையாக மாற்றி விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்களில் கூட்டு முறையில் உழுது பயிரிடுவதன் மூலமாக மட்டுமே தங்களுடைய அருவருக்கத்தக்க வறுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். நிலத்தில் தனி உடைமையை, பொது, தேசிய உடைமையாக மாற்றுவது சமூக நன்மைக்கு உகந்தது என்று பாஸெல் நகரத்தில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர்களின் காங்கிரசில் செய்யப்பட்ட புகழ்வாய்ந்த முடிவுக்கு நாம் இங்கே வருகிறோம்.[61] இந்தத் தீர்மானம், பெரிய நில உடைமை இருக்கின்ற, ஆகவே ஒரு எஜமானரும் பல தொழிலாளர்களும் நடத்துகின்ற பெரிய பண்ணைகளைக் கொண்டிருக்கும் நாடுகளை முக்கியமாகக் கருத்தில் கொண்டு நிறைவேற்றப்பட்டது. இத்தகைய நிலைமை ஜெர்மனியில் இன்னும் பெரிய அளவுக்கு ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகவே இந்த முடிவு இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக ஜெர்மனிக்கே அதிகமான பொருத்தத்தைக் கொண்டிருந்தது. விவசாயப் பாட்டாளிகள், விவசாயத் தொழிலாளிகள்— அரசர்களுடைய இராணுவங்களில் பெரும்பகுதியினரை இந்த வர்க்கம்தான் அளிக்கிறது. பொது வாக்குரிமையின் பலனாக, அதிகமான எண்ணிக்கையில் பிரபுக்களையும் ஜங்கர்களையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைப்பது இந்த வர்க்கம்தான்; ஆனால் அதே சமயத்தில் நகரங்

களிலுள்ள தொழில்துறைத் தொழிலாளர்களுக்கு இந்த வர்க்கம் மிகவும் நெருக்கமாக இருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளைப் பகிர்ந்து கொள்வதோடு அவர்களைக் காட்டிலும் இன்னும் அதிகமாகவே துன்பத்தில் மூழ்கியிருக்கிறது. பிளவினுலும் சிதறிக் கிடப்பதனுலும் சக்தியற்றதாக இருக்கின்ற இந்த வர்க்கத்துக்கு சுறுசுறுப்பைக் கொடுத்து இயக்கத்துக்குள் ஈர்த்துக் கொண்டு வருவது ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் உடனடியான மற்றும் மிகவும் அவசரமான கடமையாகும். இந்த வர்க்கத்தின் உள்ளார்ந்த சக்தி அரசாங்கத்துக்கும் பிரபுக்களுக்கும் மிக நன்ருகத் தெரிந்திருப்பதால் அந்த வர்க்கத்தை அறியாமையிலேயே நீடித்து வைத்திருப்பதற்காக அவர்கள் வேண்டுமென்றே பள்ளிக்கூடங்களைக் கெடுக்க முயற்சித்தார்கள். என்று விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த நலன்களைப் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்கிருர்களோ அன்று முதல் எந்தவித பிற்போக்குத்தனமான—நிலப்பிரபுத்துவ, அதிகாரவர்க்க அல்லது முதலாளிவர்க்க—அரசாங்கமும் ஜெர்மனியில் ஏற்படமுடியாது.

*1870 பிப்ரவரி 11ஐ*
*ஒட்டிய நாட்களில்*
*எங்கெல்சினுல் எழுதப்பட்டது*

**ஜெர்மனியில் விவசாயிகள் யுத்தம்**
*என்ற நூலின் இரண்டாம்*
*பதிப்பில் (லைப்ஸிக், 1870*
*அக்டோபர்) வெளியிடப்பட்டது*

*இரண்டாம் பதிப்பு*
*வாசகத்தின்படி*
*அச்சிடப்பட்டது*
*ஜெர்மனில் இருந்து*
*மொழிபெயர்க்கப்பட்டது*

## 1870ம் வருட முன்னுரையின் பிற்சேர்க்கை—1875ம் வருடத்தில் வெளியிடப்பட்ட மூன்ரும் பதிப்புக்காக எழுதப்பட்டது

மேலே உள்ள பகுதி நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்பு எழுதப்பட்டது. அது இன்றளவும் கூட சரியாகவே இருக்கிறது. சடோவாவுக்கும் ஜெர்

மனி துண்டாடப்பட்டதற்கும் பிறகு எது சரியாக இருந்ததோ அது செதானுக்கும்[62] மற்றும் பிரஷ்ய தேசத்தின் புனித ஜெர்மன் பேரரசு[63] நிறுவப்பட்டதற்கும் பிறகு மறுபடியும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. மிக உயர்தர அரசியல் கொள்கையைச் சேர்ந்ததென்று சொல்லப்படுகின்ற அரசின் மகோன்னதமான நாடகங்கள் ''உலகத்தைக் குலுக்கக் கூடியவை'' என்கிறூர்கள். ஆனுல் அவை வரலாற்று இயக்கத்தின் திசையை அநேகமாகச் சிறிதளவு கூட மாற்றவில்லை.

எனினும் இத்தகைய மகோன்னதமான நாடகங்களால் செய்ய முடிந்தது இந்த இயக்கத்தை வேகப்படுத்தியதே. இதைப் பொறுத்தவரை மேலே குறிப்பிடப்பட்ட ''உலகைக் குலுக்கிய சம்பவங்களின்'' ஆசிரியர்களுக்கு அவர்கள் நினைக்காமலே நடக்கின்ற வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. அவர்களே இவற்றை மிக அதிகமான அளவுக்கு விரும்பவில்லை என்பது உறுதி. எனினும் அதே சமயத்தில் நன்மையோ, தீமையோ அவர்கள் அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

1866ம் வருட யுத்தம் பழைய பிரஷ்யாவை அதன் அஸ்திவாரங்களோடு சேர்த்துக் குலுக்கியது. 1848ம் வருடத்துக்குப் பிறகு, மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த கலகம் செய்கின்ற தொழில்துறைப் பகுதிகளை—முதலாளிகளையும் பாட்டாளி வர்க்கத்தினரையும்—பழைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அது பெரும் அளவுக்குப் பாடுபட வேண்டியிருந்தது; எனினும் இது செய்து முடிக்கப்பட்டது. கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த ஜங்கர்களின் நலன்கள் மறுபடியும்—இராணுவத்துக்கு அடுத்தபடியாக—அரசின் தலைமையான நலன்களாயின. 1866ம் வருடத்தில் அநேகமாக வடமேற்கு ஜெர்மனி முழுவதுமே பிரஷ்யனுயிற்று. ஆண்டவன் அருளால் பிரஷ்ய மகுடம் ஆண்டவன் அருளால் மற்ற மூன்று மகுடங்களை* விழுங்கியதனுல் ஏற்பட்ட

* —ஹனேவர், ஹேஸ்ஸென்-காஸ்ஸெல், நாஸ்ஸௌ. —ப-ர்.

குணப்படுத்த முடியாத தார்மிகக் காயத்தைத் தவிர, இப்பொழுது முடியாட்சியின் ஈர்ப்பு மையம் கணிசமான அளவுக்கு மேற்கே நகர்ந்தது. ரைன் பிராந்தியம் மற்றும் வெஸ்ட்ஃபேலியாவின் ஐந்து மில்லியன் மக்கள் தொகையினர் முதலில் நேரடியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நான்கு மில்லியன் ஜெர்மானியர்களாலும் பிறகு வடக்கு ஜெர்மன் கூட்டணி[64] மூலம் மறைமுகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆறு மில்லியன் மக்களாலும் வலுப்படுத்தப்பட்டனர். 1870ம் வருடத்தில் எட்டு மில்லியன் தென்மேற்கு ஜெர்மானியர்களும் மேலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.[65] ஆகவே ''புதிய பேரரசில்'' பதினுலரை மில்லியன் பழைய பிரஷ்யர்களுக்கு (கிழக்கு எல்பியாவின் ஆறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், இவர்களில் இரண்டு மில்லியன் போலந்து நாட்டவர்களும் இருந்தார்கள்) நெடுங்காலத்துக்கு முன்பே பழைய பிரஷ்ய ஜங்கர் நிலப்பிரபுத்துவத்தை மீறிவிட்ட இருபத்தைந்து மில்லியன் மக்கள் எதிரே நின்ருர்கள். இம் முறையில் பிரஷ்ய இராணுவத்தின் வெற்றிகளே பிரஷ்ய அரசு அமைப்பின் மொத்த ஆதாரத்தையும் நகர்த்தியது; ஜங்கர்களின் மேலாதிக்கம் அரசாங்கத்துக்குக் கூட இனிமேல் பொறுக்க முடியாததாயிற்று. எனினும் அதே சமயத்தில் மிக வேகமான தொழில்துறை வளர்ச்சியினுல் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே இருந்த போராட்டம் ஜங்கர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலே இருந்த போராட்டத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. ஆகவே உள்ளமைப்பிலும் பழைய அரசின் சமூக அடிப்படைகள் முழுமையான மாற்றத்தை அடைந்தன. 1840ம் வருடத்திலிருந்தே மெதுவாக சிதிலமாகிக் கொண்டிருந்த முடியாட்சியின் அடிப்படையான முன்நிபந்தனை பிரபுக்குலத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டமே. அதில் முடியாட்சி சமநிலையை ஏற்படுத்தியது. முதலாளி வர்க்கத்தின் தாக்கத்துக்கு எதிராகப் பிரபுக்குலத்தைப் பாதுகாப்பது இனிமேல் தேவையில்லாமலாகி, தொழிலாளி வர்க்கத்தின் தாக்கத்துக்கு எதிராக உடைமை வர்க்கங்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பது

அவசியமான பொழுது பழைய, சர்வாதிகார முடியாட்சி இந்த நோக்கத்துக்காகவே விசேஷமாக உருவாக்கப்பட்ட போனபார்ட்வாத முடியாட்சி என்ற வடிவத்துக்கு முழுவதுமே மாற வேண்டியதாயிற்று. பிரஷ்யா இப்படி போனபார்ட் வாதத்திற்கு மாறியதை நான் முன்பே வேறொரு புத்தகத்தில் விவாதித்திருக்கிறேன் (குடியிருப்புப் பிரச்சினை, இரண்டாம் பகுதி, 26 மற்றும் இதர பக்கங்கள்.)* அங்கே நான் வலியுறுத்த அவசியமில்லாதிருந்தது ஆனால் இங்கே மிகவும் தேவையாக இருப்பது என்னவென்றால் இந்த மாற்றமே 1848ம் வருடத்துக்குப் பிறகு பிரஷ்யாவில் ஏற்பட்ட மிக அதிகமான முன்னேற்றமாகும். ஏனென்றால் பிரஷ்யா அந்த அளவுக்கு நவீன வளர்ச்சியில் பின்தங்கியிருந்தது. அது ஓர் அரைநிலப்பிரபுத்துவ அரசு என்பதும், எப்படிப் பார்த்தாலும் போனபார்ட்வாதம் என்பது நிலப்பிரபுத்துவத்தின் ஒழிப்பை முன்நிபந்தனையாகக் கொண்ட நவீன அரசு வடிவம் என்பதும் உண்மையே. ஆகவே பிரஷ்யா தன்னிடமிருந்த நிலப்பிரபுத்துவத்தின் எண்ணற்ற மரபெச்சங்களை ஒழிக்கவும் ஜங்கர் முறையை தியாகம் செய்யவும் துணிய வேண்டியிருந்தது. இது சாத்தியமான அளவுக்கு மிகவும் நயமான முறையில் ''எப்பொழுதும் மெதுவாகவே முன்செல்வோம்'' என்ற பிரியமான இசைக்கேற்பவே செய்யப்பட்டு வருவது இயற்கையானதே. உதாரணமாக, அவப்பெயர் பெற்ற மாவட்ட சட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது தனிப்பட்ட ஜங்கருக்கு அவருடைய பண்ணையைப் பொறுத்தவரை கிடைத்துக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவத் தனிச் சலுகைகளை ஒழித்தது; ஆனால் மாவட்டம் முழுவதையும் பொறுத்தவரை பெரிய நிலவுடைமையாளர்கள் என்ற மொத்தத் திரளுக்கும் உரிய தனிச் சலுகைகள் என்ற வகையில் அவற்றை மீண்டும் ஏற்படுத்தியது. அதன் சாராம்சம் அப்படியே இருக்கிறது; நிலப்பிரபுத்துவ மொழியிலிருந்து முதலாளித்துவ மொழிக்கு மட்டுமே அது மாற்றப்பட்டு விட்டது. பழைய பிரஷ்ய ஜங்கர் ஓரளவுக்கு ஆங்கில நிலப்

* இப்பதிப்பு, தொகுதி 8 பார்க்க.—ப-ர்.

பிரபுவை ஒத்திருக்கும்படி பலவந்தமாக மாற்றப்பட்டு வருகிறார். அவர் இதற்கு இவ்வளவு அதிகமான எதிர்ப்புக் காட்டியிருக்க வேண்டியதில்லை; ஏனென்றால் இரண்டுமே ஒரே மாதிரியான முட்டாள்தனத்தின் ரகங்களே.

இப்படி, 1808—1813ம் வருடங்களில் தொடங்கி 1848ம் வருடத்தில் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் புரட்சியை இந்த நூற்றாண்டின் கடைசியில் போனபார்ட்வாதம் என்ற இனிமையான வடிவத்தில் பூர்த்தி செய்வது பிரஷ்யாவின் தனி வகையான விதியாக இருந்திருக்கிறது. எல்லாம் சரியாகவே நடைபெறுமானால், உலகம் இனிமையாகவும் அமைதியாகவும் இருக்குமானால், நாமும் போதுமான நீண்ட காலத்துக்கு உயிரோடிருந்தால் பிரஷ்ய அரசாங்கம் எல்லா நிலப்பிரபுத்துவ அமைப்புகளையும் உண்மையாகவே ஒழித்து விட்டிருப்பதை, 1792ம் வருடத்தில் பிரான்ஸ் நின்ற இடத்துக்குக் கடைசியில் பிரஷ்யா உண்மையிலேயே வந்து சேர்ந்திருப்பதை நாம்—ஒருவேளை 1900ம் வருடத்தில்—பார்க்க முடியும்.

நிலப்பிரபுத்துவத்தின் ஒழிப்பை நேர்முறையில் சொல்வதென்றால் முதலாளித்துவ அமைப்பை நிறுவுவதென்று பொருளாகும். பிரபுக்களின் தனி உரிமைகள் ஒழிக்கப்படும் பொழுது, சட்டங்கள் மென்மேலும் முதலாளித்துவத் தன்மையை அடைகின்றன. இங்கே அரசாங்கத்துக்கும் ஜெர்மன் முதலாளி வர்க்கத்துக்குமிடையே உள்ள உறவுகளின் முக்கிய அம்சத்துக்கு நாம் வந்து விடுகிறோம். இத்தகைய மெதுவான, அற்பமான சீர்திருத்தங்களைச் செய்யுமாறு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படுகிறது என்று நாம் பார்த்தோம். ஆனால் முதலாளி வர்க்கத்துக்கு முன் இந்த அற்பமான சலுகைகள் ஒவ்வொன்றையும் முதலாளி வர்க்கத்துக்குச் செய்யப்பட்ட தியாகமாக, அரசரிடமிருந்து மிகவும் அதிகமான சிரமத்தோடு பெற்ற சலுகையாகவும் முதலாளி வர்க்கம் அதற்குப் பதிலாக எதையாவது அரசாங்கத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்றும் அது சித்திரிக்கிறது. முதலாளிகளுக்கு உண்மையான நிலை மிக நன்றாகத் தெரியும்; எனினும் அவர்களும் தங்களை ஏமாற்றுவதை அனுமதிக்கிறார்கள்.

பெர்லினிலுள்ள நாடாளுமன்றம் மற்றும் பிரஷ்ய சட்ட மன்றத்தில் நடைபெறும் விவாதங்களின் மௌனமான அடிப் படையாக இருக்கும் குறிப்பறிந்த ஒப்பந்தத்தின் பிறப்பிடம் இதுவே. ஒரு பக்கத்தில் அரசாங்கம் முதலாளி வர்க்கத்தின் நலனுக்காக ஆமை வேகத்தில் சட்டங்களைச் சீர்திருத்து கிறது; நிலப்பிரபுத்துவத்திஞலும் ஏராளமான சிறு அரசு களால் பிளவுறுத்தப்படுவதனுலும் ஏற்படுகின்ற தொழில் துறை வளர்ச்சிக்கு எதிரான தடைகளை அகற்றுகிறது; ஒரே சீரான நாணய முறை, எடைகள் மற்றும் அளவைகளின் முறை, தொழில் செய்வதற்குரிய சுதந்திரம், இதரவைகளை ஏற்படுத்துகிறது; இடம் பெயரும் சுதந்திரம் கொடுப்பதன் மூலம் ஜெர்மனியின் உழைப்புச் சக்தியை எத்தகைய வரையறைகளும் இல்லாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மூலதனத்திடம் ஒப்படைக்கிறது; வர்த்தகத்தையும் கள்ள வியாபாரத்தையும் ஆதரிக்கிறது. மறு பக்கத்தில் முதலாளி வர்க்கம் மெய்யான அரசியல் அதிகாரம் எல்லாவற்றையும் அரசாங்கத்தின் கைகளில் விட்டுவிடுகிறது; வரிகள் விதிப் பதையும் கடன்கள் வாங்குவதையும் போர்வீரர்களைத் திரட்டுவதையும் ஆதரித்து வாக்களிக்கிறது; விரும்பத்தகாத சக்திகளின் மீது பழைய போலீஸ் அதிகாரத்தின் முழு சக்தி யையும் தாக்கத்தையும் தாங்கிப் பிடிக்கும் வகையில் புதிய சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாவற்றையும் தயாரிப்பதற்கு உதவி செய்கிறது. தனது சொந்த அரசியல் அதிகாரத்தை உடனடியாகக் கைவிடுதல் என்ற விலையைக் கொடுத்து முத லாளி வர்க்கம் தனது படிப்படியான சமூக விடுதலையை வாங்குகிறது. இத்தகைய உடன்பாட்டை முதலாளி வர்க் கம் ஒத்துக்கொள்வதற்கு முக்கியமான காரணம் அரசாங் கத்தைப் பற்றிய பயம் அல்ல, பாட்டாளி வர்க்கத்தைப் பற்றிய பயம்தான் என்பது இயற்கையே.

நமது முதலாளி வர்க்கம் அரசியல் துறையில் எவ்வளவு கேவலமான உருவத்தைக் கொண்டிருந்தாலும் தொழில் துறை மற்றும் வர்த்தகத்தைப் பொறுத்தவரையிலும் அது கடைசியாயினும் தன் கடமையைச் செய்து கொண்டிருக் கிறது என்பதை மறுக்க முடியாது. இரண்டாம் பதிப்பின்

முன்னுரையில் தொழில்துறை மற்றும் வர்த்தகத்தின் வளர்ச்சி குறிப்பிடப்பட்டிருந்தது;* அதற்குப்பின் அது இன்னும் அதிகமான சுறுசுறுப்போடு முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்தத் துறைகளைப் பொறுத்தவரை, 1869ம் வருடத்திலிருந்து ரைன் வெஸ்ட்ஃபேலியாவின் தொழிற் பிராந்தியத்தில் ஏற்பட்டிருப்பது ஜெர்மனியில் முன்னெப்போதும் நடைபெற்றிராததாகும்; இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தின் தொழில் மாவட்டங்களில் ஏற்பட்ட மகத்தான முன்னேற்றத்தை அது நினைவுபடுத்துகிறது. சாக்சனி, மேல் சிலேஸியா, பெர்லின், ஹனேவர் மற்றும் கடற்கரையிலுள்ள நகரங்களில் அதுவே நடைபெற்றிருக்கிறது. கடைசியாக நாம் உலக வர்த்தகத்தை, உண்மையிலேயே பெரிய தொழில்துறையை, உண்மையிலேயே நவீன முதலாளி வர்க்கத்தைப் பெற்று விட்டோம். ஆனல் அத்தோடு நாம் உண்மையான ஒரு நெருக்கடியை அடைந்தோம். மேலும், ஒரு உண்மையான, சக்திமிக்க பாட்டாளிவர்க்கத்தைப் பெற்றிருக்கிறேம்.

எதிர்கால வரலாற்றுசிரியர் 1869-74ம் வருடங்களின் ஜெர்மானிய வரலாற்றில் ஷ்பிஹெரர்ன், மார்ஸ்-லா-டூர், செதான் ஆகிய இடங்களில்[66] நடைபெற்ற சண்டை முழக்கத்துக்கும் அதோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றுக்கும் ஜெர்மன் பட்டாளி வர்க்கத்தின் ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான ஆனல் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டிருக்கும் வளர்ச்சியைக் காட்டிலும் மிகக் குறைவான முக்கியத்துவத்தையே கொடுப்பார். 1870ம் வருடத்திலேயே ஜெர்மன் தொழிலாளர்கள் போனபார்ட் ஆட்சியின் யுத்த ஆத்திரமூட்டல் மற்றும் அதன் இயற்கையான விளைவாகிய ஜெர்மனியில் பொதுவான தேசிய உற்சாகம் என்ற கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஜெர்மன் சோஷலிஸ்ட் தொழிலாளர்கள் ஒரு கண நேரம் கூடக் குழப்பமடையவில்லை. அவர்கள் எவ்விதமான குறுகிய தேசிய வெறியின் அறிகுறியைக் கூடக் காட்டவில்லை.

* இத்தொகுதி, பக்கங்கள் 160—175.—ப-ர்.

வெற்றிக்குப் பிறகு ஏற்பட்ட மிகவும் கட்டுக்கடங்காத கொண்டாட்டத்துக்கு மத்தியிலும் அவர்கள் நிதானமாக இருந்தார்கள்; ''பிரெஞ்சுக் குடியரசோடு நியாயமான சமாதானம்; அந்த நாட்டுப் பகுதிகளைச் சேர்க்கக் கூடாது'' என்று விடாமல் கோரினார்கள். இராணுவச் சட்டத்தால் கூட அவர்கள் வாயை மூட முடியவில்லை. போரில் ஏற்பட்ட புகழ், ''ஜெர்மன் வல்லரசின் வீறு'' பற்றிய பேச்சு ஆகியவை அவர்களிடம் எத்தகைய விளைவையும் ஏற்படுத்தவில்லை; மொத்த ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையே அவர்களுடைய ஒரே நோக்கமாக இன்னும் இருந்தது. இது வரை வேறு எந்த நாட்டிலும் தொழிலாளர்கள் இவ்வளவு கடுமையான சோதனையில் இவ்வளவு சிறப்பான விதத்தில் நடந்து கொள்ளவில்லை என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

யுத்த காலத்திலிருந்த இராணுவச் சட்டத்துக்குப் பிறகு தேசத் துரோகத்துக்காக, அரசரை அவமதித்ததற்காக, அதிகாரிகளை இழிவுபடுத்தியதற்காக வழக்குகளும் சமாதான காலத்தில் போலீசாரின் மென்மேலும் அதிகரிக்கும் சூழ்ச்சிகளும் தொடர்ந்தன. *Volksstaat*[67] பத்திரிகையின் மூன்று அல்லது நான்கு ஆசிரியர்கள் ஒரே சமயத்தில் சிறையில் இருப்பது வாடிக்கையாயிற்று; மற்ற பத்திரிகைகளுக்கும் இதே நிலைமைதான். ஏதாவதொரு சிறப்பைக் கொண்ட ஒவ்வொரு கட்சியின் பேச்சாளர் மீதும் வருடத்துக்கு ஒரு தடவையாவது வழக்கு தொடரப்பட்டது; அவர் தண்டிக்கப் படுவதும் அநேகமாக நிச்சயமே. நாடு கடத்தல்களும் சொத்துப் பறிமுதல்களும் பலாத்காரமாகக் கூட்டங்களைக் கலைப்பதும் வேகமாகத் தொடர்ந்து நடைபெற்றன; ஆலங் கட்டி மழையைப் போல கனமாக விழுந்தன. அத்தனையும் வீணாயிற்று. கைது செய்யப்பட்ட அல்லது நாடு கடத்தப்பட்ட ஒவ்வொரு நபரின் இடத்தையும் இன்னொருவர் எடுத்துக் கொண்டார்; கலைக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டத்துக்கும் பதிலாக இரண்டு புதிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. எனவே சகிப்புத்தன்மையாலும் சிறிதும் பிசகாமல் விதிகளைப் பின்பற்றி நடந்து கொள்வதன் மூலமாகவும் போலீ

சாரின் சர்வாதிகாரம் ஒவ்வொரு இடமாக ஒழிக்கப்பட்டது. இத்தகைய ஒடுக்குமுறை எதிர்பார்த்ததற்கு நேர்மாறான விளைவையே ஏற்படுத்தியது. அதனால் தொழிலாளர்கள் கட்சியை நொறுக்க—வளைக்கக் கூட—முடியவில்லை; அதில் புதிய தொண்டர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் அதன் ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதற்குமே அது உதவியது. அதிகாரிகளோடும் தனிப்பட்ட முதலாளிகளோடும் தங்களுடைய போராட்டங்களின் போது அறிவு மற்றும் தார்மிக ரீதியில் தாங்களே உயர்ந்தவர்கள் என்பதைத் தொழிலாளர்கள் காட்டினார்கள்; குறிப்பாக ''வேலை கொடுப்பவர்கள்'' என்று சொல்லப்படுபவர்களோடு தங்களுடைய போராட்டங்களின் போது தொழிலாளர்களாகிய தாங்களே தற்பொழுது கல்வியறிவுடைய வர்க்கம், முதலாளிகள் முழு மூடர்கள் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். அவர்கள் தங்களுடைய போராட்டத்தைப் பெரும்பாலும் நகைச் சுவை உணர்ச்சியோடு நடத்தி வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய இலட்சியத்தின் வெற்றியில் எவ்வளவு உறுதியாக நம்பிக்கையோடிருக்கிறார்கள், தங்களுடைய மேம்பாட்டை எவ்வளவு உணர்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இது மிகவும் சிறந்த சான்றாகும். வரலாற்று ரீதியாகத் தயாரிக்கப்பட்ட மண்ணில் இப்படி நடத்தப்படுகின்ற ஒரு போராட்டம் சிறந்த விளைவுகளைக் கொடுக்க வேண்டும். ஜனவரி மாதத் தேர்தல்களின் வெற்றிகள் நவீன தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் தன்னிகரற்று விளங்குகின்றன.[68] அந்த வெற்றிகள் ஐரோப்பா முழுவதிலும் ஏற்படுத்திய திகைப்பு முற்றிலும் நியாயமானதே.

ஐரோப்பாவின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் ஜெர்மன் தொழிலாளர்களிடம் இரண்டு முக்கியமான சாதனங்கள் இருக்கின்றன. முதலாவதாக, அவர்கள் ஐரோப்பாவிலேயே மிகவும் அதிகமான அளவுக்குத் தத்துவச் சிந்தனை உடைய மக்களினத்தைச் சேர்ந்தவர்கள்; ஜெர்மனியில் ''கல்வியறிவுடைய'' வர்க்கங்கள் என்று சொல்லப்படுபவை அநேகமாக முற்றிலும் இழந்து விட்ட தத்துவ உணர்ச்சியை அவர்கள் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்

மன் தத்துவஞானம், அதிலும் குறிப்பாக ஹெகலின் தத்துவ ஞானம் இல்லாமல், இது வரை இருந்திருக்கும் ஒரே ஒரு விஞ்ஞான சோஷலிசமாகிய ஜெர்மன் விஞ்ஞான சோஷலிசம் ஒருபோதும் தோன்றியிருக்க முடியாது. தொழிலாளர்களிடம் தத்துவ உணர்ச்சி இல்லாதிருந்தால் விஞ்ஞான சோஷலிசம் அவர்களுடைய ஊனிலும் உயிரிலும் இன்றிருப்பது போல ஒருபோதும் நுழைந்திருக்க முடியாது. இது எந்த அளவுக்குக் கணக்கிட்டுக் கூற முடியாத சாதகத்தைக் கொடுத்தது என்பதை, ஒரு பக்கத்தில் இங்கிலாந்தில் தனிப்பட்ட தொழிலாளர் குழுக்கள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த போதிலும் தொழிலாளி வர்க்க இயக்கம் மெதுவாகவே ஊர்ந்து போவதற்கு அவர்கள் எந்தத் தத்துவத்தை அலட்சியம் செய்தது முக்கியமான காரணங்களில் ஒன்று என்பதிலிருந்தும் மறு பக்கத்தில் புரூதோன்வாதம் அதன் மூல வடிவத்தில் பிரெஞ்சு, பெல்ஜிய மக்களிடையேயும் பக்கூனினால் இன்னும் கேலிச்சித்திரமாக்கப்பட்ட வடிவத்தில் ஸ்பெயின் நாட்டவர்கள் மற்றும் இத்தாலியர்களிடம் ஏற்படுத்திய குறும்பு, குழப்பத்திலிருந்தும் காண முடியும்.

கால வரிசைப்படி பார்க்கும் பொழுது தொழிலாளர்கள் இயக்கத்துக்குள் அநேகமாகக் கடைசியாக வந்தவர்கள் ஜெர்மானியர்கள் என்பது இரண்டாவது சாதகமாகும். ஸான்-ஸிமோன், ஃபூரியே மற்றும் ஓவன்—இம்மூவரும் எவ்வளவு விசித்திரமான கருத்துக்களையும் கற்பனாவாதத்தையும் கொண்டிருந்தாலும், இன்று விஞ்ஞான ரீதியாகச் சரியென்று நாம் நிரூபிக்கின்ற எண்ணற்ற பல விஷயங்களைத் தங்களுடைய மேதாவிலாசத்தின் மூலம் முன்னறிந்து கூறிய, எல்லாக் காலத்திலும் மிகப் பெரும் சிறப்புடைய சிந்தனையாளர்களில் சிலராக இருக்கிறார்கள். ஜெர்மன் தத்துவ ரீதியான சோஷலிசம் இவர்களுடைய தோள்களின் மீது தான் நின்று கொண்டிருப்பதை ஒருபோதும் மறக்காதிருப்பதைப் போல ஜெர்மனியின் செய்முறையான தொழிலாளர்கள் இயக்கமும் அது ஆங்கில மற்றும் பிரெஞ்சு இயக்கங்களின் தோள்களின் மீது வளர்ச்சியடைந்திருப்பதை, அவை மிகவும் அதிகமான விலை கொடுத்துப் பெற்ற அனுபவத்தை

அது சிரமமின்றிப் பயன்படுத்திக் கொள்வதை, அன்றைக்குப் பெரும்பாலும் தவிர்க்க முடியாததாக இருந்த அவற்றின் தவறுகளை இது விலக்கிக் கொள்வதை ஒருபோதும் மறக்கக் கூடாது. ஆங்கிலத் தொழிற்சங்கங்களும் பிரெஞ்சுத் தொழிலாளர்களின் அரசியல் போராட்டங்களும் குறிப்பாக பாரிஸ் கம்யூனின் மகத்தான தூண்டுதலும் நமக்கு முன்னுதாரணங்களாக இல்லையென்ருல் தற்பொழுது நாம் எங்கே இருப்போம்?

ஒரு விஷயத்துக்காக ஜெர்மானியத் தொழிலாளர்களைப் பாராட்டுவது அவசியம். அவர்கள் தங்களுடைய நிலைமையின் சாதகங்களை அபூர்வமான மதிநுட்பத்தோடு பயன்படுத்தியிருக்கிருர்கள். தொழிலாளர்கள் இயக்கம் ஏற்பட்டதிலிருந்து இப்பொழுதுதான் முதல் தடவையாகப் போராட்டம் அதன் மூன்று பக்கங்களையும்—தத்துவம், அரசியல் மற்றும் பொருளாதாரச் செய்முறை (முதலாளிகளுக்கு எதிர்ப்பு)—தழுவிக்கொண்டு, ஒத்திசைவானதாகவும் அதன் இடைத் தொடர்புகளோடும் மற்றும் முறைப்படியாகவும் நடத்தப்படுகிறது. இங்கேதான், இந்தப் பொதுமையம் கொண்டுள்ள தாக்குதலில்தான் ஜெர்மானிய இயக்கத்தின் பலமும் அதன் வெல்லற்கரிய தன்மையும் அடங்கியிருக்கிறது.

ஒரு பக்கத்தில் இந்தச் சாதகமான நிலைமையினுலும் மறு பக்கத்தில் இங்கிலாந்தின் இயக்கத்தின் தனி ஒதுக்கமான குணும்சங்களாலும் மற்றும் பிரான்சில் இயக்கம் பலாத்காரத்தால் நசுக்கப்பட்டதாலும் இந்தத் தருணத்தில் ஜெர்மன் தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் முன்னணிப் படையாக இருக்கிருர்கள். இந்தச் சிறப்பான இடத்தைத் தொடர்ந்து வகிக்குமாறு சம்பவங்கள் எவ்வளவு காலத்துக்கு அவர்களை அனுமதிக்கும் என்பதை ஆரூடம் சொல்ல முடியாது. ஆனுல் அவர்கள் அந்த இடத்திலிருக்கின்ற வரையிலும் அந்தப் பாத்திரத்தைத் தகுதியான முறையில் நிறைவேற்றுவார்கள் என்று நாம் நம்புவோம். இதற்குப் போராட்டம் மற்றும் கிளர்ச்சியின் ஒவ்வொரு துறையிலும் நம் முயற்சிகளைப் பன்மடங்கு

அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, தலைவர்கள் தத்துவ ரீதியான எல்லாப் பிரச்சினைகளையும் மென்மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், பழைய உலகப் பார்வையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மரபு வழியான சொற்றொடர்களின் தாக்கத்திலிருந்து தங்களை மென்மேலும் அதிகமாக விடுவித்துக் கொள்ள வேண்டும், சோஷலிசம் ஒரு விஞ்ஞானமாகி விட்டபடியால் அதை ஒரு விஞ்ஞானமாகக் கடைப்பிடிக்க வேண்டும் அதாவது அதை கவனமாகக் கற்க வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவிலிறுத்த வேண்டும். இவ்வகையில், மென்மேலும் தெளிவான அறிவு இப்பொழுது கிடைத்திருக்கிறது. இதைப் பெருந்திரளான தொழிலாளர்கள் மத்தியில் அதிகமான உற்சாகத்தோடு பரப்புவதும் கட்சி, தொழிற்சங்க ஸ்தாபனங்கள் ஆகிய இரண்டையுமே முன் எப்போதுமில்லாத அளவுக்கு நெருக்கமாக ஒன்றுசேர்ப்பதும் நம் கடமையாகும். ஜனவரி மாதத்தில் சோஷலிஸ்டுகளுக்குக் கிடைத்த வாக்குகள் ஒரு நல்ல இராணுவத்தின் அளவைக் கொண்டிருந்த போதிலும், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையாக அமையக் கூடிய நிலைக்கு அவை இன்னும் வெகு தூரத்தில் இருக்கின்றன. கிராமப்புற மக்களிடம் செய்யப்படும் பிரச்சாரத்தின் வெற்றிகள் ஊக்கமளித்த போதிலும், இந்தத் துறையில் நாம் செய்ய வேண்டியது இன்னும் மிக அதிகமாக இருக்கிறது. எனவே போராட்டத்தைத் தளர்த்தி விடாமல் எதிரியிடமிருந்து ஒவ்வொரு நகரமாக, ஒவ்வொரு தொகுதியாகப் பிடுங்குவதென்று முடிவு செய்ய வேண்டும். இங்கே எது முக்கியமென்றால், குறுகிய தேசிய வெறி தோன்றுவதைத் தடுக்கின்ற, எந்தத் தேசிய இனத்திடமிருந்து வருகிறதென்று கவலைப்படாமல் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் ஒவ்வொரு புதிய முன்னேற்றத்தையும் உடனே வரவேற்கின்ற உண்மையான சர்வதேசிய உணர்ச்சியைப் பாதுகாப்பதே. ஜெர்மானியத் தொழிலாளர்கள் இந்த வழியில் முன்னேற்றமடைந்தால் அவர்கள் இயக்கத்தின் தலைமையில் அணிவகுத்து நடக்கப் போவதில்லை—எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களும் இந்த இயக்கத்தின்

தலைமையில் அணிவகுத்துச் செல்வது அதன் நலன்களுக்குச் சிறிதும் உகந்ததல்ல—ஆனல் அவர்கள் போர்க்களத்தில் ஒரு கௌரவமான இடத்தைப் பெறுவார்கள்; எதிர்பார்த்திராத கடுஞ்சோதனைகள் அல்லது பெரும் விளைவுகளை உண்டாக்க வல்ல சம்பவங்கள் அவர்களிடம் கூடுதலான துணிச்சலையும் உறுதியையும் ஆற்றலையும் கோரும் பொழுது அவர்கள் முழு ஆயத்தத்துடன் இருப்பார்கள்.

பிரெடெரிக் எங்கெல்ஸ்

*லண்டன் ஜூலை 1, 1874*

Friedrich Engels,
*Der Deutsche Bauernkrieg*
(Leipzig, 1875) என்னும்
புத்தகத்தில் அச்சிடப்பட்டது

இப்புத்தக வாசகத்தின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மனில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

கா. மார்க்ஸ்

# மார்க்ஸ் லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதம்

ஹனோவர் நகரத்துக்கு

*லண்டன், பிப்ரவரி 23, 1865*

*அன்புள்ள நண்பருக்கு,*

*நீங்கள் எழுதிய சுவாரசியமான கடிதம் நேற்று எனக்குக் கிடைத்தது. நீங்கள் எழுப்பியுள்ள தனித்தனியான பிரச்சினைகளுக்கு இப்பொழுது பதில் எழுதுகிறேன்.*

*முதலாவதாக,* லஸ்ஸாலைப் *பற்றி என்னுடைய கருத்தைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். அவர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த பொழுது எங்களுக்கிடையே உறவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதற்குக் காரணங்கள்: 1) அவர் சதா தன்னைப் புகழ்ந்து கொண்டிருக்கும் வீண் பெருமை, என்னுடைய எழுத்துக்களிலிருந்தும் மற்றவர்களுடைய எழுத்துக்களிலிருந்தும் அவர் சிறிதும் வெட்கமில்லாத வகையில் திருடிச் சேர்த்துக் கொண்டது. 2) அவருடைய* அரசியல் *செயல்தந்திரத்தை நான்* உறுதியாகக் கண்டனம் செய்தேன். *3) அவர் கிளர்ச்சியைத் தொடங்கு வதற்கு* முன்பாகவே, ''பி ர ஷ் ய அரசின்'' *நேரடியான* சோஷலிஸ்ட் *தலையீடு என்பது அர்த்தமற்றது என்பதை* இங்கே *லண்டனில் நான் முழுமையாக அவருக்கு விளக்கிக் கூறி ''நிரூபித்தும்'' காட்டினேன். எங்களுடைய சந்திப்புகளில்* கூறியதைப் *போலவே அவர் எனக்கு எழுதிய கடிதங்களில்*

(1848 முதல் 1863 முடிய) நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியைச் சேர்ந்தவரென்றே தன்னைப் பற்றி எப்பொழுதும் அறிவித்துக் கொண்டார். அவருடைய விளையாட்டுக்கள் என்னிடம் பலிக்கமாட்டா என்பதை லண்டனில் (1862ம் வருட இறுதியில்) அவர் புரிந்து கொண்டவுடனே எனக்கும் பழைய கட்சிக்கும் எதிராகத் ''தொழிலாளர்கள் சர்வாதிகாரியாகத்'' தோன்ற முடிவு செய்தார். இப்படி நடந்து கொண்ட பிறகும் கூட, கிளர்ச்சிக்காரர் என்ற முறையில் அவருடைய சேவைகளை நான் மதித்தேன்; ஆனால் அந்தக் கிளர்ச்சியும் கூட அவருடைய குறுகிய வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் மென்மேலும் இரட்டை அர்த்தத் தன்மையை அடைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. அவருடைய திடீர் மரணம், பழைய நட்பு, கோமகள் ஹாத்ஸ்ஃபெல்ட்டின் புலம்பல் கடிதங்கள், அவருடைய வாழ்நாளில் அவரைக் கண்டு மிகவும் அதிகமாகப் பயமடைந்த முதலாளி வர்க்கப் பத்திரிகைகள் இப்பொழுது கோழைத்தனமான திமிரோடு நடந்து கொள்வதைப் பற்றி ஏற்பட்ட ஆத்திரம்—இவையனைத்தும் படுகேவலமான ப்லீன்டுக்கு எதிராக ஒரு சுருக்கமான அறிக்கையை* வெளியிடுமாறு என்னைத் தூண்டின. எனினும் அந்த அறிக்கை லஸ்ஸாலின் செயல்களின் சாராம்சத்தைப் பற்றிப் பேசவில்லை. (ஹாத்ஸ்ஃபெல்ட் அந்த அறிக்கையை Nordstern[69] என்ற பத்திரிகைக்கு அனுப்பினாள்.) இதே காரணங்களுக்காகவும் ஆபத்தானதாக எனக்குத் தோன்றிய சக்திகளை அகற்ற முடியும் என்ற நம்பிக்கையினாலும் எங்கெல்சும் நானும் *Social-Demokrat* பத்திரிகைக்கு எழுதுவதாக ஒத்துக் கொண்டோம் (அந்தப் பத்திரிகை தொடக்க அறிக்கையின்** மொழிபெயர்ப்பை வெளியிட்டது, புரூதோன் மரணமடைந்த பொழுது அதன் வேண்டுகோளின் பேரில் நான் அவரைப் பற்றி ஒரு கட்டுரை*** எழுதினேன்); அதன் ஆசிரியர் குழுவின்

* கா. மார்க்ஸ், ஷ்டுட்கார்டில் *Beobachter* என்னும் பத்திரிகையின் பதிப்பாசிரியருக்கு.—ப-ர்.

** இத்தொகுதி, பக்கங்கள் 9—25 பார்க்க.—ப-ர்.

*** இத்தொகுதி, பக்கங்கள் 34—48 பார்க்க.—ப-ர்.

திருப்திகரமான வேலைத்திட்டத்தை எமக்கு ஷ்வைட்ஸர் அனுப்பிய பிறகு கட்டுரை வழங்குபவர்களுடைய பட்டியலில் எங்களுடைய பெயர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நாங்கள் அனுமதியளித்தோம். ஆசிரியர் குழுவின் அதிகாரப் பற்றற்ற உறுப்பினராக வி. லீப்க்னெஹ்ட் இருந்ததும் எங்களுக்குக் கூடுதலான உத்தரவாதத்தைக் கொடுத்தது. ஆனால் லஸ்ஸால் உண்மையாகவே கட்சிக்குத் துரோகம் செய்து விட்டார் என்பது சீக்கிரமே தெரிய வந்தது; அதற்கு ஆதாரங்களும் சிக்கின. அவர் பிஸ்மார்க்கோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார் (எவ்விதமான உத்தரவாதங்களும் தனக்குக் கிடைக்காமலேயே இவ்வாறு செய்து விட்டார் என்பது திண்ணம்). 1864 செப்டெம்பர் கடைசியில் அவர் ஹாம்பர்குக்குப் போவதென்றும் அங்கே (பைத்தியக்கார ஷ்ராமோடும் பிரஷ்ய போலீஸ் ஒற்றனை மாருடனும் சேர்ந்து) ஷ்லெஸ்விக்-ஹல்ஷ்டேயினைச் சேர்த்துக் கொள்ளுமாறு அதாவது ''தொழிலாளர்களின்'' பெயரால் அது சேர்க்கப்பட்டு விட்டதாக அறிவிக்குமாறு பிஸ்மார்க்கை ''நிர்ப்பந்திப்பதென்றும்'' முடிவு செய்யப்பட்டிருந்தது; அதற்குப் பதிலாக பொது வாக்குரிமையையும் இன்னும் சில சமூகவாதப் பகட்டுத் திட்டங்களையும் நிறைவேற்றுவதாக பிஸ்மார்க் வாக்குறுதியளித்தார். லஸ்ஸால் இந்தக் கேலிக்கூத்தைக் கடைசி வரையிலும் நடத்த முடியாமற் போனது பரிதாபமே. அது அவரை அதிகமான அளவுக்குக் கோமாளியாகவும் முட்டாளாகவும் காட்டியிருக்கும். மேலும் இம்மாதிரியான எல்லா முயற்சிகளுக்கும் அதுநிரந்தரமாக முற்றுப் புள்ளி வைத்திருக்கும்.

லஸ்ஸால் திரு. மிக்கெல் ரகத்தைச் சேர்ந்த ஆனால் இன்னும் விரிந்த அளவிலும் மற்றும் இன்னும் பெரிய நோக்கங்களோடும் உருவாக்கப்பட்ட ''நடைமுறை அரசியல் வாதி'' என்பதே அவர் இப்படி திசைமாறிப் போனதற்குக் காரணம். (நிற்க, ஒரு அற்பமான ஹனேவர் வழக்குரைஞரின் குரல் ஜெர்மனியில் தனது நான்கு சுவர்களுக்கும் அப்பால் கேட்பதற்கும் அதன் மூலம், பிரஷ்ய மேடையில்

ஹனேவர் மிராபோவாக நடிக்கின்ற அதே நேரத்தில் தன்னுடைய ''நடைமுறையைப்'' பெருக்கி ஹனேவர் தாய் நாட்டில் பின்னேக்கிச் செயற்பட்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் தேசிய யூனியன்[70] ஒரு சிறந்த வழியைக் காட்டியது என்ற விஷயத்தைக் கொண்டு மிக்கெலின் நடத்தையை நெடுங்காலத்துக்கு முன்பே ஊடுருவிப் புரிந்து கொண்டேன்.) மிக்கெலும் அவருடைய இன்றைய நண்பர் களும் தேசிய யூனியனையும் தங்களையும் ''பிரஷ்யாவின் உச்சியிலிருப்பவர்களோடு'' இணைத்துக் கொள்வதற்குப் பிரஷ்யாவின் ஆளுநரான இளவரசர் பிரகடனம் செய்த ''புதிய சகாப்தத்தைப்''[71] பிடித்துக் கொண்டதைப் போல, அவர்கள் தங்களுடைய ''குடிப் பெருமையைப்'' பொதுவாகப் ''பிரஷ்ய மேடையில்'' வளர்த்துக் கொண் டதைப் போல, லஸ்ஸால் உக்கெர்மார்க்கின் இரண்டாம் ஃபிலிப்பின் கீழ் பாட்டாளி வர்க்கத்தின் மார்க்விஸ் போஸாவாக[72] நடிக்க விரும்பினர். அவருக்கும் பிரஷ்ய அரசருக்குமிடையே பிஸ்மார்க் பெண்தரகராக இருப்பார். அவர் தேசிய யூனியனைச் சேர்ந்த கனவான்களையே பின் பற்றினர். ஆனல் அவர்கள் முதலாளி வர்க்கத்தின் நலன் களுக்காகப் பிரஷ்யப் ''பிற்போக்குவாதத்தின்'' உதவியைக் கோரிய அதே நேரத்தில் லஸ்ஸால் பாட்டாளி வர்க்கத் தின் நலன்களுக்காக பிஸ்மார்க்கோடு கைகுலுக்கினர். லஸ் ஸாலைக் காட்டிலும் இந்தக் கனவான்களுடைய தரப்பில் அதிகமான நியாயமிருந்தது. ஏனென்றல் முதலாளி தன்னுடைய மூக்குக்கு நேராக எதிரிலுள்ள நலனையே ''யதார்த்தம்'' என்று கருதிப் பழக்கப்பட்டவர்; மேலும் உண்மையிலேயே இந்த வர்க்கம் எங்கும் நிலப்பிரபுத்துவத் தோடு கூட சமரசம் செய்து கொண்டிருக்கிறது; ஆனல் தொழிலாளி வர்க்கம் இயல்பாகவே மனப்பூர்வமாகப் ''புரட்சிகரமானதாக'' இருக்க வேண்டும்.

லஸ்ஸாலைப் போல நாடகபாணியில் தற்பெருமை மிக்க நபருக்கு (ஆனல் ஒரு பதவி, மேயர் உத்தியோகம் இதர வைகளைப் போன்ற அற்பமான குப்பைகளை லஞ்சமாகக் கொடுத்து அவரை வாங்கிவிட முடியாது) ஃபெர்டினண்டு

லஸ்ஸால் நேரடியாகப் பாட்டாளி வர்க்கத்தின் சார்பில் நிறைவேற்றி விட்ட வீரச் செயலைப் பற்றிய சிந்தனை மிகவும் ஆர்வமூட்டுகின்ற சிந்தனையாகும்! அத்தகைய ஒரு நடவடிக்கைக்குத் தேவையான மெய்யான பொருளாதார நிலைமைகளைப் பற்றி தன்னைப் பொறுத்த மட்டில் விமர்சன ரீதியாகச் சிந்திக்க முடியாத அளவுக்கு அவர் உண்மையிலேயே ஒன்றும் தெரியாதவராக இருந்தார். மறு பக்கத்தில் ஜெர்மன் தொழிலாளர்களோ, 1848-59ம் வருடங்களின் பிற்போக்குவாதத்தைச் சகித்துக் கொள்வதற்கும் மக்களை உணர்வு மழுங்கச் செய்ததைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கும் ஜெர்மன் முதலாளி வர்க்கத்தைத் தூண்டிய படுகேவலமான ''நடைமுறை அரசியலின்'' விளைவாக, ஒரே பாய்ச்சலில் தங்களைச் சொர்க்கத்துக்குள் அழைத்துக் கொண்டு போவதாக வாக்குறுதியளித்த ஒரு போலியான இரட்சகரைப் போற்றுதிருக்க முடியாத அளவுக்கு அதிகமாகச் ''சீர்குலைந்து'' போயிருந்தார்கள்.

சரி, மேலே விட்ட இடத்திலிருந்து தொடர்வோம். *Social-Demokrat* பத்திரிகை நிறுவப்பட்ட உடனே வயோதிக அம்மையாரான ஹாத்ஸ்ஃபெல்ட் கடைசியில் லஸ்ஸாலின் ''கடைசி உயிலையும் பத்திரத்தையும்'' நிறைவேற்ற விரும்புவது தெளிவாயிற்று. அந்த அம்மையார் வகெனெர் (*Kreuz-Zeitung* பத்திரிகையைச்[73] சேர்ந்தவர்) மூலமாக பிஸ்மார்க்கோடு தொடர்பு வைத்துக் கொண்டிருந்தாள். அவள் ''பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கம்'',[74] *Social-Demokrat*, இதரவற்றையும் அவரிடம் ஒப்படைத்தாள். ஷ்லெஸ்விக்-ஹல்ஷ்டேயின் பிரதேசத்தைச் சேர்த்துக் கொள்வதை அறிவிப்பது, பிஸ்மார்க்கைப் பொதுவாகப் புரவலராக அங்கீகரிப்பது, இதரவை *Social-Demokrat* மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் நாம் லீப்க்னெஹ்ட்டை பெர்லினிலும் *Social-Demokrat*லும் வைத்திருந்ததால் இந்த அழகான திட்டம் முழுவதுமே தடுக்கப்பட்டது. பத்திரிகையின் ஆசிரியர் போக்கைப் பற்றி—லஸ்ஸாலைக் கும்பிட்டுப் பிழைக்கும் மரபைப் பற்றி, அவ்வப்பொழுது பிஸ்மார்க்கோடு சல்லாபம் செய்வதைப் பற்றி, இன்னும் மற்ற

வற்றைப் பற்றி—எங்கெல்சுக்கும் எனக்கும் திருப்தியில்லா திருந்தாலும் வயோதிக ஹாத்ஸ்ஃபெல்ட்டின் சூழ்ச்சிகள் தோல்வியடையச் செய்வதற்கும் தொழிலாளர் கட்சியை முழுமையாகக் கெடுத்து விடாமல் தடுப்பதற்கும் தற்காலிக மாக அந்தப் பத்திரிகையோடு அதிகாரபூர்வமான தொடர்பு கொள்வது மிக அவசியமாக இருந்தது. ஆகவே நாங்கள் bonne mine à mauvais jeu* செய்து கொண்டிருந்தோம். எனினும், அவர்கள் முற்போக்குவாதிகளை[75] எதிர்க்கின்ற அதே அளவுக்கு பிஸ்மார்க்கை எதிர்க்க வேண்டும் என்று நாங்கள் privatim** *Social-Demokrat* ஆசிரியர் குழுவினருக்கு எப்பொழுதுமே எழுதி வந்தோம். அந்தப் பகட்டான கோமாளி பெர்ன்ஹார்ட் பெக்கர்—லஸ்ஸாலின் உயில் தனக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை அவர் உண் மையாகவே நம்புகிறார்—சர்வதேசத் தொழிலாளர் சங்கத்துக்கு எதிராகச் செய்த சூழ்ச்சிகளைக் கூட நாங்கள் பொறுத்துக் கொண்டோம்.

இதற்கிடையில் *Social-Demokrat* பத்திரிகையில் திரு. ஷ்வைட்ஸரின் கட்டுரைகள் மென்மேலும் பிஸ்மார்க்குக்கு ஆதரவாக இருந்தன. ''இணைப்புகளைப் பற்றிய பிரச்சினை யில்''[76] முற்போக்குவாதிகளைப் பயமுறுத்தி விட முடியும், ஆனால் பிரஷ்ய அரசாங்கம் இணைப்புச் சட்டங்களை முழுமை யாக ஒழிப்பதை எந்தச் சூழ்நிலையிலும் ஒருக்காலும் ஒத்துக் கொள்ளாது; ஏனென்றால் அப்படிச் செய்வது அதிகார வர்க்கத்தில் பிளவை ஏற்படுத்தும், தொழிலாளர்களுக்கு குடி உரிமைகளை அளிப்பதற்கு இட்டுச் செல்லும், ஊழியர்களைப் பற்றிய விதிகளை[77] நொறுக்கி விடும், கிராமப் புறங்களில் மேல் வர்க்கத்தினர் பின்புறத்தில் சவுக்காலடிப் பதை ஒழித்துவிடும் இதரவை, இதரவை—இவற்றை பிஸ்மார்க் ஒருபோதும் அனுமதிக்க முடியாது, மேலும் பிரஷ்ய அதிகார வர்க்க அரசுக்கு அது முற்றிலும் பொருந் தாது—என்று நான் அவருக்கு முன்பே எழுதியிருந்தேன்:

* —ஒரு மோசமான பாத்திரத்தை முகமலர்ச்சியுடன் நடித்தல்.—ப-ர்.

** —தனிப்பட்ட முறையில்.—ப-ர்.

நாடாளுமன்றம் இந்த இணைப்புச் சட்டங்களை நிராகரிக்கு மாஞல், அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அரசாங் கம் சொற்றெடர்களை (உதாரணமாக, சமூகப் பிரச்சினை ''அதிக ஆழமான நடவடிக்கைகளைக்'' கோருகிறது என் பதைப் போன்ற சொற்றெடர்களை) தனக்குப் புகலிடமாகக் கொள்ளும் என்பதையும் நான் கூறினேன். இவை எல்லாமே சரி என்று நிரூபிக்கப்பட்டன. திரு. ஃபொன் ஷ்வைட்ஸர் என்ன செய்தார்? அவர் பிஸ்மார்க்குக்கு ஆதரவாக ஒரு கட்டுரை எழுதுகிருர்; ஷூல்ட்ஸே, ஃபௌஹெர் மற்றும் இதரர்களைப் போன்ற மிகவும் அற்பமான நபர்களுக்கு எதிராகத் தன்னுடைய வீரதீரங்களை எல்லாம் காட்டுகிருர்.

ஷ்வைட்ஸரும் மற்றவர்களும் நேர்மையான ஆசைகளைக் கொண்டிருக்கிருர்கள், ஆனுல் அவர்கள் ''நடைமுறை அரசியல்வாதிகள்'' என்று நான் நினைக்கிறேன். இப்பொழு திருக்கின்ற சந்தர்ப்பங்களை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ள விரும்புகிருர்கள், அதோடு ''நடைமுறை அரசி யலின்'' தனி உரிமைகளைத் திருவாளர் மிக்கெல் குழுவினர் மட்டும் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஒப்படைக்க மறுக்கிருர் கள். (பின்சொல்லப்பட்டவர்கள் பிரஷ்ய அரசாங்கத்தின் விஷயங்களில் தலையிடும் உரிமையைத் தங்களுக்கு மட்டும் வைத்துக் கொள்ள விரும்புவதாகத் தோன்றுகிறது.) பிரஷ்யாவில் (ஆகவே ஜெர்மனியின் இதர பகுதிகளிலும்) தொழிலாளர்கள் பத்திரிகைகளும் தொழிலாளர்கள் இயக்கமும் போலீசாரின் தயவினுல் மட்டுமே இருந்து வரு கின்றன என்பதை அவர்கள் அறிந்திருக்கிருர்கள். எனவே அரசாங்கத்துக்கு எரிச்சலைக் கொடுக்காமல் இதர மற்றவை களையும் செய்யாமல் இருக்கின்ற நிலைமைகளை அப்படியே வைத்திருக்க அவர்கள் விரும்புகிருர்கள். ஒரு ஹோஹன் ஸோலர்ன் சக்கரவர்த்தியைத் ''தங்களோடு அழைத்துக் கொண்டு போகத்'' தயாராக இருக்கின்ற நம்முடைய ''குடியரசுவாத'' நடைமுறை அரசியல்வாதிகளைப் போன்றதே இதுவும். ஆனுல் நான் ''நடைமுறை அரசியல்வாதி'' அல்ல என்பதால் நானும் எங்கெல்சும் *Social-Demokrat* பத் திரிகையின் ஆசிரியர் குழுவிலிருந்து வெளியேற விரும்பு

வதை ஒரு பகிரங்கமான அறிக்கையின் மூலம் (ஏதாவதொரு பத்திரிகையில் நீங்கள் அதை சீக்கிரமாகப் பார்ப்பீர்கள்) முன்னறிவிப்புச் செய்வது அவசியமென்று கண்டோம்.

அதிலிருந்து, இந்த நேரத்தில் பிரஷ்யாவில் நான் ஏன் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை நீங்கள் உடனே புரிந்து கொள்வீர்கள். அங்கேயுள்ள அரசாங்கம் எனக்கு மறுபடியும் பிரஷ்யக் குடியுரிமை கொடுப்பதற்கு வெளிப்படையாக மறுத்து விட்டது.[78] திரு. ஃபொன் பிஸ்மார்க் அங்கீகரிக்கக் கூடிய ஒரு வடிவத்தில் மட்டுமே நான் அங்கே கிளர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுவேன்.

இங்கே சர்வதேசச் சங்கத்தின் மூலமாக நான் செய்யும் கிளர்ச்சியை இதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாக நான் விரும்புகிறேன். இங்கிலாந்தின் பாட்டாளி வர்க்கத்தின் மேல் அது நேரடியான தாக்கத்தைக் கொண்டிருப்பதோடு மிகவும் அதிகமான முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கிறது. இங்கே பொதுவான வாக்குரிமைப் பிரச்சினையைப் பற்றி இப்பொழுது கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் பிரஷ்யாவில் அதற்கிருப்பதிலிருந்து முற்றிலும் வேறுவிதமான முக்கியத்துவத்தை அது இங்கே கொண்டிருக்கிறது.[79]

மொத்தத்தில் இங்கேயும் பாரிசிலும் பெல்ஜியத்திலும் ஸ்விட்ஸர்லாந்திலும் மற்றும் இத்தாலியிலும் இந்தச் சங்கத்தின் முன்னேற்றம் எல்லா எதிர்பார்ப்புகளையும் மிஞ்சியதாக இருக்கிறது. ஜெர்மனியில் மட்டுமே லஸ்ஸாலின் வாரிசுகள் என்னை எதிர்க்கிறார்கள். 1) தங்களுடைய செல்வாக்கை இழந்து விடுவோமென்று அவர்கள் பயப்படுகிறார்கள்; 2) ''நடைமுறை அரசியல்'' என்று ஜெர்மானியர்களால் கூறப்படுகின்ற ஒன்றை நான் உறுதியாக எதிர்ப்பதை அவர்கள் அறிவார்கள். (இப்படிப்பட்ட ''நடைமுறைவாதம்'' ஜெர்மனியை நாகரிகமடைந்த எல்லா நாடுகளுக்கும் வெகு தூரத்துக்குப் பின்னால் நிறுத்தி வைத்திருக்கிறது.)

அட்டைக்காக ஒரு ஷில்லிங் கொடுக்கின்ற யாரும் சங்கத்தின் உறுப்பினராக முடியும் என்பதால், இத்தகைய தனிப்பட்ட உறுப்பினர் முறையை பிரெஞ்சுக்காரர்கள்

(ditto* பெல்ஜியர்களும்) தேர்ந்தெடுத்தபடியால், அவர்கள் ''இணைப்பு'' என்ற முறையில் நம்மோடு சேர்ந்து கொள்வதைச் சட்டம் தடுக்கின்றபடியால், இம்மாதிரியான நிலைமை ஜெர்மனியிலும் இருப்பதால், இங்கும் ஜெர்மனியிலுமுள்ள என்னுடைய நண்பர்களிடம் சிறு அளவிலான சங்கங்களை அமைக்குமாறு—ஒவ்வொரு ஸ்தலத்திலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை முக்கியமானதல்ல—ஒவ்வொரு உறுப்பினரும் இங்கிலாந்து உறுப்பினர் அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுவதென்று இப்பொழுது நான் முடிவு செய்திருக்கிறேன். இங்கிலாந்திலிருக்கும் சங்கம் சட்டபூர்வமானது என்பதால், இத்தகைய வழி முறையைப் பின்பற்ற—பிரான்சிலும் கூட—ஒரு தடையுமில்லை. நீங்களும் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களும் லண்டனோடு இந்த முறையில் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் நான் மகிழ்ச்சியடைவேன்....

*Sozialistische Auslandpolitik*
*(1918, எண். 18)*
*இதழில் முதன்முறையாக*
*வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின்படி*
*அச்சிடப்பட்டது*
*ஜெர்மன் மொழியிலிருந்து*
*மொழிபெயர்க்கப்பட்டது*

---

* —மற்றும்.—ப-ர்.

கா. மார்க்ஸ்

# மார்க்ஸ் லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதம்

ஹனேவர் நகரத்துக்கு

லண்டன், அக்டோபர் 9,* 1866

...ஜினீவாவில் நடைபெறவிருந்த முதல் காங்கிரசைப்[80] பற்றி எனக்கு அதிகமான அச்சங்கள் ஏற்பட்டிருந்தன. எனினும் மொத்தத்தில் நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகச் சிறப்பாக அது முடிந்து விட்டது. பிரான்சிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அது எதிர்பார்த்திராத விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. நான் அங்கே போக முடியவில்லை, போக விரும்பவுமில்லை; ஆனால் லண்டன் பிரதிநிதிகளுக்குச் செயல்திட்டத்தை எழுதிக் கொடுத்தேன்.** தொழிலாளர்களின் உடனடியான உடன்பாட்டையும் ஒன்று சேர்ந்த நடவடிக்கையையும் அனுமதிக்கின்ற, வர்க்கப் போராட்டத்தின் தேவைகளுக்கும் வர்க்கம் என்ற முறையில் தொழிலாளர்கள் ஸ்தாபனம் அமைத்துக் கொள்வதற்கும் நேரடியான ஊட்டத்தையும் தூண்டுதலையும் கொடுக்கின்ற அந்த அம்சங்களோடு மட்டும் அதை வேண்டுமென்றே குறைத்துக் கொண்டேன். பாரிஸ் கனவான்களின் தலைகள் முழுவதிலும் வெறுமையான புரூதோன்வாதச் சொற்றொடர்

---

* மூலப்பிரதியில் எழுத்துப் பிழை: ''நவம்பர்''.—ப-ர்.

** இத்தொகுதி, பக்கங்கள் 139—155 பார்க்க.—ப-ர்.

கள் நிறைந்திருந்தன. அவர்கள் விஞ்ஞானத்தைப் பற்றி உளறுவார்கள்; ஆனால் ஒன்றும் தெரியாது. எல்லா புரட்சிகரமான நடவடிக்கையையும் அதாவது வர்க்கப் போராட்டத்திலிருந்து தோன்றும் நடவடிக்கையையும் எல்லா ஒன்று திரட்டப்பட்ட சமூக இயக்கங்களையும் ஆகவே அரசியல் வழிகளின் மூலம் நிறைவேற்றப்படக் கூடியவற்றையும் (உதாரணமாக, சட்டபூர்வமாக உழைக்கும் நேரத்தைக் குறைத்தல்) அவர்கள் வெறுத்தொதுக்குகிறார்கள். சுதந்திரம் மற்றும் அரசாங்க எதிர்ப்புவாதம் அல்லது சர்வாதிகார எதிர்ப்புத்—தனி மனிதவாதம் என்ற பெயரில்—மிகக் கேவலமான எதேச்சாதிகாரத்தைப் பதினாறு வருட காலம் மௌனமாகத் தாங்கிக் கொண்டவர்கள், இன்னும் அதைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள்—இந்தக் கனவான்கள் உண்மையில் சாதாரண முதலாளித்துவ வர்க்கப் பொருளாதாரத்தை, அந்தப் பொருளாதாரத்துக்குப் புரூதோன்வாத அலங்காரத்தை மட்டும் செய்து போதிக்கிறார்கள். புரூதோன் மிக அதிகமான தீமையைச் செய்தார். கற்பனாவாதிகளைப் பற்றி அவர் செய்த போலியான விமர்சனமும் போலியான எதிர்ப்பும் (அவரே குட்டி முதலாளி வர்க்கக் கற்பனாவாதி தான்; ஆனால் ஃபூரியே, ஓவன் இன்னும் அவர்களைப் போன்ற மற்றவர்களின் கற்பனைச் சமுதாயங்களில் ஒரு புதிய உலகத்தைப் பற்றிய எதிர்பார்ப்பும் கற்பனை நயத்தோடு அதை எடுத்துரைத்தலும் இருக்கிறது) முதலில் ''மிகச் சிறந்த இளைஞர்களையும்'' மாணவர்களையும் பிறகு தொழிலாளர்களையும் குறிப்பாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களையும் (சுகபோக வாழ்க்கைக்குத் தேவையான தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் என்ற முறையில் அவர்கள்—தங்களுக்குத் தெரியாமலேயே—பழைய குப்பைகள் மீது அதிகமான ஈடுபாட்டைக் கொண்டிருக்கிறார்கள்) வசீகரித்துக் கெடுத்தன. அறிவில்லாத, தற்பெருமை கொண்ட, தன் மூப்புடைய, சதா தொணதொணக்கின்ற, வீண் ஆரவாரம் செய்யும் அகம்பாவம் கொண்ட இந்த நபர்கள் எல்லாவற்றையுமே கெடுத்துவிடக் கூடிய நிலையில் இருந்தார்கள்; ஏனென்றால் அவர்கள் அதிகமான எண்ணிக்கையில்

காங்கிரசுக்கு ஓடி வந்து விட்டார்கள்; இதற்கும் அவர்களுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. அறிக்கையில் நான் அவர்களை நேரடியாகக் குறிப்பிடாமல் அவர்களுக்குரிய விமர்சனத்தை அளிப்பேன்.

இதே சமயத்தில் பால்டிமோரில் நடைபெற்ற அமெரிக்கத் தொழிலாளர்கள் காங்கிரஸ்[81] எனக்கு அதிகமான மகிழ்ச்சியைக் கொடுத்தது. மூலதனத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஸ்தாபனம் அமைப்போம் என்பதே அங்கேயிருந்த கோஷம். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் ஜினீவாவுக்காக நான் தயாரித்திருந்த கோரிக்கைகளில் பெரும்பான்மையானவை தொழிலாளர்களின் சரியான இயல்புணர்ச்சி காரணமாக அங்கேயும் முன்வைக்கப்பட்டன.

நமது மத்தியக் கவுன்சில் தோற்றுவித்த சீர்திருத்த இயக்கம்[82] (quorum magna pars fui*) இப்பொழுது பிரம்மாண்டமான அளவை எட்டி எதிர்க்கப்பட முடியாததாகி விட்டது. நான் முழு நேரமும் திரைக்குப் பின்னாலிருந்து கொண்டு உதவிகளைச் செய்தேன். அது சரியாக இயங்கத் தொடங்கி விட்டபடியால் இதைப் பற்றி மேலும் தொந்தரவுகளுக்கு என்னை உட்படுத்திக் கொள்ளவில்லை....

*Die Neue Zeit* இதழில் (தொகுதி 2, எண்.2, 1901-02) முதன்முறையாக வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது

* —அதற்கு நான் அதிகமான சேவை செய்திருக்கிறேன் (வெர்கில், ''எனெயீடா'' இரண்டாம் நூல்).—ப-ர்.

## பதிப்பாளர் குறிப்புகள்

1 1864ம் ஆண்டு செப்டெம்பர் 28ம் தேதி லண்டனில் செயின்ட் மார்ட்டின் ஹாலில் பெரும் சர்வதேசத் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது. இதில் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் (இதுதான் பின்னுல் முதலாம் அகிலம் என்ற வகையில் பிரபலமானது) நிறுவப்பட்டு, தற்காலிகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. கா. மார்க்ஸ் இந்தக் கமிட்டிக்கும் பின்னுல் சங்கத்தின் வேலைத்திட்ட ஆவணங்களை உருவாக்குவதற்காக அக்டோபர் 5ம் தேதி நடைபெற்ற இக்கமிட்டியின் முதல் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிஷனுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மார்க்ஸ் நோய் வாய்ப்பட்டிருந்த போது தான் தயாரித்த ஆவணங்களைப் படித்துத் திருத்தும் பொறுப்பை அக்டோபர் 20ம் தேதி கமிஷன் மார்க்சுக்கு அளித்தது. இவற்றிற்குப் பதிலாக மார்க்ஸ் கிட்டத்தட்ட இரு புதிய ஆவணங்களை — சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்க அறிக்கை, சங்கத்தின் தற்காலிக விதிமுறைகள் — எழுதினுர். இவையிரண்டும் கமிஷன் கூட்டத்தில் அக்டோபர் 27ம் தேதி ஆமோதிக்கப்பட்டன. சங்கத்தின் தலைமை உறுப்பாகச் சட்டபூர்வமாக்கப்பட்ட தற்காலிகக் கமிட்டியால் ''அறிக்கையும்'' ''விதிமுறைகளும்'' 1864ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதி ஒருமனதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டன. வரலாற்றில் அகிலத்தின் பொதுக் குழு என்று அறியப்படும் இந்த உறுப்பு 1866ம் ஆண்டின் இறுதி வரை பெரும்பாலும் மத்தியக் கவுன்சில் என்று அழைக்கப்பட்டது. கார்ல் மார்க்ஸ்தான் பொதுக் குழுவின் நடைமுறை ரீதியான தலைவராய்

இருந்தார். இவர் இதன் உண்மையான ஸ்தாபன அமைப்பாளராகவும் தலைவராகவும் எண்ணற்ற வேண்டுகோள்கள், அறிக்கைகள், தீர்மானங்கள் மற்ற ஆவணங்களின் ஆசிரியராகவும் விளங்கினார்.

முதல் வேலைத்திட்ட ஆவணமாகிய ''தொடக்க அறிக்கையில்'' மார்க்ஸ், அரசியல் அதிகாரத்தை வெல்ல வேண்டியதன் அவசியம், சுயமான பாட்டாளி வர்க்கக் கட்சியைத் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் பல்வேறு நாடுகளின் தொழிலாளர்களுக்கு இடையிலான சகோதரக் கூட்டணியின் அவசியம் ஆகியவற்றைப் பற்றி தொழிலாளர் திரளினருக்கு உணர்த்துகிறார்.

1864ஆம் ஆண்டில் முதன்முதலாக வெளியிடப்பட்ட ''தொடக்க அறிக்கை'', 1876ம் ஆண்டு கலைந்து போன முதலாம் அகிலம் நிலவிய காலம் முழுவதும் பன்முறை மறுபிரசுரம் செய்யப்பட்டது.—9.

2 **''கழுத்தை நெரித்துக் கொலை செய்பவர்கள்''** (garroters)—தமது பலியின் கழுத்தைப் பிடித்து நெரித்த கொள்ளைக்காரர்களை இவ்வாறு அழைத்தனர். 1860ம் ஆண்டுகளின் துவக்கத்தில் இது போன்ற கொள்ளை நிகழ்ச்சிகள் லண்டனில் அடிக்கடி நடைபெற்றன, நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி விசேஷ விவாதம் நடந்தது.—10.

3 **நீலப் புத்தகங்கள்** (Blue Books)—இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தின் விஷயங்கள் மற்றும் அயல் விவகார அமைச்சகத்தின் ராஜதந்திர ஆவணங்கள் ஆகியவற்றின் பிரசுரங்களுக்கான பொதுப் பெயர். தமது நீல நிற மேல் அட்டையின் காரணமாக இப்பெயரைப் பெற்ற நீலப் புத்தகங்கள் 17ம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்தில் வெளியிடப்படுகின்றன. இவைதான் நாட்டின் பொருளாதார, ராஜதந்திர வரலாறுகளுக்கு அதிகாரபூர்வமான மூல நூல்களாகும்.

இங்கே ''நாடுகடத்தல் மற்றும் கடுங்காவல் தண்டனைகளைப் பற்றிய சட்டங்களின் செயல்பாடு குறித்த கமிஷனின் புலனாய்வு அறிக்கை'' தொகுதி 1, லண்டன், 1863 எனும் நூல் குறிப்பிடப்படுகிறது.—10.

4 **அமெரிக்க உள்நாட்டுப் போர்** (1861 — 1865) — இந்தப் போர் வடக்கேயிருந்த தொழில்துறை மாநிலங்களுக்கும் கிளர்ந்தெழுந்த தென்பகுதி அடிமையுடைமை மாநிலங்

களுக்கும் இடையே நடந்தது. தோட்டச் சொந்தக்காரர்கள்-அடிமைச் சொந்தக்காரர்களை ஆதரித்த ஆங்கிலேய முதலாளி வர்க்கத்தின் கொள்கையை எதிர்த்த இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கம், இங்கிலாந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டு யுத்தத்தில் தலையிடாதவாறு தடுத்தது.—10.

5 **பிரிவி கவுன்சில்** இங்கிலாந்தில் 13ம் நூற்றுண்டில் தோன்றியது. முதன்முதலில் இதில் நிலப்பிரபுத்துவ மேற்குடியினரும் உயர் மதகுருமார்களும் இடம் பெற்றிருந்தனர். அரசரின் கீழிருந்த உயர் ஆலோசனை உறுப்பாக இருந்த பிரிவி கவுன்சில் 17ம் நூற்றுண்டு வரை அரசு நிர்வாகத்தில் முக்கியப் பங்காற்றியது. நாடாளுமன்றவாதம் வளர்ந்து அமைச்சரவையின் அதிகாரம் வளர்ச்சியடையும் போது பிரிவி கவுன்சில் படிப்படியாகத் தன் முக்கியத்துவத்தை இழக்கிறது.—11.

6 ருஷ்யாவின் ஜார் அரசாங்கம் இங்கே குறிப்பிடப்படுகிறது. 18ம் நூற்றுண்டிலிருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (இப்போது இது லெனின்கிராத்) நகரம் ருஷ்யாவின் தலைநகராயிருந்தது.—18.

7 **சார்ட்டிஸம்** 19ம் நூற்றுண்டின் 30—40ம் ஆண்டுகளில் இருந்த ஆங்கிலேயத் தொழிலாளர்களின் வெகுஜனப் புரட்சி இயக்கம். சார்ட்டிஸ்டுகள் 1838ம் ஆண்டில் நாடாளுமன்றத்திற்கு ஒரு விண்ணப்பத்தை (மக்கள் சாசனத்தை) தயாரித்தனர். 21 வயதடைந்த எல்லா ஆண்களுக்கும் பொது வாக்குரிமை, இரகசிய வாக்கெடுப்பு, நாடாளுமன்ற பிரதிநிதிகளாக தேர்தல்களில் நிற்பவர்களுக்கு சொத்துத் தகுதியை அகற்றுதல் போன்ற கோரிக்கைகள் இதில் அடங்கியிருந்தன. இந்த இயக்கம் பிரம்மாண்டமான கூட்டங்கள்-ஆர்ப்பாட்டங்களோடு துவங்கி மக்கள் சாசனத்தை நிறைவேற்றுவதற்கான போராட்டம் எனும் கோஷத்தின் கீழ் நடந்தது. 1842ம் ஆண்டு மே 2ம் தேதி சார்ட்டிஸ்டுகளின் இரண்டாவது விண்ணப்பம் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டது. இதில் சில சமூகக் கோரிக்கைகள் (வேலை நேரக் குறைப்பு, ஊதிய உயர்வு போன்றவை) இடம் பெற்றிருந்தன. முதல் விண்ணப்பத்தைப் போன்றே இதுவும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. இதற்குப் பதில் தரும் முகமாக சார்ட்டிஸ்டுகள் பொது வேலைநிறுத்தத்தை நடத்தினர்.

*1848ம் ஆண்டில் மூன்றும் விண்ணப்பத்தோடு நாடாளு மன்றத்தை நோக்கிய ஒரு வெகுஜன ஊர்வலத்தை நடத்த சார்ட்டிஸ்டுகள் திட்டமிட்டனர். ஆனால் அரசாங்கம் இராணுவத்தைக் கொண்டு வந்து இந்த ஊர்வலத்தைக் குலைத்தது. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. 1848ம் ஆண்டிற்குப் பின் சார்ட்டிஸ்ட் இயக்கம் வீழத் துவங்கியது.*

*திட்டவட்டமான செயல்திட்டமும் நடைமுறைத் தந்திரமும் இல்லாமையும் தொடர்ச்சியான புரட்சிகரத் தலைமையின்மையும்தான் சார்ட்டிஸ்ட் இயக்கத்தின் தோல்விக்கான முக்கியக் காரணங்களாகும். ஆனால் சார்ட்டிஸ்டுகள் இங்கிலாந்தின் அரசியல் வரலாறு மீதும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி மீதும் பெரும் தாக்கம் கொண்டிருந்தனர்.—19.*

8 *வேலை நேரத்தை 10 மணி நேரமாகச் சட்டபூர்வமாகக் குறைப்பதற்கான தொழிலாளி வர்க்கப் போராட்டம் இங்கிலாந்தில் 18ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து நடைபெற்றது. இது 19ம் நூற்றாண்டின் 30ஆம் ஆண்டுகளிலிருந்து பரவலான பாட்டாளி வர்க்க மக்கட் திரளினரை ஆட்கொண்டது.*

*பெண்களுக்கும் குறைந்த வயதுடையவர்களுக்கும் மட்டும் பொருந்தி வரும் 10 மணி நேர வேலைச் சட்டம் நாடாளுமன்றத்தால் 1847ம் ஆண்டு ஜூன் 8ம் தேதி நிறைவேற்றப்பட்டது. ஆனால் நடைமுறையில் பல ஆலை முதலாளிகள் இதை அலட்சியப்படுத்தினர்.—19.*

9 **பொது விதிமுறைகள்** *1871ம் ஆண்டு செப்டெம்பரில் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் லண்டன் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. முதலாம் அகிலம் நிறுவப்படும் போது மார்க்சால் 1864ல் உருவாக்கப்பட்ட ''தற்காலிக விதிமுறைகள்'' (முதலாம் குறிப்பைப் பார்க்க) அவற்றின் அடிப்படையாக அமைந்தன. 1872ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஹேக் காங்கிரசில், விதிமுறைகளில் 7வது ஷரத்தை அடுத்து ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கை'' குறித்த 7 (அ) எனும் கூடுதல் ஷரத்தை விதிமுறைகளில் சேர்ப்பதைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் எழுதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இதே பதிப்பு, 6ம் தொகுதியைப் பார்க்க.)—26.*

10 ஆ. லிங்கன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி சர்வதேசத் தொழிலாளர் சங்கம் ஆ. லிங்கனுக்கு அனுப்பிய **வேண்டுகோள்** பொதுக் குழுவின் தீர்மானத்தின்படி மார்க்சால் எழுதப்பட்டது. இது அமெரிக்காவில் அடிமைமுறைக்கு எதிரான யுத்தம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் முழுவதற்கும் எவ்வளவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்தியதால், அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்த தருணத்தில் இந்த வேண்டுகோள் பெரும் பங்காற்றியது. சகலவித முற்போக்கு, ஜனநாயக இயக்கங்களையும் ஆதரித்த மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்திடமும் அகிலத்திலிருந்த இவ்வர்க்கத்தின் முன்னணிப் பிரதிநிதிகளிடமும் தமது விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் போராட்டத்தின்பால் உண்மையான சர்வதேசிய உறவு முறையை வளர்த்தனர்.—*31*.

11 *1776*ம் ஆண்டு ஜூலை *4*ம் தேதி ஃபிலடெல்ஃபியாவில் நடைபெற்ற காங்கிரசில் வடக்கு அமெரிக்க *13* ஆங்கிலேயக் காலனிகளின் பிரதிநிதிகளால் ஏற்கப்பட்ட **சுதந்திரப் பிரகடனம்** இங்கே குறிப்பிடப்படுகிறது. இது வடக்கு அமெரிக்கக் காலனிகள் இங்கிலாந்திடமிருந்து பிரிந்து அமெரிக்க ஐக்கிய நாடு எனும் சுதந்திரமான குடியரசின் தோற்றத்தைப் பிரகடனப்படுத்தியது. இந்த ஆவணத்தில் தனிநபர் சுதந்திரம், சட்டத்தின் முன் அனைவரின் சமத்துவம், மக்கள் அரசுரிமையைப் பற்றிய கருத்து நிலை போன்ற பூர்ஷ்வா-ஜனநாயகக் கோட்பாடுகள் சூத்திரப்படுத்தப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் இன்னமும் நிலப்பிரபுத்துவ-முடியாட்சி முறைகள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இத்தகைய கோட்பாடுகள் பிரகடனப்படுத்தப்பட்டதானது, ஐரோப்பியப் புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் மீது, உதாரணமாய் *18*ம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சுப் பூர்ஷ்வாப் புரட்சியின் மீது கணிசமான தாக்கத்தைச் செலுத்தியது. ஆனால் ஆரம்பம் முதலே அமெரிக்க முதலாளிகளும் பெரும் நிலச்சுவான்தார்களும் பிரகடனத்திலிருந்த ஜனநாயக உரிமைகளை மீறி வந்தனர், அரசியல் வாழ்வில் மக்கள் திரளினர் பங்கேற்காதவாறு செய்தனர், குடியரசின் மக்கட் தொகையில் கணிசமான பகுதியினராயிருந்த நீக்ரோக்களின் அடிப்படை மானுட

உரிமைகளை மறுத்த அடிமை முறையைத் தக்க வைத்தனர்.—32.

12 தெற்கேயிருந்த அடிமையுடைமை மாநிலங்களை உள்நாட்டு யுத்தத்தின் போது வடக்கு மாநிலத்தவரின் கடற்படை முற்றுகையிட்டதால் அமெரிக்காவிலிருந்து பருத்தி வரவு தடைப்பட்டு பருத்தி நெருக்கடி தோன்றியது. ஐரோப்பாவிலிருந்த பருத்தித் தொழில்துறையில் பெரும் பகுதி ஸ்தம்பித்துப் போனதால் தொழிலாளர்களின் நிலைமை கடும் பாதிப்புக்கு உள்ளானது. இழப்புக்களைப் பொருட்படுத்தாத ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் வடக்கு மாநிலங்களுக்குத் தீவிர ஆதரவு அளித்து வந்தது.—32.

13 ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான இங்கிலாந்தின் வட அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரப் போர் *(1775—1783)*, சுதந்திரத்தின் மீதும் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான தடைகளை அழிப்பதன் மீதும் உருவாகிக் கொண்டிருந்த அமெரிக்க பூர்ஷ்வா தேசிய இனம் கொண்டிருந்த நாட்டத்தால் தூண்டப்பட்டது. வட அமெரிக்கர்களின் வெற்றியின் விளைவாய் அமெரிக்க ஐக்கிய நாடு எனும் சுதந்திர முதலாளித்துவ அரசு ஏற்படுத்தப்பட்டது.—33.

14 புரூதோனைப் பற்றி என்னும் கட்டுரை புரூதோனின் மறைவை ஒட்டி *Social-Demokrat* பத்திரிகையாசிரியர் ஷ்வைட்ஸரின் வேண்டுகோளுக்கிணங்க மார்க்சால் எழுதப்பட்டது. ''மெய்யறிவின் வறுமை'' எனும் நூலிலும் மற்ற படைப்புகளிலும் புரூதோனின் தத்துவஞான, பொருளாதார, அரசியல் கருத்துக்களைப் பற்றி தான் எழுதிய விமரிசனங்களை தொகுத்துரைப்பதைப் போல் மார்க்ஸ் புரூதோன்வாதச் சித்தாந்தத்தின் ஆதாரமின்மை முழுவதையும் வெளிப்படுத்தினார். புரூதோனின் கண்ணோட்டங்களைப் பற்றி தனது மதிப்பீட்டைத் தொகுத்துரைக்கும் முகமாக மார்க்ஸ் இவரைக் குட்டி முதலாளித்துவத்தின் எடுத்துக்காட்டான சித்தாந்தவாதியாக சித்தரிக்கிறார்.—34.

15 *Social-Demokrat* (''சமூக-ஜனநாயகவாதி'') — லஸ்ஸால்வாத பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் பத்திரிகை (74ம் குறிப்பைப் பார்க்க). இந்தப் பெயரின்

*கீழ் இப்பத்திரிகை 1864ம் ஆண்டு டிசம்பர் 15 முதல் 1871 வரை பெர்லினில் வெளியிடப்பட்டது; 1864—1865ம் ஆண்டுகளில் யோ. ப. ஷ்வைட்ஸர் இதன் பதிப்பாசிரியராய் இருந்தார்.—34.*

16 *Essai de grammaire générale (''பொது இலக்கண அனுபவம்'') எனும் புரூதோனின் படைப்பு இங்கே குறிப்பிடப்படுகிறது.—34.*

17 *மூா. பி. பிரிஸ்ஸோ டெ வர்விலின், Recherches philosophiques. Sur le droit de propriété et sur le vol, considérés dans la nature et dans la société (''சமுதாயத்திலும் இயற்கையிலும் ஆராயப்படும் சொத்து உரிமை மற்றும் திருட்டைப் பற்றிய தத்துவஞான ஆராய்ச்சிகள்'') எனும் படைப்பைப் பற்றி இங்கே பேசப்படுகிறது.—38.*

18 Ch. Dunoyer, *Da la liberté du travail, ou Simple exposé des conditions dans lesquelles les forces humaines s'exercent avec le plus de puissance*, T. 1-3, Paris, 1845. *(ஷா. டுனுவையே, ''உழைப்புச் சுதந்திரத்தைப் பற்றி அல்லது எந்தச் சூழ்நிலைகளில் மனித சக்திகள் மிகவும் பயன்மிக்க முறையில் வெளிப்படுகின்றனவோ, அவற்றைப் பற்றிய சாதாரண சித்தரிப்பு'', தொகுதிகள் 1-3, பாரிஸ், 1845).—44.*

19 *ஆர்லியன் அரசுப் பரம்பரையை முறியடித்து பிரான்சைக் குடியரசாகப் பிரகடனப்படுத்திய 1848ம் ஆண்டில் நடைபெற்ற பிரெஞ்சு பிப்ரவரி புரட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது.—44.*

20 *1848ம் ஆண்டு ஜூலை 31ம் தேதி பிரெஞ்சு தேசிய சபையின் கூட்டத்தில் புரூதோன் ஆற்றிய சொற்பொழிவு குறிப்பிடப்படுகிறது. குட்டி முதலாளித்துவக் கற்பனாவாத சித்தாந்தங்களின் மனப்பாங்கில் சில ஆலோசனைகளை (வட்டி விகிதத்தை ஒழித்தல் போன்றவை) இந்தச் சொற்பொழிவில் முன்மொழிந்த புரூதோன் அதே நேரத்தில் பாரிசில் 1848ம் ஆண்டு ஜூன் 23—26 தேதிகளில் நடைபெற்ற பாட்டாளி வர்க்க எழுச்சியின் மீதான அடக்குமுறையை வன்முறை மற்றும் தான்தோன்றித்தனத்தின் வெளிப்பாடாக வருணித்தார்.—44.*

21 **ஜூன் மாத எழுச்சி** — *பாரிஸ் நகரத் தொழிலாளர்கள்*

1848ம் ஆண்டு ஜூன் 23—26 தேதிகளில் நடத்திய வீரம் மிக்க எழுச்சி. இது பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தால் மிகக் கொடூரமாக அடக்கப்பட்டது. இந்த எழுச்சி வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முதல் மாபெரும் உள்நாட்டு யுத்தமாக அமைந்தது.—44.

22 பிரெஞ்சு தேசிய சபையின் நிதிக் கமிஷனுக்கு அளிக்கப்பட்ட புரூதோனின் ஆலோசனைகளுக்கு எதிராக 1848ம் ஆண்டு ஜூலை 26ம் தேதி தியேர் ஆற்றிய உரை இங்கே குறிப்பிடப்படுகிறது.—44.

23 *Gratuité du crédit. Discussion entre M. Fr. Bastiat et M. Proudhon*, Paris, 1850. (''நிபந்தனையற்ற கடன். திரு. பி. பாஸ்தியாவிற்கும் திரு. புரூதோனுக்கும் இடையிலான விவாதம்'', பாரிஸ், 1850).—45.

24 P. J. Proudhon, *Si les traités de 1815 ont cessé d'exister? Actes du futur congrès*, Paris, 1863. (பி. ஜொ. புரூதோன், ''1815ம் ஆண்டின் ஒப்பந்தங்கள் செயல்படுவது நின்றுவிட்டதா? எதிர்கால காங்கிரசின் பத்திரங்கள்'', பாரிஸ், 1863). இந்தப் படைப்பில் புரூதோன், ஆஸ்திரியா, பிரஷ்யா மற்றும் ருஷ்யாவிற்கு இடையே போலந்தைப் பிரித்துக் கொள்வதை இறுதியாக உறுதிப்படுத்திய 1815ம் ஆண்டின் போலந்தைப் பற்றிய வியென்னு காங்கிரசின் தீர்மானங்களை மறுபரிசீலனை செய்வதற்கு எதிராகவும் ஐரோப்பிய ஜனநாயகம் போலந்தின் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதை எதிர்த்தும் எழுதினார்.—47.

25 இந்தப் படைப்பு 1865ம் ஆண்டு ஜூன் மாதம் பொதுக் குழுவின் கூட்டங்களில் மார்க்சால் ஆங்கில மொழியில் வாசிக்கப்பட்ட உரையின் வாசகங்களாகும். இதில்தான் மார்க்ஸ் முதன்முதலாக உபரி மதிப்பைப் பற்றிய தனது தத்துவத்தின் அடிப்படைகளை வெளிப்படையாக எடுத்துரைத்தார். குழுவின் உறுப்பினராகிய ஜான் வேஸ்டனின் கருத்து நிலைகள் இந்த உரைக்கான காரணமாக அமைந்தன. இவர் தொழிலாளர்களின் ஊதியங்களைப் பொதுவாக உயர்த்துவது ஆதாரமில்லாதது என்று நிரூபிக்க முயன்றார், இதிலிருந்து தொழிற்சங்கங்களின் ''தீமையைப்'' பற்றி முடிவு செய்தார். மார்க்சின் உரை அதே நேரத்தில், தொழிலாளர்களின் பொருளாதாரப்

போராட்டத்தையும் தொழிற்சங்கங்களையும் எதிர்த்த புரூதோன்வாதிகள் மற்றும் லஸ்ஸால்வாதிகள் மீதும் அடியாக விழுந்தது. இதில் மார்க்ஸ் செயலின்மைப் பிரச்சாரத்தையும் தம்மைச் சுரண்டும் மூலதனத்தின் முன் பாட்டாளிகள் சமரசமாகப் போவதையும் தீவிரமாக எதிர்க்கிறார், தொழிலாளர்களுடைய பொருளாதாரப் போராட்டத்தின் பங்கையும் முக்கியத்துவத்தையும் தத்துவ ரீதியாக ஆதாரப்படுத்துகிறார், இப்போராட்டத்தை, கூலியுழைப்பு முறையை ஒழித்தல் எனும் பாட்டாளி வர்க்கத்தின் இறுதி லட்சியத்திற்கு உட்படுத்தும் அவசியத்தை வலியுறுத்துகிறார். உரையின் வாசகம் மார்க்சின் கைப்பிரதி வடிவத்தில் கிடைத்திருக்கிறது. முதன் முதலாக இது மார்க்சின் பெண் எலியனோராவால் *Value, Price and Profit* (''மதிப்பு, விலை, லாபம்'') எனும் தலைப்பில் எ. எவ்லிங் எனும் ஆங்கிலேய சமூகவியலாளரின் முன்னுரையோடு லண்டனில் வெளியிடப்பட்டது. முன்னுரைக்கும் முதல் 6 பாராக்களுக்கும் கையெழுத்துப் பிரதியில் தலைப்புகள் இருக்கவில்லை, இத்தலைப்புகள் பின்னால் எவ்லிங்கால் அளிக்கப்பட்டன. இந்தப் பதிப்பில் பொதுத் தலைப்பைத் தவிர மற்ற எல்லாத் தலைப்புகளும் அப்படியே வைக்கப்பட்டுள்ளன.—49.

26 ''தற்காலிக விதிமுறைகளால்'' திட்டமிடப்பட்ட பிரஸ்ஸல்ஸ் காங்கிரசிற்குப் பதிலாக 1865ம் ஆண்டில் லண்டனில் பூர்வாங்க மகாநாடு கூட்டப்பட்டது. (41ம் குறிப்பைப் பார்க்க).—49.

27 பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது (1793—1794) தானியம், மாவு, சில அத்தியாவசியப் பொருள்களுக்குத் திட்டவட்டமான உயர்ந்தபட்ச விலைகளும் திட்டவட்டமான உயர்ந்தபட்சக் கூலியும் நிர்ணயிக்கப்பட்டன.—62.

28 **பிரிட்டிஷ் விஞ்ஞான வளர்ச்சிச் சங்கம்** 1831ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. சங்கத்தின் பொருளியல் பிரிவுக் கூட்டத்தில் (செப்டெம்பர் 1861) வில்லியம் நியூமார்ச் ஆற்றிய உரையையே மார்க்ஸ் குறிப்பிடுகிறார். உரையாளரின் பெயரை அவர் தவறாக எழுதிவிட்டார்.—63.

29 பார்க்க: R. Owen, *Observation on the Effect of the Manufacturing System*, London, 1817, p. 76. (ரா. ஓவன், ''செய்தொழில்

முறையின் விளைவு பற்றிய குறிப்புகள்'', லண்டன், *1817*, பக்கம் *76*).—*63*.

30 அண்மைக் கிழக்கில் ஆதிக்கம் வகிப்பதற்காக ருஷ்யாவிற்கும் இங்கிலாந்து, பிரான்ஸ், துருக்கி மற்றும் சர்டீனியாவின் கூட்டணிக்கும் இடையே *1853—1856*ம் ஆண்டுகளில் நடைபெற்றக் கிரீமிய யுத்தம் இங்கே குறிப்பிடப்படுகிறது. முக்கிய போர் சம்பவங்கள் நடைபெற்ற இடத்தின் பெயரையொட்டி இது இவ்வாறு அழைக்கப்படுகிறது. கிரீமிய யுத்தம் ருஷ்யாவின் தோல்வியில் முடிந்தது.—*65*.

31 ஒரு நிலச் சொந்தக்காரன் ஏழைகளின் நன்மைக்காகச் செலுத்த வேண்டியிருந்த வரித் தொகையின் அளவு அவனுடைய நிலத்தில் வசித்த ஏழைகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருந்தது. *19*ம் நூற்றுண்டின் நடுவில் நாட்டுப்புறக் குடியிருப்பு வீடுகள் இடித்துத் தள்ளப்படுவது தீவிரம் அடைந்ததற்கு இதுவும் ஓரளவு காரணமாயிற்று. தங்களுக்குத் தேவை இல்லாதவையும் ஆனல் ''மிகுதியாயிருந்த'' ஏழைகளுக்குப் புகலிடங்களாகப் பயன்படக் கூடியவையும் ஆன கட்டிடங்களை நிலச் சொந்தக்காரர்கள் வேண்டுமென்றே இடித்துத் தள்ளி விட்டார்கள்.—*65*.

32 கலைக் கழகம் (Society of Arts)—*1754*ம் ஆண்டு லண்டனில் தோற்றுவிக்கப்பட்ட பூர்ஷ்வா அறிவொளி மற்றும் பரோபகாரக் கழகம். இங்கே குறிப்பிடப்படும் அறிக்கை *1864*ல் இறந்த ஜான் மோர்ட்டனின் மகனுகிய ஜான் சால்மர்ஸ் மோர்ட்டனுல் படிக்கப்பட்டது.—*65*.

33 அயல்நாட்டிலிருந்து தானியத்தைக் கொண்டு வருவதை மட்டுப்படுத்துவதை அல்லது தடை செய்வதை நோக்கமாகக் கொண்ட தானியச் சட்டங்கள் என்றழைக்கப்பட்டவை பெரும் நிலச்சுவான்தார்கள் பண்ணையாளர்களின் நலன்களுக்காக லண்டனில் அமுலாக்கப்பட்டன. *1838*ம் ஆண்டு காப்டேன், பிரைட் எனும் மாஞ்செஸ்டர் ஆலை முதலாளிகளால் தானியச் சட்டங்களுக்கு எதிரான லீக் அமைக்கப்பட்டது. முழு வர்த்தக சுதந்திரத்தைக் கோரிக்கையாக முன்வைத்த லீக், தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைத்து நில மேற்குடியினரின் பொருளாதார, அரசியல் நிலைகளைப் பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு தானியச் சட்டங்களை ரத்து செய்ய முயன்றது.

இந்தப் போராட்டத்தின் விளைவாக தானியச் சட்டங்களை ரத்து செய்யும் மசோதா 1846ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இது நில மேற்குடியினரின் மீது தொழில்துறை முதலாளி வர்க்கத்தினர் அடைந்த வெற்றியைக் குறித்தது.—66.

34 A. Smith, *An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations*, Vol. I, Edinburgh, 1814, p. 93. (ஆ. ஸ்மித் "மக்களினங்களின் செல்வத்தின் இயல்பையும் காரணங்களையும் பற்றிய ஓர் ஆராய்ச்சி", தொகுதி 1, எடின்புர்க், 1814, பக்கம் 93).—95.

35 18ம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் போது பிரான்சிற்கு எதிராக இங்கிலாந்து நடத்திய யுத்தங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. இந்த யுத்தங்களின் போது ஆங்கிலேய அரசாங்கம் தன் நாட்டில் உழைக்கும் மக்கட் திரளினருக்கு எதிராக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது. உதாரணமாக இந்தக் காலகட்டத்தில் சில மக்கள் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன, தொழிலாளர் கூட்டணிகளைத் தடை செய்யும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.—121.

36 *An Inquiry into the Nature and Progress of Rent, and the Principles by which it is Regulated*, London, 1815. ("குத்தகையின் தன்மை, அதன் அதிகரிப்பு மற்றும் இதை ஒழுங்குபடுத்தும் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி", லண்டன், 1815) எனும் தலைப்பிலான மால்தூசின் துண்டுப் பிரசுரத்தை கா. மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறுர்.—122.

37 வேலை விடுதிகள் 17ம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்டன; 1834ல் நிறைவேற்றப்பட்ட "ஏழைகள் சட்டத்தின்"படி வேலை விடுதிகள் ஏழைகளுக்கு உதவி புரியும் ஒரே ஒரு வடிவமாக மாறின; இந்த வேலை விடுதிகளில் சிறைச் சூழ்நிலையும் கடுங்காவல் தண்டனை முறையும் நிலவின, மக்கள் இவற்றை "ஏழைகளுக்கான பாஸ்டிலிக் கோட்டைகள்" என்று அழைத்தனர்.—122.

38 16ம் நூற்றுண்டிலிருந்து இங்கிலாந்தில் நிலவிய ஏழைகள் சட்டங்களின்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏழைகளுக்கான விசேஷ வரி வசூலிக்கப்பட்டது; தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரிக்க இயலாத வட்டார

*வாசிகள் ஏழைகள் உதவி நிதி மூலம் உதவியைப் பெற்ற னர்.—130.*

39 D. Ricardo, *On the Principles of Political Economy and Taxation*, London, 1821, p. 479. *(டி. ரிக்கார்டோ, "அரசியல் பொருளியல், வரிவிதிப்பு ஆகியவற்றின் கோட்பாடுகள் பற்றி", லண்டன், 1821, பக்கம் 479).—134.*

40 *இந்த ஆணைகள், 1866ம் ஆண்டு செப்டெம்பர் 3—8 தேதிகளில் ஜினீவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் முதல் காங்கிரசிற்கு அனுப்பப்பட்ட தற்காலிக மத்தியக் கவுன்சிலின் (பின்னர் இது பொதுக் குழு என்று அழைக்கப்பட்டது) பிரதிநிதிகளுக்காக மார்க்சால் எழுதப்பட்டன. காங்கிரசில் விவாதிக்கப்படவிருந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆணைகள் தந்தன. இதில் திட்டவட்டமான சில கடமைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவற்றின் நிறைவேற்றத்திற்கான போராட்டம் தொழிலாளர் திரளினரை அணி திரட்டும், அவர்களது வர்க்க உணர்வை உயர்த்தும், தொழிலாளர் வர்க்கத்தின் பொதுப் போராட்டத்தினுள் அவர்களை இழுக்கும். இதில் மார்க்சால் குறிப்பிடப்பட்டிருந்த 9 பாராக்களில் 6 பாராக்கள் காங்கிரசின் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. நடவடிக்கைகளைச் சர்வதேசிய ரீதியாக ஒன்றிணைத்தல், வேலை நேரக் குறைப்பு, குழந்தைகள் மற்றும் பெண்கள் வேலை, கூட்டுறவு உழைப்பு, தொழிற் சங்கங்கள், நிரந்தர இராணுவங்கள் ஆகியவற்றைப் பற்றிய பாராக்கள் இவை.—139.*

41 *1865ம் ஆண்டு செப்டெம்பர் 25—29 தேதிகளில் நடைபெற்ற லண்டன் மகாநாட்டைப் பற்றி இங்கே பேசப்படுகிறது; இதில் பொதுக் குழுவின் உறுப்பினர்களும் தனிப்பட்ட பிரிவுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். மகாநாடு பொதுக் குழுவின் அறிக்கையைக் கேட்டது, இதன் நிதி அறிக்கையையும் நடைபெறவிருக்கும் காங்கிரசின் நிகழ்ச்சி நிரலையும் அங்கீகரித்தது. அகிலம் உருவெடுத்து ஸ்தாபன ரீதியாக வடிவமெடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் மாநாடு பெரும் பங்காற்றியது. —140.*

42 8 மணி வேலை நேரத்தை சட்ட ரீதியாக நிலைநாட்டுவதைப்பற்றிய பிரச்சினை 1866ம் ஆண்டு ஆகஸ்டு 20—25 தேதிகளில் பால்டிமோரில் நடைபெற்ற அமெரிக்கத் தொழிலாளர் காங்கிரசில் விவாதிக்கப்பட்டது. தொழிலாளர்களின் அரசியல் நடவடிக்கை, கூட்டுறவு சங்கங்கள், எல்லாத் தொழிலாளர்களையும் தொழிற்சங்கங்களில் ஒன்றிணைத்தல், வேலைநிறுத்தங்கள் போன்ற பிரச்சினைகளையும் காங்கிரஸ் விவாதித்தது.—143.

43 1865—1867ம் ஆண்டுகளில் வாக்குரிமையின் இரண்டாவது சீர்திருத்தத்திற்கான பொது ஜனநாயக இயக்கத்தில் ஆங்கிலேயத் தொழிற்சங்கங்களின் பரவலான பங்கேற்பைப் பற்றி இங்கே பேசப்படுகிறது. (முதல் சீர்திருத்தம் 1831—1832ம் ஆண்டுகளில் செய்யப்பட்டது. இது பெரும் தொழில்துறை முதலாளிகளின் பிரதிநிதிகளுக்கு நாடாளுமன்றத்தைத் திறந்து விட்டது.)

1865ம் ஆண்டு பிப்ரவரி 23ம் தேதி வாக்குரிமை சீர்திருத்த ஆதரவாளர்களின் கூட்டத்தில் அகிலத்தின் பொதுக் குழுவின் முன்முயற்சியாலும் இதன் நெருங்கிய பங்கேற்புடனும் சீர்திருத்த லீக் ஒன்றைத் தோற்றுவிப்பதைப் பற்றி முடிவு செய்யப்பட்டது. இது இரண்டாவது சீர்திருத்தத்திற்கான தொழிலாளர்களின் வெகுஜன இயக்கத்தின் தலைமைக்கான அரசியல் மையமாயிற்று. மார்க்சின் வழிகாட்டுதலின் பேரில் சீர்திருத்த லீக், நாட்டின் வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் பொது வாக்குரிமை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. ஆனால் தொழிலாளர்களின் வெகுஜன இயக்கத்தைப் பற்றி அஞ்சிய, சீர்திருத்த லீகின் தலைமையிலிருந்த பூர்ஷ்வா முதலாளித்துவ தீவிரவாதிகளின் ஊசலாட்டத்தாலும் தொழிற்சங்கங்களின் சந்தர்ப்பவாதத் தலைவர்களின் சமரச மனப்போக்காலும் லீகால் பொதுக் குழு சுட்டிக் காட்டியக் கொள்கையைப் பின்பற்றி நடக்க இயலவில்லை. ஆங்கிலேய முதலாளி வர்க்கத்தினரால் இயக்கத்தைப் பிளவுபடுத்த முடிந்தது, 1867ம் ஆண்டில் குறைவான சீர்திருத்தம் செய்யப்பட்டது. இது தொழிலாளி வர்க்கத்தின் முக்கியப் பெரும் பகுதியை முன்போன்றே அரசியல் ரீதியாக உரிமையற்றதாக வைத்து, குட்டி முதலாளி வர்க்கத்தினருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் மேல்மட்டத்தினருக்கும் மட்டுமே வாக்குரிமையை அளித்தது.—151.

44 அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டு யுத்தத்தின் போது அமெரிக்கத் தொழிற்சங்கங்கள் அடிமையுடைமையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் வடக்கு மாநிலங்களுக்கு தீவிர ஆதரவை அளித்து வந்தன.—*151.*

45 ஆங்கிலேயத் தொழிற்சங்கங்களின் மகாநாடு ஷெஃபில்டில் *1866*ம் ஆண்டு ஜூலை *17—21* தேதிகளில் நடந்தது. இதில் கதவடைப்புகளுக்கு எதிரான போராட்டப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது.—*151.*

46 **புனிதக் கூட்டணி** — தனிப்பட்ட நாடுகளில் புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதற்காகவும் நிலப்பிரபுத்துவ-முடியாட்சிகளைத் தக்க வைப்பதற்காகவும் *1815* ஆண்டு ஜாரிச ருஷ்யா, ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவால் தோற்றுவிக்கப்பட்ட ஐரோப்பிய முடியரசுகளின் பிற்போக்கு கூட்டமைப்பு.—*154.*

47 தேசியத் தொழிலாளர் சங்கத்துக்குப் பொதுக் குழுவின் **வேண்டுகோள்** மார்க்சால் எழுதப்பட்டது. *1869*ம் ஆண்டு வசந்த காலத்தில் இங்கிலாந்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையே யுத்தம் தோன்றும் அபாயம் நிலவியதன் தொடர்பாக இது மே *11* தேதியில் பொதுக் குழுவின் கூட்டத்தில் மார்க்சால் படிக்கப்பட்டது.

**தேசியத் தொழிலாளர் சங்கம்** அமெரிக்க ஐக்கிய நாட்டில் *1866*ம் ஆண்டு ஆகஸ்டில் பால்டிமோரில் நடந்த காங்கிரசில் அமைக்கப்பட்டது. தனது தோற்றத்திலிருந்தே சங்கம் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை ஆதரித்தது, *1870*ம் ஆண்டில் இதனுடன் இணையத் திட்டமிட்டிருந்தது. ஆனால் இது நிறைவேறவில்லை. தேசியத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை, வங்கி முறையை ஒழித்து, அரசு மலிவாக கடன் தருவதற்கு வகை செய்வதை நோக்கமாகக் கொண்ட நிதிச் சீர்திருத்தம் பற்றிய கற்பனவாதத் திட்டநகல்களில் மூழ்கினர். *1870—1871*ம் ஆண்டுகளில் தொழிற்சங்கங்கள் சங்கத்திலிருந்து விலகின, *1872*ம் ஆண்டில் இது கிட்டத்தட்ட தனது இயக்கத்தை நிறுத்தியது. தேசியத் தொழிலாளர் சங்கத்தின் பலவீனமான அம்சங்கள் அனைத்தும் நிலவிய போதிலும், தொழிலாளர் ஸ்தாபனங்களின் சுயேச்சையான அரசியல் கொள்கை, நீக்ரோ மற்றும் வெள்ளைத் தொழிலாளர்களின் ஒருமைப்பாடு, 8 மணி வேலை நேரம், வேலைசெய்யும் பெண்களின் உரிமைகள் ஆகியவற்றிற்

கான போராட்டம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் விரிவடைவதில் இது பெரும் பங்காற்றியது.—156.

48 மூலத்தில் "Shoddy aristocrats"; யுத்தத்தினுல் வேகமாகப் பணக்காரர்களான நபர்களை அமெரிக்காவில் இவ்வாறு அழைத்தனர்.—158.

49 **ஜெர்மனியில் விவசாயிகள் யுத்தம்** எனும் படைப்பு பி. எங்கெல்சால் 1850ம் ஆண்டு கோடையில் லண்டனில் எழுதப்பட்டது. ஜெர்மன் வரலாற்ருசிரியரும் ஜனநாயக வாதியுமான ஸிம்மெர்மானின் நூல் உண்மை விவரங்களுக்கான முக்கிய மூல ஊற்ருக இருந்தது.

இப்படைப்பின் இரண்டாவது பதிப்பிற்கான முன்னுரையில், ஜெர்மனியின் பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இந்தக் காலகட்டத்தில் பல்வேறு வர்க்கங்கள் மற்றும் கட்சிகளின் பங்கினையும் எங்கெல்ஸ் பகுப்பாய்வு செய்கிருர். பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியின் அவசியத்தைப் பற்றிய மார்க்சியத்தின் தத்துவார்த்த நிலை இங்கே திட்டவட்டமாக்கப்பட்டு மேற்கொண்டு வளர்க்கப்படுகிறது. விவசாயிகளின் பாலான வெவ்வேருன அணுகுமுறையின் அவசியத்தைக் காட்டும் எங்கெல்ஸ், விவசாயிகளில் எந்தப் பிரிவினர், எந்தக் காரணங்களினுல் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில் கூட்டாளிகளாக இருக்க முடியும் என்று பகுப்பாய்வு செய்கிருர்.

''ஜெர்மனியில் விவசாயிகள் யுத்தம்'' எனும் நூலின் மூன்ருவது பதிப்பை அச்சகத்திற்குத் தயார்படுத்துகையில் எங்கெல்ஸ் 1870ம் ஆண்டின் முன்னுரையோடு சோஷலிச மற்றும் தொழிலாளர் இயக்கத்தில் தத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய முக்கியக் குறிப்புகளைச் சேர்க்கிருர். முன்னுரைக்கான சேர்ப்பில், தொழிலாளி வர்க்கம் மற்றும் இதன் கட்சியின் போராட்டத்தின் தன்மை, கடமைகள், வடிவங்கள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. தத்துவார்த்த, அரசியல் மற்றும் நடைமுறைப் பொருளாதாரத் துறைகளில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் நடைபெற வேண்டுமென ஒன்றுடன் ஒன்று இடையருத் தொடர்புடைய அந்த மூன்று போக்குகளை நிர்ணயித்துக் கூறுகிருர்.—160.

50 *Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue* (''புதிய ரைன் பத்திரிகை. அரசியல்-பொருளாதார விமரிசனம்'') — கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் தத்துவார்த்த ஏடு, மார்க்சாலும் எங்கெல்சாலும் நிறுவப்பட்டது. 1849 டிசம்பர் முதல் 1850 நவம்பர் வரை வெளிவந்தது; மொத்தம் 6 இதழ்கள் மட்டுமே வெளியாயின.—160.

51 *Allgemeine Geschichte des großen Bauernkrieges* (''மாபெரும் விவசாய யுத்தத்தின் வரலாறு'') எனும் ஜெர்மன் வரலாற்றாசிரியரான ஸிம்மெர்மானின் நூல் 1841—1843ம் ஆண்டுகளில் மூன்று பகுதிகளில் ஷ்டுட்கார்டில் வெளியானது.—161.

52 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியின் போது மாயின் கரையிலுள்ள பிராங்க்பர்ட்டில் கூடிய பொது ஜெர்மன் தேசிய சபையின் அதிதீவிர இடதுசாரிப் பிரிவு இங்கே குறிப்பிடப்படுகிறது; இந்த இடதுசாரிப் பிரிவு பெரும்பாலும் குட்டி முதலாளி வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலித்தது, ஆனால் ஜெர்மன் தொழிலாளர்களில் ஒரு பகுதியினருடைய ஆதரவையும் பெற்றிருந்தது. ஜெர்மனியின் அரசியல் ரீதியான சிதறலை அகற்றி பொது ஜெர்மன் அரசியல் சட்டத்தை உருவாக்குவதுதான் சபையின் முக்கியக் கடமையாக இருந்தது. ஆனால் பிரதிநிதிகளில் மிதவாதப் பெரும்பான்மையானோரின் கோழைத்தனத்தாலும் ஊசலாட்டத்தாலும் உயர்மட்ட ஆட்சியைத் தன் கரங்களில் எடுத்துக் கொள்ளச் சபை அஞ்சியது. 1849ம் ஆண்டு மே 30ம் தேதி சபை தனது அமர்வை ஷ்டுட்கார்டிற்கு மாற்றும்படி கட்டாயப்படுத்தப்பட்டது, ஜூன் 18ம் தேதியில் இராணுவத்தால் கலைக்கப்பட்டது.—161.

53 1866ம் ஆண்டின் ஆஸ்திரிய-பிரஷ்ய யுத்தத்தில் தோல்வி அடைந்ததும், பல்தேசிய இன ஆஸ்திரிய அரசின் நெருக்கடி வளர்ந்து வந்த சூழ்நிலைகளில், ஆஸ்திரியாவின் ஆளும் வர்க்கங்கள் ஹங்கேரியின் நிலச்சுவான்தார்களுடன் சதி ஒப்பந்தம் செய்து கொண்டு, 1867ம் ஆண்டு ஆஸ்திரிய-ஹங்கேரி ஒன்றிணைந்த முடியரசின் தோற்றத்தைப் பற்றிய உடன்படிக்கையில் கையொப்பம் இட்டன.—163.

54 தேசிய-மிதவாதிகள் — 1866ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தோன்றிய ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் கட்சி.

பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஜெர்மன் அரசுகளை ஒன்றிணைப்பதை தேசிய-மிதவாதிகள் தமது முக்கிய லட்சியமாக வைத்தனர். இவர்களது அரசியல் கொள்கை பிஸ்மார்க்கின் முன் ஜெர்மன் மிதவாத முதலாளிகளின் சரணடைவைப் பிரதிபலித்தது.—161.

55 பிரஷ்யாவின் தூண்டுதலின் பேரில் 1867ல் தோற்றுவிக்கப்பட்ட, வடக்கு மற்றும் மத்திய ஜெர்மனியின் 19 அரசுகளையும் 3 சுய நகரங்களையும் உள்ளடக்கியிருந்த வடக்கு ஜெர்மன் கூட்டணி இங்கே குறிப்பிடப்படுகிறது. இக்கூட்டணியின் தோற்றம், பிரஷ்யாவின் மேலாதிக்கத்தின் கீழ் ஜெர்மனி ஒன்றிணைவதற்கான தீர்மானகரமான கட்டங்களில் ஒன்ருகத் திகழ்ந்தது. ஜெர்மன் பேரரசு தோன்றியதன் காரணமாய் 1871ம் ஆண்டு ஜனவரியில் கூட்டணி தனது இயக்கத்தை நிறுத்தியது.—165.

56 ஹனேவர் ராஜ்யம், ஹேஸ்ஸென்-காஸ்ஸெல் அரசு, மாபெரும் நாஸ்ஸௌ ராஜ்யம் ஆகியவற்றைப் பற்றி இங்கே பேசப்படுகிறது. இவை 1866ம் ஆண்டு ஆஸ்திரிய-பிரஷ்ய யுத்தத்திற்குப் பின் பிரஷ்யாவால் தன்னுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன.—165.

57 ஜெர்மன் மக்கள் கட்சி 1865ம் ஆண்டு தோன்றியது. இதில் பெரும்பாலும் தெற்கு ஜெர்மன் அரசுகளைச் சேர்ந்த குட்டி முதலாளிகளின், பகுதியளவு முதலாளி வர்க்கத்தின் ஜனநாயக சக்திகள் அடங்கியிருந்தன. கட்சி, ஜெர்மனியில் பிரஷ்யாவின் மேலாதிக்கம் நிலைநாட்டப்படுவதை எதிர்த்தது, "மாபெரும் ஜெர்மனி"—இதில் பிரஷ்யாவைப் போன்றே ஆஸ்திரியாவும் இடம் பெற வேண்டும் — என்றழைக்கப்பட்ட திட்டத்தைக் காத்து நின்றது. ஜெர்மன் சமஷ்டி அரசைப் பற்றிய கருத்தைப் பிரச்சாரம் செய்த இக்கட்சி மையப்படுத்தப்பட்ட ஒரே ஜனநாயகக் குடியரசின் வடிவத்தில் ஜெர்மனி ஒன்றிணைவதை எதிர்த்தது.—166.

58 19ம் நூற்ருண்டின் 60ம் ஆண்டுகளின் நடுவில் பிரஷ்யாவில் ஒரு சில தொழில்துறைப் பிரிவுகளுக்கு விசேஷ அனுமதி (சலுகைகள்) முறை நிலைநாட்டப்பட்டது. இத்தகைய அனுமதிகளைப் பெருமல் தொழில்துறை நடவடிக்கையில் ஈடுபட முடியாது. இந்த அரைகுறை மத்தியக் கால தொழிற் சட்டம் முதலாளித்துவ வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளியது.—166.

59 21ம் குறிப்பைப் பார்க்க.

60 சடோவா சண்டை 1866ம் ஆண்டு ஜூலை 3ம் தேதி செகில் நடைபெற்றது. இது 1866ம் ஆண்டு ஆஸ்திரிய-பிரஷ்ய யுத்தத்தின் தீர்மானகரமான சண்டையாகத் திகழ்ந்தது. இந்த யுத்தத்தில் பிரஷ்யா ஆஸ்திரியாவைத் தோற்கடித்தது.—170.

61 1869ம் ஆண்டு செப்டெம்பர் 6—11 தேதிகளில் நடைபெற்ற முதலாம் அகிலத்தின் பாஸெல் காங்கிரஸ் இங்கே குறிப்பிடப்படுகிறது. இதில் செப்டெம்பர் 10ம் தேதி யன்று, நிலச் சொத்துடைமையைப் பற்றிய பிரச்சினை யின் மீது மார்க்சின் ஆதரவாளர்களால் முன்மொழியப் பட்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

''1. நிலத்தின் மீதான தனியுடைமையை அகற்றி இதைப் பொதுச் சொத்தாக மாற்ற சமுதாயத்திற்கு உரிமை உண்டு.

2. நிலத்தின் மீதான தனியுடைமையை அகற்றி அதைப் பொதுச் சொத்தாக மாற்ற வேண்டியது அவசியம்.''

தேசிய மற்றும் சர்வதேச அளவில் தொழிற்சங் கங்களை ஒன்றிணைப்பது, அகிலத்தை ஸ்தாபன ரீதியாக வலுப்படுத்துவது ஆகியவற்றைப் பற்றிய தீர்மானங் களும் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டன.—174.

62 பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தத்தின் போது 1870ம் ஆண்டு செப்டெம்பர் 2ம் தேதி பிரெஞ்சு இராணுவம் செதான் எனும் இடத்தின் அருகே முறியடிக்கப்பட்டு, பேரரசர் மூன்றும் நெப்போலியனோடு சேர்ந்து சிறை பிடிக்கப் பட்டது. செதான் பெருஞ்சேதம் பிரான்சில் இரண்டாம் பேரரசின் வீழ்ச்சிக்கும் 1870ம் ஆண்டு செப்டெம்பர் 4ம் தேதி குடியரசு பிரகடனப்படுத்தப்படுவதற்கும் இட்டுச் சென்றது. பிரான்சின் தோல்வி, பிரஷ்யாவின் மேலாதிக் கத்தின் கீழ் ஜெர்மன் பேரரசு உருவாவதில் தீர்மான கரமான பங்காற்றியது.—176.

63 பிரஷ்ய தேசிய இனத்தின் புனித ஜெர்மன் பேரரசைப் பற்றிக் கூறும் எங்கெல்ஸ் ஜெர்மன் தேசிய இனத்தின் மத்திய நூற்றாண்டு புனித ரோமானியப் பேரரசு எனும் பெயரை மாற்றிக் கூறுகிறார். இதன் மூலம், ஜெர்மனி ஒன்றிணைவது பிரஷ்ய மேலாதிக்கத்தின் கீழ் நடந்தது

என்றும் இதனோடு கூட ஜெர்மானிய நிலங்களைப் பிரஷ்யமயமாக்குவது நடந்தது என்றும் எங்கெல்ஸ் வலியுறுத்துகிறார்.—176.

64 வடக்கு ஜெர்மன் கூட்டணியைப் பற்றி 55ம் குறிப்பைப் பார்க்க.

65 பவேரியா, பாடேன், வூர்டெம்பர்க் மற்றும் ஹேஸ்ஸென்-தர்ம்ஷ்டாட் ஆகியவை 1870ம் ஆண்டில் வடக்கு ஜெர்மன் கூட்டணியோடு இணைந்தது குறிப்பிடப்படுகிறது.—177.

66 1870—1871ம் ஆண்டுகளில் பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தத்தின் போதான சண்டைகள் குறிப்பிடப்படுகின்றன. ஷ்பிஹெறர்னில் (லோரைன்) 1870ம் ஆண்டு ஆகஸ்டு 6ம் தேதி பிரெஞ்சுப் பிரிவுகள் பிரஷ்யப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. வரலாற்று இலக்கியத்தில் ஷ்பிஹெறர்ன் சண்டை ஃபோர்பாஹ் சண்டை என்றும் அழைக்கப்படுகிறது.

மார்ஸ்-லா-டூர் எனும் இடத்தில் (இது வியோன்வில் சண்டை என்றும் அழைக்கப்படுகிறது) 1870ம் ஆண்டு ஆகஸ்டு 16ல் மேத்ஸிலிருந்து பிரெஞ்சு இராணுவத்தின் பின்வாங்கலைத் தடுத்து நிறுத்திய பின் இது பின்வாங்கிச் செல்லும் பாதையைத் துண்டிக்க ஜெர்மன் படைகளால் முடிந்தது.

செதானைப் பற்றி 62ம் குறிப்பைப் பார்க்க.—181.

67 *Der Volksstaat* (''மக்கள் அரசு'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்திய ஏடு. வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட்டை ஆசிரியராகக் கொண்டு 1869 — 1876ல் லைப்சிகில் வெளிவந்தது. மார்க்சும் எங்கெல்சும் இதற்குத் தமது ஒத்துழைப்பை அளித்தனர்.—182.

68 1874ம் ஆண்டு ஜனவரி 10ம் தேதி ரைஹ்ஸ்டாக் நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல்களில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் 9 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி பெற்றனர்; அக்காலத்தில் சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த பெபெலும் லீப்க்னெஹ்ட்டும் இவர்களில் அடங்கியிருந்தனர்.—183.

69 *Nordstern* (''வடக்கு நட்சத்திரம்'')—ஜெர்மன் வாரப் பத்திரிகை, ஹாம்பர்கில் 1860—1866ம் ஆண்டுகளில் வெளி

வந்தது, 1863ம் ஆண்டிலிருந்து லஸ்ஸால்வாதப் போக்கை மேற்கொண்டது.—189.

70 **தேசிய யூனியன்** 1859ம் ஆண்டு செப்டெம்பர் 15—16ல் மாயின் கரையிலுள்ள பிராங்பர்ட்டில் நடைபெற்ற ஜெர்மன் அரசுகளின் முதலாளி வர்க்க மிதவாதிகளின் காங்கிரசில் தோற்றுவிக்கப்பட்டது. பிரஷ்யாவின் தலைமைப் பாத்திரத்தின் கீழ் ஆஸ்திரியாவைத் தவிர ஜெர்மனி முழுவதையும் ஒன்றிணைப்பதை யூனியனை ஏற்பாடு செய்தவர்கள் தமது லட்சியமாக வைத்தனர். வடக்கு ஜெர்மன் கூட்டணி தோன்றியதும் 1867ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதி இந்த யூனியன் தன் சுயக்கலைப்பை அறிவித்தது.—191.

71 1858ம் ஆண்டு ஆளுநர் இளவரசர் மன்தேய்ஃபெலின் அமைச்சரவைக்கு ராஜிநாமாவை அளித்து மிதவாதிகளை ஆட்சியமைக்க அழைத்தார்; பூர்ஷ்வாப் பத்திரிகைகளில் இந்தக் கொள்கை "புதிய சகாப்தம்" எனும் பெரும் பெயரைப் பெற்றது. உண்மையில் முதலாம் வில்ஹெல்மின் அரசியல் கொள்கை பிரஷ்ய முடியாட்சி மற்றும் ஜங்கர்களின் நிலையை வலுப்படுத்துவதைத்தான் முழுவதுமாக நோக்கமாகக் கொண்டிருந்தது. "புதிய சகாப்தம்" உண்மையிலேயே, 1862ம் ஆண்டு செப்டெம்பரில் ஆட்சிக்கு வந்த பிஸ்மார்க்கின் சர்வாதிகாரத்தைத் தயார் செய்தது.—191.

72 **மார்க்விஸ் போஸா மற்றும் இரண்டாவது ஃபிலீப்**— "டோன் கார்லஸ்" எனும் ஷீல்லரின் நாடகத்தின் பாத்திரங்கள். "உக்கெர்மார்க்கின் இரண்டாவது ஃபிலீப்" என்பது முதலாம் வில்ஹெல்ம்.

**உக்கெர்மார்க்** — பிராண்டன்பர்க் பிரதேசத்தின் (பிரஷ்யா) வடக்குப் பகுதி, பிற்போக்கு பிரஷ்ய ஜங்கர்களின் அரண்.—191.

73 *Kreuz Zeitung* ("சிலுவைப் பத்திரிகை") — *Neue Preussische Zeitung* ("புதிய பிரஷ்யப் பத்திரிகை") எனும் ஜெர்மன் தினசரிப் பத்திரிகையின் தலைப்பில் லான்ட்வெர் இராணுவத்தின் குறியாகிய சிலுவை இருந்ததால் அதை இவ்வாறு அழைத்தனர்; இப்பத்திரிகை 1848ம் ஆண்டு ஜூனில் பெர்லினில் வெளிவரத் துவங்கியது, எதிர்ப்புரட்சி அரண்மனைக் கும்பல் மற்றும் பிரஷ்ய ஜங்கர்களின் பத்திரிகையாக இருந்தது.—192.

74 பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கம் — ஜெர்மன் தொழிலாளர்களின் அரசியல் ஸ்தாபனம், லஸ்ஸாலின் தீவிரப் பங்கேற்போடு 1863ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 1875ம் ஆண்டு வரை நிலவியது. 1875ம் ஆண்டு கோத்தாவில் நடைபெற்ற காங்கிரசில் இச்சங்கம் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியுடன் ஒன்றுசேர்ந்து ஜெர்மன் சோஷலிசத் தொழிலாளர் கட்சியாக மாறியது.

*Social-Demokrat* பத்திரிகை பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் பத்திரிகை. (15ம் குறிப்பைப் பார்க்க.) —192.

75 முற்போக்குவாதிகள்—1861ம் ஆண்டு ஜூனில் தோன்றிய பிரஷ்ய முதலாளித்துவக் கட்சியின் பிரதிநிதிகள். பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஜெர்மனி ஒன்றிணைய வேண்டும் என்றும் பொது ஜெர்மன் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்றும் பிரதிநிதிகள் சபைக்கு முன் பொறுப்புள்ள மிதவாத அமைச்சரவையைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும் முற்போக்குவாதக் கட்சி கோரியது.—193.

76 கூட்டணிகளையும் வேலைநிறுத்தங்களையும் தடை செய்த தொழில் விதிமுறைகளின் பாராக்களை ரத்து செய்ய வேண்டுமெனக் கோரி தொழிலாளர்கள் போராடியதை யடுத்து, 1865ம் ஆண்டு ஜனவரியில் கூட்டணிகளைப் பற்றிய பிரச்சினை பிரஷ்ய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. தொழிலாளர் தரப்பிலிருந்து இணக்கத்தைப் பெறுவதற்காக உற்பத்தியை ஆலை முதலாளிகள் நிறுத்துவதை தடை செய்யும் விதிமுறைகளின் 181வது பாராவை ரத்து செய்யும்படி முற்போக்குவாதிகள் கோரினர். மேலும் வாய்வீச்சு நோக்கங்களுக்காக முற்போக்குவாதிகள், வேலைநிறுத்தத்தை தூண்டியதற்காகத் தொழிலாளர்களைத் தண்டிப்பதைப் பற்றிய 182வது பாராவை ரத்து செய்யும் கோரிக்கையையும் முன்வைத்தனர். 1865ம் ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி பிரஷ்ய நாடாளுமன்றம் தொழில் விதிமுறைகளின் 181, 182ம் பாராக்களை மட்டும் ரத்து செய்து, தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யாமல் அப்படியே விட்டு வைத்தது.—193.

77 பிரஷ்யாவில் நிலவிய தொழில் விதிமுறைகளை மார்க்ஸ் கேலியாக இப்படிக் குறிப்பிடுகிறார். பண்ணையடிமை விவ

சாயிகளின் மீது நிலச்சுவான்தார்கள் மற்றும் ஜங்கர்களின் முழு தான்தோன்றித்தனத்திற்கு அனுமதியளித்த நிலப்பிரபுத்துவ சட்ட திட்டங்கள் ''ஊழியர்களைப் பற்றிய விதிகள்'' எனும் பெயரில் பிரஷ்யப் பிரதேசங்களில் தோன்றின.—193.

78 1861ம் ஆண்டு வசந்த காலத்தில் மார்க்ஸ் தனது பிரஷ்யக் குடியுரிமையை புனர் நாட்ட முயன்றார். ஆனால் குடியுரிமை அவருக்கு மறுக்கப்பட்டது. 1845ம் ஆண்டில் அவர் ''தானாகவே'' பிரஷ்ய குடியுரிமையை மறுத்தார் என்பது இதற்கு சம்பிரதாயமான காரணமாகும்.—195.

79 43ம் குறிப்பைப் பார்க்க.

80 முதலாம் அகிலத்தின் ஜினீவா காங்கிரஸ் 1866ம் ஆண்டு செப்டெம்பர் 3—8 தேதிகளில் நடந்தது. பொதுக் குழு, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள கிளைகள் மற்றும் தொழிலாளர் சங்கங்களின் சார்பில் 60 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். மார்க்ஸ் எழுதிய ''தற்காலிக மத்திய கவுன்சிலின் பிரதிநிதிகளுக்கு சில பிரச்சினைகளைப் பற்றி ஆணைகள்'' (இத்தொகுதி, பக்கங்கள் 139—155 பார்க்க) பொதுக் குழுவின் அதிகாரபூர்வமான அறிக்கையாகப் படிக்கப்பட்டது. இதன் பாராக்களில் பெரும்பான்மையானவற்றை இக்காங்கிரசில் கலந்து கொண்ட புரூதோன்வாதிகள் எதிர்த்தாலும், அவை காங்கிரசின் தீர்மானங்களாக ஆமோதிக்கப்பட்டன. ஜினீவா காங்கிரஸ் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் ஊர்ஜிதப்படுத்தியது.—197.

81 42ம் குறிப்பைப் பார்க்க.

82 இங்கிலாந்தில் வாக்குரிமையின் இரண்டாவது சீர்திருத்தத்திற்கான இயக்கம் இங்கே குறிப்பிடப்படுகிறது. (43ம் குறிப்பைப் பார்க்க).—199.

## பெயர்க் குறிப்பகராதி


உர்கார்ட் [Urquart], டேவிட் *(1805—1877)—ஆங்கிலேய ராஜதந்திரி, பிற்போக்குக் கட்டுரையாளர், அரசியல் பிரமுகர், 1847—1852ம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்.—67.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895).—160, 163, 189—194.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)—ஆங்கில கற்பனுவாத சோஷலிஸ்ட்.—21, 63, 184, 198.*

ஃபாயர்பாஹ் [Feuerbach], லுட்விக் *(1804—1872)—மார்க்சுக்கு முந்திய காலத்தின் பொருள்முதல்வாதத் தத்துவ ஞானி.—35.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—பிரெஞ்சு கற்பனுவாத சோஷலிஸ்ட்.—35, 184, 198.*

ஃபௌஹெர் [Faucher], ழூல் *(1820—1878)—ஜெர்மன் கட்டுரையாளர், வர்த்தக சுதந்திரத்தின் ஆதரவாளர், குடியிருப்புப் பிரச்சினை பற்றிய படைப்புகளின் ஆசிரியர்.—194.*

காபே [Cabet], எத்தியேன் *(1788—1856)—பிரெஞ்சுக் கட்டுரையாளர், சமாதானக் கற்பனுவாதக் கம்யூனிசத்தின் பிரபல பிரதிநிதி, ''இக்காரியாவுக்குப் பயணம்'' எனும் நூலின் ஆசிரியர்.—43.*

காண்ட் [Kant], இம்மனுயேல் *(1724—1804)—சாஸ்திரிய*

ஜெர்மன் தத்துவஞானத்தின் மூலகர்த்தா, கருத்துமுதல் வாதி.—36, 37, 39.

இருன் [Grün], கார்ல் (1817—1887)—ஜெர்மன் குட்டி முதலாளித்துவக் கட்டுரையாளர், புருதோனின் போதனையின் ஆதரவாளர்.—38.

கிளாட்ஸ்தன் [Gladstone], வில்லியம் யூவர்த் (1809—1898)—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், 19ம் நூற்றுண்டின் இரண்டாம் பகுதியில் மிதவாதக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், பன்முறை நிதித் துறை அமைச்சராகவும் பிரதம மந்திரியாகவும் இருந்தார்.—9, 14.

கூகல்மன் [Kugelmann], லுட்விக் (1830—1902)—ஜெர்மன் மருத்துவர், 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியில் பங்கேற்றவர், முதலாம் அகிலத்தின் உறுப்பினர், மார்க்ஸ் குடும்பத்தின் நண்பர்.—188, 197.

சான்-சிமோன் [Saint-Simon], அன்ரீ (1760—1825)—பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்டு.—35, 184.

டுனுவையே [Dunoyer], ஷார்ல் (1786—1862)—பிரெஞ்சுக் கொச்சைப் பொருளாதார நிபுணர்.—43, 44.

தார்ன்டன் [Thornton], வில்லியம் தாமஸ் (1813—1880)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர்.—129.

தியேர் [Thiers], அடோல்ப் லுயீ (1797—1877)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், அரசுப் பிரமுகர், நிர்வாக ஆட்சித் தலைவர் (1871), குடியரசின் ஜனாதிபதி (1871—1873), பாரிஸ் கம்யூனை நசுக்கிய கொலைபாதகன்.—44.

திரீமென்ஹியர் [Tremenheere], ஹியூ ஸெய்மார் (1804—1893)—ஆங்கிலேய அரசு அதிகாரி, தொழிலாளர்களின் உழைப்புச் சூழ்நிலைகளை ஆராயும் அரசாங்கக் கமிஷன்களில் பன்முறை இடம் பெற்றிருந்தார்.—15.

தூக் [Tooke], தாமஸ் (1774—1858)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், சாஸ்திரிய மரபினரோடு நெருங்கியிருந்தார், ரிக்கார்டோவின் பணத் தத்துவத்தை விமரிசித்தார்.—63, 94.

**நியூமன்** [Newman], **பிரென்ஸிஸ் வில்லியம்** *(1805—1897)—ஆங்கிலேய பூர்ஷ்வா தீவிரவாதி, மத, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான பல படைப்புகளின் ஆசிரியர்.—63.*

**நியூமார்ச்** [Newmarch], **வில்லியம்** *(1820—1882)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், புள்ளிவிவர நிபுணர்.—63.*

**நீரோ** *(37—68)—ரோமானியப் பேரரசர் (54—68).—16.*

**நெப்போலியன் முதலாவது (போனபார்ட்)** *(1769—1821)—பிரான்சின் பேரரசர் (1804—1814 மற்றும் 1815).—48.*

**நெப்போலியன் மூன்றுவது (லுயீ நெப்போலியன் போனபார்ட்)** *(1808—1873)—முதலாம் நெப்போலியனின் மைத்துனன், இரண்டாம் குடியரசின் ஜனாதிபதி (1848—1851), பிரெஞ்சுப் பேரரசர் (1852—1870).—46, 48, 162.*

**பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்திரவிச்** *(1814—1876)—ருஷ்யப் புரட்சி வீரர், கட்டுரையாளர், ஜெர்மனியில் 1848—1849ம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சியில் பங்கேற்றவர்; அராஜகவாத சித்தாந்தவாதிகளில் ஒருவர்; முதலாம் அகிலத்தில் மார்க்சிய விரோதியாகச் செயல்பட்டார், பிளவு நடவடிக்கைக்காக 1872ம் ஆண்டு ஹேக் காங்கிரசில் முதலாம் அகிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்.—184.*

**பார்ட்டன்** [Barton], **ஜான்** *(18ம் நூற்றுண்டின் இறுதி—19ம் நூற்றுண்டின் துவக்கம்)—ஆங்கிலேய பொருளாதார நிபுணர், மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—134.*

**பால்மெர்ஸ்டன்** [Palmerston], **ஹென்றி ஜான் தெம்பல், இளங் கோமகர்** *(1784—1865)—ஆங்கிலேய அரசுப் பிரமுகர்; பன்முறை மந்திரிப் பதவிகளை வகித்தவர், 1855—1858லும் 1859—1865லும் பிரதம மந்திரி.—12.*

**பாஸ்தியா** [Bastiat], **பிரெடெரிக்** *(1801—1850)—பிரெஞ்சுக் கொச்சைப் பொருளாதார நிபுணர், முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்க நலன்களின் ஒத்திசைவுத் தத்துவத்தைப் பிரச்சாரம் செய்தவர்.—45.*

**பிரான்க்ளின்** [Franklin], **பென்ஜமென்** *(1706—1790)—அமெரிக்க அரசியல் பிரமுகர், விஞ்ஞானி, ராஜதந்திரி, முதலாளித்துவ ஜனநாயகவாதி, வட அமெரிக்காவில் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பங்கேற்றவர்.—86.*

**பிரிஸ்ஸோ** [Brissot], **ழான் பியேர்** *(1754—1793)—18ம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் பிரபல பிரமுகர்களில் ஒருவர், முதலில் ஜாக்கொபின்வாதி, பின்பு ஜிரோந்தவாதிகள் கட்சியின் தலைவர், தத்துவஞானி.—38.*

**பிரைட்** [Bright], **ஜான்** *(1811—1889)—ஆங்கிலேய ஆலைமுதலாளி, சுதந்திர வர்த்தகத்தின் ஆதரவாளர், தானியச் சட்டங்களுக்கு எதிரான லீகைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்; மிதவாதிகளின் அமைச்சரவைகளில் பல அமைச்சர் பதவிகளை வகித்தார்.—167.*

**பிஸ்மார்க்** [Bismarck], **ஓட்டோ,** *சிற்றரசன் (1815—1898)—அரசுப் பிரமுகர், பிரஷ்ய மற்றும் ஜெர்மன் ராஜதந்திரி, பிரஷ்ய ஜங்கர்களின் பிரதிநிதி; ஜெர்மன் பேரரசின் சான்ஸலர் (1871—1890).—190—195.*

**பீட்டர் முதலாவது** *(1672—1725)—1682லிருந்து ருஷ்ய ஜார், 1721லிருந்து அகில ருஷ்யப் பேரரசர்.—46.*

**புருதோன்** [Proudhon], **பியேர் ழொஸேப்** *(1809—1865)—பிரெஞ்சு கட்டுரையாளர்; பொருளியலாளர், சமூகவியலாளர், குட்டி முதலாளித்துவ வர்க்க சித்தாந்தி, அராஜகவாதத்தின் நிறுவகருள் ஒருவர்.—34—48, 189, 197, 198.*

**பெக்கர்** [Becker], **பெர்ன்ஹார்ட்** *(1826—1882)—ஜெர்மன் கட்டுரையாளர், லஸ்ஸாலைப் பின்பற்றியவர், பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் (1864—1865).—193.*

**ப்லீன்ட்** [Blind], **கார்ல்** *(1826—1907)—ஜெர்மன் பத்திரிகையாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியில் பங்கேற்றவர், ஐம்பதாம் ஆண்டுகளில் லண்டனில் ஜெர்மன் குட்டி முத*

லாளித்துவ நாடு பெயர்ந்தவர்களின் தலைவர்களில் ஒருவர், *60ம் ஆண்டுகளிலிருந்து தேசிய மிதவாதி.—189.*

மனேனியஸ் அக்ரிப்பா *(கி.மு. 493ல் இறந்தார்).—ரோமானிய உயர்குடியாளர்.—55.*

மார் [Marr], வில்ஹெல்ம் *(1819—1904).—ஜெர்மன் குட்டி முதலாளித்துவக் கட்டுரையாளர், பிஸ்மார்க்கின் அரசியல் கொள்கையை ஆதரித்தார்.—190.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883).—34, 49, 160, 162, 188—199.*

மால்தூஸ் [Malthus], தாமஸ் ராபர்ட் *(1766—1834)—ஆங்கிலேயப் பாதிரி, பொருளாதார நிபுணர், மனித வெறுப்பு ஜனத்தொகைத் தத்துவப் பிரச்சாரகர்.—36, 122.*

மிக்கேல் [Miquel], யோஹன் *(1828—1901)—ஜெர்மன் அரசியல் பிரமுகர், 40ம் ஆண்டுகளில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், பின்னல் தேசிய-மிதவாதி, 90ம் ஆண்டுகளில் பிரஷ்யாவின் நிதியமைச்சர்.—190, 191, 194.*

மிரபோ [Mirabeau], ஒனேரே கப்ரியேல் *(1749—1791)—18ம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் பிரபல பிரமுகர், முதலாளித்துவமயமான பிரபுக்குலத்தினர் மற்றும் பெரும் முதலாளிகளின் நலன்களைப் பிரதிபலித்தார், ''மாபெரும் பிரெடெரிகின் கீழிருந்த பிரஷ்ய முடியாட்சியைப் பற்றி'' எனும் நூலின் ஆசிரியர்.—191.*

முன்சேர் [Münzer], தாமஸ் *(சுமாராக 1490—1525)—சீர்திருத்த காலத்திலும் 1525ம் ஆண்டின் விவசாயிகள் யுத்தத்தின் போதும் விவசாயிகள் மற்றும் பிளேபியன் முகாமின் தலைவர், சித்தாந்தவாதி. சமப்படுத்தும் கற்பனவாதக் கம்யூனிசத்தின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தார்.—160.*

மோர்ட்டன் [Morton], ஜான் ஸால்மர்ஸ் *(1821—1888)—ஆங்கிலேய விவசாய நிபுணர், விவசாயத் துறைப் பிரச்சினைகளைப் பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—65.*

யூர் [Ure], ஏன்றியு *(1778—1857)*—ஆங்கிலேய இரசாயன நிபுணர், கொச்சைப் பொருளாதார நிபுணர்.—*20, 62, 63.*

ராம்ஸே [Ramsay], ஜார்ஜ் *(1800—1871)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் கடைசிப் பிரதிநிதிகளில் ஒருவர்.—*134.*

ரிக்கார்டோ [Ricardo], டேவிட் *(1772—1823)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—*40, 81, 134.*

ரூஸோ [Rousseau], ழான் ழாக் *(1712—1778)*—பிரெஞ்சு அறிவியக்கவாதி, ஜனநாயகவாதி, குட்டி முதலாளித்துவ சித்தாந்தவாதி.—*47, 48.*

ரொபெஸ்பியேர் [Robespierre], மக்சிமிலியான் *(1758—1794)*—*18*ஆம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் பிரமுகர், ஜாக்கொபின் வாதிகளின் தலைவர், புரட்சி அரசாங்கத்தின் தலைவர் *(1793—1794).—62.*

ரோஸ் [Rose], ஜார்ஜ் *(1744—1818)*—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், நிதித் துறை அமைச்சர் *(1782—1783* மற்றும் *1784—1801).—130.*

ரௌமெர் [Raumer], பிரெடெரிக் *(1781—1873)*—ஜெர்மன் பிற்போக்கு வரலாற்றுசிரியர், அரசியல் பிரமுகர்.—*47.*

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்டு *(1825—1864)*—ஜெர்மன் குட்டி முதலாளித்துவக் கட்டுரையாளர், வழக்குரைஞர், *60*ம் ஆண்டுகளின் துவக்கத்தில் தொழிலாளர் இயக்கத்தை நெருங்கி வந்தார், பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர் *(1863)*; ''மேலிருந்து'' பிரஷ்யாவின் மேலாதிக்கத்தின் கீழ் ஜெர்மனியை ஒன்றிணைக்கும் கொள்கையை ஆதரித்தார், ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கைத் துவக்கி வைத்தார்.—*188—195.*

**லிங்கன்** [Lincoln], **ஆப்ரஹாம்** *(1809—1865)—அமெரிக்க அரசுப் பிரமுகர், அமெரிக்க ஜனாதிபதி (1861—1865); குடியரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்; 1865ம் ஆண்டு ஏப்ரலில் அடிமைச் சொந்தக்காரர்களின் ஏஜெண்டால் கொல்லப்பட்டார்.—31, 33, 157.*

**லிங்கே** [Linguet], **ஸிமோன் நிக்கொலா அன்ரீ** *(1736—1794)—பிரெஞ்சு வழக்குரைஞர், பொருளாதார நிபுணர், பூர்ஷ்வா சுதந்திரங்கள் மற்றும் சொத்துடைமையைப் பற்றிய ஆழ்ந்த விமரிசனத்தைத் தந்தார்.—47.*

**லீப்க்னெஹ்ட்** [Liebknecht], **வில்ஹெல்ம்** *(1826—1900)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபலப் பிரமுகர்; 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியில் பங்கேற்றவர், கம்யூனிஸ்டுகள் சங்கம் மற்றும் முதலாம் அகிலத்தின் உறுப்பினர், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் ஸ்தாபகர்கள், தலைவர்களில் ஒருவர், மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், சகதோழர்.—190, 192.*

**லுயீ ஃபிலீப்** *(1773—1850)—ஆர்லியன் கோமகன், பிரெஞ்சு அரசன் (1830—1848).—16.*

**லுயீ போனபார்ட்**—*மூன்றும் நெப்போலியனைப் பற்றி பார்க்க.*

**வகெனெர்** [Wagener], **ஹேர்மன்** *(1815—1889)—ஜெர்மன் கட்டுரையாளர், அரசியல் பிரமுகர், Neue Preußische Zeitungஇன் பதிப்பாசிரியர் (1848—1854), பிரஷ்ய கன்சர்வேட்டிவ் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—192.*

**வில்ஹெல்ம் முதலாவது** *(1797—1888)—பிரஷ்ய அரசர் (1861—1888), ஜெர்மன் பேரரசர் (1871—1888).—219.*

**வெர்கில் (புப்லியஸ் வெர்கில் மாரோன்)** *(கி. மு. 70—19)—மாபெரும் ரோமானியக் கவிஞர்.—199.*

**வேஸ்டன்** [Weston], **ஜான்**—*ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர், முதலாம் அகிலத்தின் பொதுக் குழுவின்*

*உறுப்பினர் (1864—1872).—49—56, 59—63, 66—80, 133.*

வொல்தேர் [Voltaire], பிரான்சுவா மரீ *(உண்மைப் பெயர்* அருவே) *(1694 — 1778)—பிரெஞ்சு அறிவியக்கவாதி, தத்துவஞானி, இரட்டைவாதி, நகைச்சுவை எழுத்தாளர்.—46, 48.*

ஜோன்ஸ் [Jones], ரிச்சார்டு *(1790—1855)—ஆங்கிலேயப் பொருளாதார வல்லுநர்.—134.*

ஷில்லர் [Schiller], பிரெடெரிக் *(1759—1805)—ஜெர்மன் எழுத்தாளர்.—219.*

ஷூல்ட்ஸெ-டெலிச் [Schulze-Delitzsch], ஹேர்மன் *(1808—1883)—ஜெர்மன் அரசியல் பிரமுகர், கொச்சைப் பொருளாதார நிபுணர், கூட்டுறவு சங்கங்களை அமைத்த தன் மூலம் தொழிலாளர்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்ப முயன்றார்.—194.*

ஷெர்பூலியே [Cherbuliez], அன்டுவான் எலிஸே *(1797—1869)—ஸ்விட்சர்லாந்து பொருளாதார நிபுணர், சிஸ்மொன்டீயின் சீடர்.—134.*

ஷேக்ஸ்பியர் [Shakespeare], வில்லியம் *(1564—1616)—ஆங்கிலேய எழுத்தாளர்.—130.*

ஷ்ராம் [Schramm], கார்ல் ஔகுஸ்ட்—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சீர்திருத்தவாதி.—190.*

ஷ்வைட்ஸர் [Schweitzer], யோஹன் படீஸ்ட் *(1833—1875)—ஜெர்மனியில் லஸ்ஸால்வாதத்தின் பிரபல பிரதிநிதிகளில் ஒருவர், பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் (1867—1871), ஜெர்மன் தொழிலாளர்கள் முதலாம் அகிலத்தோடு இணையத் தடையாக இருந்தார்.—34, 190, 194.*

ஸிம்மெர்மான் [Zimmermann], வில்ஹெல்ம் *(1807—1878)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியில் பங்கேற்றவர்.—161.*

**ஸிஸ்மொன்டீ** [Sismondi], **ழான் ஷார்ல் லியொனுர் ஸிமோன் டெ** *(1773 — 1842)—ஸ்விட்சர்லாந்து பொருளாதார நிபுணர், முதலாளித்துவத்தைப் பற்றி குட்டி முதலாளித்துவக் கண்ணேட்டத்திலிருந்து விமரிசித்தார்.—134.*

**ஸீனியர்** [Senior],**நாஸா வில்லியம்***(1790—1864)—ஆங்கிலேயக் கொச்சைப் பொருளாதார நிபுணர்.—20, 62, 63.*

**ஸ்மித்** [Smith], **ஆடம்** *(1723—1790)—ஆங்கிலேயப் பொருளியலாளர், மூலச்சிறப்புள்ள முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மாபெரும் பிரதிநிதி.—81, 93, 94, 134.*

**ஸ்மித்** [Smith], **எட்வார்டு** *(சுமாராக 1818—1874)—ஆங்கிலேய மருத்துவர்.—11.*

**ஹாத்ஸ்ஃபெல்ட்** [Hatzfeldt], **ஸோஃபியா,** *பிரபுக்குலப் பெண்மணி (1805—1881)—லஸ்ஸாலின் நண்பர், ஆதரவாளர்.—189, 192, 193.*

**ஹாப்ஸ்** [Hobbes], **தாமஸ்** *(1588—1679)—ஆங்கிலேயத் தத்துவஞானி, இயந்திரிகமான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி.—98.*

**ஹெகல்** [Hegel], **கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)—மூலச்சிறப்புடைய ஜெர்மன் தத்துவஞானத்தின் மிகப்பெரும் பிரதிநிதி, புறவயவாத கருத்துமுதல்வாதி, கருத்துமுதல்வாத இயக்கவியலை பல்நோக்கில் உருவாக்கிஞர்.—35, 38, 39, 184.*

**ஹெல்வெட்டியஸ்** [Helvétius], **குலோட் ஏட்ரியன்** *(1715—1771)—பிரெஞ்சுத் தத்துவஞானி, நாஸ்திகவாதி, இயந்திரிகமான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி.—44.*

**ஹோஹன்ஸோலர்ன்**—*பிராண்டன்பர்க் ராஜியங்களின் (1415—1701), பிரஷ்ய அரசர்களின் (1701—1918), ஜெர்மன் பேரரசர்களின் (1871—1918) அரசுப் பரம்பரை.—194.*

## இலக்கிய மற்றும் புராணக் கதாபாத்திரங்கள்

**ஃபிலிப் இரண்டாவது**—*''டோன் கார்லஸ்'' எனும் ஷில்லரின் சோகப் படைப்பின் பாத்திரம்.—191.*

**போஸா,** *மார்க்விஸ்—''டோன் கார்லஸ்'' எனும் ஷில்லரின் சோகப் படைப்பின் பாத்திரம்; நற்குணமுள்ள, சுதந்திர சிந்தனை படைத்த சேவகனின் பாத்திரம்.—191.*

**மோலஹ்**—*பண்டைய பினீசியாவில் சூரியக் கடவுள், இதன் வழிபாட்டில் நரபலி ஒரு அங்கமாயிருந்தது; பின்னல் மோலஹ் என்பது எல்லாவற்றையும் ஆட்கொள்ளும் கொடூரமான சக்தியின் உருவகமாயிற்று.—20.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக்களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**தலைமை அலுவலகம்**

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

**ஷோ-ரூம்**

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

**விற்பனை நிலையங்கள்**

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.